# மாறவர்மன் காதலி

விக்கிரமன்

விக்கிரமன் பதிப்பகம்
2, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.

முதல் பதிப்பு : 1978
மறு பதிப்பு : செப்டம்பர், 1989
உரிமை : ஆசிரியருக்கே

விலை : ரூ. 22-00

7467
2792611

அச்சிட்டோர் :
ஜீவோதயம் அச்சகம்
சென்னை-5



7467
2792611

# மாறவர்மன் காதலி

## 1. எங்களுக்கு நீந்தத் தெரியாது

முருகபிரான் மயில் வாகனத்தின் மீதமர்ந்து வருவது போல் கிழ்வானில் செவ்வட்டக் கதிரவன் மெல்ல மே[ல்] எழுந்து கொண்டிருந்தான். நீலவானம் செம்பொன் நி[றமேற்]க கொண்டது. குங்குமச் சிவப்பும் இடையிடையே புலப் பட்டது. கருநீல நிறக் கடலில் தங்கச் சரிகைகள் கோத்தது போன்று செம்பொன் வண்ணம் படரத் தொடங்கியது.

"அதோ, அதோ..." என்று படகிலிருந்தவர்களுள் சற்று வயது முதிர்ந்த காங்கேயன் ஏதோ காணாததைக் கண்டு விட்டதுபோல் கூவினார். படகு மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.

"எங்கே, எங்கே? கரை தெரிகிறதா?" என்று இளைஞன் மாறவர்மன், பரபரப்புடன் கேட்டான்.

மாறன் மேற்குத் திசையையே இரவு முழுவதும் கரையைக் காண்பதற்காக நோக்கிக் கொண்டிருந்தான். இப்போது கண்களை மேலும் கசக்கிக் கொண்டு உற்று நோக்கினான். படகு மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது.

"கரைத் தேற விரும்புபவர்களுக்குக் கையில் நெடு வேலுடன் காட்சி தரும் முருகபிரானை, செந்திலம்பதி வாழ் தேவயானைக் கணவனைத்தான் நான் சொல் கிறேன். அதோ பாருங்கள், கிழக்கே வானக்கோடியில், கடலினின்று வட்டச் சூரியன் எழுவது நீலமயில் மீது முருகன் அமர்ந்து வருவது போலிருக்கிறது.

சொல்லவில்லை, சிறையிலிருந்து தேவர்களை மீட்ட நக்கீரன் சொல்கிறார்.

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கண்டாங்கு..."

என்று இனிய குரலுடன் துதிபாடத் தொடங்கி விட்டார்.

அந்தப் படகு மெல்ல மெல்ல கடலில் வந்து கொண்டிருந்தது.

அலைகள் குறைந்து நீர்த்தேக்கம் போல் அலை ...றந்து இருக்கும் அந்த இடத்தில் துடுப்புப் போடு ...தைப் படகோட்டி நிறுத்தி விட்டான்.

"ஹூம்..." என்று அழுத்தமாகக் குரல் கொடுத்த படகோட்டி, "ஒவ்வொருவராகப் படகிலிருந்துக் குதியுங்கள்" என்று கட்டளையிட்டான்.

பாண்டிய நாட்டுத் தொண்டித் துறைமுகத்திலிருந்து அந்தப் படகை நான்கு பேரும் வாடகைக்குப் பேசிக் கொண்டு புறப்பட்டார்கள். காங்கேயன் என்ற அந்த முதியவர், மாறவர்மன் என்ற இளைஞன், இருவரையும் தவிர இரண்டு பேர் அந்தப் படகில் இருந்தனர். அதிகத் தொலைவு பயணஞ் செய்யும் திட்டத்தில் அவர்கள் வரவில்லை. காவிரிப்பூம்பட்டினம் அருகே கரையிறங்குவது அவர்கள் எண்ணம். ஆனால் எதிர்க்காற்றை எதிர்த்து மிகவும் கஷ்டப்பட்டே படகோட்டி துடுப்பைப் போட்டான். முதல் நாள் இரவு, மறுநாள் பகல் என்று கடலில் படகு சென்று கொண்டிருந்தது. பொழுதுபுலரும் வேளையில் படகோட்டி அங்கே படகை நிறுத்தி விட்டான். அது எந்த இடம் என்று யாருக்கும் தெரியாது.

"இங்கேயா இறங்கச் சொல்கிறாய்? நடுக் கடலிலா?" என்று படகிலிருந்த பராக்கிரமப் பெருமான் தன் ...கத்தைத் தெரிவித்தான்.



"இங்கே இறங்கச் சொல்லவில்லை. குதிக்கச் சொல்கிறேன்" என்று கூறிய படகோட்டியைக் குறுக்கிட்ட, படகோட்டியின் உதவியாள், "நான் தான் அப்பொழுதே சொல்லியிருந்தேனே நடுக் கடலிலே இறக்கி விட்டிருக்க வேண்டும். போனால் போகிறதென்று இவ்வளவு தூரம் கொண்டு வந்தோமே, அதற்கு நன்றி சொல்லக்கூடத் தோன்றவில்லை இவர்களுக்கு" என்றான்.

பராக்கிரமப் பெருமாள் தோளில் சாய்ந்து தூங்கி வழிந்து கொண்டிருந்த செங்குமுதம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். கண்களில் தூக்கக் கலக்கம் நிறைந்திருந் தாலும்,புலரும் புதிய பொழுது புதுத் தெம்பை அவளிடம் ஊட்டிவிட்டது.

"கரை தெரிகிறதா?" என்று அவன் சோம்பல் நீக்க இரு கைகளையும் உயரே தூக்கி நடன பாவத்தில் உடலை ஒரு முறை பாதித் திருப்பி நெளியவும், ஏற்கனவே தூக்கத் தின் போது கடல் காற்றின் சதியாலும், படகின் ஆட்டத் தாலும் தட்டிக்கேட்க ஆளில்லாததால் தமது கடமையை மறந்திருந்த மேலாடை மேலும் சரியவும் அருகே இருந்த பராக்கிரமப் பெருமாள் விழிகளில் கோபத்தணலை உமிழ்ந்து, "ஹூம்... கவனி... நேற்று முன் தினம் தலைவர் சொன்னதையெல்லாம் மறந்து விட்டாயா?" என்று கடிந்து கொண்டான்.

தன் விழிகளுக்குச் சிறிதுநேரம் கிடைத்த அரிய விருந்தைத் தடுத்துவிட்ட பெருமாள்மீது மாறவர் மனுக்குச் சற்றுக் கோபம்தான். நேற்று முன் தினம் படகில் ஏறியதிலிருந்து பெருமாள் அருகேயே நெருங்கி அவள் அமர்ந்திருப்பது தனக்கு ஒரு பெரும் இழப்பு என்று திகைத்துப் பெருமூச்சு விட்டவாறிருந்தான் அவன். படகு ஒருபுறம் சாயும்போது, ஆடும்போது எல்லாம் குமுதம், பெருமாள் தோள்களைப் பலமாகப் பிடித்துக் கொள்வதைப் பார்க்கும்போது பெருமாள் இருக்

குமிடத்தில் தானிருக்கக்கூடாதா என்று தோன்றும். ஆனால் எதிரே இருந்து ரசிக்கும் ஒரு வாய்ப்பாவது கிடைத்திருக்கிறதே என்ற திருப்தியில் ஒரு பகலைக் கழித்தான். பிறகு இருள்; சரியான அமாவாசை இருள். கடந்த முப்பது நாழிகையாக குமுதத்தின் குளிர்முகத்தைக் காணமுடியாது செய்த இருளை நொந்துக் கொண்ட அவனுக்கு, அந்த இளங்காலை வெளிச்சத்தில் மின்னலெனத் தோன்றிய செங்குமுத அழகை ரசிக்க முடியாமல் பெருமாள் தடுக்கிறாரே என்று கோபம் வராமலிருக்குமா?

குமுதம், மாறவர்மனைப் பார்த்து மெல்ல நகைத்தாள். பரபரப்புடன் அவள் கரங்கள் இயங்கின. இடுக்கண் களையும் நண்பரைப் போல் கரங்கள் ஆடையைச் சரி செய்தன.

படகோட்டி மீண்டும் குரல் கொடுத்தான். "உடனே குதியுங்கள், ஐயன்மீர். நன்றாக வெளிச்சம் வந்த பிறகு நீங்கள் படகிலிருந்து குதிப்பதை யாராவது பார்த்துவிட்டால்? பெரியவர் பாடவும் ஆரம்பித்து விட்டார்" என்று படகோட்டி கடுமையாக எச்சரித்தான்.

கோல் தள்ளும் உதவியாள் பேசாமல் கைகட்டி நின்று கொண்டிருந்தான். படகு அசைந்து கொண்டிருந்தது. அலை அதிகமற்ற அந்த இடத்தில் சிறு சிறு அலைகள் மட்டும் படகின் பக்கங்களில் மோதுவதால் '**சளக் சளக்**' என்ற ஒலி எழுந்து கொண்டிருந்தது. குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது.

வைகறை வேளைக்கு முன்பே வைகை ஆற்றில் நீராடிப் பழக்கப் பட்ட காங்கேயனுக்கு அப்போதே கடலில் குதித்துவிட வேண்டும் என்ற ஆவல்.

பராக்கிரமப் பெருமாள் — பெயருக்கு ஏற்ப பலசாலிதான். உலைக்கூடத்தில் சம்மட்டி எடுத்து அடித்துக் கைகள் காய்ச்சி இருந்தன. கரங்களில் எஃகின் வலிமை இருந்தது. இருபாறைகளை வைத்தாற்போன்ற மார்புகள், விரிந்து



பரந்த தோள்கள்; அடர்ந்த தலைமயிரை மறைக்கும் முண்டாசு முறுக்கிய மீசை — தோற்றமே பெயருக்கு மேலும் உயர்வை ஏற்றும். ஆனால் அவனுக்குத் தண்ணீர் என்றால் சற்று வெறுப்புத்தான். ஒரு நாளைக்கு ஆயிரம் முறை அரும்பும் வியர்வையே அவன் நீராடும் நதி!

மாறவர்மன், அதுபோன்ற இருள் பிரியும் வேளைகளில் போர்வைக்குள் புகுந்து கொண்டு சுக நித்திரையில் ஆழ்ந்திருப்பான். நித்திரைக் கன்னி அப்போதுதான் அவனை அன்புடன் கன்னத்தை வருடுவாள். வயதான தாய் பல முறை குரல் கொடுத்த பிறகே அவன் துயிலெழுவான். அவன் செய்யவேண்டிய வேலைஎன்று ஏதுமில்லை. அவனுடைய வீட்டிற்கு அருகே வசிக்கும் **வல்லபன்** இளைஞர்களுக்கு வேல் எறிதல், வாள் வீசுதல், சிலம்பம் சுழற்றல் ஆகியவற்றைக் கற்றுக் கொடுப்பார். மாறவர்மனை அவருக்குப் பிடித்திருந்தது. அவனுடைய சுறுசுறுப்பும் துடிப்பான பேச்சும் அவனுக்கு வருங்காலம் உண்டு என்பதை அவருக்கு உணர்த்தியிருக்க வேண்டும். போர்ப் பயிற்சிகள் பல பெற்றிருந்த அவன் நீந்தக் கற்றுக் கொள்ளவில்லை.

இப்போது கடலில் குதிக்குமாறு படகோட்டி சொல்கிறார். மற்றவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்களே தவிர, படகோட்டியை அதட்டிக்கேட்க அவர்களுக்குத் தோன்றவில்லையே! அவன் குமுதத்தை ஒரு தடவை பார்த்தான். அவள் என்ன செய்யப் போகிறாள்? அவளுக்கு நீந்தத் தெரியுமா? ஒரு பெண்ணை இப்படி நடுக்கடலில் திண்டாட விடலாமா?

காங்கேயன் பாடுவதை நிறுத்திவிட்டார். அவருக்கு நீந்தத் தெரியும். ஆனால், இப்படி நடுக்கடலில் இந்தப் படகோட்டி நிறுத்தி, 'இங்கேயே இறங்கு என்கிறாரே, என்ன நியாயம். பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் தானே; இவர்களைப் போன்ற உழைப்பாளிகளின் அடிமை நிலை

நீங்கத்தானே நாம் பயணம் மேற்கொண்டிருக்கிறோம். நாம் மேற்கொண்டிருக்கும் பயணம் மிக முக்கியமானது- மகத்தானது—என்பது படகோட்டிக்குத் தெரியாதா?' என்று அவர் நினைத்தார்.

''என்ன ஐயா, இப்படி எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று படகோட்டி மீண்டும் கேட்டான்.

''இப்படியே உட்காராமல் எழுந்து நிற்பதால் ஒன்றும் பலனில்லையே; அதனால்தான் உட்கார்ந்திருக்கிறோம்'' என்றான் மாறவர்மன்.

அவனது சொற்களில் நகைச்சுவை இருந்ததோ என்னவோ, குமுதம் 'கொல்'லென்று சிரித்தாள். காலை வேளையில் அவள் நகைத்தது மல்லிகைக் கொடியில் குப்பென்று மெல்லரும்புகள் பூத்துவிட்டனபோல் தோன்றியது.

''குமுதா! தலைவர் என்ன சொல்லியிருக்கிறார்?'' என்று பெருமாள் குரலில் கடுமை மிகக்கேட்டான்.

''என்ன சொல்லியிருக்கிறார்?'' வில்போன்ற புருவம் மேலும் வளைந்தது.

''இப்படிச் சிரிக்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லையா? உனக்குக் கூறப்பட்ட உறுதிகளுள் அதுவும் ஒன்றில்லையா?'' பெருமாள் குரலில் கடுமையும், அடக்கும் சுபாவமும் இருந்தது.

''இப்படி நடுக்கடலில் படகோட்டி இறக்கிவிடுவார் என்று அவர் சொல்லவில்லையே'' என்று குமுதம் மீண்டும் மெல்ல நகைத்தவாறு சொன்னாள்.

''ஆமாம்; ஆமாம், நடுக்கடலில் எப்படி இறங்குவதாம்?'' என்று மாறன் குமுதாவின் முகத்தைப் பார்த்தபடியே கேட்டான்.

காங்கேயன் தொண்டையைக் கனைத்துக்கெண்டார். ''அப்பா, பெருமாள்! உன்னிடம் தலைவர் சில செய்தி



களைக் கூறியிருக்கிறார். என்னிடம் சில செய்திகளைக் கூறியிருக்கிறார். சோழநாட்டில் இறங்கியவுடன் நாமெல்லாம் தனித்தனியே பிரிந்துபோய்விடப் போகிறோம். அப்படியிருக்கும்போது தலைவரின் கட்டளையை அவரவர்கள் கடைப்பிடித்தால் நமது இலட்சியம் வெற்றியடையும். இல்லாவிடில் நாமெல்லோரும் சோழ நாட்டிலேயே சமாதி ஆகி ஊர் பேர் தெரியாமல் போய்விட வேண்டியதுதான். அதனால் தலைவர் நம் ஒவ்வொருவரிடமும் சொல்லியிருப்பது என்ன என்பதை இப்போது விவாதிக்காமல் மேலே நடக்கவேண்டியதை யோசிப்போம்'' என்று நீண்ட சொற்பொழிவாற்றினார்.

''மேலே நடக்கவேண்டியது என்ன—கீழே கடலில் குதிக்கவேண்டியதைப்பற்றி யோசிப்போம்'' என்று மாறன் கூறவும் மீண்டும் குமுதம் நகைத்தாள்.

''மாறவர்மன் மிக நன்றாகப் பேசுகிறாரே!'' என்று பாராட்டுதலும் வழங்கினாள்.

''அப்பாடி! என் வாழ்நாளிலேயே என்னைப் பாராட்டிய குரலை இப்போதுதான் கேட்டேன்'' என்று மாறன், அவள் விழிகளை நோக்கியவாறு கூறவும், பெருமாளுக்குக் கோபம் கோபமாக வந்தது.

குமுதத்திடம் அதிக அக்கறை கொண்டவன் பெருமாள். மற்ற இருவரையும்விட பெருமாளுக்குத்தான் குமுதத்தைப் பற்றித் தெரியும்.

குமுதம் ஓர் அனாதை. அவளது சிறு வயதிலேயே தாய் இறந்துவிட்டாள். சமீபத்தில் தான் போர்க்களத்தில் அவளுடைய தந்தையும் இறந்துவிட்டார். தந்தை இறந்ததற்குக் காரணமான சோழர்கள்மீது அவளுக்கு வெஞ்சினம் அதிகமாகியது. இயற்கையாகவே துடுக்குத் தனமும், அச்சமின்மையும் மிகுந்த அவள் உள்ளத்தில்

எழுந்த கோபத்தால் மிகவும் கடின நெஞ்சுடையவளானாள்.

பராக்கிரமப் பெருமாளின் உலைக்கூடத்திற்குக் குமுதத்தின் தந்தை அடிக்கடி வருவார். குமுதமும் அவருடன் வருவாள். பெருமாளின் தாயிடம் அவள் நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்பாள். உலைக்கூடத்திற்குப் பாண்டிய நாட்டுப் படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் வருவார்கள். அவர்களுடன் பேசிப் பாண்டிய நாட்டின் பழம்பெருமைகளைக் கேட்டறிவாள். இப்போது சோழ நாட்டின் பிடியில் பாண்டிய நாடு சிக்கிச் சீரழிந்துகொண்டிருப்பதைக் கேட்டறிவாள். அவற்றைக் கேட்கக் கேட்க அவளுள்ளத்தில் சினத் தீ கொழுந்து விட்டெரியும். பாண்டிய நாட்டிற்காக நடந்த யுத்தத்தில் அவளுடைய தந்தை அநியாயமாகக் கொல்லப்பட்டதால் பாண்டிய நாட்டு அரசுத் தலைவர்கள் அனைவரும் குமுதத்தினிடம் அனுதாபம் மிகக் கொண்டார்கள்.

பாண்டிய மன்னர் வீரபாண்டியனிடமும் ஒருமுறை அழைத்துச் சென்றார்கள். பாண்டிய நாட்டின் விடுதலைக்காக வல்லபன் மேற்கொண்ட இரகசிய முயற்சியில் குமுதமும் பங்கு கொள்ள முன்வந்தாள். பராக்கிரமப் பெருமாளும் துடித்தெழுந்து வந்தான். அதனால் குமுதத்தினிடம் மற்றவர்களைவிட அதிக அக்கறை காட்டினான் பெருமாள். குமுதம் மாறவர்மனின் பேச்சைக் கேட்டு சிரிப்பது கண்டு அவன் கண்டிக்க முற்பட்டதில் ஆச்சர்யமில்லை.

படகோட்டிக்கு ஆத்திரமும் எரிச்சலும் அதிகமாயின. "என்ன ஐயா, நான் சொல்லச் சொல்ல இப்படிச் சும்மாயிருக்கிறீர்களே, சீக்கிரம் குதியுங்கள்" என்று கூவினான்.

இப்போது காங்கேயன் பேசினார்: — "தம்பி! உன்னிடம் என்ன ஒப்பந்தம் செய்து கொண்டோம்?"



"படகில் உங்கள் அனைவரையும் அழைத்துச் செல்ல..."

"சரி; எங்கே எங்களை இறக்க வேண்டும் என்று பேச்சு?"

"சோழநாட்டுக் கடற்கரையில்..."

"சரி, சோழ நாட்டுக் கடற்கரையில். இது கடற்கரையா? நடுக்கடலில் இறங்கு என்கிறாயே?"

காங்கேயனது பேச்சைக் கேட்டு கோல் போடுபவன் சிரித்தான்.

"இது நடுக்கடல் இல்லை ஐயன்மீர். கடற்கரை வந்து விட்டது. இது கழிமுகம், அலை இருக்காது."

"ஆழமிருக்குமல்லவா?"

"ஆழமும் இருக்காது. இன்னும் சிறிது சென்றால் படகு சேற்றில் சிக்கிவிடும்—அதனால் நீங்கள் இங்கேயே குதித்து நீந்திச் செல்லுங்கள்."

படகோட்டியின் இந்தப் பேச்சில் நியாயம் இருப்பது போல் தோன்றியது.

இப்போது மீண்டும் மாறனே பேசினான்: "எங்களுக்கு நீந்தத் தெரியாதே!"

பெருமாள் அவனைச் சுட்டெரிப்பது போல் பார்த்து "எங்களுக்கு என்று யாரையும் சேர்த்துச் சொல்கிறாய்?" என்றார்.

"உங்களிருவருக்கும் நீந்தத் தெரிந்திருக்கலாம்; ஆனால் எங்களிருவருக்கும் தெரியாது. நான் கற்றுக் கொள்ளவில்லை. இவளோ பெண்..." என்று குமுதத்தை நோக்கி மெல்ல நகைத்தபடி சொன்னான்.

"ஓ! எனக்கு நீந்தத் தெரியும். பெண்ணென்றால் நீந்தத் தெரியாது என்று யார் சொன்னார்கள்?" என்று

குமுதம் கூறியவுடன் மாறனுக்கு வெட்க உணர்ச்சி மேலிட்டது.

''அது மட்டுமில்லை, ஐயன்மீர்! வெளிச்சம் நன்றாகப் பரவிவிட்டால் சோழநாட்டுப் படகுகள், கட்டுமரங்கள், இந்தப் பக்கம் வரத் தொடங்கிவிடும். உங்களை எல்லாம் அவர்கள் பார்த்து விடுவார்கள். அதற்குள் நான் படகை வெகுதூரம் கொண்டு சென்றுவிட வேண்டும்''—

மீண்டும் படகோட்டியின் சொல்லில் நியாயம் இருப்பது போல் காங்கேயனுக்குத் தோன்றியது. அவர் பராக்கிரமப் பெருமாளைப் பார்த்து, ''படகோட்டி சொல்வது நியாயம்தான். இனியும் தாமதிப்பது சரியன்று. வெளிச்சம் ஏறுகிறது. நாம் குதித்துவிடுவோம். கரையேறிய பிறகு ஓரிடத்தில் உட்கார்ந்து பேசிவிட்டுப் பிரிவோம்'' என்று கூறி, ஆடையை இழுத்துக் கட்டிக் கொண்டு கடலில் தொப்பென்று குதித்து நீந்தத் தொடங்கினார்.

''குமுதா நீயும் குதித்துவிடு'' என்று சொல்லிக் கொண்டே பராக்கிரமப் பெருமாளும் குதித்தான்.

படகோட்டிகள் ஏனோ கைகொட்டிச் சிரிக்கச் தொடங்கினர். குமுதம் குதிப்பதற்கு ஆயத்தமானாள். மேல் தலைப்பை இழுத்துச் சொருகிக்கொண்டாள். சேலையை முழங்கால் வரைத் தூக்கி ஒரு முனையை அழுத்தமாகப் பிணைத்தாள் இடுப்புப்புறம்.

செழுமையான அவளுடைய முழங்கால் வனப்பும், பாதங்கள்வரைப் புலப்பட்ட பகுதிகளும் மாறவர்மனை நிலைதடுமாறச் செய்தன ஒரு கணம்.

''குமுதம், நில், ஒரு முக்கியச் 'செய்தி'' என்று அவளது கரத்தைப் பிடித்துத் தடுத்து இழுத்தான். குமுதம் நிலை தடுமாறினாள். படகு ஆடியது.

''நீங்களும் கடலில் குதித்துவிடுங்கள்'' என்று படகோட்டி கூவினான்.



''இல்லை, நாங்கள் குதிக்கப்போவதில்லை— உங்களிருவரையும்தான் கடலில் தள்ளப்போகிறேன்'' என்று கூறி, கண் இமைக்கும் நேரத்தில் அருகே இருந்த துடுப்பைப் பலமாகச் சுழற்றி படகோட்டியையும், கோல் போடுபவனையும் மூர்க்கத்தனமாகத் தாக்கிக் கடலில் பிடித்துத் தள்ளிவிட்டான். வியப்பும், அச்சமும் நிலவ குமுதா பார்த்துக்கொண்டிருந்தாள்.

காங்கேயனும், பராக்கிரமப் பெருமாளும் நீந்திச் சென்று கொண்டிருப்பது தெரிந்தது.

## 2. முதல் பலி

துடுப்பினால் தாக்கப்பட்டு, படகோட்டியும் அவனது உதவியாள் கோல் தள்ளுபவனும் கடலில் வீழ்ந்ததைக் கண்டு பதறிப்போய் 'ஐயோ' என்று குமுதம் அலறிவிட்டாள். மாறவர்மன் சிரித்துக்கொண்டே கோலை எடுத்து ஊன்றிப் படகை தள்ள முற்பட்டவன் குமுதத்தை நோக்கி, ''ஏன் இப்படிக் கத்துகிறாய். பயமா?'' என்றான்.

''என்ன காரியம செய்துவிட்டீர்கள்?''

''ஏன், மிக நல்ல காரியம் செய்துவிட்டேன். விரோதிகளைத் தாக்குவதில் பாரபட்சம் பார்க்கக் கூடாது.''

''விரோதியா? நம்மைப் படகில் இரவோடு இரவாக ஏற்றி வந்த இவர்கள் விரோதிகளா? மாறா, உங்களுக்கு யார் விரோதி, யார் நண்பர்கள் என்று புரியாதா?''

''மிக நன்றாகப் புரியும். பார்த்தவுடன் தெரிந்து கொண்டு விடுவேன். அந்தத் திறமை ஒன்றுக்காகத்தான் தலைவர் என்னைத் தேர்ந்தெடுத்தார்.''

''அதைத் தவறாகப் பயன்படுத்தி விட்டீர்கள்''

''குமுதா! படகோட்டிகள் பாண்டிய நாட்டவர்கள் என்றா நினைக்கிறாய்?'' என்று கேட்ட மாறன், குமுதாவை நோக்கி, ''நீ துடுப்பைப் போடு, நான் கோல் கொண்டு தள்ளினால் தான் படகு நகரும். கொஞ்சம் துடுப்பைப் போடுகிறாயா?'' என்றான்.

''படகை எங்கே செலுத்துவதாக உத்தேசம், உங்கள் போக்கே பிடிபடவில்லை. தலைவரின் கட்டளைக்கு மாறுதலாகச் செய்கிறீர்களே'' என்று குமுதா கவலை நிறைந்த குரலில் கேட்டாள்.

மீண்டும் மாறன் சிரித்தான். ''படகைக் கரையை நோக்கிச் செலுத்துவதாக உத்தேசம். இல்லாவிடில் நீ என்ன செய்வதாக இருந்தாய்?'' மாறன் கேட்டவுடன் குமுதம் உடனே மறுமொழி கூறவில்லை. மாறனின் விழிகளையே அவள் நோக்கிக் கொண்டிருந்தாள்.

''என் விழிகளில் என்ன தெரிகிறது குமுதம்?'' மாறன் கேட்டான்.

படகு இப்படியும் அப்படியும் ஆடத் தொடங்கியது. குமுதம் பரபரப்புடன், துடுப்பைப் போடத் தொடங்கினாள். படகு மெல்ல நகர்ந்தது. ஆனால் அவளுக்குப் பயம் பிடித்தது. ''ஆம்! படகைத் திருப்புவதற்கு என்ன செய்ய வேண்டும்? படகு இப்படியே வடக்கு நோக்கிச் சென்று கொண்டேயிருந்தால்...கரை மேற்கே அல்லவா இருக்கிறது?''—குமுதம் கேட்ட பிறகுதான் மாறனுக்கே தன் தவறு புரிந்தது.

''ஆமாம் என்ன செய்வது?'' மாறன் கோலிடுவதை நிறுத்திவிட்டுக் கேட்டான்.

''உங்களுக்கும் படகோட்டத் தெரியாதா?''—குமுதம் கேட்டாள். குரலில் பயம் துடிக்க.



''உங்களுக்கும் என்றால்? உனக்கும் தெரியாதா?'' மாறன் மீண்டும் நகைத்தவாறு கேட்டான்.

மாறனின் பேச்சைக் கேட்க எரிச்சல் ஏற்பட்டது குமுதத்திற்கு. இதென்ன, 'இவர் அசட்டுத் தனமாகப் பேசுகிறாரே? அறியாமையா?' என்று எண்ணியவள், ''எனக்குத் தெரியுமா, தெரியாதா என்று நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?'' என்றாள்.

''எனக்குக் கவலை இருக்க நியாயமில்லையா?'' என்று கேட்டவன், குமுதத்தின் முகம் மாறுவதையும் வெறுப்பும் கோபமும் அவள் முகத்தில் பிரதிபலிப்பதையும் கண்டு கொண்ட மாறன், ''நம் இருவரில் ஒருவருக்காவது படகோட்டத் தெரிந்திருந்தால் நன்றாயிருக்குமே என்பதற்காகக் கேட்டேன்'' என்றான்.

குமுதம் சீற்றத்துடன், ''எனக்குத் தெரிந்திருத்தாலும் உங்களுக்கு லாபமில்லை'' என்றாள்.

மீண்டும் மாறன் சிரித்தான்.

''சிரிக்காதீர்கள்'' என்று கூவிய குமுதம், ''எனக்கு நீந்தத் தெரியும். உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள்.

மாறன் திடுக்கிட்டான். ஆம், அவனுக்கு நீந்தத் தெரியாது; தெரியாது என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான்.

''நான் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்துவிடுகிறேன். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நீந்தவும் தெரியாது; படகையும் ஓட்டத் தெரியாது. ஆனால் முன் யோசனையின்றிக் காரியங்களைச் செய்வீர்கள். உங்களை எப்படித் தலைவர் தேர்ந்தெடுத்தார் என்றே எனக்குப் புரியவில்லை'' என்று சரமாரியாகப் பொழிந்தாள்.

''தலைவர் என்னை எப்படித் தேர்ந்தெடுத்தார் என்பதைக் கேட்க இவள் யார்?''—இப்படிக்கேட்டுவிட அவன் வாயெடுத்து விட்டான்.

ஆனால் அவன் தன்னை அடக்கிக் கொண்டு, தன்னைத்
தலைவர் தேர்ந்தெடுத்தது எவ்வாறு என்பதைப் பற்றிச்
சற்று யோசித்தான்—படகு மீண்டும் நிலை கொள்ளாமல்
ஆடிக் கொண்டிருந்தது.

மதுரை மாநகரத்தையடுத்த சிறு கிராமத்தில் மாற
னின் பெற்றோர்கள் வசித்து வந்தார்கள். வேலை செய்து
பிழைக்க வேண்டும் என்ற கட்டாயம் அவனுக்கில்லை.
கவலையே இல்லாமல் தாய் அவனை வளர்த்து விட்டாள்.
தந்தை மிகச் சிறு வயதிலேயே இறந்து விட்டார். ஏழு
குழந்தைகள் பிறந்து இறந்து இவன் ஒருவன்தான் தங்கி
யவன். பெற்றோர்களின் முதிர்ந்த பருவத்தில் பிறந்தவன்.
பிறவியிலேயே துடிப்பும் சுறுசுறுப்பும் நிறைந்த குண
முடைய அவன், சிலம்பம், வாள் சுழற்றக் கற்றுக் கொண்
டான். உடலைப் பேணி வளர்க்கும் அனைத்தும் அறிந்
தான். சிறந்த போர் வீரனாக மாற வேண்டும் என்பது
அவன் இலட்சியம்.

வைகையாற்றங்கரையோரமாக அவனைப் போன்ற
வயதுள்ள நண்பர்களுடன் அமர்ந்து, பொழுது போவதே
தெரியாமல் பேசிக் கொண்டிருப்பது ஒன்றுதான் அவன்
செய்யும் அன்றாடப் பணிகளுள் முக்கியமானது. நாட்டு
நடப்பைப் பற்றிய பேச்சு மிக முக்கியமாக அவர்களி
டையே சுற்றிச் சுழலும். பாண்டிய நாட்டுப் படை
அமைப்பை மாற்றினால்தான் சோழர்களது பிடியினின்று
விடுபடலாம் என்று அவர்கள் ஒரு முகமாகக் கருது
வார்கள்.

''எனக்குப் பாண்டியப் படையின் மிக முக்கியமான
அதிகாரி ஒருவரைத் தெரியும். அவரிடம் இந்தக் கருத்தை
எடுத்துச் சொல்லப் போகிறேன்'' என்று மாறன் தன்
நண்பர்களிடம் சொல்வான்.

''நமக்கு எதற்கு அரசாங்க விவகாரம்?'' என்று
கூறுவார்கள் மற்ற நண்பர்கள்.



''அப்படி சுலபமாக விட்டுவிட முடியுமா? நாம்
கையில் வளையல்கள் போட்டுக் கொண்டிருக்கவில்லை.
வீர கங்கணம் போட்டுக் கொண்டிருக்கிறோம். படை
களில் இப்போதுள்ளவர்கள் பாதிக்கு மேல் வயதானவர்
கள்; போரிலே அங்கம் குறைந்தவர்கள்; பலரை அனுபவ
சாலிகள் என்று இன்றும் வைத்துக் கொண்டிருக்கிறார்
கள்'' என்றான் மாறன்.

''அதற்காக அவர்களை ஆற்றில் தள்ளிவிட
முடியுமா?'' என்று மற்றவர்கள் கேட்டார்கள்.

''அவர்களது அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்
வோம். நம்மைப் போன்ற இளைஞர்களுக்கு அவர்கள்
அறிவில் உதவட்டும். ஆற்றல் நம்மிடமிருக்கட்டும்—''
மாறவர்மன் கணீரென்று குரல் கொடுப்பான்.

''மாறா, நீ இவ்வளவு தெரிந்து வைத்திருப்பது
ஆச்சர்யமாயிருக்கிறதே—'' என்று நண்பர்கள் வியப்பார்
கள். நண்பர்கள் குழாத்திடையே அவன் தலைவன்!
வியப்படையும் நண்பர்களுக்கு, ''அதுதான் சற்று முன்பு
சொன்னேனே— வல்லபன் என்ற மாபெரும் வீரரை
எனக்குத் தெரியும். அவர் வீட்டிற்கு அருகே நான் இருக்
கிறேன். அவரிடம் பேசுவதற்குப் பலர் வருவார்கள்.
நான் ஒதுக்குப்புறமாக இருந்து கேட்டுக் கொண்டிருப்
பேன்'' என்று பெருமையுடன் மாறன் கூறுவான்.

வல்லபன், பெயருக்கு ஏற்ப வல்லமை நிறைந்தவர்.
வலிமை மிக்க திண் தோள்களும், அடர்ந்த மீசையும்
கொண்ட அவர் போர் வீரருக்கு உற்ற உடைகளை அணிய
மாட்டார். வேளாண்மைத் தொழில் செய்யும் குடிமக
னைப் போல் தோன்றுவார். அவர் எப்போது வீட்டிற்கு
வருவார் போவார் என்பது அவரது வீட்டிலுள்ளவர்
களுக்கே தெரியாது. சிறு வீடாயினும் மிகத்தூய்மையுடன்
காட்சியளிக்கும். வீட்டுத் திண்ணையில் வல்லபனின்

வயது முதிர்ந்த மூதாட்டி காலை நீட்டிப் போட்டுக் கொண்டு வெற்றிலை இடித்துக்கொண்டு குரல்கொடுத்துக் கொண்டிருப்பாள். கண்கள் தெளிவாகத் தெரிந்தன. வீட்டிற்குள்ளே ஒலுங்கும் வளையொலி கேட்கும். பூஞ்சிட்டு போல் உள்ளே வல்லபனின் மகள் உலவுவது தெரியும். மாறவர்மன் இவை அனைத்தையும் கவனித்து வைத்துக் கொண்டு திண்ணையிலுள்ள மூதாட்டியிடம் பழங்கதைகள் பேசிக் கொண்டேயிருப்பான்.

மாறனிடம் வல்லபனுக்கு மிகுந்த அன்பு ஏற்பட்டிருக்க வேண்டும். மாறனின் கம்பீரம், தோள் வலிமை, சுறுசுறுப்பு இவற்றைக் கவனித்திருக்க வேண்டும். அதனால்தான் ஒரு நாள் அவனை முக்கியமான செயல் ஒன்றை மேற்கொள்ள அழைத்தார்.

குமுதத்திடம் இதை எப்படிச் சொல்வான். மிகவும் சுலபமாகக் கேட்டு விட்டாளே! 'தனக்கும் தலைவர் வல்லபனுக்கும் தொடர்பு எவ்வாறு ஏற்பட்டது' என்பதை எப்படி எடுத்துச் சொல்லுவான்?

மாறவர்மன் திக்பிரமை பிடித்ததுபோல் தன்னையே பார்த்துக்கொண்டே நிற்பதையும், படகு நிலை கொள்ளாமல் தவித்து ஆடுவதையும், தொலைவில் காங்கேயனும் பெருமாளும் நீந்திச் செல்வதையும் கண்ட குமுதத்திற்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. இதைவிடப் பெரும் ஆபத்துக்களை எதிர்ப்பட வேண்டியிருக்கும் என்பதைத் தெரிந்துதான் பயணத்தில் இறங்கினாள். ஆனால் இப்படியொரு உயிர்ப்போராட்டம் ஏற்படும் என்று நினைக்கவேயில்லை.

மாறனுடைய மௌனத்தைக் கலைத்து, ''என்ன மாறவர்மரே, இப்படியே தியானத்தில் அமிழ்ந்து விட்டால் பிறகு என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டாள்.

மாறன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''கரையை நோக்கிப் படகைச் செலுத்துவது எனது



நோக்கம். ஆனால் படகைத் திருப்புவது எப்படி என்று தெரியவில்லை. உனக்கும் தெரியாது என்பது இப்போது தெரிந்து விட்டது. அடுத்து என்ன செய்வது என்பதைப பற்றி யோசிக்கிறேன், அதற்குள் நீ எனது திறமையைப் பற்றிச் சந்தேகித்து விட்டாய்'' என்றான்.

''திறமையை நான் சந்தேகிக்கவில்லை. ஆனால் தங்கள் முன் யோசனையைப் பற்றித்தான் எனக்குக் கவலை. இப்படியே ஆடும் படகில் அமர்ந்து கொண்டு விவாதிப்பதும், சிந்திப்பதும் சரியில்லை. ஏதாவது ஒரு முடிவுக்கு உடனே வாருங்கள். படகோட்டியைத் தாக்கிக் கடலில் தள்ளியது தவறு என்பதை இப்போதாவது உணருங்கள். இந்தச் செய்தி தலைவருக்குத் தெரிந்தால் அவர் தங்கள் மீது மிகவும் கோபங் கொள்வார்'' என்றாள் குமுதம்.

''பாராட்டுவார். என் பணியைத் தக்க சமயத்தில் செய்தேன். விரோதிகளை ஒழிக்கவே நாம் பயணம் புறப்பட்டுள்ளோம். முதல் பலி ஆகி விட்டது''—மாறன் கம்பீரமாகக் கூறினான்.

''விரோதிகளை ஒழித்துக் கட்ட வேண்டும்; உதவி செய்தவர்களை அல்லவே. படகோட்டி நம்மைக் கரை சேர்த்ததற்குப் பரிசா அவர்களுக்கு?'' குமுதம் கேட்டாள்.

''படகோட்டி கரை சேர்க்கவில்லையே. கடலில் குதிக்கச் சொன்னான்''—மாறன்.

''அதற்கு அவன் சொன்ன காரணங்கள் நியாயமாகப் படவில்லையா? பெருமாளும், காங்கேயனும் அதை ஒப்புக் சொள்ளவில்லையா?''—குமுதம் மடக்கினாள்.

''உண்மையான பாண்டிய நாட்டுப் படகோட்டியாயிருந்தால் நம்மை இங்கே குதிக்கச் சொல்லியிருக்க

மாட்டான். கரை நெருங்கியவுடன் இப்படிச் செய்ததில் ஏதோ கபட எண்ணம் இருக்க வேண்டும். அவர்கள் நமக்கு உதவ வரவில்லை...'' மாறன் அழுந்தத் திருத்தமாகப் பேசினான்.

படகு மிகவும் ஆடியது. குமுதம், மாறன் கூறுவதை மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''தொண்டித் துறைமுகத்தில் நாம் புறப்பட்ட போதே, இந்தப் படகோட்டிகள் நாம் ஏற்பாடு செய்தவர்களில்லை என்பதைக் கவனித்து விட்டேன். பகலில் அவர்கள் அதிகம் பேசவில்லை. இரவு பேசத் தொடங்கியவுடன் அவர்களது கொச்சைப் பேச்சு பாண்டிய நாட்டு வழக்குக்கு மாறாக இருந்ததைக் கவனித்தேன். படகோட்டியின் மார்பில் கோத்துக் கட்டப்பட்டிருந்த பதக்கத்தில் புலி உருவத்தையும் காலையில் கவனித்து விட்டேன்'' என்று மாறன் சொல்லி வரும்போது, குமுதம் குறுக்கிட்டாள். ''அப்படியிருந்தால் அவர்கள் நம்மை நடுக்கடலிலேயே தள்ளியிருக்கலாமே...''

அவளுடைய இந்தக் கேள்வி மாறனுக்கு எரிச்சலை ஊட்டியது. ''விரோதிகளையும் சதிகாரர்களையும் அடையாளங் கண்டு கொள்ளும்போது, சட்டென்று முடிவு எடுக்க வேண்டும். இப்படி ஏன் செய்யவில்லை அப்படி ஏன் செய்யவில்லை என்று யோசித்து விவாதித்துக் கொண்டிருக்கக் கூடாது. இப்போதும் அப்படியே. அடுத்து என்ன செய்ய வேண்டும்? படகு மிகவும் ஆடுகிறதே'' என்று மாறன் பரபரத்தான்.

''யோசித்து. விவாதித்துக் கொண்டிருப்பதற்குள் படகு நம்மைக் கவிழ்த்து விடும். படகு கவிழ்ந்து, அதனடியில் நாம் சிக்கிச் சாவதைவிட நாம் கடலில் குதித்து நீந்துவது நல்லது. கடலில் மூழ்கிச் சாகவா நாம்



பயணம் புறப்பட்டோம். நமக்குத் தலைவர் அளித்த மகத்தான கடமையை இப்படி அற்பாயுளில் இறந்து போய் நிறைவேற்றாமல் போவதா? நான் மாட்டேன். நான் படகுக் கவிழ்ந்துச் சாகமாட்டேன். இதோ நான் நீந்திக் கரைக்குச் செல்கிறேன். அதோ கரை தெளிவாகத் தெரிகிறது'' என்று கூறிக் கொண்டே குமுதம கடலில் குதித்து விட்டாள்.

''குமுதம், குமுதம்'' என்று அலறினான் மாறன். அவள் குதித்த வேகத்தாலும், தண்ணீரில் அலைகள் எழும்பியதாலும் சரிசமமற்ற பளுவினாலும் படகு பலமாக ஆடியது. மாறன் இங்கும் அங்கும் கூவிக் கொண்டே பலமாக ஆடியதால் ஒரு புறமாக சாய்ந்தது. மற்றொரு அலை தாக்கியதால் படகு கவிழ்ந்தது. மாறவர்மன் கடலில் வீழ்ந்தான்.

குமுதம் நீந்திப்பழக்கப்பட்டவள் மிக எளிதாக நீந்திக் கரையை நோக்கிச் சென்றாள். அலைகள் அதிகமற்று ஆழ்கடல்போல் அந்தக் கழிமுகப் பகுதி இருந்ததால் ஓர் ஏரியிலும், குளத்திலும் நீந்துவது போலவே தோன்றியது. குதித்த இடத்திலும் ஆழம் அதிகமில்லை என்பதையும் அவள் புரிந்து கொண்டாள்.

குமுதத்தை எதிர்பார்த்துக் கரையில் காங்கேயனும் பெருமானும் காத்துக் கொண்டிருந்தனர். எந்த இடத்தில் கரையேறுவாளோ என்று இங்குமங்கும் ஓடியவாறு பார்த்துக் கொண்டிருந்த பெருமாள், ஏதாவது ஓயாமல் சொல்லிக் கொண்டேயிருந்தான்.

''நாம் குதித்த உடனேயே குதிக்க வேண்டியவள் தானே இவள்'' என்றான்.

''நீந்தும்போது ஒரு தடவை திரும்பிப் பார்த்தேன் அவள் வரவில்லை. அவளை வரவிடாமல் அந்த மாறன்

ஏதாவது பேச்சுக் கொடுத்துக் கொண்டிருப்பான். எனக்கென்னவோ, மாறனின் பேச்சு, பார்வை, நடவடிக்கை ஏதும் பிடிக்கவில்லை. 'குமுதம் எங்கிருந்தாலும் அவளுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்' என்று தலைவர் சொல்லியிருக்கிறார். குமுதம் துணிச்சல் உடையவள்; ஆனால் குழந்தை மனம் இன்னும் மாறவில்லை''—இப்படியாக வாய் ஓயாமல் காங்கேயனிடம் சொல்லித் தவித்துப் போனார் பெருமாள்.

குமுதம் கரையேறியதும் இருவரும் அவள் அருகே ஓடினர். பெருமாள் சிறு குழந்தையைப் போல் குமுதத்தைக் கண்டவுடன் குதித்தார்.

''முருகன் அருளால் வந்து சேர்ந்தாள். அந்தப் பிள்ளை எங்கே?''—காங்கேயன் கவலையுடன் கேட்டார். மாறனை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை தலைவர் அவரிடம் ஒப்படைத்திருந்தார்.

ஈர உடையுடன் உடல் நடுங்க குமுதம் நின்று கொண்டிருந்தாள். நனைந்த கூந்தலை மெல்ல அவிழ்த்துக் கொண்டாள். அடுத்து என்ன செய்வது? மாறன் என்ன வானாரோ என்று கடல் பக்கம் திரும்பினாள். கண்ணுக் கெட்டிய தொலைவு வரை எவரும் நீந்தி வருவது தெரியவில்லை. படகையும் காணவில்லை.

''அவருக்கு நீந்தத் தெரியாதாம்'' என்று குமுதம் கவலையுடனும், பயத்துடனும் வார்த்தைகள் தடுமாறக் கூறினாள்.

''சாமர்த்தியமான பிள்ளை, படகோட்டியிடம் பேச்சுக் கொடுத்துக் கரையிலேயே கொண்டுசேர்க்குமாறு செய்துவிடுவான்'' — காங்கேயன் நம்பிக்கையுடன் கூறினார்.



பெருமாள் கடலைக் கூர்ந்து நோக்கினார். ''படகும் தெரியவில்லை; அவன் நீந்தி வருவதையும் காண முடியவில்லை...'' என்று கவலையுடன் கூறினார்.

குமுதம் உடல் சிலிர்த்தது குளிரினால் அன்று; மாறவர்மனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற பயத்தால்.

''அவருக்கு நீந்தத் தெரியாதாம்'' குமுதம் வார்த்தைகள் தடுமாறக் கூறினாள்.

பெருமாளும், காங்கேயனும் ஒரே சமயத்தில் ''ஐயோ'' என்று அலறினர்.

''என்ன அவனுக்கு நீந்தத் தெரியாதா? அப்போ அவன் கதி?'' என்று காங்கேயன் கூறினார்.

''சோழ நாட்டில் நம் நால்வருக்கும் ஒவ்வொரு வேலையைப் பிரித்துக் கொடுத்திருந்தாரே தலைவர். அவன் செய்யவேண்டியதை யார் செய்யப் போகிறார்கள்!''—பெருமாள் மிகவும் கவலைப்பட்டான்.

## 3. அரசியின் புதக்கம்

காங்கேயனும், பெருமாளும் கடலை நோக்கி உற்றுப் பார்ப்பதும், பிறகு குமுதத்தின் அருகே வந்து ஏதோ பேசுவதும், கரையின் சிறிது தொலைவு வரைச் செல்வதும் வருவதுமாக நிலை கொள்ளாமல் தவித்தனர். ஏரியைப் போல்தான் கடல் அங்கு இருந்ததே தவிர அலையென்ற பேச்சுக்கே இடமில்லை. தொலைவில் கடலை நோக்கிப் பாய்மரப் படகுகள் செல்வது தெரிந்தன. ஒரே ஒருவர்

செலுத்தும் கட்டுமரம் ஒன்று தொலைவில் வந்து கொண்டிருந்தது.

"நாம் இப்படியே நின்று கொண்டிருந்தால் அடுத்த திட்டத்தை மேற்கொள்ள வேண்டாமா?" என்று பெருமாள் துரிதப்படுத்தினான்.

குமுதம் ஈரப்புடவையுடன் நின்றுகொண்டு குளிரால் நடுங்கியவாறு கடலை நோக்கிப் பார்வையைத் திருப்பினாள். மாறவர்மனைத் தனியே விட்டு விட்டுக் கடலில் குதித்துத் தான் மட்டும் வந்திருக்கக் கூடாது என்று ஒருமுறை தன் செய்கையை நினைத்து வருந்தினாள். மறுகணமே 'நீந்திவராமல் படகிலேயே ஏன் உட்கார்ந்திருக்க வேண்டும்? நாம் மாறனை எதற்காக எதிர்பார்த்து இங்கே நிற்கவேண்டும்?' என்றும் எண்ணினாள். நீந்தத் தெரியாதவருக்கு நாம் உதவியிருக்கலாம் என்ற பாச உணர்ச்சியும் மறுகணம் மேலோங்கியது.

பாச உணர்ச்சி, நான்கு நாட்களுக்குள் ஏற்பட்டது தான். அதற்கு முன்பு மாறவர்மனை அவள் அறிய மாட்டாள்; அவளுக்கு, பராக்கிரமப் பெருமாள் வேலை செய்யும் உலைக்கூடம் மட்டுமே தெரியும். ஆற்றங்கரை தெரியும். மீனாட்சி அம்மன் திருக்கோயில் தெரியும். பொற்றாமரைக் குளம் தெரியும். உலைக் கூடத்திற்குப் பேசவரும் அரசாங்க அதிகாரிகள் சிலரைத் தெரியும். அவர்களுள் வல்லபனும் ஒருவர்.

நனைந்திருந்த புடவையிலிருந்து த்தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. உடனடியாகப் புடவையைப் பிழிந்து உலர்த்தவேண்டும். எங்கே மறைவிற்குச் செல்வது? அடுத்து என்ன செய்வது? குமுதம் கவலைப்பட்டாள்.

பெருமாள் அதே கேள்வியைக் கேட்டான். "நாம் இப்படியே ஈரத்துடன் நிற்கலாமா? அதோ அந்தத்



தோப்பிற்குள் சென்று ஈரப் புடவையைப் பிழிந்து உலர்த்திக்கொள்; கூந்தலையும் அவிழ்த்துக் காயவிடு; அதற்குள் நாங்கள் ஒரு முடிவுக்கு வருகிறோம்". என்றான்.

கரையருகே தென்னை மரங்கள் நிறைந்த தோப்பு ஒன்று இருந்தது. கண்ணுக்கு எட்டிய தொலைவு வரைவில் தென்னை மரங்கள் தாம். ஒருபுறம் நீரும், மறுபுறம் தோப்புமாக இயற்கையின் இன்பத் திருவிளையாடல் அங்கு நிறைந்திருந்தது. கடற்பகுதியைத் திருப்பிப் பார்த்துக் கொண்டே சென்றாள் குமுதம்.

"நாம் இப்போது எங்கே வந்திருக்கிறோம் என்று தெரியவில்லையே?" என்று பெருமாள் கேட்டான்.

"இரவெல்லாம் பயணம் செய்தால் உங்களைக் காவிரிப் பூம்பட்டினம் கரையருகே இறக்கி விடுவான் படகோட்டி. அங்கே இறங்கி அருகிலுள்ள கிராமத்தில், இளைப்பாறிப் பிறகு திட்டப்படிச் செயலாற்றுங்கள்" என்று தலைவர் நமக்குச் சொல்லியிருக்கிறார் என்று காங்கேயன் தனது மேல் அங்கியைப் பிழிந்தவாறு கூறினார்.

பெருமாளுக்கு குளிரால் உடல் மெல்ல நடுங்கியது. காலையிலேயே ஏதாவது நீராகாரம் குடித்துப் பழக்கப் பட்ட அவனுடைய வயிறு புரட்சி செய்ய ஆரம்பித்து விட்டது.

கதிரவன் மிக வேகமாகக் கீழ்க்கடலில் எழுந்து கொண்டிருந்தான். வெயில் 'சுள்'ளென்று அடிக்கத் தொடங்கி விட்டது. காற்றும் 'விர் விர்' என்று அடித்தது கடல் மணலில் இளஞ் சூடு பரவத் தொடங்கியது. பாய்மரப் படகுகள் செல்வது தெளிவாகத் தெரிந்தன.

குமுதத்தின் சேலை இன்னும் காயவில்லை. அவள் அதை அப்படியே சுற்றிக்கொண்டு கூந்தல் தோளில் தவழ அங்கு வந்தாள்.

''நேரமாகிக்கொண்டு வருகிறது. எனது சேலை காயும் வரையில் காத்திருக்க வேண்டாம். நாம் நடக்கும் போதே சேலை காய்ந்துவிடும்'' என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள். கூந்தலைக் கைவிரல்களால் கோதிக் கொண்டே அவள் வருவது வன தேவதை வருவது போலிருந்தது. கோயில் கருவறையிலுள்ள சிலையே உயிர்பெற்று நடமாடத் தொடங்கி விட்டதோ என்று தோன்றியது. கச்சையையும் மீறி நனைந்திருந்த சேலை உருவகப் படுத்திய செழித்த மார்பகங்களும், பளபளப்பாக மின்னிய கருமை பாய்ந்த மேனியும், சுறுசுறுப்பும் அஞ்சாமையும், பிறரைக் கவர்ந்திழுக்கும் ஒளி நிறைந்த விழிகளுமாக அவள் நடந்து வருவதைக் கண்டு பெருமாளும், காங்கேயனும் ஒருகணம் திகைத்தனர்.

''இளவயதில் குமுதத்திற்கு உள்ள துணிவைப் பாராட்டத்தான் வேண்டும். மூன்று ஆண்களுடன் தன்னந்தனியாக அவள் படகில் வரும் தைரியம் மற்ற பெண்களுக்கு வருமா என்பது சந்தேகமே—'' என்றார் காங்கேயன்.

''குமுதம் யாருக்கும் பயப்பட மாட்டாள். அவளுக்கு ஒரே இலட்சியம் சோழர்களைப் பாண்டிய மண்ணிலிருந்து ஓட்ட வேண்டும். தன் வயதைப் பற்றியோ, தான் ஆண்கள் நடுவே வருகிறோமே என்ற நாணமோ அவளுக்குக் கிடையாது. ஆனால்—' என்று கூறிப் பெருமாள் சற்று நிறுத்தினான்.

''ஆனால்...முழுமையும் சொல்லிவிடுங்கள்...''

''மாறவர்மன் மீதுதான் எனக்குச் சந்தேகம். அவன் ஏதாவது தவறாகப் பேசியிருக்க வேண்டும். அதனால்தான் அவனை விட்டு விட்டு இவள் மட்டும் நீந்தி வந்திருக்கிறாள்—''—பெருமாள் தன் சந்தேகத்தைத் தெரிவித்தான்.



காங்கேயன் தலையசைத்தார்.

''அப்படியெல்லாம் இருக்காது'' என்றார்.

அதற்குள் குமுதம் அவர்கள் அருகே வந்துவிட்டாள். மாறவர்மன் என்ற சொற்கள் மட்டுமே அவள் செவிகளில் விழுந்தன.

'மாறவர்மனை நாம் எங்கு சந்திப்பது. உங்கள் திட்டமென்ன? பெரியவர் காங்கேயனுக்குத்தான் பொறுப்பு அதிகம். என்னைப் பழையாறை மாளிகையில் பணிப் பெண்ணாகச் சேர்க்க வேண்டும். பெருமாளுக்கு ஆயுத சாலையில் வேலை வாங்கித் கொடுக்க வேண்டும். இவ்வளவும் உடனே நடக்க வேண்டுமே'' என்று குமுதம் தன் கவலையைத் தெரிவித்தாள்.

''கவலையே படக்கூடாது குமுதம். சோமசுந்தரக் கடவுளின் அருளினால் நம்மை நாடிவரும் துன்பங்கள் ஓடி மறைந்து விடும். எனக்குக் கீழையூரில் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவர் வீட்டில் போய்த் தங்குவோம். புறப் படுங்கள்—'' என்றார் காங்கேயன் உற்சாகத்துடன்.

''கீழையூர் எங்கே இருக்கிறது?'' என்று பெருமாள் கேட்டான். காலையிலேயே சம்மட்டி, நெருப்பு எதிரே நின்று பழக்கப்பட்ட அவனுக்குச் சோம்பல் என்பது கனவிலும் ஏற்படாது.

''இங்கு எங்கேயோதான் இருக்க வேண்டும். இந்தத் தோப்பைத் தாண்டினால் ஏதாவது வீடுகள் கண்ணில் படாதா?'' என்று காங்கேயன் கூறினார்.

அந்தத் தோப்பில் நூற்றுக் கணக்கான தென்னை மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. புதர் மண்டிக்

கிடந்தது. தோப்புக்குள் செல்லச் செல்ல இருள் மிகுந்தது. சூரிய ஒளி அங்கெல்லாம் பரவ நேரமாகும். ஒற்றையடிப் பாதை ஒன்று வளைந்து வளைந்துச் சென்றது. ஜன நடமாட்டம் இருக்கிறது என்பதற்கு அந்தப் பாதை சான்று கூறியது.

நேரம் போவதே தெரியவில்லை. அவர்கள் நடந்தனர். தோப்பின் எல்லையை அடைந்தாகி விட்டது. எங்கும் சிறு மலைக்குன்றுகள். கள்ளிப் புதர்கள். பறவைகள் கூட்டங் கூட்டமாகப் பறந்து சென்று கொண்டிருந்தன. கண்ணுக்கெட்டிய தொலைவு வரை மக்கள் வசிப்பதாகவே தெரியவில்லை.

''உம்; ஈசன் விட்ட வழி. நடையைத் துரிதப்படுத்துங்கள். இது எந்த இடமென்றே தெரியவில்லை; காவிரி கடலில் சேரும் இடம் அருகே சிற்றூர்கள் பல உண்டு என்று சொல்லக் கேள்வி. இந்த இடத்தில் காவிரி பாய்வதாகவே தெரியவில்லை. விளை நிலங்கள் ஒன்றையும் காணோமே'' என்று காங்கேயன் கவலையைத் தெரிவித்தார்.

''நாம் இப்படிக் குறிக்கோள் இல்லாது போய்க் கொண்டே இருந்தால்...?'' என்று பெருமாள் கேட்டான்.

''குறிக்கோளா? நமக்குக் குறிக்கோள் இல்லை என்று யார் சொன்னது? நாம் ஓர் இலட்சியத்துடன் புறப்பட்டிருக்கிறோம். தலைவர் தக்க வழி சொல்லியிருக்கிறார். வழி நீண்டிருக்கும் அவ்வளவுதானே!'' என்று குமுதம் சொன்னது அனைவருக்கும் உற்சாகமூட்டியது.

'இந்த வயதிலேயே இவ்வளவு திறமையா?' என்று மனத்துள் காங்கேயன் வியந்தார்.

கதிரவன் உச்சிவானையடையும் போது மூவருமே சோர்ந்து விட்டனர். மிக அருகே மாந்தோப்பு தெரிந்



தது. அந்தத் தோப்பு வரையில் சென்று அங்குத் தங்கி விடுவது என்ற முடிவுடன் அவர்கள் மேலும் நடந்தனர்.

''இனி நமக்குக் கவலையில்லை. அதோ பார்'' என்று காங்கேயன் வியப்பு மிகுதியால் கூவினார்.

''ஈசன் வழி காட்டி விட்டார்'' என்று குதூகலித்தாள் குமுதம்.

மாந்தோப்பு! இலைகளை மறைத்து மாங்காயும், கனியுமாக மரங்களில் நிறைந்திருந்தன. மாந்தோட்டத்திற்குள்ளிருந்து சிரிப்பொலியும், பலர் சேர்ந்து உற்சாகமாகப் பேசுவதும் கேட்டன.

பெருமாளும் காங்கேயனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

மரத்தடியில் நான்கு பேர் உட்கார்ந்து எதையோ பங்கு போட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் முன்பு ஆபரணங்கள் குவியலாகக் கிடந்தன. பெட்டி ஒன்று உடைக்கப் பட்டுச் சற்றுத் தொலைவில் கிடந்தது. ஒவ்வொரு நகையாக எடுத்துப் பார்ப்பதும், சிரிப்பதுமாக அவர்கள் நால்வரும் பங்கு போடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

காங்கேயனும் மற்றவர்களும் வருவதை அவர்கள் கவனிக்கவில்லை. மரத்தின் மறைவில் பெருமாளையும் குமுதத்தையும் நிற்கச் சொல்லிவிட்டு, காங்கேயன் மட்டும் அவர்கள் அருகே சென்று, ''ஐயா, கீழையூருக்கு எப்படிச் செல்ல வேண்டும்?'' என்று கேட்டார்.

திடீரென்று வேற்று மனிதரின் குரல் கேட்கவும், அங்கிருந்த நால்வரும் திடுக்கிட்டு எழுந்தனர். நகைகளை அப்படியே விட்டு விட்டு ஓடத் தலைப்பட்டனர்.

''ஐயா, ஐயா ஓடாதீர்கள். உங்களை ஒன்றும் நான் செய்துவிடமாட்டேன். நான் வழிப் போக்கன். வழி தவறி விட்டது. காவிரிப்பூம் பட்டினத்திற்கு வழி சொல்லுங்கள். ஓடாதீர்கள். சற்று நில்லுங்கள். ஓடாதீர்கள், ஓடாதீர்கள்'' என்று கூவியவாறு காங்கேயன் அவர்களைத் தொடர்ந்து சிறிது தூரம் ஓடினார்.

மரத்தின் மறைவிலிருந்து குமுதமும், பெருமாளும் வெளியே வந்து நகைக் குவியலைக் குனிந்து வியப்புடன் பார்த்தனர். குமுதம் குவியலிலிருந்து பதக்கம் வைத்த சங்கிலி ஒன்றைக் கையில் எடுத்தாள். தன் கழுத்தில் அணிவது போல் மார்பருகே வைத்து ஆசையுடன் அழகு பார்க்கும் சமயத்தில் காங்கேயன் மூச்சுவாங்கத் திரும்பி வந்து, 'நம்மைக் கண்டவுடன் அவர்கள் ஓடிவிட்டார்கள். ஏன், இந்த நகைகளை விட்டு விட்டு ஓடுகிறார்கள் தெரியவில்லையே?'' என்று நகைக் குவியலைக் குனிந்துப் பார்த்தார்.

குமுதம் நகையின் அழகை ரசித்தவள், திடீரென்று கூவினாள்.

''இதோ பாருங்கள், இந்த அடையாளத்தைப் பாருங்கள். இது நம் நாட்டு நகை...' என்றாள். அவள் கையில் ஆடி அசைந்து கொண்டிருந்த சங்கிலியில் கோர்க்கப்பட்டிருந்த பதக்கத்தில் 'மீன்' உருவம் வைரக் கற்களினூடே தெளிவாகத் தெரிந்தது.

''பாண்டிய அரசியின் பதக்கம் இது'' என்று காங்கேயன் வியப்பால் கண்களும், முகமும் விரியக் கூறினார்.

# 4. மறுபிறவி

மார்கழி மாதத்துப் பனிப்படலம் கலபதி புரத்தின் மீது மெல்லிய ஆடை போர்த்தியதுபோல் படர்ந்திருந்தது. கதிரவனின் கரங்கள் அப்போர்வையை விலக்கி ஊரில் புதிய தெம்பு ஏற்படச் செய்வதற்கு முன்பே, கலபதிபுரம் கலகலப்புக் கொள்ளத் தொடங்கிவிட்டது.

உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு வேகமாகக் கடற்கரையை நோக்கிச் சிலர் சென்று கொண்டிருந்தார்கள். ஆண்களும், பெண்களும் பெருங் கூடைகளில் கடலில் பிடித்த மீன்களைச் சுமந்து கலபதிபுரத்துத் தெருக்களில் வந்து கொண்டிருந்தனர். விரைந்து வரும் குதிரைகள் புழுதிப் படலத்தை எழுப்பிக் கொண்டிருந்தன. மரத்தடியில் உலர்ந்த சருகுகளை மூட்டித் தீவைத்து அதைச் சுற்றி உட்கார்ந்து சிலர் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்.

கலபதிபுரம் சிறிய ஊர்களின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டியதாயிருப்பினும், செல்வந்தர்கள் நிறைந்திருந்ததால், அவர்கள் வசிக்கும் வீடுகள் மரத்தாலோ, மண்ணாலோ கட்டப்படாமல் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. கடலில் வலை வீசியும் வெகுதூரம் கட்டுமரங்களிலும் படகுகளிலுமாகச் சென்று மீன் பிடித்து வரும் மீனவர்களிடமிருந்து மொத்தமாக வாங்குபவர்கள் அந்த வீடுகளுக்குச் சொந்தக்காரர்களாயிருந்தார்கள்.

அவர்களைத் தவிர பல மரக்கலங்களுக்குச் சொந்தக்காரனான சிங்கவரையன், அந்த ஊரிலே மாளிகையைப் போல் வீடு ஒன்றைக் கட்டியிருந்தான், அவனைக் காண சோனகர்கள் பலர் வருவார். யவன வீரர்கள் அவன் மாளி

கையைக் காவல் காத்து வந்தனர். ஒரே சமயத்தில் அவனுக்குச் சொந்தமான பத்து மரக்கலங்கள் பாய் விரித்து கடல் கடந்த நாடுகளுக்குச் செல்லும். ஒவ்வொரு கலத்திலும் குறைந்தது இருபது பணியாட்களாவது பணி யாற்றுவர். அவர்கள் குடும்பங்களாக கலபதிபுரத்தைச் சுற்றிலுமுள்ள இராமங்களில் வசித்து வந்தனர்.

வெள்ளாறு கடலில் கலக்குமிடத்தில் கலபதிபுரம் இருந்தது. நதியின் சங்கம இடமான அங்கே கடலும் நிலத்துக்குள் வெகு தொலைவு நுழைந்து கழிமுகமாக ஆகியிருந்ததால் பாய் விரித்து வரும் சிறு மரக்கலங்கள் அலையற்ற அந்த இடத்தில் நங்கூரம் பாய்ச்சி நிற்க வசதியாக இருந்தது.

சிங்கவரையன் வீட்டு முன் தாழ்வாரம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். அயல்நாட்டினின்று கொண்டு வரப்பட்ட விலையுயர்த்த பண்டங்கள் திண்ணையிலும், கூடத்திலும் குவிந்திருக்கும். சிங்கவரையனின் கலங்களில் பணிபுரியும் வேலையாட்கள், தங்கள் தலைவரைக் கண்டு வணங்கி தாங்கள் கடல் கடந்த தூர தூர நாடுகளில் கண்ட அதிசயங்களை விவரிப்பார்கள்.

சிங்கவரையனுடைய தந்தை ஒரே ஒரு கலத்துக்குச் சொந்தக்காரராயிருந்து அதைத் தாமே கடலில் செலுத்தி யும் வந்தவர். சோழ சக்கரவர்த்தி விஜயாலயருக்கு அவர் உற்ற நண்பர். அவர் பெயரால் ஏற்பட்டதுதான் அந்த ஊர் என்றும் சொல்வார்கள். வெள்ளாற்றில் வெள்ளம் வரும் காலத்தில் சிங்கவரையன் வீடுவரை வந்து தொட்டு நிற்கும். மேடான இடத்தில் முன் ஜாக்கிரதையாக வீட்டைக் கட்டியிருந்தான்.

உச்சிப் பொழுதுவரை அந்த வீட்டில் கலகலப்புக் குறைந்தே இருக்கும். சிங்கவரையன் தாமதமாகவே எழுந்



திருப்பான். எழுந்துவிட்டாலோ ஓய்வு என்பதே கிடை யாது. பணி ஆட்களுக்கும் வீட்டுப் பெண்களுக்கும் சற்று உட்கார்ந்தோம், என்பதற்கு நேரமே இராது. சிங்க வரையன் மனைவி நாச்சியாரம்மாள் தனது பருத்த சரீரத்தைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு பணி புரிபவர்களுக்கு உத்திரவிட்டுக் கொண்டிருப்பாள்.

அவளுக்கு நேர்மாறானவள் மகள் ரங்கதேவி. அவளது கொடி உடலை அழகு தேவதை மேலும் அழகு செய்திருந்தாள் தன் கை வண்ணத்தால். வீட்டின் புறக் கடையில் வளைந்து வந்து நிற்கும் வெள்ளாற்றுக் கிளை யின் கரையில் உட்கார்ந்து கொண்டு தன் தோழிகளோடு சிரித்துப் பேசியும் குதித்து விளையாடிக் கொண்டும் பொழுதைப் போக்குவாள். அவளுக்கு ஆபரணங்கள் செய்வதற்கென்றே பொற்கொல்லர் ஒருவர் வீட்டின் ஒதுக்குப்புறமாகக் கட்டப்பட்டிருந்த வீட்டில் 'டொக் டொக்' என்று தட்டிப் பொன்னால் பலபல ஆபரணங் கள் செய்துகொண்டிருப்பார். அவைகளுள் பாதிக்குமேல் ரங்காதேவி அணியப் போகும் ஆபரணங்களாகவே இருக்கும்.

வாய்க்கால் கரையில் பொழுது போகாவிட்டால், வெள்ளாற்றில் பாய்மரப் படகில் சிறிது தொலைவு சென்று வருவாள். அலைகளற்ற ஆற்றின் வழியே சென்று, கோஷமிடும் அலைகடல் வரை செல்வதில் அவளுக்கு ஆசை.

"ஒரு நாள் பாரேன், நானும் கலத்தில் ஏறி வெகு தூரம் சென்று வரப்போகிறேன். நடுக்கடலில் விதவித மான பறவைகள் கூம்பில் வந்து உட்காருமாம். பெரிய பெரிய மீன்கள் துள்ளிக் குதிக்குமாம்" என்று தன் தோழி களிடம் உற்சாகமாகக் கூறுவாள் ரங்கதேவி.

"அவளால் சொன்னபடி செய்யமுடியும். அவள் கலபதியின் பெண்" என்று சொல்லி நகைப்பாள் பொன்வடிவு. அவள் பொற்கொல்லரின் மகள்; நெருங்கியதோழி.

"உன்னால் மட்டும் முடியாதா? மனம் வைத்தால் உன் தந்தை தங்கத்தாலேயே படகு செய்து விடுவார். தேவதைகள் படகை ஓட்ட நான் நீ என்று முந்துவார்கள். தங்கப்படகில் உட்கார்ந்து கீதமிசைக்க கந்தர்வர்கள் வருவார்கள்" என்று ரங்கதேவி கவிதை பேசுவாள்.

"தங்கத் தோணியாயிருந்தாலும் துடுப்புப் போட நாங்கள்தான் வரவேண்டும்" என்று படகோட்டியின் மகள் சொல்வாள். அவளும் சரிசமமான தோழி.

அன்று காலையிலேயே ரங்கதேவியின் படகு வெள்ளாற்றிலிருந்து கடலை நோக்கிப் புறப்பட்டது. ரங்கதேவியின் தோழிகள் மூவரும் நேரம் போவது தெரியாமல் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். படகில் விதவிதமான உணவுப்பண்டங்கள் இருந்தன. அவற்றிலிருந்து சில துளிகளை எடுத்துப் போடும்போது அவற்றைத் தின்ன மீன்கள் துள்ளின.

கரையே தெரியாத அளவுக்கு நீர்ப்பரப்பை படகு அடைந்தபோது, பெரிய படகு ஒன்று, அவர்கள் படகை நெருங்கி வந்தது. அந்தப் படகு கலபதி வீட்டை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது. இந்தப் படகைக் கடக்கும் போது, அந்தப் படகோட்டி, ஏதோ கூறினான். தெளிவாகப் புரியவில்லை. ஆனால், ரங்கதேவியின் படகை ஓட்டும் படகோட்டி புரிந்து கொண்டுவிட்டான். அவன் முகத்தில் ஓர் அச்சம் புலப்பட்டது.

"குழந்தே! படகை உடனே திருப்பி விடுவோம்" என்றான் பயம் நிறைந்த குரலில்.



"வழக்கத்துக்கு மாறாக அந்தப் படகு வீடு திரும்புகிறது. அதனால் என்னை முதலாளி கூப்பிட்டனுப்புவார். நான் இல்லாமலிருப்பதையும், தங்களை ஏற்றிக்கொண்டு கடலுக்குள் சென்றிருப்பதையும் அறிந்தால் எனக்குக் கடுந்தண்டனை கிடைக்கும்" என்றான்.

"நீ ஏன் பயப்படுகிறாய்? நான் சொல்லிக் கொள்கிறேன்" என்று ரங்கதேவி தைரியம் கூறினாள்.

"உங்களுக்கும் தண்டனை கிடைக்கும்."

"எனக்கா? என்னை ஏன் தண்டிக்கிறார்?"

"தங்களைக் கடலுக்குள் அழைத்துச் சென்றால் எங்களுக்குத் தண்டனை. ஏற்றிச்செல்ல உத்தரவிட்ட உங்களுக்கும் கிடைக்காமல் இருக்குமா? கண்டிப்பான உத்தரவு குழந்தே, உங்களுக்குத் தெரியாதா?"

"கலபதியின் மகள் கடலுக்குச் செல்லக் கூடாதா? வேடிக்கைதான், யாரிடமாவது சொன்னால் சிரிப்பார்கள்."

"குழந்தாய், சொன்னால் கோபிக்கமாட்டீர்களே! தங்கள் சகோதரர் கடலில் படகு கவிழ்ந்து இறந்த பிறகு முதலாளி இந்த உத்தரவைக்கண்டிப்பாக இட்டிருக்கிறார். எங்கள் ஒவ்வொருவரையும் அழைத்துத் தனித்தனியே சொல்லியிருக்கிறார். நாங்களும் உங்கள் ஆசையைச் சொல்லிப் பார்த்தோம். தட்டமுடியாத நிலையென்றால் ஆற்றுக் கழிமுகம் வரை மட்டுமே அழைத்துச் செல்ல உத்தரவு. நாங்கள், உங்கள் விருப்பம்போல இதுவரையில் நிறைவேற்றி வந்த செய்கையை தங்கள் தந்தை அறிய மாட்டார்."

படகோட்டி இவ்வாறு கூறவும், ரங்கதேவி ஒன்றும் பேசவில்லை. தந்தையிடம் அவளுக்கு அளவற்ற பாசம்;

பக்தி. அவர் சொல்லைத் தட்டத் துணியமாட்டாள். அவள் சகோதரன் கடலில் வீழ்ந்து இறந்த பிறகு மனம் சரியில்லாமல் பல நாட்கள் இருந்தவர். பிறகு ரங்க தேவியையே ஆண் பிள்ளையாகப் பாவித்து அன்புச் செலுத்துவதன் மூலம், புத்ர சோகத்தை மறந்தார். காலையில் எழுந்தவுடன் 'ரங்கா' என்று அவளை அருகே அழைத்து அன்புடன் முதுகைத் தடவிக் கொடுத்துச் சிறிது நேரம் பேசிய பிறகுதான் அலுவலைத் தொடங்குவார்.

படகோட்டி ஏதோ மீண்டும் பேசுவது கேட்டது. 'திரும்பிப் போகும் படகுக்காரன் தங்களை இப்போது அழைத்துச் செல்வதைத் தந்தையிடம் கூறுவதாகப் பயமுறுத்திவிட்டுச் செல்கிறான். அதனால்தான்...'

ரங்கதேவி ஏதும் பேசவில்லை. முகத்தில் இவ்வளவு நேரமிருந்த மகிழ்ச்சி மறைந்தது. தோழிகளுடன் அவள் பேசவில்லை. படகில் கலகலப்புக் குறைந்தது. படகு திரும்பியது.

தோட்டத்துப் பக்க வாயில் வழியாக ரங்கதேவி உள்ளே நுழைந்தபோது வீட்டு முன்கட்டு முற்றத்தில் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது.

பின்கூடத்துத் திரைச் சீலை அருகே நின்றுகொண்டிருக்கும் தாயின் அருகே வந்து நின்ற ரங்கதேவி, "முன் கூடத்தில் என்ன நடக்கிறது?" என்று வினவினாள்.

மகளை மெல்ல அணைத்துக் கொண்ட தாய், "நல்ல வேளை, நீ வந்துவிட்டாய். 'ரங்கா எங்கே?' என்று தந்தை குரல் கொடுப்பதற்கும், படகோட்டிகள் நான்கைந்து பேர் பரபரப்புடன் கடலில் மிதந்து கொண்டிருந்தவனைக் கொண்டு கூடத்தில் கிடத்துவதற்கும் சரியாக இருந்தது. அதனால் உன்னைத் தேடுவதை மறந்துவிட்டார். இப்படித்தான் உன் சகோ



தரனைக் கொண்டு கிடத்தினார்கள். எனக்கு அழக்கூட சக்தியில்லை. உன் தந்தையின் துக்கத்தை மாற்றவே முடியவில்லை. இனி நீ படகுப் பக்கமே போகாதே மகளே" என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

கம்பீரமான தோற்றத்துடன் இளைஞன் ஒருவன் அங்கே கிடத்தப்பட்டிருந்தான். அவன் பாதங்களைத் தேய்த்துச் சூடேற்றிக் கொண்டிருந்தனர், விலாப்புறம் மெல்லமெல்ல அழுத்திவிட்டுக் கொண்டிருந்தனர்.

மருத்துவர் முகத்தில் நம்பிக்கை உதயமாயிற்று. "இந்தப் பிள்ளையின் உயிர் கெட்டி; பிழைத்துவிட்டான். ஓய்வாக எங்காவது படுக்க வையுங்கள்" என்றார்.

ரங்கதேவி அந்த இளைஞனை உற்றுப் பார்த்தாள். மாறவர்மன் அந்த முற்றத்தில் மறுபிறவி எடுத்துப் படுத்திருந்தான். அவனது முகத்தில் ஒளி வீசிய கம்பீரம் அவளைக் கவர்ந்தது.

## 5. போகாதீர்கள், போகாதீர்கள்!

தன் மகள் அந்த வாலிபனை உற்றுப்பார்த்துப் பெருமூச்சு விட்டு நிற்பதைக் கண்டவுடன் சிங்கவரையன் உட்புறம் திரும்பித் தன் மனைவியைப் பார்த்து, "இவனை உள்ளே அழைத்துக் கொள்" என்றார். குரலில் கடுமை இருந்தது.

தன்னிடம் நேரே பார்த்துக் கூறாமல் தன் தாயிடம் கூறுவதிலிருந்தே, தன்மீது தந்தைக்குக் கோபம் என்பதைப் புரிந்துகொண்ட ரங்கதேவி மீண்டும் ஒரு தடவை அந்த வாலிபனைத் திரும்பிப் பார்த்துவிட்டு திரையை விலக்கிக்கொண்டு உள்ளே சென்று தாயருகே நின்று கொண்டாள்.

படகோட்டியைச் சிங்கவரையன் பார்த்து, ''இந்தப் பிள்ளையை எங்கே கண்டெடுத்தீர்கள்?'' என்று கேட்டான். குரலில் கம்பீரம் இருந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக சோகத்தின் சாயை பிரதிபலித்தது.

''நாங்கள் திரும்பிக் கொண்டிருந்தோமா?''...என்று அவன் வர்ணிக்கத் தொடங்கினான்.

''நாங்கள் என்றால் யார் யாரடா?''—சிங்கவரையன் கர்ஜித்தான். அப்போதுதான் தூங்கி எழுந்திருந்ததால் பெரும் கொட்டாவி வந்தது. கண்களில் தூக்கக் கலக்கம் தெளியவில்லை.

படகோட்டி தன்னுடன் வந்தவர்களின் பெயர்களைக் கூறி, ''புட்பகத் தேசத்துக் கலம் மூன்று கல் தொலைவிலேயே நின்றிருந்ததே, அதில் பண்டங்களை ஏற்றி விட்டுத் திரும்பினோம்'' என்று அவன் கூறும்போது குறுக்கிட்ட சிங்கவரையன், ''ஏனடா, அந்தக் கலபதி நம்மைப் பார்க்க வரவில்லை? பெரிய கலமோ அது?'' என்று சிம்மக் குரலெழுப்பினான்.

''ஆமாம் ஐயா; நமது கழிமுகத்திற்குள் வந்தால் புதையுண்டு போய்விடும்.''

''உம். வரவர மணல் மேடிட்டு வருகிறது. நமது கலங்கள் கூட கரையருகே வரப் பயப்படுகின்றன. உம், சொல்லு பிறகு என்ன நடந்தது?''

''நாங்கள் வந்து கொண்டிருந்தோமா, பொழுது புலர்ந்து ஒரு நாழிகைதான் ஆகியிருக்கும். கடலைத் தாண்டி கழிக்குள்ளே வந்து விட்டோம். கவிழ்ந்த படகு ஒன்று தெரிந்தது. நமது படகைப் போல் இருந்தது......''

''உம்; உம்...சீக்கிரம் சொல்லு...''



''நம்முடைய படகில்லை என்று பிறகு தெரிந்தது...'' இதைக்கேட்ட சிங்கவரையன் அருகேயிருந்த வெற்றிலைக் கூடையை எடுத்து அவன் மீது வீசி, ''ஏ முட்டாள்! சொல்வதைச் சுற்றி வளைக்காமல் சொல்லத் தெரியாதா?' என்று சீறவும், படகோட்டி நடுங்கும் குரலில்,

''நல்ல காலம், படகு நம்முடையது இல்லை என்று கவனிக்காமல் வந்திருந்தால் உயிரொன்றை மீட்டிருக்க முடியாது. இந்தப் பிள்ளை பலகையைப் பிடித்துக் கொண்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தது. மீட்டோம். நமது படகில் ஏற்றிக்கொண்டோம். இரண்டு முறை முழுகி உப்புத் தண்ணீரை நிறையக் குடித்திருக்கிறது என்று தெரிந்தது...எங்களுக்குச் சின்ன எசமான் நினைவு வந்துடுத்துங்க'' என்று கூறிச் சற்று நிறுத்தவும், சிங்கவரையன் தழுதழுத்த குரலில், ''உங்களைப் போல் ஒருவரும் அப்போது காப்பாற்ற வரவில்லையே'' என்று கண்கலங்கக் கூறவும், உட்புறமிருந்த அவன் மனைவி விம்மும் குரல் கேட்டது. பிறகு நாச்சியார் திரையை விலக்கிக் கொண்டு கூடத்திற்கு வந்து படகோட்டிகளைப் பார்த்து,

''பழைய சம்பவங்களை ஏன் நினைவுப் படுத்துகிறீர்கள்? இப்படியே முற்றத்தில் ஈர உடலுடன் இந்தப் பிள்ளை கிடக்க வேண்டுமா? வைத்தியர் ஐயா, அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்று கண்டிப்பு நிறைந்த குரலில் கூறினாள்.

சிங்கவரையன் ஒருமுறை முற்றத்தில் கிடக்கும் மாறவர்மனைப் பார்த்தான். சுவாசம் மெல்லியதாக வந்து கொண்டிருந்தது. இளம் வயதுக்கேற்ற திரண்ட தோள்கள் அவனது வீரத்தைப் புலப்படுத்தின.

மாறவர்மனைக் காற்றோட்டமிக்க அறையில் கிடத்தினார்கள். அந்த அறையின் சாளரங்கள் கடற்

கரையை நோக்கி யிருந்தன. கடற்காற்று தவழ்ந்து வந்து மாறவர்மன் மூர்ச்சையைத் தெளிவித்தன. பஞ்சணை மஞ்சத்தில் அவன் மெல்ல தெளிந்தான். நூறு பேர் சேர்ந்து அவனைத் தாக்கி அடித்துப் போட்டது போல் உடல் எங்கும் வலி.

அவன் கண்விழித்தபோது இருள் சூழ்ந்து விட்டது. சிறு விளக்கு மட்டும் அறையின் மூலையில் எரிந்து கொண்டிருந்தது. கடலோசை தொலைவில் இருந்து எழுந்து வருவது அவன் செவிகளில் நன்றாகக் கேட்டது.

எங்கிருக்கிறோம் என்று ஒரு கணம் அவனுக்குப் புரியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாகப் படகு கவிழ்ந்ததும், கடலில் தான் மூழ்கியதும் நினைவுக்கு வந்தது. கடலின் அடியில் கீழே கீழே போனது அவனுக்குத் தெரிந்தது. ''ஐயோ, அம்மா'' என்று ஓலமிட்டதும், வாய் வழியாக நிறைய நீர் உள்ளே சென்றதும் நினைவுக்கு வந்தன. பலர் சேர்ந்துக் கட்டிப் பிணைத்த பிடியினின்று விடுபடுவதற்கு முயன்றது போல் கைகால்களை உதைத்துக் கொண்டது நினைவுக்கு வந்தது. நீரின் மேல்மட்டத்திற்கு வந்ததும் இப்போது ஞாபகத்துக்கு வந்தது. யாரோ மீண்டும் அமிழ்த்துவது போலும் தோன்றியது. 'அம்மா என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அவன் தனக்குள் அலறினான்.

எங்கே இருக்கிறோம் என்று சுற்றுமுற்றும் பார்த்தான். கடலில் இல்லை. ஒரு வேளை கடலுக்கு அடியில் ஏதாவது ஒரு லோகத்துக்குப் போய்விட்டோமா? நாக லோகத்துக்கு வந்து விட்டோமா? நாக கன்னிகைகள் அங்கே இருப்பார்களே! நாகராஜன் அரசோச்சும் அந்த உலகத்தில் நரன் ஒருவன் வந்து விட்டால் அவர்கள் இலேசில் விட்டு விடமாட்டார்களே! நாக கன்னிகையை மணந்துகொள்ள வற்புறுத்துவார்களே! அவர்களிடமிருந்துத் தப்பி வரமுடியாதே!



'நாகலோகத்தில் நாககன்னிகையை மணப்பதற்காகவா மதுரையினின்று புறப்பட்டு வந்தோம். தலைவர் வல்லபன் நம்மை அனுப்பியது எதற்காக? தாய்த்திருநாடான பாண்டிய நாட்டின் விடுதலைக்காக, மாபெரும் தியாகங்கள் செய்ய அல்லவா வந்தோம். நம்முடன் வந்த குமுதம் எங்கே? அவளுக்கு நீந்தத் தெரியும். அவள் நீந்திக் கரையேறியிருப்பாள். சோழர்கள் மாளிகையில் நடப்பவற்றை உளவறிய அங்கே பணிப் பெண்ணாகச் சேர்ந்திருப்பாள். கடலில் வீழ்ந்த நமது கதி என்ன ஆயிற்றோ என்ற கவலை அவளுக்கு இருந்திருக்குமா?'

அந்த அறையின் வெளியே யாரோ நடமாடுவதும் மெல்லப் பேசுவதும் அவன் செவிகளில் வீழ்ந்தன. வாயிற்படியில் தொங்கவிடப்பட்டிருந்த திரைச்சீலை மெல்ல அசைந்தது.

'அதோ குமுதம் வந்துவிட்டாள்! அவளைத் தொடர்ந்து மற்றொரு பெண்ணும் கையில் பாத்திரத்துடன் வருகிறாள். குமுதம் மிக நல்லவள். திறமைசாலி, தைரியம் மிகுந்தவள். அதனால் தானே தலைவர் வல்லபன் சோழ நாட்டிற்கு எதிரான சதித் திட்டம் வகுத்து அதை நிறைவேற்றுபவர்களுள் ஒருத்தியாக அவளையும் சேர்த்துக் கொண்டார்.'

''குமுதா, வந்துவிட்டாயா? கடலில் நீ மூழ்கிவிட்டாயோ என்ற கவலை'' என்று மாறவர்மன் அந்த இரு மங்கையரையும் நோக்கிப் பேசினான்.

அவன் குரல் அவன் தொண்டையை விட்டு வெளியே வரவில்லை. உதடுகள் மட்டும் அசைவதை அவர்கள் கவனித்து விட்டார்கள்.

ரங்கதேவி அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கை தூண்டிவிட்டாள். ஒளி நிறைந்ததால் அந்த அழகு

மங்கையர் இருவரையும் மாறவர்மனால் பார்க்க முடிந்தது.

ரங்கதேவி மாறவர்மனின் மிக அருகே வந்து அவன் ஏதோ சொல்ல முயல்வதைக் கேட்டறிவதற்காக அவன் முகத்தருகே குனிந்தாள்.

கடல் காற்றின் இதத்துடன், ரங்கதேவி பூசியிருந்த நறுமணப் பொருள்களின் சுகந்தமும் சேர்ந்தன.

"இவள் குமுதமில்லை. வேறு யாரோ. ஒருவேளை நாகலோகத்து அரசகுமாரியோ? நாக கன்னிகைகளுக்கு இடுப்புக்குக் கீழ் மீன்வடிவம் தானிருக்கும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்" — அவளைத் தலைமுதல் பாதம் வரையில் ஒருமுறை நோக்கினான்.

"இவள் குமுதமில்லை. குமுதம் கருமைநிற மேனியுடையவளாயினும் துறுதுறுவென்றிருக்கும் முகம்; பாண்டியர்களின் கொடிகளிலுள்ள மீனைப் போன்ற விழிகள்.

செண்பக மலரின் நிறங்கொண்டிருந்தாள் இவள். விழிகளிலே ஓர் அலட்சியமும், தைரியமும், சீறிவரும் மின்னலின் ஒளியும் நிறைந்திருந்தன.

கூந்தலிலே மல்லிகையைத் தொடுத்து அணிந்திருந்தாள். பட்டாடை உடலை அலங்கரித்தது. மார்புக் கச்சையில் விதவிதமான சித்திரக் கோடுகள் வரையப்பட்டிருந்தன. கழுத்திலே முத்து மாலையுடன் கோக்கப்பட்ட புலிநகம் செழித்த மார்பகத்து நடுவே அசைந்தாடி, பாறைகள் நடுவிலே புலி உறுமி நிற்பது போல் தோன்றியது. உடையும், நடையும் செல்வ மிகுந்தவர் வீட்டு மங்கை என்பதைப் புலப்படுத்தின.

"ஏதோ சொல்லத் தவிக்கிறார்" என்று ரங்கதேவி தன் அருகேயிருந்த தோழி பொன்னழகியிடம் சொல்வதும் அவனுக்கு நன்றாய்க் கேட்டது.



"நான் சொல்வதற்குத் தவிக்கவில்லையே. நீங்கள் யார்? என்னுடன் வந்த குமுதம் என்ன ஆனாள்? நான் எங்கே இருக்கிறேன் என்று தெளிவாகக் கேட்கிறேன். உங்கள் காதுகளில் விழவில்லை என்றால் அதற்கு நான் என்ன செய்வேன்? நீங்கள் ஊமையோ அன்றிச் செவிடோ தெரியவில்லையே! மறுமொழி கூறுங்கள். எனக்கு மிகவும் பசி எடுக்கிறது. ஒருவாய் தண்ணீராவது கொடுப்பீர்களா?" என்று அவன் கேட்பதும் அவர்களுக்குக் கேட்கவில்லை அவன் உதடுகள் அசைவது மட்டும் அவர்களுக்குத் தெரிந்தன. வைத்த விழி வாங்காமல் அவன் தங்களை உற்று நோக்குவது கண்டு அவர்களுக்கு கிலி ஏற்பட்டு விட்டது.

"அடி எனக்குப் பயமாக இருக்கிறது. உதடுகள் துடிக்கின்றன. கண்கள் நிலைகுத்திட்டு நிற்கின்றன. கை கால்களை அசைக்க முயல்கிறார். எனக்குப் பயமாக இருக்கிறது. தந்தையிடம் போய்ச் சொல்லி விடுவோம்" என்று பதட்டத்துடன் கூறினாள் ரங்கதேவி.

"போகாதீர்கள், போகாதீர்கள். உங்கள் கையிலுள்ள பால் குவளையையாவது கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்" என்று மாறவர்மன் கூவினான்.

அவன் உரத்த குரலில் பேசுவதாக நினைத்தான்.

ரங்கதேவியும், பொன்னழகியும் அங்கிருந்து விரைந்து செல்லும் சப்தம் கேட்டது.

## 6. அரசியின் ஆபரணங்கள்

தங்கப் பதக்கத்தை அணிந்து கொண்டு, "ஆகா எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று ரசித்துக்கூறினாள் குமுதம். அவளுடைய புன்னகையுடன் பொன் நகையும் சேர்ந்து அவள் அழகுக்கு அழகு செய்தது.

''வளையல்களை அணிந்து கொள். முத்துமாலையை அணிந்து கொள். சுட்டியைத் தரித்துக் கொள். இடைக்கு மேகலை. கால்களில் சிலம்பு. குமுதம், நீ சர்வாபரண பூஷிதையாக சிறிது நேரமாவது விளங்கவேண்டும்'' என்று ஆவல் ததும்பக் கூறினார் காங்கேயன். பிறகு பெருமூச்சு விட்டு ''பாண்டிய அரசியின் நகைகள் இவை'' என்றார்.

''தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று பெருமாள் கேட்டான்.

''மதுரை மாளிகையில் ஒவ்வொரு சிறுபகுதியும் எனக்குத் தெரியும். பாண்டிய ராஜமாதா வானவன்மாதேவி பாதம் முதல் கேசம்வரை வைர வைடூரியம் இழைக்கப்பட்ட நகைகளை அணிந்து மாளிகை மாடத்தில் உலவிய கோலாகலமான காட்சியையும் கண்டிருக்கிறேன். பாண்டிய மாமன்னர் இராஜசிம்ம சக்கரவர்த்தி போர்க் களத்தே கொல்லப்பட்ட பிறகு, தன் தாய் வீடான சேரநாட்டிற்கு ராஜமாதா புறப்பட்ட சோக சித்திரத்தையும் தான் கண்டு கண்ணீர் விட்டிருக்கிறேன்''!

''பாண்டிய மன்னரைக் கொன்று, ராஜமாதாவைப் பிறந்த வீட்டில் ஓடி ஒளியச் செய்த, கொடிய சோழர்களின் ஆட்சியை எதிர்த்து பாண்டிய நாட்டு மக்கள் கொதித்து எழவில்லையா?'' என்று குமுதமும், பெருமாளும் ஒரே சமயத்தில் கேட்டனர்.

''ஏன் எழவில்லை? நாமெல்லாம் யார்? பாண்டிய நாட்டு மக்கள் தாமே? நமது தலைவர் வல்லபன் யார்? இராஜசிம்ம மாமன்னரின் ஆபத்துதவிப் படையைச் சேர்ந்தவர். அப்படையைச் சேர்ந்தவருள் அவர் ஒருவர் தான் இப்போது உயிர் வாழ்கிறார்'' என்று சொல்லி வரும்போது குமுதம் குறுக்கிட்டு, ''எனக்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம். தங்களைக் கேட்கலாமா?'' என்று கேட்டாள்.



''ஆகா, நாம் மனத்திற்குள்ளேயே சந்தேகத்தை அடக்கி வைத்துக் கொள்ளக்கூடாது. பாண்டிய மன்னரைக் காப்பாற்ற தங்கள் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருப்பவர்கள ஆபத்துதவிப் படைவீரர்கள். அவர்களது ஒரே ஆசை, பாண்டிய மன்னா என்றென்றும் நீடுழி வாழ வேண்டும் என்பது. அவர்களது இலட்சியம், அவரை உயிர் கொடுத்தாவது காப்பது. இந்த நாட்டின் உடமையைச் சர்வப் பரித்தியாகம செய்தாவதுகாப்பாற்ற உறுதி எடுத்துக் கொண்டவர்களே ஆபத்துதவிப படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். நினைத்தவர்களையெல்லாம் படையில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். கடுமையான சோதனை; அவர்களது சூழ்நிலையைப் பற்றிய ஆராய்ச்சி எல்லாம் நடத்திய பிறகுதான் சேர்த்துக் கொள்வர். சேர்ந்த பிறகு அவர்கள் படையிலிருந்து உயிருள்ளவரை விலகவே முடியாது...''

''விலக எண்ணினால்?''

''அப்படியொரு எண்ணம் ஏற்பட்டவுடனேயே தலை உடலைவிட்டுக் காணாமல் போய்விடும்.''

''நாம் ஆபத்துதவிப் படையில்சேர்ந்து விடலாமா?''— பெருமாள் இவ்வாறு கேட்டவுடன் காங்கேயன் மெல்ல நகைத்தார்.

''பாண்டிய நாட்டில் ஆபத்துதவிப்படை அநேகமாக அழிந்துவிட்டது. வல்லபன் ஒருவர்தான் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். நம் நால்வரையும் அந்தப் படையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது தலைவரின் உள்ளார்ந்த எண்ணமாக இருக்கலாம். அதனால்தான் நம்மிடம் இந்தப் பெரும்பணியை ஒப்படைத்திருக்கிறார்'' என்றார் காங்கேயன்.

''நம்மைத் தேர்ந்தெடுத்து காயல் பட்டினத்துக்கு வரச் சொல்லி நம்மிடம் அவர் இரகசியமாக இந்தப்

பயணத்தைப் பற்றிக் கூறியபோதே நினைத்தேன்...'' என்றாள் குமுதம்.

''நம் நால்வரைக் குறித்துத் திடீரென்று வல்லபன் முடிவு செய்துவிடவில்லை. ஒருவருக்கொருவர் நாம் அறிய மாட்டோம், வெவ்வேறு இடத்தில் வசித்து வந்தோம்'' என்றார் காங்கேயன்.

''இல்லையே... நான் பெருமாளை அறிவேன். நமது நாடு பாண்டிய நாடு; நாம் அடிமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வை, நாட்டுப்பற்றை ஊட்டியரே பெருமாள் பணி புரியும் உலைக்களைத்து உரிமையாளர் தான்'' என்று குமுதம் பெருமையுடன் கூறினாள்.

''இருக்கலாம்; எனக்குப் பெருமாளைத் தெரியாது. மாறவர்மனையும் அறிய மாட்டேன். பொதுவாகப் பெண்களை இது போன்ற ஆபத்தான திட்டத்தில் சேர்ந்து உழைக்க அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் தலைவர் தெரிந்தெடுத்து விட்டார்'' என்று காங்கேயன் குமுதத்தின் முகத்தை நோக்கியவாறு சொன்னார்.

''பெண்ணாக இருந்தால் நம்பிகைக்கு உரியவர்களாக இருக்க மாட்டார்கள் என்று எவ்வாறு சொல்கிறீர்கள்? பாண்டிய நாட்டுப் பெண்களின் கண்ணீர் சொல்லும் சோகக் கதைகள் சேர்ந்து ஓர் உருவெடுத்து வந்தவள் நான். அவர்கள் உள்ளக் குமுறலே என் வடிவம் என்று உறுதியாகக் கூறுவேன். என் மீது தங்களுக்குச் சந்தேகம் இருக்கிறதா?'' என்று குரலில் கோபம் கொந்தளிக்கக் கேட்டாள் குமுதம்.

பெருமாள் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. நகைகளை ஒன்று சேர்த்து மூட்டைக் கட்டுவதில் முனைந்திருந்தான்.

''குமுதம்! என் மகள் போன்ற வயதினள் நீ. உன் வயதில் எனக்கு ஒரு பெண் இறந்து விட்டாள். இப்படி



வீராங்கனையாக ஒரு பெண் புறப்படுகிறாள் என்பது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. தலைவர் நம்மிடமிருந்து பெரிய பெரிய பணிகளையும், தியாகங்களையும் எதிர்பார்க்கிறார். உன்மீது நம்பிக்கை இல்லாவிடில் ஜீவ மரணப் போராட்டப் பயணத்திற்கு உன்னைத் தேர்ந்தெடுத்திருப்பாரா? பழையாறை மாளிகையில் உன்னை ஒரு பணிப்பெண்ணாகச் சேர்த்து விடவேண்டும் ஆயுதச் சாலையில் பெருமாளை நியமிக்கவேண்டும். நான் ஆதுால சாலை ஒன்று அமைத்து நோயாளிகளுக்கு மருந்து கொடுத்து உதவவேண்டும். மாறவர்மன் நம மூவருக்குமிடையே செய்தியை மிகத் திறமையோடு கொண்டு சென்று பாண்டியப் படைகள் சோழநாட்டைத் தாக்குவதற்கு ஏற்ற தருணத்தை மதுரைக்குத் தெரிவிக்க வேண்டும். இதுவே தலைவர் கட்டளை; தெரிந்ததா?'' என்று நிறுத்தாமல் கூறி வந்த காங்கேயனுக்கு மூச்சு வாங்கியது

''தந்தையே!'' என்று குமுதம் அழைத்தவுடன் தான், காங்கேயன் மெல்லப் புன்முறுவல் பூத்தார்.

''அப்படியே இனி என்னை அழைக்கலாம்'' என்று கூறியவரை நோக்கி, ''களைப்பால் மிகவும் சோர்வடைந்திருக்கிறீர்கள். சற்று இளைப்பாருங்கள். பசி மயக்கமும் ஒன்று சேர்ந்துவிட்டது. நான் மரத்திலிருந்து மாங்கனிகள் சிலவற்றையாவது பறித்து வருகிறேன். சிறிதாவது பசியாறிய பின் புறப்படுவோம்'' என்றாள்.

''இல்லை குமுதம். நாம் இங்கே தங்கியிருக்க முடியாது; கூடாது. மிக அருகே ஊரொன்று இருக்கவேண்டும். ஆறு ஒன்று கடலில் கலக்கும் கழிமுகம் போல் இந்த இடம் தோன்றுகிறது. மேலும், நகைக் குவியலை விட்டு விட்டு ஓடினார்களே, அவர்கள் அவ்வளவு எளிதில் விலையுயர்ந்த நகைகளை இழக்கத் துணியமாட்டார்கள். ஒன்று அவர்கள் கொள்ளைக்காரர்களாக இருக்கவேண்டும்

அல்லது சோழர்ப்படை வீரர்களாக இருக்க வேண்டும்" என்றான் காங்கேயன்.

நகைகளை மூட்டையாகக் கட்டிக்கொண்டு வந்து நின்ற பெருமாள், ''எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்று கேட்டான்.

''சோழர்களின் படையெடுப்பின்போது மதுரை மாளிகையிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஆபாரணங்கள் இவை. தஞ்சை நகர்க் கருவூலத்தில் சேர்க்கப்பட வேண்டியவை. கள்ளர்களுக்குள் கள்ளர்களாக கொள்ளையடிக்கப்பட்ட நகைகளுள் ஒரு பகுதியை ஒருவரும் அறியாமல் இவர்கள் தம் வயப்படுத்தியிருக்க வேண்டும். அல்லது சோழ வீரர்களை வழியிலே மறித்துப் பறித்த கொள்ளையர்களாகயிருக்க வேண்டும்'' என்றார் காங்கேயன்.

''எப்படியிருந்தால் என்ன? விலை மதிப்பற்ற இந்த ஆபரணங்கள் நம்நாட்டைச் சேர்ந்தவை. அதை அபகரித்தவர் யாராயிருந்தாலும் அவர்கள் கொள்ளையர்களே!'' என்றான் பெருமாள்.

''இப்போது உரியவர்களிடம் வந்து சேர்ந்துவிட்டது. நம் தலைவருக்கு முதல் வெற்றி. அவருக்குச் செய்தியை உடனே எப்படியாவது அனுப்புவோம்'' என்றாள் குமுதம்.

''செய்தியை எப்படி அனுப்புவது? மாறவர்மனின் கதி என்னவாயிற்றோ? மேலும் நகை மூட்டையை நாம் எப்படி மறைப்பது?'' என்றார் காங்கேயன்.

''நகைகளை அணிந்துகொள்ள நங்கை நான் இருக்கிறேன். எல்லாவற்றையும் அணிந்துகொள்கிறேன். ஏன் மூட்டைக் கட்டவேண்டும்?''என்றாள் குமுதம்.



காங்கேயன் பெரிதாக சிரித்து விட்டார். ''மகளே, பாண்டிய அரசின் நகைகள் இவை.''

''ஏன், நான் அணியக்கூடாதா?''

''நன்றாக அணியலாம். ஆனால் அதற்கேற்ற தோற்றம் வேண்டும். உரிய ஆடைகளையும் அணிய வேண்டும் இல்லாவிட்டால்...''

''என்ன சொல்லுங்கள்...''

''பார்ப்பவர்கள் உடனே சந்தேகப்படுவார்கள். எளிய குடிமகன் அணியும் ஆபரணங்கள் இவை அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். உடனே நம்மைக் கண்டு பிடித்து விடுவார்கள்.''

''நியாயமிருக்கிறது தாங்கள் கூறுவதில். எல்லாவற்றையும் கழற்றி ஒரே மூட்டையாக ஆக்கிவிடுவோம்.''

''ஒரே மூட்டையாகக் கட்டுவதிலும் ஆபத்திருக்கிறது. சுமக்க முடியாது. மூன்று மூட்டைகளாகக் கட்டுவோம்.''

''கட்டலாம்; ஆனால் அதற்குத் துணி?''

''இதே சீலையை மூன்றாகக் கிழித்துவிடுவோம். மூவரும் தனித்தனியே அவற்றைப் பாதுகாத்து மதுரைக்கு எப்படியாவது அனுப்பிவிடுவோம்.''

நகைகளை மூட்டையாகக் கட்டி முடிப்பதற்கும் நான்கைந்து படைவீரர்கள் அங்கு விரைந்து வருவதற்கும் சரியாக இருந்தது.

அடையாளச் சின்னங்களிலிருந்து அவர்கள் சோழப் படை வீரர்கள் என்பது தெரிந்தது.

காங்கேயனும், குமுதமும், பெருமாளும் திகைத்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

# 7. யாதும் ஊரே!

ரங்கதேவியும், அவளுடைய தோழியும் அந்த இடத்திலிருந்து திரும்பிப் போனவுடன் மாறவர்மனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

ரங்கதேவி வந்தபோது புதிய தெம்பு அவனுக்கு ஏற்பட்டது. 'கடற்கரையில் இப்படியொரு அழகுக் கன்னியா!' என்று அவன் மனத்துக்குள்ளேயே வியந்தான். ரங்கதேவி அவன் அருகே வந்து நோக்கியதையும், தோழியுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டு நின்றதையும் அவன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். அவர்கள் இன்னும் சிறிது நேரம் அங்கேயே, அவன் படுத்திருக்கும் மஞ்சத்தின் அருகிலேயே இருப்பார்கள் என எண்ணினான். ஆனால், அவர்கள் விரைந்து சென்று விட்டார்களே!

இப்போது அவனுக்குத் தெளிவான நினைவு வந்துவிட்டது. குமுதம் நீந்திச் சென்றதையும், தான் கடலில் விழுந்ததையும் நினைத்துக் கொண்டான். அதற்குப் பிறகு என்ன நேர்ந்தது என்பதைத்தான் கேட்டறிய வேண்டும். குமுதம் கரை ஏறி மற்றவர்களுடன் சேர்ந்திருப்பாள். நீந்தத் தெரியாமல் படகில் ஏறியது எவ்வளவு முட்டாள்தனம் என்று எண்ணிப் பார்த்தான். குமுதத்தின் பாசம் நிறைந்த விழிகள் கொடுத்த உற்சாகத்தையும் ஒரு முறை எண்ணிப் பார்த்துக் கொண்டான். 'இனி எப்போது அவளைச் சந்திப்போம்' என்று நினைக்கும்போது அவனைக் கவலை சூழ்ந்தது.

வெளியேயும் இருள் சூழ்ந்திருந்தது. தான் எங்கே படுத்திருக்கிறோமென்றே அவனுக்குத் தெரியவில்லை. அது கடற்கரை அருகே உள்ள ஒரு சிற்றூர் என்பது மட்டும் புரிந்தது.



அமைதியான இரவில் கடலோசையும் கடற்காற்றும் அருகேயுள்ள மரங்களில் கூடடைந்திருக்கும் பறவைகள் இடையிடையே விழித்துக் கொண்டு எழுப்பும் ஓசையும் கடற்கரைக்கு மிக அருகேயுள்ள ஊர் ஒன்றில் வசதியானதொரு வீட்டில்தான் தாம் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டான். வந்த இரு மங்கையர்களில் ஒருத்தி வசதி மிக்கவள் என்பதையும், மற்றவள் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதையும் புரிந்துகொண்டான். ஆனால், அவள் பணிப்பெண்ணாக இருக்க முடியாது என்பதை அவர்கள் பழகும் முறையிலிருந்துப் புரிந்து கொண்டான்.

கனிவும், பரிவும் நிறைந்த விழிகளைக் கொண்ட ரங்கதேவியின் வருகையே அவனுடைய சோர்வைப் போக்கிவிட்டாலும் வயிறு செய்யும் புரட்சியை அவனால் தாங்க முடியவில்லை மெல்ல எழுந்து ஏதாவது உண்பதற்குக் கிடைக்கிறதா என்று பார்க்க முயன்றான். தலையைச் சுற்றியது, மஞ்சத்திலேயே வீழ்ந்துவிட்டான்.

மீண்டும் யாரோ வரும் அரவம் கேட்டது. நான்கைந்து பேர் வருகிறார்கள் என்பது பேச்சொலியிலிருந்துத் தெரிந்தது.

மருத்துவருடன் சிங்கவரையனே வந்தான். மாறவர்மனுடைய கண்கள் யாரையோ தேடின. ரங்கதேவியும் அறைவாயிலருகே நின்றுகொண்டிருந்தாள். மருத்துவர், மாறவர்மன் அருகே மஞ்சத்தில் உட்கார்ந்து நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சிங்கவரையன் தன் மகளைப் பார்த்து, "நீ வரும்போதும் இவன் விழித்துக் கொண்டிருந்தானா?" என்று கேட்டான்.

கதவின் மறுபுறம் நின்று கொண்டிருந்த ரங்கதேவி
உள்ளே நுழைந்து தந்தையின் அருகே வந்து நின்று
கொண்டு, 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை
அசைத்தாள். அவள் விழிகள் மாறவர்மனையே
நோக்கிக் கொண்டிருந்தன.

''என்ன பார்க்கிறாய்? சற்று முன்பு வந்தபோது
நான் தூங்கவில்லையே. உன்னுடன் பேசினேனே.
இங்கேயே நீ இருந்திருக்ககூடாதா? ஒரு வாய்த் தண்ணீ
ராவது கொடுத்திருக்கலாமே! நான் பேசியதைக்
காதிலேயே போட்டுக் கொள்ளாமல் நீயும் உன் தோழியும்
ஓடிவிட்டீர்கள். தோழியை அனுப்பி, நீ மட்டுமாவது
இங்கேயே நின்றிருக்கலாம் ... என்ன ... அப்படிப் பார்க்
கிறாய்?''— மாறவர்மன் பேசிக் கொண்டேயிருந்தான்.
உதடசைவது தெரிந்ததே தவிர ஒருவருக்கும் அவன்
கூறுவது காதில் விழவில்லை.

மருத்துவர் இப்போது அவனது விழியைச் சோதித்
தார். மார்பிலே காதை வைத்து இதய ஒலியைக்
கேட்க முயன்றார்.

'இதயம் துடிக்கிறது மருத்துவரே! நான் இங்கே இப்
படிப் படுத்திருப்பதற்காக வரவில்லை. நான் மட்டும்
வரவில்லை. என்னுடன் இன்னும் மூன்று பேர் வந்திருக்
கிறார்கள். அவர்களுள் அழகிய மங்கையும் ஒருத்தி.
அழகு, அன்பு ஏதும் என்னைக் கவர்ந்துவிடாது. எனது
இலட்சியமே வேறு. அது மிகவும் இரகசியம், அதைச்
சொல்லமாட்டேன்' என்று மாறவர்மன் பேசினான்.
யார் காதில் அது விழுந்திருக்கப் போகிறது?

மருத்துவர் சோதித்துவிட்டார். கையை விரிக்கிறார்.
''என்ன ஐயா, இளைஞனுக்கு என்ன? பிழைத்து
விடுவானா?''



7467

''அவன் பார்க்கும் பார்வையிலிருந்து அவன்
உடலில் ஏதோ கோளாறு என்று தோன்றுகிறது. இளம்
வயது. களையான முகம். எப்படியும் அவன் பிழைத்
தாக வேண்டும் ஐயா'' என்று சிங்கவரையன் கண்டிப்பு
நிறைந்த குரலில் கூறினான்.

மருத்துவர் நகைத்தார். ''இவனுக்கு ஒரு குறையு
மில்லை. நோயொன்றுமில்லை. நாடி நன்றாக இருக்
கிறது; இதய ஒலி சீராக இருக்கிறது'' என்று சொல்லி
மீண்டும் சிரித்தார்.

''பிறகு?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை. பேச்சு மட்டும்
ஏனோ அவனுக்கு வரவில்லை. ஒருவேளை ஊமையாக
இருக்கலாம்'' என்று மருத்துவர் கூறும்போது மாறவர்
மனும் மெல்ல நகைத்தான். அவனுக்கு இப்பொழுது
புரிந்து விட்டது. தன் குரல் வெளியே கேட்கவில்லை
என்பது.

கையால் 'தண்ணீர்' என்று சைகை செய்தான். மருத்
துவர் அறிந்து கொண்டார்.

மீண்டும் பலமாக நகைத்தார். ''சிங்கவரையரே!
என்ன காரியம செய்துவிட்டீர்கள்! பசிக் களைப்பும்
மயக்கமும்தான் இவனுக்கு. உடனே ஏதாவது குடிப்ப
தற்குக் கொடுங்கள். பிறகு பாலுஞ் சோறும் போடுங்கள்.
கனியும், தேனும் கொடுங்கள். இரவு நன்றாக உறங்
கட்டும். காலையில் பாருங்களேன்!'' என்றார்.

அவர் சொன்னபடி வயிறார உண்டு, நன்றாக
உறங்கினான் மாறவர்மன். அழகிய கன்னிகைகளின்
இனிய முகம் அவன் கனவில் தோன்றவில்லை. கந்தர்வ
புரியில் வேல்விழி மங்கையருடன் குதூகலமாக இருப்பது
போன்ற காட்சிகளும் கனவில் தோன்றவில்லை. சலனம்

ஏதுமற்ற நிம்மதியான உறக்கத்தைக் கதிரவனின் தங்கக் கரங்கள் வந்துக் கலைத்துத் தட்டி எழுப்பின.

அல்லி மலர்க் கொத்தெடுத்து அவன் முகத்தில் மெல்ல யாரோ தட வினார்கள்.

முல்லை, கொன்றை, மல்லிகை மலர்களின் மகரந்தத் துகளை எடுத்து அவன் முகத்தில் யாரோ தூவினார்கள்.

இந்திர புரியினின்று தேவ கன்னிகைகள் அவன் எதிரே வந்து இன்னிசைப் பாடினர்.

மாறவர்மன் திடுக்கிட்டெழுந்தான். அவன் எதிரே ரங்கதேவியும் தோழியும் நின்றுகொண்டிருந்தனர். தோழியின் கரத்தில் உள்ள வெள்ளித் தட்டிலிருந்த தங்கக் கிண்ணங்களில் சூடான பசும் பாலினின்று மெல்லிய ஆவி பறந்து கொண்டிருந்தது.

ரங்கதேவியின் விழிகளும், அதரங்களும், நாசியும், தோள்களும் ஒன்றாக முறுவல் பூத்தன.

''இரவு நன்றாகத் தூங்கினீர்களா?'' கேட்டது தோழி பொன்னழகி.

வீணைக்குச் சுருதி மீட்டியதுபோல் அவள் குரல் ஒலித்தது. தலையசைத்த மாறன், ''தூக்கமேது?'' என்றான்.

ரங்கதேவி பரபரப்புடன், ''தூங்கவில்லையா? நன்றாகத் தூங்கினால்தான் காலையில் களைப்பு நீங்கிச் சுறுசுறுப்பாக இருக்கமுடியும் என்று மருத்துவர் கூறியுள்ளார். இதோ மருத்துவரை அழைத்து வருகிறேன்'' என்று விரைந்து செல்ல முற்பட்டவளது கரங்களைப் பிடித்து இழுத்து நிறுத்தினான் மாறன்.

பூங்கொடியைப் பற்றியது போன்ற அந்த ஸ்பரிசத்தை உணர்ந்த பிறகுதான் திடீரென்று தான் செய்து



விட்ட தவறை அறிந்துக் கையை இழுத்துக்கொண்டு. ''பொறுத்தருளுங்கள்'' என்றான்.

''ஏன்?'' ரங்கதேவி வேல்விழிகளை மேலும் அம்பெய்வதற்குச் சித்தமாக வளைத்துக் கேட்டாள்.

''தெரியாமல் தங்களைத் தீண்டிவிட்டேன்'' சொல்லும் போதே மாறவர்மன் நடுங்கினான்.

தேவி, கலகலவென்று நகைத்தாள்; கோயில் கதவுகளின் சிறு மணிகள் எழுப்பும் ஒலிபோல் இருந்தது.

''இரவு உறங்காததும் ஒரு விதத்தில் நல்லதுதான் புதுத் தெம்புடன் இருக்கிறீர்கள்.''

''எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?''

''ஒரே இரவில் துணிவு வந்துவிட்டதே, பேசா பிம்பமாக நேற்று இருந்த உங்கள் வாய் பேசுகிறது. கரத்திற்கும் துணிவு வந்துவிட்டது. இன்னும் நீங்கள் நன்றாக உறங்கி ஓய்வு எடுத்திருந்தால்...''

''நான் எங்கு இருக்கிறேன் என்று சொல்ல முடியுமா? ஏதோ இந்திரபுரியில் இருப்பதாகவும், கந்தர்வப் பெண்கள் வருவது போலவும் காலையில் கனவு கண்டேன்''—சொல்லி வைத்தான் ஒரு பொய்யை.

''அப்படித்தான் நினைத்துக் கொள்ளுங்களேன். மிகவும் சௌகர்யமான இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டீர்கள். நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளாமலேயே எனது தந்தை தங்களுக்கு வேண்டிய உதவி செய்கிறார், அது சரி, நீங்கள் யார்? எந்த ஊர் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' ரங்கதேவி அவனிடம் பால் கிண்ணத்தைக் கொடுத்தவாறு கேட்டாள்.

மாறன் சற்று எழுந்து படுக்கையில் உட்கார்ந்து. ''பகலில் பால் குடிக்கக் கூடாது. மேலும் நான் கம்பங் கூழ்தான் குடிப்பது வழக்கம்'' என்றான்.

"இது மூலிகை கலந்த பால்...அது சரி, உங்கள் ஊரை இன்னும் சொல்லவில்லையே?"

"யாதும் ஊர்."

"வேடிக்கையாகப் பேசுகிறீர்கள். கடலில் நீங்கள் விழக் காரணம் என்ன? உங்களைப் பார்த்தால் உலகம் வெறுத்து விட்டவராகவும் தெரியவில்லையே!" என்று தேவி கேட்டவுடன் மாறன் பரபரப்புடன், "கடலிலா, நானா, ஏன் விழவேண்டும்? இந்த உலகத்தை நான் வெறுத்து விடும்படியாக எந்தச் சம்பவமும் நேரவில்லை. அப்படியே வெறுப்புணர்ச்சி இருந்திருந்தாலும் உங்களை பார்த்ததிலிருந்து அது ஓடியே போய்விட்டது!" என்றான்.

தேவி உதடுகள் பிரியாமலே புன்னகையின் நிழல் மட்டும் தெரியுமாறு நகைத்து, "கடலில் நீங்களாக விழ வில்லை. பிறகு யாராவது தள்ளிவிட்டார்களா?" என்று கேட்டாள்.

மாறவர்மன் புரிந்துகொண்டான். தேவி மிகவும் சாமர்த்தியசாலி. தனது பேச்சிலிருந்தே அனைத்தையும் கண்டறிய விரும்புகிறாள் என்பதை உணர்ந்து, இனி மிகக் கவனமாகப் பேசவேண்டும் என்று முடிவு செய்து, பேச்சை மாற்ற விரும்பி, "நீங்கள் யார் என்று சொல்லவில்லையே? அரச குமாரியா? நான் எப்படி இங்கு வந்தேன்?" என்று கேட்டான்.

மாறவர்மனையே உற்றுநோக்கிப் பொய்க் கோபத் துடன், "நீங்கள் வல்லவர்தான். இல்லாவிடில் எளிதில் பேச்சை மாற்றி என்னையே திருப்பிக் கேள்விகள் கேட்பீர் களா? எந்த ஊர், நீங்கள் யார் என்ற விபரத்தைச் சொல்ல விரும்பாவிடில் நான் வற்புறுத்தப் போவதில்லை. தங் களைக் காப்பாற்றியதும், மருத்துவரை அழைத்து மருந் தளித்ததும், தாங்கள் யார் என்று அறிந்துகொண்ட



பிறகா செய்தோம்? தங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற் படக்கூடிய சூழ்நிலை இருந்தால் சொல்லுங்கள்; என் தந்தை உதவுவார்" என்று கூறி அங்கிருந்து மெல்ல நகரத் தொடங்கினாள்.

"நில்லுங்கள்...நில்லுங்கள்...போகாதீர்கள். என்னைப் பற்றிய மர்மம் ஏதுமில்லை. சொல்லிவிடுகிறேன். நான் சொன்ன பிறகு எனக்கு இந்த இடத்தில் இப்படிப்பட்ட வரவேற்பு இருக்குமா என்பது சந்தேகமே. அப்போது நான் நடத்தப்படும் விதத்தை நினைக்க இப்போதே என் உடம்பு சிலிர்க்கிறது" என்று கூறியவாறு மஞ்சத்தை விட்டு எழுந்துவிட்டான்.

"நாங்கள் மனம் மாற மாட்டோம், காப்பாற்றியவர் களைக் கைவிடும் பரம்பரை எங்களுடையது இல்லை. 'யாதும் ஊரே' என்று சற்று முன்பு சொன்னாயே, நீலக் கடல் கடந்த இடமெல்லாம் எங்கள் ஊர்தான். சொல்லு தம்பி, சொல்லு! நீ யார்? உன்னைக் கடலில் தள்ளியது யார்?" —என்ற கம்பீரமான குரல் அங்கே கேட்டது.

சிங்கவரையன் அங்கே நின்று கொண்டிருந்தான்; 'தன்னைப் பற்றியும், தன்னுடன் வந்தவர்களைப் பற்றி யும் சொல்லிவிடுவோமா' என்று ஒரு கணம் எண்ணி னான் மாறவர்மன்.

## 8. திகிரி போல் சுழன்றது

மாறவர்மன் தனக்குள்ளேயே நகைத்தவாறு நடந்து கொண்டிருந்தான். உடல்நிலை முழுமையும் சரியாகி விட்டது. சிங்கவரையன் வீட்டிலிருந்த ஒவ்வொருவரும் அவனிடம் காட்டிய பரிவு அவனுக்குப் புதுத் தெம்பை

அளித்தது. சிங்கவரையன் வற்புறுத்திக் கேட்ட பிறகு தன்னைப் பற்றிய வரலாற்றைத் தெரிவித்தான்.

தான் தெரிவித்த 'கதையை'ப் பற்றி நினைத்த போது அவனுக்குச் சிரிப்பு வராமல் என்ன செய்யும். 'உண்மை பேசு' என்று அவனுடைய தாய் எப்போதும் கூறுவாள்; உண்மைதான். ஆனால், இங்கு உண்மையைச் சொல்லியிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? பாண்டிய நாட்டினின்று சோழநாட்டிற்கு சதித் திட்டத்துடன் தான் வந்த விபரத்தைச் சொல்லியிருந்தால் அவனுக்கு வரவேற்பு எப்படியிருந்திருக்கும்? அதை நினைத்தபோது அவன் உடல் சிலிர்த்தது.

''அடடா, அப்படியா நேர்ந்துவிட்டது. தம்பியைத் தில்லை நடராசர் தான் காப்பாற்றினார். இனிக் கவலையே படாதே. இங்கேயே தங்கியிரு. நீ எங்கள் வீட்டுப் பிள்ளை'' என்று சிங்கவரையன் சொன்ன பிறகு அந்த வீட்டில் அவனுக்கு ராஜோபசாரம் நடந்தது என்றே சொல்லலாம்.

தன்னைக் கிழைச் சோழ நாட்டைச் சேர்ந்தவன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''பாண்டி நாட்டின் எல்லைப் பகுதி எங்கள் ஊர்'' என்று மாறவர்மன் சொல்லிச் சற்று நிறுத்தி சிங்கவரையன் முகத்தை நோக்கினான்.

''அது தானே பார்த்தேன்; தம்பிக்குப் பாண்டிய நாட்டுப் பேச்சு வழக்கு அதிகமிருக்கிறதே என்று'' என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரத்திற்குப் பிறகு ''உம். பாண்டிய நாடென்று ஒன்று இப்போது இருக்கிறதா? அதைத்தான் நாங்கள் எப்போதோ முழுங்கி ஏப்பம் விட்டு விட்டோமே!'' என்று சொல்லி நகைத்தான் சிங்கவரையன்.



மாறவர்மனுக்கு அப்போது எழுந்த கோபம் சொல்லி முடியாது. பாண்டிய நாட்டை ஏப்பம் விட்டு விட்டதாக ஒரு சோழ நாட்டுக் குடிமகன் கூறுகிறான். என்ன அவமானம்! அதைக் கேட்டுக் கொண்டு நிற்கிறோம்; சிங்கவரையனை அப்படியே தலையைத் திருகி....

''என்ன தம்பி, ஏதோ பிரமை பிடித்தவன் போல் நின்று விட்டாய். கடலில் வீழ்ந்த அதிர்ச்சி உனக்கு இன்னும் போகவில்லையா? நீ கலகலப்பாகப் பேசாவிடில் என் மகள் ரங்கா அழுதுவிடுவாள். நாச்சியாருக்குக் கோபம் வந்து விடும். சிதம்பரம் போய் உனக்கு வேண்டிய உடைகளை வாங்கி வருமாறு சொல்கிறார்கள். தம்பி, தம்பி, அப்புறம் மீதிக் கதையைச் சொல்லு. உனக்குக் கிழைச் சோழ நாடு சொந்த ஊர்...'' என்று சிங்கவரையன் பேச்சைத் தொடர்ந்தான்.

''கிழைச் சோழநாடே எனது சொந்தமாக இருந்து விட்டால்அப்புறம் நான் ஏன் கடலில் விழுந்திருக்கப்போகிறேன்...'' என்று மாறன் கூறவும், சிங்கவரையன் குபீரென்று அவனது நகைச்சுவையை எண்ணிச் சிரித்து விட்டான். ஆனால் அதில் ஏதோ சோக ரேகைகள் இருப்பதையும் கண்டான்.

''ஏன் கடலில் விழ்ந்தாய்?'' வீட்டிலே கோபமா?'' என்று சிங்கன் கேட்கவும், மாறனுக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. பார்க்கப் பயங்கரமானவனாக சிங்கன் காட்சி தருகிறானே தவிர அவனுக்குக் குழந்தை மனம் என்பதையும் புரிந்து கொண்டான். உண்மையைச் சொல்லி விடுவோமா என்று ஒருகணம் நினைத்துப் பிறகு தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு கற்பனைக் கதை ஒன்றை உருவாக்கினான்.

கிழைச் சோழ நாட்டில் வேலை வாய்ப்பு இல்லாமல் போனதையும், தனக்கு உற்றார் உறவினர் இல்லாத

தையும், பிழைப்பதற்கு வழி கூறுவதாக ஒருவர் கூறவே அவர் பேச்சை நம்பிப் புறப்பட்டதாகவும் கூறினான்.

''அடடா ... மிகவும் கஷ்டப்பட்ட குடும்பமோ? என் தந்தை மிகவும் சிரமப்பட்டு உழைத்தார். இவ்வளவு செல்வங்களையும் சேர்க்க வழி சொல்லிக் கொடுத்தார். ஆனால் அதிர்ஷ்டக் காற்று எனக்குச் சாதகமாக அடித்தது. திருமகள் கண் பார்வையை வீசினாள். செல்வம் வந்து கொட்டியது அதனால் கவலைப் படாதே. உம்... அப்புறம் ... எப்படிப் புறப்பட்டாய்? கடலுக்கு வந்து சேர்ந்தது எப்படி?'' — சிங்கன் விட மாட்டார் என்பதைப் புரிந்து கொண்டான் மாறன்.

''காயல்பட்டினம் சென்று அங்கிருந்து மேற்கே சோனகர் நாட்டிற்குப் போகலாம் என்று யோசனை கூறினார்'' மாறனின் கற்பனை மிகவும் அழகாக உருவாகியது.

''சோனகர் நாட்டிற்கா? எதற்கு, அங்கே போய் எப்படிப் பிழைக்க முடியும்? அவர்களே பிழைக்க நமது நாட்டிற்கு வருகிறார்களே...'' சிங்கன் குறுக்குக் கேள்வி கேட்டான்.

''அங்கே சென்று குதிரைகளை வாங்குவது, பாண்டிய நாட்டிலும், சோழநாட்டிலும் கொண்டு வந்து விற்பது. நல்ல வியாபாரமாம் அது—ஓராண்டில் எனக்கு நல்ல பணம் கிடைக்கும் என்று சொன்னார்.''

''உனக்குக் குதிரை வியாபாரத்தில் அனுபவம் உண்டா?''

''இல்லை, குதிரையையே பார்த்தது கிடையாது! நான் கிராமத்தான். என் அம்மாவின் செல்லப்பிள்ளை, அம்மாவைப் பிரிந்து செல்வதே வருத்தமாக இருந்தது. கிராமத் திலேயே கூழோ களியோ குடித்துவிட்டிரு என்று வயதான



தாய் எவ்வளவோ சொன்னாள். ஆனால் நான் ஒரே இரவில் செல்வந்தனாகி விட வேண்டுமென்று காயல் பட்டினத்தில் கப்பல் ஏறினேன். அவ்வளவு தான் தெரியும். இங்கே கண் விழித்த பிறகு சோனக நாட்டிலே இருக்கிறோமோ என்று கூட நினைத்து விட்டேன். உபசாரமும், வரவேற்பும் பலமாக இருந்தன. கந்தர்வ மங்கை போல் அன்பான சொற்களை உதிர்த்த பெண்...'' மாறன் சொல்லி நிறுத்தினான்.

''அவள் எனது ஒரே மகள். அழகாக இருக்கிறாளா? கந்தர்வப் பெண் போலவா உனக்குத் தோன்றினாள்? நீ மட்டும் என்ன அரசகுமாரனைப் போல் தான் இருக் கிறாய். உன்னைப் பார்த்தவுடன் நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன். என் மனைவியோ இறந்து போன தனது ஒரே மகனைப் போல் இருக்கிறாய் என்று அனுதாபங் கொண்டு விட்டாள். என் மகளின் உள்ளம் எப்படியோ?'' என்று தன் உள்ளத்துணர்ச்சியைக் கொட்டினான்.

''மகளின் உள்ளம் என் பக்கம் தான். அவள் விழிகள் பொழியும் அன்பு, கரங்களின் மென்மை, கனிமொழிகள் இவ்வளவும்தான் நான் இங்கே தங்கியிருக்க உதவுகின்றன'' என்று சொல்லிவிட நினைத்தான். ஆனால் அவன் சொன்னதோ, ''ஐயா, உங்களுக்கு என் வாழ்நாளில் எப்படியாவது கைமாறு செய்து விடுவேன். என்னைக் காப் பாற்றினீர்கள். ஒரே மகனின் உயிரைக் காப்பாற்றி என் தாய் சோகக் கடலில் மூழ்காமல் செய்தீர்கள். நன்றியை நான் மறக்க மாட்டேன், எனக்கு மீண்டும் ஓர் உதவி செய்யுங்கள். சோனக நாட்டிற்குக் கப்பலேற்றி அனுப்புங் கள்'' என்று உருக்கமாகக் கூறினான்.

சிங்கவரையன் கண்கள் கலங்கின. மாறனின் கரங் களைப் பிடித்துக் கொண்டு, ''தம்பி, தம்பி நீ எங்களை விட்டுப் பிரிவதா...சோனக நாட்டுக்கு நீ ஏன் போச

வேண்டும்? இங்கேயே இரு; உனக்கு ஒரு குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

''இங்கேயே இருப்பதா? ஹூஹூம் என்னால் சும்மா யிருக்க முடியாது...ஏதாவது வேலை செய்யவேண்டும்.''

''வேலையா...நீ ஏன் வேலை செய்யவேண்டும்? எனது பொக்கிஷ அறையிலுள்ள தங்க நாணயங்களை எண்ணிக் கொண்டிருந்தாலே உன் வாழ்நாள் கழிந்து விடும். உனக்கு வேறு என்ன வேலை தெரியும். வாள் வீசுவது, வேல் எறிவது, குதிரை ஏறுவது இவை தெரிந்தால் எனது சொந்தப் படைக்கு உன்னை அதிபதியாக்கி விடுவேன்.''

''சொந்தப் படையா?''

''ஆமாம்! சோழநாட்டில் இப்படிச் சொந்தமாகப் படைகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் பலரிருக்கிறார் கள் என்பது உனக்குத் தெரியாதா?''

''தெரியாது ஐயா. எனக்கு வாளும் தெரியாது. வேலும் தெரியாது. நான் அம்மாவின் செல்லப் பிள்ளை. மாடு மேய்ப்பேன்; மந்தைகளைப் பார்த்துக் கொள்வேன். பாடுவேன்...''

''பாடுவாயா...?''

''ஆமாம்! மாடுகள் மந்தை வந்து சேரப் பாடுவேன்.''

இதைக் கேட்டு சிங்கன் பெரிதாக நகைத்தான். நன்றாகப் பேசுகிறாய்; கள்ளங்கபடமில்லாமல் பேசு கிறாய். உன் பெயர் என்னவென்று கேட்கவே மறந்து விட்டேன். தம்பி என்று பெயர் நிலைத்து விடப் போகிறது...''

''தம்பிதான் நான். இந்த ஊரிலுள்ள மக்களுக்கு நான் தம்பி.''



''உன் தாயார் உன்னைச் செல்லமாக அழைக்கும் பெயர் என்ன?''

''செல்லமாக 'மேதி...' என்று அழைப்பாள்.''

''மேதியா?'' சிங்கன் ஹோ ஹோ வென்று சிரித்தான். அங்கே இவர்கள் பேச்சைப் பாதிக்குமேல் கேட்டுக்கொண் டிருந்த ரங்கதேவியும், நாச்சியாரும் கலகலவென நகைத் தனர்.

சில நாட்களுக்கு முன்பு நடந்த இந்தச் சம்பவத்தை நினைத்துக் கொண்டே நடந்த மாறவர்மனுக்குச் சிரிப்பு வராமல் என்ன செய்யும்! கிராமமும் இல்லாமல் பட்டண மும் இல்லாமல் தோற்றமளித்த அந்த ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டான்.

ஆற்றங்கரையருகே தெரிந்த சில வீடுகள் பக்கம்தான் அவன் போகவில்லை.

மாலைக் கதிரவன் மேல்திசையில் ஓய்வெடுக்க இறங் கிக் கொண்டிருந்த வேளையில் அந்த வீடுகளை நோக்கி, நடந்து கொண்டிருந்தான். சுகமாக தங்கியிருப்பதால் என்ன பலன்? காங்கேயனும், குமுதமும், பெருமாளும் எங்கே இருக்கிறார்களோ என்ற கவலை அவனை இருள் சூழ்வதுபோல் சூழ்ந்து கொண்டது.

ஆற்றங்கரை வீடுகளில் யாரும் இருப்பதாகத் தெரிய வில்லை. முதல் வீடு பூட்டப்பட்டிருந்தது. இரண்டாவது வீடு திறந்திருந்தது, ஒரு முதியவர் விளக்கேற்ற வெண்கல விளக்கைத் துடைத்துக் கொண்டிருந்தார். சிறிய கூடம் தான். எட்டிப் பார்த்தான். கூடத்தில் ஏராளமாக தங்க நகைகள், ஆபரணங்கள், கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தான் மாறவர்மன். இப்படி ஒரு பாது காப்பு இல்லாமல் கிடக்கிறதே! இதுதான் சிங்கவரையன் சொன்ன பொக்கிஷ அறையாக இருக்கவேண்டும்.

அந்த மங்கிய மாலை வேளையிலும் தங்க நகைகளில் பதித்த வைர, வைடூரியங்கள் பளபளத்துக் கொண்டிருந்தன.

மாறன் ஏதோ ஓசைக் கேட்டுத் திரும்பினான். அவனது தோளின் மீது முரட்டுக் கரம் ஒன்று பதிந்தது.

அந்தக் கரத்தைப் பலமாக உதறித் தள்ளிய மாறன் கழுத்தின் மீது ஒரு குத்து விழுந்தது. திகைத்துத் தடுமாறி கண் எதிரே தோன்றிய ஆயிரம் ஆயிரம் உடைந்த கண்ணாடித் துண்டுகள் பளிச்சிடுவது போன்ற உணர்ச்சியினின்று மீளுவதற்குள் தன்னைப் பலர் சூழ்ந்து கொண்டுள்ளதை அறிந்தான். அவர்களில் சிலர் கரங்களில் படகோட்டும் துடுப்பு இருந்தது.

வட்டமாக வியூகம்போல் அவர்கள் சூழ்ந்திருப்பதை ஒரு நொடியில் கண்டறிந்த மாறன், ஒருவனிடமிருந்து பறித்து ஒரு துடுப்பை எடுத்துச் சுழற்றினான்.

அந்தத் துடுப்பு ஒன்று தான் அவன் கரத்தில் கிடைத்த ஆயுதம். அது திருமால் கை திகிரிபோல் சுழன்றது. கதிரவன் ஏறிவரும் தேரின் சக்கரம்போல் சுழன்றது. மாறனின் கையிலிருப்பது துடுப்புதானா அல்லது இந்திரன் கரத்து வஜ்ராயுதமா என்று தெரியாத வண்ணம் அது சுழன்று சுழன்றுத் தாக்கியது.

# 9. பொற்றகடு

வேக வேகமாக அங்கு வந்து நின்ற சோழப் படை வீரர்கள் நெடுந்தொலைவிலிருந்து அவ்வாறு ஓடி வருகிறார்கள் என்பது அவர்களது சோர்ந்த முகத்தினின்றும், மூச்சு இரைப்பதினின்றும் தெரிந்தது.



காங்கேயனும், குமுதமும், பெருமாளும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டனர். அத்தோடு மார்புடன் சேர்த்து ஆபரண மூட்டையையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். தங்களைத் தேடித்தான் சோழ வீரர்கள் வந்திருக்கின்றனர் என்று எண்ணிய அவர்களுக்கு நடுக்கம் ஏற்பட்டது.

சோழ வீரர்களால் உடனே பேச முடியவில்லை. காங்கேயன், குமுதம், பெருமாள் இவர்களாலும் பயத்தால ஏதும் பேச முடியவில்லை. இரு தரப்பினரும் ஒருவரையொருவர் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தனர்.

''இந்தப் பக்கமாக யாராவது ஓடிவந்தார்களா• பார்த்தீர்களா?'' என்று வீரர்களுள் ஒருவன் கேட்ட பிறகுதான் காங்கேயனுக்கு உயிரே வந்தது.

'என்ன சொல்வது? பார்த்தோம் என்பதா? அல்லது பார்க்கவில்லை என்பதா? அவர்களுக்கு என்ன மறுமொழி கூறுவது? காங்கேயன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''யாராவது என்றால் யாரை கேட்கிறீர்கள்?'' என்றார்.

''ஐயா, திருட்டுப் பயல்கள்; நம்பிக்கைத் துரோகம் செய்த மோசக்காரர்கள். நான்கு பேர். அவர்களைத் தேடுகிறோம், எங்கள் கையில் சிக்கினால் இங்கேயே கண்ட துண்டமாக வெட்டிவிடுவோம்'' என்று சீறினான் வீரர்களுள் ஒருவன். மற்றவர்கள் ஆமோதிப்பது போல் தலையை அசைத்தனர்.

''அடடா, திருடர்களைத் துரத்திக் கொண்டு வருகிறீர்களா? சோழ நாட்டில் கள்ளர் பயம் அதிகமாகிவிட்டதா?'' என்று காங்கேயன் கேட்டார்.

''வழிப்பறி திருடர்களில்லை ஐயா; அவர்களும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தாம்'' என்றான் சோழ வீரர்களில் மற்றொருவன்.

''உங்கள் கூட்டத்தவர்கள் என்றால், நீங்களும் திருடர்களா?'' என்று குமுதம் கேட்டவுடன் எல்லோரும் நகைத்து விட்டனர்.

அப்போதுதான் அங்கே ஒரு பெண் இருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அழகிய பெண்,வேடிக்கையாகவும் பேசுவதைக் கேட்டவுடன் அவர்களுக்கு இருந்த சோர்வு மறைந்து விட்டது. குமுதத்தைப் பார்ப்பதும், காங்கேயனை நோக்கிப் பேச முயல்வதுமாகத் தடுமாறினர். சோர்வு நிறைந்த அவாகளது முகத்தில் அசடு வழிந்தது. போர் வீரர்களுள் ஒருவன், 'அப்பாடா' என்று கீழே உட்கா.ாந்து விட்டான்.

''காலை அப்படியே சுழற்றி அந்தப்பக்கம் வைத்து விட வேண்டும் போல் வலிக்கிறது'' என்றான் ஒருவன்.

''உனக்குக் கால்வலி; எனக்கு வயிற்றுவலி'' என்றான் மற்றொருவன்.

''சண்டாளா, எப்படியடா வயிற்றை வலிக்கும்? எனக்குப் பசி உயிர் போகிறது, உனக்கு வயிற்றை வலிக்கிறதோ?'' மற்றொருவன்.

'ஆமாம்; உயிர் போகும்போது வாயும், கண்ணும் கையும்வலிப்பு வந்தது போல் இழுக்குமல்லவா, அதுபோல் பசியால் உயிர் போகும் நிலையில் எனக்கு வயிற்றை வலிக்கிறது'' என்றான்.

நகைச்சுவையைப் பாராட்டுவதுபோல் குமுதம் சிரித்தாள். குமுதத்தின் சிரிப்பு, வீரர்களுக்கு மேலும் உற்காசத்தை அளித்தது.

''உங்களுக்கு மட்டுமா பசிக்கிறது, எங்களுக்கும்தான் அருகே ஏதாவது ஊர் இருக்கிறதா?'' என்று காங்கேயன் கேட்டான்.



தலைப்பாகையைக் கழற்றி விட்டுத் தலையைச் சொரிந்து கொண்ட சற்று வயதான வீரன் ''ஊரா? கிராமமா? இங்கே ஏதும் கிடையாது; தில்லைச் சிற்றம்பலம் ஊரைத் தவிர அருகே எந்த ஊரும் கிடையாது'' என்று கூறிய அந்த வீரன் ''சாமிக்கு எந்த ஊரோ?'' என்று கேட்டான்.

தொடர்ந்து குமுதமும், பெருமாளும் திகைத்தார்கள். 'எந்த ஊர் என்று சொல்லப் போகிறார் காங்கேயன்? ஐயோ சரியாக அகப்பட்டுக் கொண்டோம்' என்று பயந்துத் துடித்துப் போனார்கள்.

''நாங்கள் தொண்டை மண்டலத்திலிருந்து வருகிறோம். தில்லைச் சிற்றம்பலத்திற்குச் சென்று ஆனந்த நடராசரைத் தரிசிக்கப் போகிறோம். வழி தவறிவிட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் காலையிலிருந்து சுற்றிச் சுற்றி வருகிறோம். பசி வேறு சேர்ந்து விட்டது. நானாவது தாங்கிக் கொள்வேன்; இந்தக் குழந்தை...'' என்று குமுதத்தைச் சுட்டிக் காட்டினார்.

வீரர்கள் அனைவரும் ''ஆ'' வென்று திறந்த வாயை மூடாமல் குமுதத்தை நோக்கினாகள்.

குமுதம் ஒயிலுடன் நின்று கொண்டிருந்தாள். அவள் மார்பகத்தை ஆபரண மூட்டை மறைத்தது. வெயிலில் உலர்ந்த, அவிழ்ந்த ஈரமான கூந்தல் தோள்களில் தவழ்ந்து கொண்டிருந்தது. தூக்கிச் செருகப்பட்டிருந்த ஆடை முழங்கால் வரை அழகைப் புலப்படுத்திக் கொண்டிருந்தது.

''உங்கள் மகளா?'' என்று வீரன் ஒருவன் கேட்டான்.
''ஆமாம் இவள் என் மகள். இவன் என் சகோதரியின் கணவன்'' என்று பெருமாளைப் பற்றி அவர்கள் வினவும்

முன்பாகவே சொல்லி விட்டார். பொய்தான்; என்றா லும் சமயசந்தர்ப்பத்திற்கு வேறு என்ன செய்வது?

''ஒவ்வொரு தலமாகப் போய் சாமி கும்பிட்டு வரு கிறீர்கள் போலிருக்கிறது?''

''ஆமாம், காஞ்சிபுரம், திருமுதுகுன்றம், திருப்பாதி ரிப் புலியூர் இப்படியாக ஒவ்வொரு பெரிய கோயிலாகப் போய்ப் பார்த்துக் கொண்டே வருகிறோம். தில்லைச் சிற் றம்பலம் போய் அங்கே சிறிது நாட்கள் ஓய் வெடுக்க விரும்புகிறோம்'' என்று காங்கேயன் சொன்ன வுடன், வீரருள் ஒருவன் மிக மகிழ்ச்சியுடன், ''சிதம்பரத் தில் தங்கப் போகிறீர்களா? மிகவும் நல்லதுதான். தங்க ளுக்கு அங்கே வசதியான இடங்கள் இருக்கின்றன. சோழ மன்னர் பராந்தக சக்கரவர்த்தி தில்லைச் சிற்றம்பலத் திற்கு வருகைத் தரப்போகிறார்...' என்றான்,

காங்கேயனும் குமுதமும் ஒருவரையொருவர் பார்த் துக் கொண்டனர். பொருட்பொதிந்த புன்னகையொன்று குமுதத்தின் இதழ்க் கடையில் தவழ்ந்தது.

''சிதம்பரத்திற்கு வரப் போகிறாரா? தஞ்சை மாளி கையில் இருக்க மாட்டாரா?'' என்றான் பெருமாள். தங் கள் திட்டம் மாறுகிறதே என்ற கவலை அவனுக்கு.

'இஸ்' என்று குரல் கொடுத்து மறைமுகமாக சைகை செய்து குமுதம் அவனை அடக்கினாள்.

''சிதம்பரம் விமானத்தைப் பொன் தகடுகளால் அலங் கரிக்கப் போகிறார்; சிதம்பரத்திலேயே தங்கியிருந்து அந்தப் பணியைக் கவனித்துக் கொள்ளப் போகிறார்'' என்றான் ஒரு வீரன்.

''தங்கத் தகடுகளா...?'' என்று காங்கேயன் வியப்பு மிகுதியால் கேட்டார்.



''ஆமாம்; சுத்தமான தங்கம். துளைட் பொன் கூட இல்லை, பசும் பொன்!'' என்றான் ஒரு வீரன்.

''விமானம் என்றால் மிகப் பெரியதாக இருக்குமே!'' குமுதம் கேட்டாள்.

''சிதம்பரம் கோயில் மிகப் பெரியது. கோயில் என் றால் சிதம்பரத்தைத்தான் குறிக்கும் என்பது தங்களுக்குத் தெரியாதா?''—வீரன் மறுமொழி கூறினான்.

''அவ்வளவுக்கும் பொன் தகடுகள் என்றால் நிறைய தேவையாயிருக்குமே?'' பெருமாள் கேட்டான்.

''ஆமாம் ஐயா; ஆமாம். தஞ்சைப் பொக்கிஷ அறையி லிருந்துத் தங்கப் பாளங்கள் வந்து சேர்ந்து கொண்டிருக் கின்றன. அவை கொங்கு நாட்டிலிருந்தும் காஞ்சியிலிருந் தும் கொண்டு வரப்பட்ட தங்கப் பாளங்கள். மதுரையி லிருந்து, நிறைய ஆபரணங்களை இளவரசர் கொண்டு வந்தார். அவற்றை மிகவும் பாதுகாவலுடன் கொண்டு வந்தோம். எங்களிடையே இருந்த சில துரோகிகள் அவற் றைத் திருடிக் கொண்டு ஓடி வந்து விட்டார்கள். அவர் களைப் பின் தொடர்ந்துதான் இப்போது ஓடி வருகிறோம்'' என்று மூச்சு விடாமல் பேசினான் அவ்வீரன்.

''ஏண்டா நீ ஒருத்தன் வள வளவென்று; இன்னும் சிறிது நேரத்தில் பசியால் நான் மயங்கி விடுவேன். என்னைப் புதைக்க இடம் தேட வேண்டியிருக்கும். இள வரசர் மதுரை மாளிகையிலிருந்து கொள்ளையடித்தார். நம்மிடமிருந்து மற்றவன் கொள்ளையடித்து விட்டான். அவ்வளவு தானே! எங்கே தங்கமிருந்தால் நமக்கென்ன வாயிற்று? வாடா, போகலாம். அவுங்களும் பசியோடு இருக்காங்க'' என்றான் மற்றொரு வீரன் குமுதத்தைப் பார்த்தவறு.

அவர்கள் சிறிது தூரம் நடந்தார்கள். வீரர்கள் வழி காட்டியவாறு முன்னே செல்ல, காங்கேயன், பெருமாள், குமுதம், மூவரும் பயந்தவாறு தொடந்தார்கள். குளக்கரையருகே பெரிய ஆலமரம். அருகே ஒரு பெரிய வீடு. வீட்டைச் சுற்றிப் பெரிய மதில். சோழ வீரர்களும், காங்கேயனும் பெருமாளும் குமுதமும் அங்கே போய் நின்றனர்.

வீட்டு வாயிலில் கோட்டைக் கதவுகள் போல் மிகப் பெரிய கதவுகள். அவை மூடப்பட்டிருந்தன. இரண்டு காவல்காரர்கள் கையில் வேலுடன் நின்றிருந்தார்கள். அருகேயுள்ள நிழலில் குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. பொதி காளைகள் அசை போட்டவாறு படுத்திருந்தன.

''தங்கத் தகடுகள் செய்யப்படுவதைப் பார்க்கிறீர்களா?'' என்று கேட்டான் வீரனொருவன்.

''இங்கேயா செய்கிறார்கள்!'' என்றாள் ஆவலுடன் குமுதம்.

''முதலில் வயிற்றுக்கு. பிறகு தான் மற்றவை'' என்று கூறி ஏதோ சைகை செய்தார் காங்கேயன், தங்களிட மிருந்த நகைகளை அழுத்தமாகப் பிடித்தவாறு.

## 10. என்மீது விருப்பமில்லையா?

கலபதிபுரத்திற்கு வந்த அந்தப் புதிய இளைஞன் தான் ஒருவனே பலரை எதிர்த்து ஈடு கொடுப்பான் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. கடலில் படகோட்டுவ தால் துணிவும், துடுப்புப் போடுவதால் வலிமையும் நிறைந்த அவர்களையே அவன் சளைத்துப் போகுமாறு செய்து விட்டது அவர்களுக்கு வியப்பை அளித்தது.



துடுப்புத் தாக்குதலிலிருந்து காயம் படாமல் தப்புவதே அவர்களுக்குப் பெரும்பாடாகி விட்டது.

கைதட்டல் ஒலியும், 'ஆகா ஆகா' என்று பாராட்டுக் குரலும் கேட்கவே அவர்கள் அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

''போதும் நிறுத்துங்கள்'' என்று கூறியவாறு ரங்கதேவி அங்கு வந்தாள். இவ்வளவுநேரம் அங்கு வியூகம் போல் மாறனை படகோட்டிகள் சூழ்ந்து கொண்டதையும், மாறன் சுழன்று சுழன்று தாக்கியதையும், மறைந்து நின்று கண்ட வண்ணமிருந்த ரங்கதேவி, மேலும் அந்த யுத்தம் நீடிக்க விடக்கூடாது என்று தடுக்க அங்குத் தோன்றினாள்.

''என்ன பலர் சேர்ந்து ஒருவரை இப்படித் தாக்க முற் பட்டீர்களே, இது என்ன வீரம்?'' என்று ரங்கதேவி கேட்டாள்.

முகத்தில் அரும்பிய வியர்வையைப் புறங்கையால் துடைத்து, கையிலுள்ள துடுப்பை வீசி எறிந்து, ''என்ன வீரமா? கலபதிபுரத்து வீரம்!'' என்று ரங்கதேவியின் வேல் விழிகளுக்கு மறுமொழி கூறினான் மாறவர்மன்,

கலபதிபுரத்தில் நிராயுதபாணிகளைத் தாக்க மாட் டார்கள். அதனால் வீரத்தை இந்த நிகழ்ச்சியைக் கொண்டு மதிப்பிடாதீர்கள்' என்றாள் ரங்கதேவி.

''பிறகு ஏன் என்னைத் திடீரென்று சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள்? பலமற்ற பயத்தவனாயிருந்தால் நான் அடிபட்டுச் செத்திருப்பேனே'' என்று மாறன் கூறியவுடன் ரங்கதேவியால் அதற்குச் சமாதானம் கூற முடியவில்லை. சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது.

ரங்கதேவியின் முகம் கோபத்தால் சிவந்தது. கரிய நிறத்தில் செம்மை படரவும் அது மேலும் பளபளப்பை

ஊட்டியது. அவளது நாசிகள் விரிந்தன. படகோட்டி களைப் பொசுக்கி விடுவது போல் பார்த்து, ''ஏன் இப்படிச் செய்தீர்கள்? விருந்தினரைத் தாக்குமாறு யார் உங்களுக்கு உத்தரவிட்டது? ஆதி காரணம் யார் என்பதை நான் அறிய வேண்டும்'' என்று சீறினாள்.

''இந்த வீட்டிற்கருகே சந்தேகம் ஏற்படும் வகையில் இவர் நடமாடினார். அதனால்......'' என்று ஒருவன் திக்கித் திக்கிப் பேசினான்.

''அதனால்...அவரை தாக்குமாறு யார் உத்தர விட்டது?'' என்று ரங்கதேவி கேட்டாள். முகத்தில் கடுமை நிலவியது.

படகோட்டிகள் ஒருவரோடொருவர் பார்த்துக் கொண்டு விழித்தனர். திகைத்தனர்.

''நான்தான் உத்தரவிட்டேன் ரங்கா'' என்று கூறிக் கொண்டே சிங்கவரையன் கம்பீரமாக அந்த வீட்டிற்குள்ளி ருந்து வந்தான். இருள் பகலைக் கவ்வ இன்னும் சில நொடிகளே இருந்தன. அந்த மங்கிய ஒளியில் சிங்க வரையன் மெல்ல நகைத்தவாறு, ''நான் ஒரு பரீட்சை வைத்தேன். சோதனை என்றும் சொல்லலாம். தம்பியைப் பற்றி நான் அறிய முயன்றேன். தம்பி சாதாரண ஆளில்லை. பெரிய ஆள். உள்ளூர வேறு ஒருவர் புகுந்து கொண்டுள்ளார். மேலுக்கு ஒன்றும் தெரியாதவன்போல் காட்சி தருகிறான்'' என்று சொல்லி மாறவர்மன் முதுகில் மெல்லத் தட்டிக்கொடுத்து ''மாறவர்மா, எல்லா போர் முறைகளையும் நீ அறிந்தவனாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு பேர்களுக்கும் நீ ஈடு கொடுத்திருக்க முடியுமா? உன்னைப் பற்றிய முழு விபரங்களையும் நீ சொல்லாவிட்டாலும் நான் ஒன்று தெரிந்து கொண்டேன். நீ புஜபல பராக்கிரமம் மிகுந்தவன். படைவீரர்களுக்குத் தலைமை தாங்கும் தகுதியுடையவன்,



இன்று முதல் கலபதிபுரத்துப் படைவீரர்களுக்குத் தலைவன் நீதான்'' என்று கூறினான்.

துடுப்பை எடுத்துச் சுழற்றிய படகோட்டிகள் கையொலி எழுப்பி ஆமோதித்தனர்.

''கலபதிபுரத்துத் தலைவர் சிங்கவரையர் வாழ்க!''

''வாழ்க! வாழ்க!''

என்று முழக்கமிட்டனர்.

மாறவர்மன் கவலை ஏதுமின்றிச் சுற்றி சுற்றிச் வந்தான். ரங்கதேவியிடம் மகிழ்ச்சியுடன் பேசினான். அவனைத் தேடி வராமல் அவளால் இருக்க முடியவில்லை. ஒரு வாரம் ஓடி விட்டது.

ஃ ஃ ஃ

ஆற்றங்கரையில் வளைந்து தாழ்ந்திருந்த மரக் கிளையின் மீது ஒரு நாள் சாய்ந்தவாறு மாறவர்மன் சிந்தனையிலாழ்ந்திருந்தான் ''படைத் தலைவராம்; கலபதிபுரமாம்! என்ன வேடிக்கை? நாம் பாண்டிய நாட்டிலிருந்துப் புறப்பட்டு வந்தது எதற்காக? நம்முடன் வந்தவர்களைப் பிரிந்து நாம் இங்கே சுகபோகத்துடன் பொழுது போக்குகிறோமே! சிங்கவரையரின் போக்கைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. நமக்கு ஏன் இவ்வளவு மரியாதை தருகிறான். படைத்தலைவனாம்; படைகளே இல்லை. ஆனால் தலைமைப் பொறுப்பு மட்டும் வேடிக்கை. நாளை நடப்பதை எப்படி அறிவது! ஒரே நாளில் கலபதிபுரத்திலுள்ள அனைவரையும் கொன்று தீர்த்துவிட்டுப் பாண்டிய நாட்டிற்கே ஓடி விடுவோமா? நம்மைத் தலைவர் சோழநாட்டிற்கு அனுப்பியது அதற்காகத்தானே!'' என்று எண்ணினான்.

''என்ன ஆழ்ந்த சிந்தனை?'' என்று கேட்டுக் கொண்டே ரங்கதேவி அங்கே வந்தாள். வழக்கமாக நிழல்போல் அவளைத் தொடரும் தோழியை விட்டு விட்டு அவள் வந்ததும், காரணமாகத்தான்.

மாறவர்மன் திடுக்கிட்டுத் திரும்பினான். ஆழ்ந்த சிந்தனை முகத்தில் பிரதிபலிப்பதால் தனது கவலை வெளியே தெரிந்து விடக்கூடாதே என்று, மிகவும் சிரமத்துடன் புன்னகையை வரவழைத்துக் கொண்டான்.

''ஆழ்ந்த சிந்தனை ஒன்றா இரண்டா? எதைச் சொல்வது?'' என்று மாறன் கேட்டான், மெல்லச் சிரித்தவாறு.

''சொல்லுங்கள். நான் அதற்கு விடை கூறுகிறேன். நீங்களே மனதிற்குள் போட்டுக் குழம்பிக் கொண்டிருந்தால் பிரச்னை தீர்ந்துவிடுமா?'' என்று கூறிக்கொண்டே ரங்கதேவி அவன் அருகே நெருங்கினாள். அவளது மெல்லிய மூச்சு அவனது கழுத்தில் பரவியது. அது உடலெங்கும் ஏதோ ஒரு செய்தியை எடுத்துச் சென்றது.

அவளது பூ உடலின் ஸ்பரிசம் அவனது தோளிலும் முதுகிலும் பட்டும் படாமலும் உறவாடியது. அது அவனது சுய சிந்தனையைத் தடுத்து நிறுத்தியது. அவன் மெல்ல நகர்ந்து கொண்டான்.

''ஏதோ உங்கள் உள்ளத்தில் பெரும் கவலை வாட்டுகிறது என்று நினைக்கிறேன். வெளியே சொல்ல முடியாமல் திண்டாடுகிறீர்கள். அப்படித்தானே?'' என்று கூறி அவனது கரங்களைப் பிடித்துக் கொண்டாள் ரங்கதேவி. மாறன் அதை எதிர்பார்க்கவில்லை. பூங்கொடி ஒன்று கரங்களில் சுற்றிக் கொண்டது போன்ற உணர்ச்சி யடைந்தவனாய் அவளுடைய கரங்களிலிருந்து உடனே



விடுபடுவதா அல்லது அந்த இன்பத்தைத் தொடர்ந்து அனுபவிப்பதா என்று புரியாமல் திகைத்து, ''ஆம், சொல்ல முடியாமல் திண்டாடுகிறேன்'' என்று சொற்கள் உடைந்து உடைந்து வெளிவரப் பேசினான்.

''என்னிடம் சொல்லுங்கள். நான் அதற்குப் பரிகாரம் தேடுகிறேன்...''

''ஹூம்ஹூம். இப்போது என்னிடம் நெருங்கும் நீ தொலைவில் சென்று விடுவாய். என்னைத் தளபதியென்ற பீடத்தில் உயர்த்திய உன் தந்தை என்னை மறுகணம் தலைக்குப்புறக் குழியில் தள்ளிவிடுவார்...'' என்று கூறுவதற்குள் மாறவர்மன் மிகுந்த சிரமப்பட்டு விட்டான்.

அவளது பூ உடலின் ஸ்பரிசம் அவனது தோளிலும் முதுகிலும் உறவாடியது.

ரங்கதேவி அவனது முகத்தை இமை கொட்டாமல் பார்த்து, ''என் தந்தை இலேசில் ஒருவரையும் நம்ப மாட்டார். தங்கள் மீது அவருக்குப் பரிபூரண நம்பிக்கை. தங்களுடைய புஜபலத்தைச் சோதிக்கவே அன்று படகோட்டிகளை ஏவி தாக்குமாறு கூறினார். 'தங்க நகைகளை அபகரிக்க வெளியூரிலிருந்து ஒரு புதிய மனிதன் வந்திருக்கிறான், அவனைக் கண்காணியுங்கள். முடிந்தால் சூழ்ந்து கொண்டு தாக்குங்கள்' என்று படகோட்டிகளிடம் கூறிவிட்டு, முழு பலத்தோடு அவர்கள் தங்களைத் தாக்க வழி செய்தார். அப்போதுதான் உண்மையான வீரம் தங்களிடமிருந்து புலப்படும் என்று எண்ணினார். மறைந்திருந்து வேடிக்கைப் பார்த்தார். தாங்கள் தங்கள் திறமையை நிரூபித்து விட்டீர்கள். என்னை அவர் கேட்டிருந்தால் நானே என் தந்தையிடம் தங்கள் வீரத்தைப் பற்றிச் சொல்லியிருப்பேன்'' என்று கூறி நிறுத்தினாள் ரங்கதேவி.

''உனக்கு எப்படித் தெரியும்?'' என்று ஒருமையிலேயே இப்போது மாறன் அவளைப் பார்த்துக் கேட்டான், அவளது கரங்களைத் தன்னிடமிருந்து மெல்ல அகற்றியவாறு.

''உங்களது பரந்த தோள்கள் சொல்லுகின்றன, விரிந்த மார்பு கூறுகிறது. ஒளி வீசும் கண்கள் பேசுகின்றன, உருண்ட கரங்கள் உரைக்கின்றன'' என்று கூறியவாறு, ரங்கதேவி அவனது பரந்த மார்பின் மீது தன் முகத்தைப் புதைத்துக் கொள்ள விரும்பி அவனை நெருங்கினாள்.

மாறவர்மன் அதற்கு இடங்கொடாமல் ''தேவி, யாராவது பார்த்துவிட்டால் தவறாக நினைப்பார்கள்; நான் என் இருப்பிடம் செல்கிறேன்; பிறகு சந்திப்போம்'' என்று கூறி அங்கிருந்துப் புறப்பட முற்பட்டான்.

''யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்; என் தந்தை எப்போதோ முடிவு செய்துவிட்டார்...''

''என்னவென்று முடிவு செய்துவிட்டார்...?''

''தங்களைத் தனது மருமகப் பிள்ளையாக ஏற்றுக் கொள்ள. அதனால்தான் தங்களுக்கு உயர்ந்த பதவியைக் கொடுத்தார்.''

''ஊர் பேர் தெரியாதவனுக்குப் பதவி; குடும்பத்தில் உயர்ந்த இடம்; தன் மகளையே பரிசாக அளிக்கும் அளவுக்கு உன் தந்தை எதனால் முடிவு செய்தார்?''

''அவருக்குத் தெரியும். அவர் சோழ நாட்டின் சக்கரவர்த்தியிடமிருந்து பெரும் பாராட்டுதல் பெற்றவர். சொந்தப் படைகளை வைத்துக் கொள்ள உரிமை இப்போது தான் சக்கரவர்த்தி என் தந்தைக்கு அளித்திருக்கிறார். யுத்தம் ஏற்படும்போது ஐநூறு பேர்களை



யாவது அவர் அனுப்ப வேண்டும். கடல் வாணிகம் செய்து பொருளீட்டிச் சோழநாட்டிற்குப் பெருமைதேடித் தரும் என் தந்தைக்குப் பெரும் கௌரவம் அளிக்க விரும்பியுள்ளார் சக்கரவர்த்தி.''

''அப்படியா...?''

''படைகளுக்கு ஏற்ற தலைவர் வேண்டும்; என் தந்தைக்கு வாரிசு வேண்டும்? அதனால் எனக்கு மணம் முடித்து வைக்க முடிவு செய்துள்ளார்.''

''யாருக்கு?''

''இதென்ன கேள்வி? வேறு ஒருவருக்கு முடிவு செய்திருந்தால் நான் தங்களுடன் நெருக்கமாகப் பழகுவதை அனுமதித்திருப்பாரா?''

''அப்படியே இருக்கட்டும். திருமணமாகுமுன்பு நெருங்கிப் பழகுவது நல்ல மரபா?''

''ஏன்? ஒருவர் இதயத்தை மற்றவர் புரிந்து கொண்டு காதலை வளர்ப்பது நல்லதில்லையா?''

''நீயே முடிவு செய்து விட்டாயல்லவா?''

''இல்லை, இல்லை, நான் மட்டுமில்லை. என் தந்தையும் கூடத்தான்...''

''என் முடிவு என்னவென்று நீங்கள் கேட்க வேண்டாமா?''

மாறன் இப்படிக் கூறியவுடன், ரங்கதேவி மாறனின் முகத்தை தன் இரு கரங்களாலும் பிடித்து உற்று நோக்கி, ''என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். உங்கள் இதயத்தில் எனக்கு இடமில்லையா? என் நினைவு தங்களுக்கு வரவில்லையா? உறக்கத்தில் நான் உங்கள் கனவில் தோன்ற

வில்லையா? என் மீது தங்களுக்குக் காதலில்லையா? சொல்லுங்கள், சொல்லுங்கள். ஒருதலைக் காதலா நம்முடையது? சொல்லுங்கள்'' என்று கூறி அவனது பரந்த மார்பில் தனது பூ விரல்களை நெளிய விட்டாள்.

மாறவர்மனுக்கு என்ன கூறுவது என்று புரியவில்லை; திகைத்தான்.

இதே போன்ற அனுபவத்தை அடையச் சில நாட்களுக்கு முன்பு அவன் ஏங்கியதுண்டு. பூவையின் மென்மையான ஸ்பரிசத்தை அனுபவிக்க ஆசைப் பட்டதுண்டு. நெருங்கிப் பேசத் துடித்ததுண்டு. அந்தப் பூவை அவன் கனவில் வந்ததுண்டு. ஆனால் அவள், ரங்கதேவி அல்ல; படகிலே வந்த குமுதம். அவளுடைய முகம் அவன் எதிரே வந்து நின்றது.

## 11. குமுதம் குமுறினாள்

பசியும், சோர்வும் மேலோங்கி நின்றதால் காங்கேயனுக்கோ அன்றி பெருமாளுக்கோ கோட்டை வாயிலைப் போன்ற அந்தப் பெரிய வாயிற் கதவுகள் ஆவலை எழுப்பவில்லை. சோழ வீரர்கள் சொன்ன வார்த்தைகளும் அவர்கள் மனத்தில் படவில்லை.

''இங்குதான் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் கூரை வேயத் தகடுகள் செய்கிறார்கள்'' என்றான் வீரனொருவன்.

''தகடுகள் அடிக்கப்படுவதை நீங்கள் பார்க்கிறீர்களா?'' என்று மற்றொருவன் கேட்டான்.

''தங்கத்தை உருக்குவதைப் பார்க்க வேண்டாமா?'' குழம்பு கொதிப்பது போல் கொப்பரையில் தங்கப் பாளயங்கள் தளதளவென்று கொதிப்பதை நீங்கள் பார்க்க வேண்டும்'' என்று மற்றொருவன் கூறினான்.



அவன் கூறியதில் 'குழம்பு' என்ற வார்த்தை பெருமாள் காதில் விழுந்தது. குழம்பின் மணம் நாசியில் ஏறியது. 'குழம்பு ஊற்றி ஒரு கவளம் வயிற்றில் விழாவிடில் நான் இங்கேயே சுருண்டு விழுந்து விடுவேன். பாண்டிய நாடு நல்ல தொண்டன் ஒருவனை இழந்து விடும். நான் செய்ய வேண்டிய கடமைகள் ஆற்றப்படாமலேயே போய்விடும். குமுதத்திற்குத் தக்க பாதுகாவலாக யார் இருப்பார்கள்?' என்றெல்லாம் அவன் சிந்தனை ஓடியது.

அவன் குதிரை கட்டப்பட்டிருக்குமிடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்; எதற்காகவென் அவனுக்கே தெரியாது.

குமுதம் தான் அணைத்துக்கொண்டிருக்கும் நகை மூட்டையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

காங்கேயனோ தில்லைச் சிதம்பரத்தைப் பற்றிப்பேசிக் கொண்டிருந்தார்.

''தில்லைச் சிதம்பரத்து விமானத்துக்குப் பொன்வேய இங்கே ஏன் பொற் தகடுகளைச் செய்கிறார்கள்? அந்த ஊரிலேயே செய்யக் கூடாதா?'' என்று காங்கேயன் கேட்டார்.

''இங்கே 'வசதியாக இருக்கிறது...'' என்றான் வீரனொருவன்.

''என்ன வசதி? வேண்டிய தங்கம் இங்கே கிடைக்கிறதா?''

வீரர்கள் நகைத்தார்கள். ''தங்கம் இங்கே கிடைத்தால் நமது அரசர் ஏன் பாண்டிய நாட்டிற்குச் சென்று

கொள்ளையடித்து வருகிறார்'' என்று சலிப்புடன் கூறினான் மற்றொரு வீரன்.

''உங்கள் அரசர் கொள்ளையடித்தார் என்று நீங்களே ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று காங்கேயன் கேட்டார்.

''அதென்ன, 'உங்கள் அரசர்' என்று பிரித்துப் பேசுகிறீர்கள்; நமது அரசர் என்று சொல்லுங்கள்.''

காங்கேயன் தன் தவறை உணர்ந்து கொண்டார். வேற்று மனிதர் என்று நம்மை அவர்கள் புரிந்து கொண்டு விடப் போகிறார்கள் என்ற அச்சத்தில், ''உங்கள்—எங்கள்—நம்—அனைவரது அரசர் தாம் பராந்தக சோழ மாமன்னர் என்று எனக்குத் தெரியாதா? ஆனால், கோயில் விமானத்தைப் பொற்தகடுகளால் அலங்கரிக்கத் திருட வேண்டிய அவசியமென்ன? தஞ்சைப் பொக்கிஷம் வற்றி விட்டதா? எனக்குக் கொள்ளை, கொலை, பொய் இவையெல்லாம் பிடிக்காது'' என்று பேச்சை வேறு திக்கில் மாற்ற முயன்றார், காங்கேயன். அவருக்குப் பிடிக்கும் பிடிக்காது எஃபதைப் பற்றி யார் கேட்கப் போகிறார்கள்?

குமுதத்திற்குப் பெரியவர் காங்கேயனிடம் சற்றுக் கோபங்கூட வந்தது. எங்காவது ஒரு வாய்ச் சோறு உண்டு. சற்று இளைப்பாறிவிட்டு மேலே நடக்க வேண்டிய காரியத்திற்குத் திட்டமிடாமல், சாதாரண வீரர்களிடம் வீணே பேச்சை வளர்த்துகிறாரே, நமது கையில் உள்ள மூட்டையிலிருப்பதை அவர்கள் தெரிந்து கொண்டு விட்டால்...? கொள்ளை-பொய் பிடிக்காது என்று சற்று முன்புதானே கூறினார்? அதை நினைக்கவே அவளுக்குப் பயமாக இருந்தது. எப்படி மற்றவர்கள் கவனத்தை உணவுப் பிரச்சினையில் திருப்புவது என்று யோசிக்கலானாள். மிகவும் முக்கியமான பிரச்சினையாயிற்றே!



''குமுதம், ஏன் பேசாமலிருக்கிறாய்? தங்கம் குழம்பாகக் கொதிக்கிறதாம், பார்க்கிறாயா?'' என்று காங்கேயன் கேட்டார்.

குமுதம் ஏதும் பேசவில்லை.

''குமுதம், கலகலப்பாகப் பேசுவாயே, ஏன் பேசவில்லை'' என்று காங்கேயன் கேட்டார்.

''பேச அவளுக்குச் சக்தியில்லை'' என்றான் பெருமாள் எரிச்சலுடன்.

''எனக்கே தலை சுழல்கிறது; அரை வயிற்றுக்காவது சோறு கிடைத்தால் பிறகு தங்கக் குழம்பிலேயே குதிக்கச் சித்தமாயிருக்கிறேன்...'' என்று கோபமாகவே கூறினான் பெருமாள்.

''அடடா, பசியையே மறந்து விட்டோம். நகைத் திருடர்களைப் பிடிக்க முடியாது போன சோகத்தில், பசி சோர்வு இருந்த இடம் தெரியவில்லை. எந்த நேரத்திலும் சக்கரவர்த்தி தமது பரிவாரத்துடன் இங்கு வந்துவிடுவார். அவருக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ?'' என்று சற்று வயதான வீரன் கூறினான்.

''சோழ சக்கரவர்த்தி இங்கே வரப்போகிறாரா?'' என்று காங்கேயன் கேட்டார்.

''ஆமாம்; பொற்தகடுகளைப் பொற்கொல்லர்கள் எந்த அளவுக்குச் செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய வருகிறார்.''

''தஞ்சையிலிருந்தா வருகிறார்?''

''ஆமாம்; தஞ்சை மாளிகையிலிருந்து, கடந்த இரண்டாண்டுகளாக பராந்தக சோழச் சக்கரவர்த்தி வெளியே எங்கும் புறப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?

"தெரியாது" என்பதற்கு அடையாளமாகக் காங்கேயன் தலையை ஆட்டினார்.

"அவரது தலைப் பிள்ளை இளவரசன் ராசாதித்யன் போரில் இறந்துவிட்ட பிறகு அவர் புத்ரசோகம் பிடித்து மாளிகைக்குள்ளேயே அடைந்து கிடந்தார் என்பது கூடவா உமக்குத் தெரியாது?"

காங்கேயன் தலையை அசைத்தார்.

"பராந்தக சக்கரவர்த்திக்கு வயதாகிறது. தனக்குப் பிறகு வாரிசு யார் என்பதை நிர்ணயிக்க வேண்டும். அதற்கு முன்பாக தில்லை நடராசருக்குச் சிறப்பு பூசை நடத்தி, கோயிலைப் புதுப்பித்து, பொற் தகடு வேய்ந்து விட வேண்டும் என்ற முடிவுடன் தனது பட்டத்து அரசியுடனும் மற்ற தேவியாருடனும் வருகிறார்."

குமுதமும், பெருமாளும் நிலை கொள்ளாமல் தவித்தனர். இந்தக் கதையெல்லாம் ஏன் நம்மிடம் சொல்கிறார்கள் என்று புரியாமல் அவர்கள் திகைத்தனர்.

துணிந்து அவள் கேட்டு விட்டாள்: "சோறு கிடைக்க வழி காட்டுங்கள் என்றால் எங்களுக்குத் தேவையற்ற அரசர் குடும்பக் கதையெல்லாம் சொல்கிறீர்களே!" என்று சீறினாள்.

வீரர்கள் குமுதத்தின் கோபத்தைப் புரிந்து கொண்டனர். கோபத்தால் அவள் முகம் மாறியதைக் கண்டு, அதிலுள்ள அழகை ரசித்தனர். 'பாவம் குழந்தை' என்று வயதான வீரன் முணுமுணுத்தான். மற்றொரு வீரன் அவளுடைய இளமையை அப்போதுதான் கண்டவன் போல் வைத்த கண் வாங்காது நோக்கினான்.

"எங்களுக்கும் பசிக்கிறது. பசியை விடக் களைப்பு அதிகம். கவலை, பயம் வேறு. ஆனால், உச்சிப் பொழுதுக்குத் தான் சோறு கிடைக்கும். எங்களுக்



கெல்லாம் ஒரு மூதாட்டி சோறாக்கிப் போடுகிறாள். உங்களை அங்கே அழைத்துச் செல்கிறேன்" என்று கூறியவுடன் குமுதத்தின் முகம் சற்று மலர்ந்தது.

எங்காவது சென்று சற்று நேரம் கண்ணயர வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. காங்கேயனும், பெருமாளும் குமுதமும் வீரர்களைத் தொடர்ந்தனர்.

அது ஒரு சத்திரம். அப்போதுதான் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. நீண்ட திண்ணை. பிறகு ஒரு நடை. உள்ளே நான்கு புறமும் தாழ்வாரம். நடுவே முற்றம். இரண்டாவது கட்டு. அந்தக் கட்டில்தான் பொற்கொல்லர்களுக்கும், அந்தச் சிறு கிராமத்தில் சோழ அரசரின் பணியினை மேற்கொண்டவர்களுக்கும் உணவு படைக்கப் பெரும் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அடுப்பின் மீது பெரும் தவலை. தளதளவென்று சோறு கொதித்துக் கொண்டிருந்தது.

வீரர்கள் விடை பெற்றுக் கொண்டனர். "மீண்டும் நாங்கள் உங்களைச் சந்திப்போமா தெரியாது. உங்கள் மூவரையும் எங்கள் குடும்பத்து உறவினர்போல் எண்ணத் தோன்றுகிறது. சிதம்பரத்திற்குப் போக வேண்டும் என்றால் இன்று மாலையில் அரச பரிவாரத்துடன் செல்லும் வண்டியில் ஏறிப் போகலாம்" என்றனர்.

அவர்கள் சென்ற பிறகுதான் 'அப்பாடா' என்று குமுதமும் பெருமாளும் பெருமூச்சு விட்டனர்.

"அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லையே" என்று குமுதம் கவலைப் பட்டாள்.

"கவலையே வேண்டாம் குமுதம். ஆண்டவன் நல்ல வழி காட்டி விட்டார். நேரே தஞ்சைக்குச் செல்ல வேண்டிய தொல்லை நமக்குத் தீர்ந்தது" என்றார் காங்கேயன்.

"அதெப்படிச் சொல்கிறீர்கள்?" என்று பெருமாள் ஆவலுடன் கேட்டான்.

"தஞ்சையினின்று பராந்தக சோழர் சிதம்பரத்திற்கு வந்தால் பல மாதங்கள் தங்கியிருப்பார். அவருடன் பட்ட மகிஷியும் மற்ற தேவிமார்களும் வருகிறார்களாம்; அப்படியென்றால் தஞ்சை மாளிகையே சிதம்பரம் வருகிறது என்று அர்த்தம். நமது திட்டத்தை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்று காங்கேயன் உற்சாகத்துடன் பேசினார்.

குமுதமும், பெருமாளும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டனர். "என் கவலையெல்லாம் இந்த நகை மூட்டையை எப்படிப் பாதுகாப்பது என்பதுதான்" என்று பெருமாள் கூறினான்.

"குமுதத்தை அந்தப்புர பெண்களுக்குப் பணிவிடை செய்யும் பணிப் பெண்ணாகச் சேர்ந்து விடலாம். நான் சித்த மருத்துவக் கூடத்தை ஆரம்பித்து விடுகிறேன். பெருமாள் வேலை செய்ய ஓர் உலைக்கூடம் கிடைக்கிறதா என்று பார்ப்போம்..." என்றார் காங்கேயன்.

"இந்தச் சமயத்தில் மாறவர்மன் இருந்தால் மிகவும் உதவியாக இருக்கும். நம்மிடமுள்ள மதுரை மாளிகை நகைகளை அவனிடம் கொடுத்து உடனே அனுப்பியிருக்கலாம்" என்றாள் குமுதம்.

"சிதம்பரத்தில் வேலும் வாளும் செய்யும் உலைக் கூடம் இருக்காது" என்று பெருமாள் தன் கவலையைத் தெரிவித்தான்.

"வேலும் வாளும் செய்வதற்குத்தான் உலைக் கூடம் உபயோகப்படுமா? தில்லையில் நடராசர் கோயில் திருப்பணி நடைபெறுகிறதாம். சிற்பியின் சிற்றுளியைச் செப்பனிட வேண்டாமா? இல்லாவிடில் எனக்கு



யோசனை ஒன்று தோன்றுகிறது: பெருமாளிடம் நகை மூட்டையைக் கொடுத்து மதுரைக்கு அனுப்பினால் என்ன?" என்று காங்கேயன் கேட்டார். பெருமாள் தலையை அசைத்தான். முடியாது என்று சொல்லவும் அவனுக்குப் பயம், முடியும் என்றும் சொல்லத் தோன்றவில்லை.

அதற்குள் உணவு பரிமாறப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறத் தொடங்கின. "நாம் பந்தியில் அமர்ந்து உண்ண வேண்டாம். மூவருக்கும் நான் போய் பெரிய இலையொன்றில் வாங்கி வருகிறேன்" என்று காங்கேயன் கூறிச் சென்று சோறு வாங்கி வந்தார்.

மாதக் கணக்காக அன்னத்தையே காணாதவர்கள் போல் பரபரப்புடன் அவர்கள் உண்டனர்.

ஃ ஃ ஃ

வெளியே முரசு ஒலித்தது. கொம்பும், தாரையும் ஒலித்தன. எக்காளம் முழங்கியது. வாழ்த்தொலி எழுந்தது.

பெருமாள் வெளியே சென்று எட்டிப் பார்த்தான். குதிரைகளும், யானைகளும், பல்லக்கும், தேர்களுமாக பெரும் பரிவாரமே அந்தக் கிராமத்து வீதியில் வந்து கொண்டிருந்தன.

யானையின் தங்க முகப் படாகம் வெயிலில் பளபளத்தது. சாலையில் புழுதி எழுந்து வானத்தை மறைத்தது. குதிரை மீது புலிக்கொடி பிடித்த வீரர்கள் வந்து கொண்டிருந்தனர். புலிக்கொடி அசைந்தாடியது. குதிரைகள் சூழ யானை மீது அம்பாரியில் பரகேசரி பராந்தக சோழ தேவர் கம்பீரமாக அமர்ந்திருந்தார். யானையைத் தொடர்ந்து வந்த பல்லக்கில் பட்டத்து அரசி கோக்கிழான் அடிகள் அமர்ந்திருந்தாள்.

"இவர்தான் பராந்தகச் சோழரா?" என்று குமுதம் கேட்டாள். அவள் முகத்தில் எரிச்சல் மிகுந்திருந்தது.

"ஆமாம்; ஆமாம். நமது சக்கரவர்த்தி ராசசிம்ம பாண்டியரை வென்று, மதுரையில் மகுடாபிஷேகம் செய்து கொண்ட நமது முதல் விரோதி இவர்தான்" என்றார் காங்கேயன். மேலும் தொடர்ந்து "தோல்வியடைந்து, அவமானம் தாங்காமல் ராசசிம்மர் தனது தாயின் வீட்டிற்குள் ஓடி ஒளிந்து கொண்டார். பராந்தகரால்தான் அவர் அவ்வாறு ஓடிப்போக நேர்ந்தது"— காங்கேயன் பழைய கதையைக் கூறினார்.

"ஐயா, சொல்லுங்கள்; இப்போதே குறி பார்த்து வேலை வீசி பராந்தகரைக் கொன்று விடுகிறேன். நமது பயணத்தின் பயன் உடனே நிறைவேறிவிடும்" என்று துடிதுடித்தான் பெருமாள். காங்கேயன் கையை அசைத்து அவனை அமைதியடையச் செய்தார்.

"பெருமாள்; இப்போது பராந்தகரைக் கொல்வதால் பாண்டியநாடு விடுதலையடைந்து விடாது. அதை விடப் பெரிய பணி நமக்கிருக்கிறது. சொல்கிறேன் கேளுங்கள்" என்றார், மெல்லிய குரலில்.

காங்கேயன் கூறிய திட்டம் கேட்டு குமுதமும் பெருமாளும் மெய்சிலிர்த்தனர். காங்கேயனின் அறிவுக் கூர்மையை வியந்தனர்.

வீதியில், "பரகேசரி பராந்தக சோழ தேவர் வாழ்க! வீரநாராயணன் வாழ்க! குஞ்சரமல்லன் வாழ்க! மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன் வாழ்க! வாழ்க!" என்ற வாழ்த்தொலி கேட்டது.

பெருமாளும், குமுதமும் அந்த வாழ்த்தொலி கேட்டுத் துடித்தனர். "மதுரையைக் கொண்டவராம்; என்ன அநியாயம்" என்று குமுதம் குமுறினாள்.



"மாமன்னர் வீரபாண்டியன் வாழ்க, வாழ்க" என்று கூச்சலிட வேண்டும்போல் அவர்களுக்குத் தோன்றியது, அடக்க முடியாத குரோதத்துடன்.

## 12. பிள்ளையா, மாப்பிள்ளையா?

காலையில் சிங்கவரையன் தூங்கி எழுந்து நடுக் கூடத்தில் திண்டில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருக்கும்போது தான் நாச்சியார், குடும்ப விஷயங்களைப் பேசுவதற்கு வருவாள். ஊர் விவகாரங்கள், நாட்டு விவகாரங்கள் அனைத்தையும் தன் தலைமேல் போட்டுக்கொள்ளும் சிங்கவரையன் வீட்டு விவகாரத்தைக் கவனிப்பதில்லை என்ற குறை நாச்சியாருக்கு உண்டு. தன் பருத்த உடலைத் தூக்கிக்கொண்டு கணவன் அருகே வந்து நின்றால் ஏதோ முக்கியமான செய்தியை அவள் கூறப்போகிறாள் என்று பொருள்.

அன்று நாச்சியார் சற்று வேகமாகவே நடந்து வந்தாள். மூச்சு வாங்கியது.

தூக்கக் கலக்கம் முழுமையும் தெளியாதவனாக சிங்கவரையன் நாச்சியாரை உற்று நோக்கினான். அவனுக்கு ஏனோ சிரிப்பு வந்தது. அவள் முகத்தில் பொங்கி நிற்கும் கோபத்தைச் சிங்கவரையன் அறிந்து கொண்டான்.

"நாச்சியாரம்மா, இப்படி உட்கார்" என்று கனிவுடன் கூறினான். மிக அன்புடன் நாச்சியாரம்மா என்று தன் மனைவியை அழைப்பது அவன் வழக்கம்.

"கூட்டம் கூடுவதற்கு முன்பு உன் விஷயத்தைச் சொல்லு" என்று கூறி காலை நீட்டிக் கொண்டான்!

நாச்சியார் உதடுகள் துடித்தன. ''உங்களுக்கே சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம்தான். இது நன்றாயிருக்கா...இப்படி நீங்கள் கவனிக்காமல் ஊர் உலகத்தைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் நம்ம வீடு என்ன ஆவது...?'' என்று சீற்றம் வார்த்தைகளாகப் பொங்கிவரப் பேசினாள். பேசும்போது அவள் கைகள் பெரிதாக அசையும், உடல் ஆடும், ஒருவிதப் படபடப்பு பொங்கி நிற்கும்.

சிங்கவரையன் பெரிதாக நகைத்தான்.

''நம்ம வீடா? என்ன நேர்ந்தது வீட்டிற்கு? முன் எப்போதையும் விட அழகாக இருக்கிறது. சுற்றிலும் மதில்சுவர். வீட்டைச் சுற்றிலும் தோட்டம். வீட்டுக்கு வேண்டியதைச் செய்ய எடுபிடி ஆட்கள், இன்னும் அதிகமாகிவிட்டனர். நாச்சியாரம்மா, உனக்கு என்ன குறை? விதவிதமான ஆபரணங்கள் வேண்டுமா? இப்போதே சொல். ஆற்றங்கரை வீட்டில் ஆபரணங்களைக் குவித்து வைத்திருக்கிறேன். இன்னும் சில நாட்களில் தங்க ஆபரணங்களை உருக்குவதற்காக ஆற்றின் மறுகரைக்கு அனுப்பிவிடப் போகிறேன். அதற்குள் உனக்கு வேண்டியதைப் போய் எடுத்துக்கொள்'' என்று நாச்சியாரின் கண்களை உற்று நோக்கியவாறு உதடுகளில் மெல்லிய நகை நெளியப் பேசினான்.

''நகைகளை எதற்காக உருக்கப்போகிறீர்கள்?'' என்று நாச்சியார் கோபத்தின் நடுவே கேட்டாள்.

''எதற்காகவா? என்ன இப்படிக் கேட்டுவிட்டாய் நாச்சியாரம்மா? தில்லைச் சிதம்பரம் நடராசர் கோயில் விமானத்தைப் பொன்னால் அலங்கரித்திருக்கிறார்களே உனக்குத் தெரியாதா? பராந்தக சோழ சக்கரவர்த்தியின் கட்டளைப்படி என் பங்காக தங்கம் தரவேண்டாமா? இவ்வளவு ஏராளமான நகைகளை நாம் சேர்த்துவைத்து



என்ன செய்யப்போகிறோம்? அவற்றை உருக்கித் தங்கப் பாளங்களாகத் தந்துவிட முடிவு செய்துவிட்டேன். நல்ல நாளாகப் பார்த்து ஆற்றின் அக்கரைக்கு அனுப்பப் போகிறேன். அங்கே அவற்றை உருக்கிவிடுவார்கள். உருக்குவதற்கு முன்பு உனக்கு வேண்டிய நகைகளை எடுத்துக்கொள்—'' நாச்சியாரை தன் பேச்சால் திருப்திப் படுத்திவிட்டதாக சிங்கவரையன் நினைத்தான்.

''ஆமாம், எனக்கு நகைமீதுதான் ஆசை? நகை ஆசையை எல்லாம் விட்டு எவ்வளவோ நாட்களாகி விட்டன. வளர்ந்த மகனை முழுசா கடலுக்கு இரையாக்கி விட்டபிறகு ஆசை என்ன ஆசை? இந்த பெண் ரங்கதேவி மட்டும் இல்லை என்றால் நான் சிதம்பரம் மடத்திற்குப் போய் காலம் முழுவதும் அங்கேயே கழித்துவிடுவேன்...'' என்று நாச்சியார் கூறும்போது சிங்கவரையன் 'பகபக' வென்று சிரித்தான்.

நாச்சியார் சீற்றத்துடன், ''சிரிக்காதீர்கள். என் உள்ளத்தில் பொங்கும் ஆத்திரத் தீயில் எண்ணெய் வார்க்காதீர்கள். நான் சொல்ல வந்த செய்தி எவ்வளவு முக்கியமானது என்று தெரிந்து கொள்ளாமல் என்னென்னமோ பேசுகிறீர்கள். ஆண்டவன் திருக்கோயிலுக்குக் கொடுக்கவேண்டிய நகைகளிலிருந்து எனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளச் சொல்கிறீர்கள். என்ன பாபம் செய்தேனோ, ஒரு மகனை இழந்து உயிர் வாழ்கிறேன். சிவ சொத்தில் ஆசை கொண்டு மேலும் பாப மூட்டையைச் சுமக்கச் சொல்கிறீர்களா?'' என்றாள்.

''நாச்சியாரம்மா! பாபம் உனக்கு மட்டும்தானா, எனக்கு இல்லையா! புத்திரசோகம் உனக்கு மட்டும் தானா, எனக்கு மட்டும் இல்லையா? சிவ சொத்து என்று சொன்னாயே, அந்த விஷயத்தில் மட்டும் உனக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த நகைகள், நமது கப்பல் தலைவர்களால் பல தேசங்களிலிருந்து கொண்டுவந்து

எனக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்டவை. இனிமேல் தான் சிவபிரானுக்கு அளிக்கப்போகிறோம். கொடுப்பதற்கு முன்பு நமக்கென்று சிறிது வைத்துக் கொள்வதில் என்ன தவறு? அது எப்படி பாபமாகும்?'' சிங்கவரையன் நிமிர்ந்து உட்கார்ந்து கேட்டான்.

''ஆம், பாபம்தான். தில்லை நடராசர் கோயில் திருப்பணிக்கு என்று ஒதுக்கி வைத்துவிட்டபிறகு நமக்கு உரிமை இல்லை. அதைப்பற்றிப் பேசவேண்டாம். நான் பேச வந்தது ரங்கதேவியைப் பற்றி'' என்று வேகமாகப் பேசினாள் நாச்சியார்.

மீண்டும் சிங்கவரையன் நகைத்தான். ''நாச்சியாரம்மா! ரங்கதேவியைப் பற்றிப் பேச வந்தால், உடனே அவளைப் பற்றிப் பேசுவதுதானே? சுற்றி வளைத்துப் பேசுவதால்தானே நானும் ஏதேதோ மறுமொழி கூறுகிறேன்.''

''ரங்கதேவியைப் பற்றிப் பேச வந்தேன். ஆனால் பேச்சின் திசை மாறிவிட்டது. ரங்கதேவியின் போக்கில் மாறுதலிருப்பதைக் கவனித்தீர்களா?'' என்று குரலை சற்றுத் தாழ்த்திக்கொண்டாள் நாச்சியார்.

''பார்த்தேனே, குதூகலமாக இருக்கிறாள்! சிரித்துப் பேசுகிறாள். முன்புபோல் படகில் ஏறிக் கடலுக்குச் செல்வதில்லை. இங்கேயே சுற்றிச் சுற்றி வருகிறாள்'' என்று சிரிக்காமல் கூறினான் சிங்கவரையன்.

''ஆமாம்; அந்தச் சிரிப்பும், குதூகலமும் பெண்களுக்கு எப்போது வருகின்றது, எப்படி வருகின்றது, அந்த மாறுதல் ஏன் என்று தங்களுக்குத் தெரியுமா?''

''எனக்கு எப்படித் தெரியும். பாம்பின் கால் பாம்பறியும். பெண்களின் குணம் பெண்களுக்குத்தான் தெரியும். புதிய ஆடை, ஆபரணங்கள் கிடைக்கப்போகிறது என்று



தெரிந்தால் மகிழ்வார்கள். மணவாளன் வரப்போகிறான் என்றால் குதூகலிப்பார்கள்.''

''தெரிந்துதான் பேசுகிறீர்களா? உங்கள் மகள் மணவாளனைத் தேடத் தொடங்கிவிட்டாள்!''

''நல்ல செய்தி...இந்தச் செய்தியைச் சொன்ன உன் வாயில் கற்கண்டு போடுகிறேன்...''

''நல்ல செய்தியா, என் எண்ணத்தை வீழ்த்திவிட்டாளே...''

''என்ன சொல்கிறாய் நாச்சியாரம்மா? உன் எண்ணத்தை அவள் வீழ்த்திவிட்டாளா? உன் மகள் தக்க மணவாளனைத் தேடிக்கொண்டால் சரிதானே. யார் அந்த மணவாளன்?''

''கடலிலிருந்துச் காப்பாற்றப்பட்டானே அந்தப் பிள்ளை...'' என்று சொல்லி நிறுத்திவிட்டபோது நாச்சியார் முகத்தில் கவலை தெரிந்தது.

''ஆகா, ரங்கதேவி மிக கெட்டிக்காரி!'' என்று சிங்கவரையன் தன் மகிழ்ச்சியை வெளியிட்டான்.

''என்ன சொல்கிறீர்கள்?''— நாச்சியார் திடுக்கிட்டுக் கேட்டாள்.

''ரங்கதேவி, தகுந்த மணவாளனைத் தேடிக் கொண்டுவிட்டாள் என்று சந்தோஷமடைகிறேன்'' என்றான் சிங்கவரையன்.

சிங்கவரையன் அவள் முகத்தை உற்று நோக்கினான். அவள் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டான்.

''என்ன நாச்சியாரம்மா, மகிழ்ச்சியடைவதற்கு மாறாக, கலங்குகிறாயே? உன் மகள் தகுந்தவனைத்தான் தேடிக்கொண்டிருக்கிறாள். மாறவர்மன் நல்லபிள்ளை

அழகுக்கு என்ன குறைவு. வீரத்திற்கு மட்டும் குறைவா? அவனுடைய வீரத்தைச் சோதனை செய்தேன். அவன் ஒருவனே பத்து பேர்களுக்கு ஈடு கொடுத்திருக்கிறான். அதனால்தான் அவனை நான் படைகளுக்கு தலைவனாக்கியிருக்கிறேன். திட்டமிட்டு நான் செய்துவருவது சரியென்பது கடவுள் சித்தம் போலிருக்கிறது. ரங்கதேவிக்கும் அவன்மீது விருப்பம்...'' என்று சிங்கவரையன் உணர்ச்சி வசப்பட்டு பேசினான்.

நாச்சியார் உடலில் ஒரு வித நடுக்கம் ஏற்பட்டது.

''ரங்கதேவிக்கு மாறவர்மன் மீது ஏற்பட்டுள்ள விருப்பம் சாதாரணமானதன்று. அவள் அவனை எண்ணிப் பைத்தியமாகிவிட்டாள். அவனிருக்குமிடத்திற்கு நிழல் போல் செல்கிறாள். ஆற்றங்கரையில்அவன் தனித்திருக்கும் போது, இவளும் சென்று அவனிடம் என்னென்னவோ பேசுகிறாள்...'' என்று சொல்லிவரும்போது சிங்கவரையன் குறுக்கிட்டு, ''நாச்சியாரம்மா, இளஞ்சிட்டுகள் பேசுமிடத்திற்கு நீ சென்று அவர்கள் காதல் மொழிகளை மறைந்திருந்து கேட்கலாமா?'' என்று கூறி இளநகை புரிந்தான்.

நாச்சியாரம்மாவின் குரலில் ஒருவித ஆவேசம் பொங்கியது. ''என்ன சொன்னீர்கள்? காதல் சிட்டுகள் என்றா? காதலா? கூடாது. கூடவே கூடாது. அவர்கள் பேசுவதை நான் மறைந்திருந்து கேட்டேன். உடனே தடுத்திருப்பேன். தங்களிடம் சொல்லி விட்டுச் செய்ய எண்ணினேன். கலியாணம் ஆகுமுன்பு நம் வீட்டுப் பெண்கள் ஓர் ஆண் மகனுடன் தனியே பேசுவது சரியல்ல...''

''வேற்று மனிதரில்லையே மாறன்; ரங்கதேவிக்கு மணம் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டவன்தானே?''

''யாரைக் கேட்டு முடிவு செய்தீர்கள்? என்னிடம் ஒரு வார்த்தை சொன்னீர்களா?''



''ஏன் நாச்சியாரம்மா, உனக்கு மாறவர்மனைப் பிடிக்கவில்லையா? அவன் குணத்தை நீ அன்று புகழ்ந்தாயே! அவன் அழகைக் கண்டு வியந்தாயே! வீரத்தைப் பாராட்டினாயே... ரங்கதேவிக்கு அவனை மணம் முடிப்பதில் உனக்கும் விருப்பம்தான் என்று நான் எண்ணினேன். இதுவரை உனது எண்ணமும் என் கருத்தும் மாறுபட்டதில்லையே...''

''ஆம்; நான் மாறவர்மனைப் பாராட்டினேன். புகழ்ந்தேன். வியந்தேன்; இப்போதும் அப்படித்தான். ஆனால் என் மகளுக்கு மணவாளனாக அவன் வரப் போகிறான் என்று எதிர்பார்கவில்லையே!''

''எதிர்பார்க்காவிடின் என்ன? இப்போதுதான் மனத்தை மாற்றிக் கொள்ளேன்.''

''அதெப்படி முடியும்? மாறவர்மனை முதன் முதலில் கண்டபோதே அவனை எனக்குப் பிடித்து விட்டது. அதனால்தான் அவனை நீங்கள் படைத்தலைவனாக ஆக்கியது கண்டு சந்தோஷப்பட்டேன். நமது வீட்டில் உரிமையுடன் உலாவுவதைத் தடுக்கவில்லை...''

''பிறகு .... உனக்குப் பிடித்து விட்டதல்லவா? மருமகனாக அவனை ஆக்கிக் கொள்வதில் வேறு இடையூறு ஏல்ன?''

''நான் அந்தப் பிள்ளையை மருமகப்பிள்ளையாக நினைக்கவில்லையே! எனது சொந்தப் பிள்ளையாக அல்லவா நினைத்துள்ளேன்! கடலில் மாண்ட நமது மகன் மீண்டும் கடலிலிருந்து வந்து விட்டான் என்று எண்ணினேன். இறந்த மகன் மீண்டு விட்டான் என்று தாங்கள் நினைப்பதாகத்தான் நானும் நம்பினேன். ஆனால் இந்த விபரீதக் காதல் எனக்கு அதிர்ச்சியை அளித்துவிட்டது. மாறவர்மன் என் மகன். மருமக
னல்லன்'' என்று உணர்ச்சி பொங்க நாச்சியார் கூறினாள்.

"என்ன, மாறவர்மனை நீ உன் பிள்ளையாக நினைக்கிறாயா?" என்று சிங்கவரையன் கேட்டான். அவன் குரலில் அதிர்ச்சியும் ஏமாற்றமுமிருந்தன.

# 13. அரச மருத்துவர்

பராந்தக சோழ சக்கரவர்த்தி தஞ்சையினின்று தனது குடும்பத்தினர் சூழப் புறப்படுவது அதுவே முதல் தடவை. சில மாதங்களாக அவர் மாளிகையை விட்டு வெளியே வருவதில்லை. பொது மக்களையும் காண்பதில்லை. விசேட நாட்களில் வீதிகளில் பவனி வருவதில்லை. திருவாரூர் தியாகேசரையோ, நாகை காயாரோகணரையோ, தரிசிக்கச் செல்வதில்லை. அவருக்கு எல்லாமே வெறுத்து உலகமே சூன்யமாகி விட்டது போன்ற ஒரு பிரமை.

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் சோழ நாட்டைப் பெயரும் புகழுடனும் ஆட்சி புரிந்து வரும் அவருக்குக் கிடைக்காத வெற்றியில்லை, கிட்டாத புகழில்லை. சேராத செல்வமில்லை. இருந்தும் என்ன பலன்? அவருக்கு ஏற்பட்ட இரண்டு மகத்தான அதிர்ச்சிகள் அவரைக் குழியில் வீழ்ந்த யானையாக்கி வைத்துவிட்டன.

மகள் வீரமாதேவிமீது அவர் உயிரையே வைத்திருந்தார் எனலாம். அவ்வளவு செல்வச் சிறப்புடன் வளர்த்தார். இராட்டிரக்கூட நாட்டு மன்னன் கோவிந்த வல்லவரையனுக்குக் கோலாகலமாகத் திருமணம் செய்து வைத்தார். அந்தத் திருமணம் இருநாடுகளுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு மாறாகப் பெரும் பூசலை விளைவித்தது. உட் பூசலால் கோவிந்தன் பட்டமிழந்தான்; பதவியிழந்தான். மகனும் மருமகளும் தங்கள் நாட்டைவிட்டுத் தஞ்சையை வந்தடைந்தனர். பேரரசி



யாக வாழ வேண்டியவள், அரண்மனை அந்தப்புரத்திலே சாதாரணப் பிரஜை போன்று செல்வாக்கின்றி வாழ்கிறாள்.

தன் சகோதரி வீரமாதேவிக்கு நேர்ந்த துயரத்தைத் துடைக்க, மறுவாழ்வு அளிக்க விரும்பி இராட்டிரக்கூட மன்னன் கிருஷ்ணதேவனுடன் போர் தொடுத்தான் இராசாதித்தன். பராந்தகனின் தலைப்பிள்ளை இராசாதித்தன்.

தக்கோலம் என்ற இடத்தில் சோழர்படைகளுக்கும் இரட்டர் படைகளுக்கும் போர் கடுமையாக நடைபெற்றது. வெற்றித் திருவுக்கு இராசாதித்தன் மாலை சூடும் சமயத்தில் கங்க மன்னன் எய்த அம்பு இராசாதித்தன் மார்பில் தைத்தது. மண்ணரசியின் மடிமீது வீழ்ந்தான் இராசாதித்தன். குருதிப் புனலில் நீராடினான். தலைவனை இழந்த சோழர் படைகள் சிதறி ஓடி, சோழ நாடே இராட்டிரக் கூடர்களின் பிடியில் சிக்கியிருக்கும் போதில் முதிர்ந்த வயதிலும் பராந்தக சோழர் ஆர்ப்பரித்து எழுந்து இராட்டிரக் கூடப் படைகளைச் சோழ மண்ணிலிருந்து விரட்டியடித்து பரம்பரைப் பெயரை நிலை நாட்டினார். வெற்றியால் பராந்தகர் மகிழ்ந்து குதூகலிக்கவில்லை. புத்திர சோகம் அவரைச் சூழ்ந்து கொண்டது. தலைப்பிள்ளையை இழந்ததால் அவருக்கு ஏற்பட்ட பெரும் அதிர்ச்சி எளிதில் தீரவில்லை.

அந்தப்புரத்தில் தன்மகள் வீரமாதேவியைப் பார்க்கும் போதெல்லாம் பராந்தகர் வேதனைப்படுவார். இராசாதித்தனின் திரு உருவம் அவர் கண் முன்பு வந்து நிற்கும். கண் முன் நிற்கும் மற்ற உருவங்கள் மறையும். பொன்னி பாயும் சோழநாடு மறைந்துவிடும். அமைச்சர்கள் மறைந்து விடுவர். புதல்வர்கள் மறைந்து விடுவர். விழிகளை மூடிக் கொண்டு பராந்தகர் கடந்த காலப் பெருமைகளை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்ப்பார்.

தனது தந்தை ஆதித்த சோழர் விரிவுபடுத்திய சோழ நாட்டைக் கட்டிக் காப்பதற்காக நடத்திய போர்களை நினைத்துப் பார்ப்பார்.

ஒருவருடனும் பேச மாட்டார்; வேளைக்கு உணவு உங்கொள்ள மாட்டார். அரசியாருடனும் கலகலப்பாகப் பேசுவதில்லை. புத்திர சோகம் அவரது உள்ளத்தை வாட்டியது. உடலை உருக்கியது. பராந்தகருடைய கவனத்தை எப்படித் திருப்புவது என்பதில் அவரது மற்ற புதல்வர்கள் கண்டராதித்தனும், அரிஞ்சயனும், உத்தமசீலியும் ஈடுபட்டனர். மூன்று புதல்வர்களுள் கண்டராதித்தன் மீது பராந்தகருக்கு அன்பு அதிகம். இசையுடன் பாடுவதில் வல்லவர் கண்டராதித்தர். சிவபக்தி அவர் பிறக்கும் போதே உடன் பிறந்து விட்டது.

ஒருநாள் அதிகாலை பராந்தகர் ஆழ்ந்த நித்திரையிலிருந்தார். பொற்கோழி எங்கோ கூவியது. தஞ்சை தளிக் குளத்துக் கோயிலில் உதய கால பூஜையைக் குறிக்கும் மணி ஓசை மெல்ல எழுந்தது. அத்துடன் இனிய இசையும் இழைந்தது. யாரோ பாடுகிறார்கள். வீணையின் நாதமும் உடன் சேர்ந்துப் புதுப்பொலிவை ஊட்டின.

"சிங்கத் துருவனைச் செற்றவன்
சிற்றம்பல முகடு
கொங்கிற் கனகம் அணிந்த
ஆதித்தன் குல முதலோன்
திங்கட் சடையர் தமரதென
செல்வம் எனப் பறைபோக்
கெங்கட் இறைவன்
இருக்கு வேளூர்மன் கிடங்கழியே"

என்ற பாடல் பராந்தகர் செவியில் நுழைகிறது. பராந்தகர் மெல்லக் கண் விழிக்கிறார்.



"யார்?... யார் பாடுவது?" என்று குரல்கொடுத்தார். வீணையின் நாதம் அவர் இதயத்துக்கு இதமளித்தது.

"யாரங்கே?...? பாடுவது யார்? இங்கே அழைத்து வா" என்று பணிப் பெண்ணை ஏவினார் சக்கரவர்த்தி.

கண்டராதித்தன் தந்தையின் எதிரே வந்து நின்றான். அவன் அதிகாலையிலேயே நீராடி, திருநீறு பூசி வெண்பட்டு உடுத்தி சிவனடியார் போல் தோற்றமளித்தான்.

"யாரது, கண்டரனா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"ஆம், தந்தையே. என்னை அழைத்தீர்களாமே?" என்று பணிவு மிகுந்து பேசுகிறான் கண்டரன்.

"காலை வேளையில் இனிய கீதமிசைத்தவர் யார்? அவரை அழைத்துவரச் சொன்னேன். கீதம் என் வேதனையை மறக்கடிக்கும் மருந்தாக உள்ளது..." என்று கூறினார் பராந்தகர். இதுவரையில் இதுபோல் மலர்ச்சியுடன் அவர் பேசியது இல்லை.

"நான்தான் வீணையை மீட்டிப் பாடினேன்" என்றான் கண்டரன்.

"நீயா? ஆகா! என்ன இனிமையாக இருந்தது! யார் இயற்றிய பாடல் அது கண்டரா?"

"நம்பியாண்டார் நம்பி பாடியது. பாட்டனார் ஆதித்த சோழரைப் போற்றிப் புகழ்ந்த பாடல் அது."

"அப்படித்தான் நினைத்தேன். நம்பியாண்டாருக்கு எனது தந்தையிடம் மிகவும் அன்பு. என் தந்தையின் சிவபக்தியை நினைக்கும்போது நான் மிகப்பெருமை அடைகிறேன். அதே சமயம் என்னை நினைத்து கொள்ளும்போது நானே வெட்கப் படுகிறேன். காவிரிக்கரையில் எவ்வளவு

கோயில்களை எழுப்பி விட்டார் என் தந்தை! நானோ, போர் போர் என்று போர் வெறியும், புகழ்ப் போதையும், நாட்டாசையும் பிடித்துக் காலத்தைக் கழித்துவிட்டேன்'' என்று உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார் பராந்தகர்.

அவரைச் சமாதானப்படுத்த விரும்பிய கண்டரன், ''அரசே! உங்கள் செயலை நாடே போற்றிப் புகழ்கிறது. உங்கள் வீரத்திற்கு என்ன குறை? சிவபக்தியின் ஈடு இணை கூற முடியுமா? பாட்டனாரின் சிவபக்தி தங்களுக்கு இல்லாமல் போகுமா? நேற்று நான் ஒரு கனவு கண்டேன்...'' என்று சொல்லி நிறுத்தினான்.

''கனவா? என்ன கனவு? நல்ல கனவா, துர்க்கனவா?'' பரபரப்புடன் கேட்டார் பராந்தகர்.

''எல்லாம் நல்ல கனவுதான். எனது பாட்டனார் இராசகேசரி ஆதித்த சோழ சக்கரவர்த்தி தில்லையம்பலத்தின் மீது மிகவும் பக்தி கொண்டவர் என்று சொல்லியிருக்கிறீர்களே! அந்தத் தில்லையம்பலத்தைக் கனவில் கண்டேன்'' என்று விழிகளை மூடியவாறு லயித்துக் கூறினான் கண்டரன்.

''ஆகா! தில்லையம்பலத்தைக் கண்டாயா? சொல்லு சொல்லு, தில்லைக்குச் சென்று பல ஆண்டுகளாகின்றன...'' பரபரத்தார் பராந்தகர்.

''தில்லைக் கூத்தபிரானைக் கண்டேன். நடராசரைக் காண நாமிருவரும் செல்லுகிறோம்...'' என்று கூறி நிறுத்தினான் கண்டரன்.

பராந்தகர் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவர் முகம் தெளிவுற்றது. பிறகு தன் மகனுடன் சிதம்பரத்தைப் பற்றியே பேசலானார். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்வது குறித்து அவரது பேச்சுத் திரும்பியது.

கண்டராதித்தன் சுறுசுறுப்படைந்து விட்டான். புத்திர சோகத்தால் பொலிவு இழந்திருந்த தந்தையின்



கவனத்தை மாற்றிவிட்டதில் மகிழ்ச்சியடைந்தான். தந்தை என்ற உறவு முறை கூறியழைக்காமல், மன்னருடன் பேசுவதைப் போன்ற மதிப்பும் மரியாதையும் கொண்டு ''சக்கரவர்த்தி அவர்களே! தில்லைக் கூத்தரசர் கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்குச் செய்ய வேண்டும். பாட்டனார் ஆதித்த சோழர் தில்லைக் கோயில் விமானத்தைப் பொன் தகடுகளால் அழகுப்படுத்த விரும்பினார். பணியையும் அவர் தொடங்கி விட்டார் என்பதும் தங்களுக்குத் தெரியும். தாங்கள் அதைத் தொடர வேண்டும்'' என்று அவன் கூறிவரும்போது பராந்தக சோழர் பெருமூச்சு விட்டார்.

''கண்டராதித்தா! உனக்கு இளவரசுப் பட்டம் சூட்டுவதற்கு முன்பு சிதம்பரம் போகவேண்டும் என்று நினைத்ததுண்டு. ஆனால் எனக்கு ஏனோ ஆண்டவனைத் தொழ வேண்டும் என்ற எண்ணமே இப்போது எழுவதில்லை. ஆண்டவன் என்னைப் பூரணமாகச் சோதித்துவிட்டான். நான் என்ன பாவம் செய்தேன்? எனக்கு ஏன் இவ்வளவு பெரிய தண்டனை தரவேண்டும்? தலைப்பிள்ளையை இழந்து புத்திர சோகத்தால் தவிக்கும்படி ஏன் அவர் செய்தார்? வீரமாதேவியை நாள்தோறும் நான் பார்க்கும் போது அடையும் வேதனைக்கு அளவேயில்லை. கோவிந்தனை மீண்டும் இராட்டர் நாட்டு அரசராக்க என்னால் முடிந்ததா? நான் பல பல பட்டங்கள் பெற்று என்ன பலன்? எனக்குத் தெய்வத்தின் மீது நம்பிக்கை குறைந்துவிட்டது. அதனால்தான் சிதம்பரம் செல்லும் ஆர்வம் ஏற்படவில்லை'' என்று சலிப்புடன் கூறினார்.

கண்டராதித்தன் கைகூப்பி வணங்கி, ''தந்தையே தாங்கள் அவ்வாறு சொல்லக்கூடாது. நமது வினைப் பயனுக்கு ஆண்டவன் என்ன செய்வார்? கூத்தரசர் நடனமாடுகிறார். வெறும் கேளிக்கை நடனமா? மக்களுக்குப்

பொழுது போவதற்காக நடனமாடிக் காட்டுகிறாரா? அவர் இந்த உலகம் எனும் மேடையில் நர்த்தனமாடு கிறார். உலகை நிலைபெறுத்தவும் நீக்கவும் எல்லை யில்லா விளையாட்டாக நடனமாடுகிறார். அவரது அழகிய நடனத்தை ஒரு முறை பார்த்தால் போதும், மனச்சஞ்சலம் தீர்ந்துவிடும். தங்களுக்குத் தெரியாததை நான் என்ன சொல்லி விடப்போகிறேன்...'' என்று கண்டராதித்தன் சொல்லிச் சற்று நிறுத்தவும் பராந்தகர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''சொல்லு கண்டராதித்தா சொல்லு. எனக்குத் தெரியாதவை பல உனக்குத் தெரிந்திருக்கிறது. பளிச் சென்று நெற்றியில் திருநீறு அணிந்து கொள்ளும் பாங்கு எனக்குக் கைவரவில்லையே! நீ அவ்வப்போது இனிமை யாகப் பாடுகிறாய். சிவபெருமான் மீது பாடப்பெற்ற பாடல்களை நீ கற்றுணர்ந்திருக்கிறாய். எனக்கு அவை தெரியுமா? உன் கனவில் தில்லை அம்பலம் தோன்றியது. தில்லை அம்பலவாணர் தோன்றினார். எனக்கு அந்தப் பாக்கியமில்லையே! சொல்லு, கண்டரா சொல்லு...'' என்று ஆவல் ததும்பக் கேட்டார் பராந்தகர்.

''எந்தையே! மாவீரரும், காளத்தி முதல் கன்யாகுமரி வரை ஒரு குடை கீழ் அரசாளும் பேறு பெற்ற புண்ணியம் செய்தவரே! தங்கள் திருக்குமரனாக நான் பிறந்ததனால் தான் நான் இறைவனைக் கனவில் காண முடிந்தது. ஆகா, அந்தத் தோற்றத்தை எப்படி வர்ணிப்பேன்! அம்பலவாணரின் புருவ அழகைக் கூறுவதா? செவ்வா யின் அழகை, அந்த எழில் நிறைந்த செவ்வாயில் மலரும் சிரிப்பைப் புகழ்வதா? சடையிலுள்ள கங்காதேவி குளிர்ந்த விழிகளால் நோக்குவதை எடுத்துச் சொல்வதா?

''சிவந்த பவளம் போன்ற மேனியில் பூசப்பெற்ற வெண்ணீற்றைக் கூறி வியப்பதா? பொற் பாதத்தில் பொலியும் அழகைப் புகழ்வதா? எந்தையே! அந்தக் கனவு



கலையுமுன்பே எழுந்து விட்டேன். நமசிவாய, நமசிவாய என்று கூறி நீராடினேன். தங்களிடம் கனவில் கண்ட எழிலுருவை எடுத்தியம்ப ஓடோடி வந்தேன். நன்றாக உறங்கிக் கொண்டிருந்தீர்கள். எழுப்ப விருப்பமில்லை. இப்படித் தாங்கள் அயர்ந்து உறங்கி எவ்வளவோ நாட் களாகின்றன. வீணையை மெல்ல மீட்டினேன்...''— கண்டரன் பரவசமடைந்து பேசினான்.

''வீணையை மீட்டினாய்; விஞ்றக்கம் நான் கலைத் தேன். கண்டரா, எனக்குத் தில்லைக்குச் செல்லவேண்டும் போலிருக்கிறது. கூத்தரைக் காணவேண்டும் போலிருக் கிறது. ஆனால், பொன் வேய்வதற்குப் பொக்கிஷத்தில் பொன்னில்லையே...'' என்று பராந்தகர் பெருமூச்சு விட்டான்.

''விமானத்துக்குப் பொன் வேயப் பொன்னளிப்பான் பொன்னார்மேனியன். தில்லைக்குப் புறப்பட ஏற்பாடுகள் செய்யட்டுமா?'' என்று கண்டரன் ஆவலுடன் கேட்டார்.

பராந்தகர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு எழுந்து ஏறு போன்ற நடையுடன் அந்தக் கூடத்தில் உலாவினார். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக, கண்டராதித்தனை நோக்கி, ''கண்டரா, நீ சென்று உடனே உத்தமசீலியை இங்கே வரச் சொல். சிதம்பரத் திற்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்'' என்றார்.

உத்தமசீலி பராந்தகனின் கடைசிப் புதல்வன்; வீரம் மிகுந்தவன். ஆனால் முன் கோபங்கொண்டவன். ஆள்வ தற்குத் தனக்கென்று ஒரு நாடு வேண்டும் என்ற ஆசை மிகுந்தவன். பாண்டி மண்டலத்தின் மீது அவனுக்கு எப்போதும் ஒரு கண். மதுரை அரியணையிலமர்ந்து ஆள வேண்டும் என்ற அவா நிரம்பப் பெற்றவன்.

தந்தை தன்னை அழைக்கிறார் என்றவுடன் உத்தமசீலி வியப்படைந்தான். ஓடோடி வந்து வணங்கி நின்றான்.

''உத்தமா, உடனே மதுரைக்குப் படைகளுடன் புறப்படு. குதிரைப் படைகள் போதும். மதுரைக் கருவூலத்திலிருந்து எவ்வளவு தங்க ஆபரணங்கள் கொண்டுவர முடியுமோ கொண்டு வந்துவிடு. ஏதாவது எதிர்ப்பேற்பட்டால் மட்டுமே ஆயுதங்களைப் பயன் படுத்து'' என்று கட்டளையிட்டார்.

உத்தமசீலி ஏதோ கூறுவதற்காகச் சற்றுத் தயங்கி நின்றான். பராந்தகர் அவனை உற்று நோக்கினார், என்ன என்று வினவுவது போல.

''மதுரைக்குச் சென்று உடனே திரும்பிவிட வேண்டுமா?'' என்று கேட்டான் உத்தமசீலி.

''ஆம், எவ்வளவு விரைவில் திரும்ப முடியுமோ அவ்வளவு விரைவில் திரும்ப வேண்டும். தில்லைத் திருப்பணி வேலை தொடங்கவேண்டும். வைர, வைடூரிய நகைகள், நவரத்தினப் பதக்கங்கள், முத்துமாலைகள் வேண்டாம். தங்க ஆபரணங்களாக எடுத்துவா. இன்றே புறப்படு...'' என்று கூறினார். குரலில் கண்டிப்பு இருந்தது. பராந்தகர் பேச்சுக்கு மறு பேச்சு ஒருவரும் பேச முடியாது. உத்தமசீலி மதுரையை நோக்கி விரைந் தான். ஏராளமான தங்க நகைகளுடன் திரும்பினான். திரும்பி வரும்போது ஒரு பகுதி நகைகள் களவு போய் விட்டாலும் மீதமிருந்தவையே சிறு குன்றுபோல் தோற்ற மளித்தன. அதை உலையிலிட்டு உருக்குவதைக் காணவும், பொற்கூரை வேயும் பணி தொடங்கவுமே அந்தச் சிற்றூருக் குமன்னரும் பரிவாரங்களும் வந்தார்.

பராந்தக சோழருடன் பட்டத்து அரசி வந்தாள். புதல்வி வீரமாதேவி வந்தாள். கண்டராதித்தன்



7467
279261

வந்தான். அரிஞ்சயன் வந்தான். உத்தமசீலி வந்தான். பணிப்பெண்கள், சேடிகள், மனைவியர் சிலர், அதிகாரி கள் புடைசூழ பெரிய பரிவாரமே வந்தது.

முதிர்ந்த பருவத்திலும் வீரத் திருவிழிப் பார்வையும், கம்பீரமும், கட்டுக் குலையாத தோள்களும் கொண்ட பரகேசரி பராந்தக சோழ சக்கரவர்த்தியின் புதல்வர் களும், மகள்களும் சூழவந்த அந்த பவனியைப் பார்த்த வுடனேயே காங்கேயன் உள்ளத்தில் அந்தத் திட்டத்தின் பொறித் துகள் கனிய ஆரம்பித்து விட்டது.

காங்கேயன் மருத்துவமனையை சிதம்பரத்தில் தொடங்குவது, மாளிகை மகளிர்க்குப் பணிவிடை செய்யும் பணியிலோ, அல்லது குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் குற்றேவல் பணியிலோ குமுதம் சேர வேண்டியது. கோயில் திருப்பணி செய்யும் கல்தச்சர்களை மேற்பார்வையிடம் பணியினை பெருமாள் மேற் கொள்வது—இதுதான் காங்கேயன் திட்டம்.

''நீங்கள் திடீரென்று மருத்துவமனையை எப்படி தொடங்க முடியும்? தங்களுக்கு வைத்தியம் தெரியுமா?'' என்று குமுதம் கேட்டாள் காங்கேயனுடைய அறிவைச் சோதிப்பதோ, சந்தேகப்படுவதோ, அவளுடைய நோக்க மன்று. ஆனால் உள்ளூரக்கவலை, சரியான அணுகுமுறை யில்லாவிடில் வேஷம் கலைந்து.சதித்திட்டம் வெளிப்பட்டு விட்டால் எல்லாம் பாழாகி விடுமே என்ற கவலைதான்.

''குமுதம், நீ கேட்பது நியாயமானதுதான். ஆண்டவன் எனக்கு அறிவாற்றல் சிலவற்றை அளித்திருக் கிறான். அதன்படி அவன் அருளால் எல்லாம் கடைசி நொடியில் நிறைவேறும். எனக்குச் சில மருத்துவ முறை கள் தெரியும். மூலிகைகள் தெரியும். மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள் சிலவற்றை உடனடியாகப் போக்கும் முறை தெரியும். வெறும் திருநீற்றினால் தான் பல

சங்கடங்களை, மனநோய்களைப் போக்கி விடுவேன்'' என்று காங்கேயன் கூறினான்.

பிறகு, ''குமுதம், நீ இங்கேயே தங்கி விடு. நான் வெளியே கிராமத்திற்குள் சென்று மாற்று உடைகளை பெற்று வருகிறேன். யார் எப்படி எந்த விதத்தில் கேட்டாலும் உண்மையைச் சொல்லிவிடாதே. காஞ்சி புரத்திலிருந்து வருவதாகக் கூறு'' என்றார்.

பராந்தகச் சோழரும், அவரது பரிவாரங்களும் தங்கு வதற்குச் சிறிய வீட்டைச் சுற்றிப் பெரும் பந்தல் போடப் பட்டிருந்தது. ஓரிரு நாட்கள் மட்டுமே அவர்கள் தங்குவ தாக இருந்ததால் வேறு விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை.

அவர்கள் தங்கியிருந்த வீதி வழியே காங்கேயன் செல்லும்போது, திடீரென்று அரச மகளிர் தங்கியிருந்த இடத்தில் பரபரப்புடன் சிலர் வெளியே விரைந்து வருவது தெரிந்தது. ஒன்றும் புரியாமல் சிலர் தெருவில் கையைப்பிசைந்து கொண்டு நின்றனர். வீரர்கள் விழித் தனர். அதிகாரிகள் அங்குமிங்கும் சென்றனர்.

''மருத்துவரைக் கூப்பிட சிதம்பரத்திற்கு அன்றோ செல்ல வேண்டும்!''

''மருத்துவர் ஏன் உடன் வரவில்லை?'' என்பவை போன்ற பேச்சுக் குரல் எழுந்தது. காங்கேயன் நின்று விசாரித்தார்.

பராந்தகச் சோழரின் மகள் வீரமாதேவிக்குக் கடுமை யான தலைவலி தாளாமல் துடிக்கிறாள் என்றும் அறிந்தார்.

''தலைவலிதானே, ஒரு நொடியில் போக்கிடலாம்'' என்று வாய்விட்டுக் கூறினார் காங்கேயன்.

அதைக் காதில் கேட்ட அதிகாரிகள் காங்கேயன் அருகே வந்தனர்.



''நீங்கள் மருத்துவரா?'' என்று ஆவலுடன் கேட்டனர். ''ஏதோ கொஞ்சம் தெரியும். ஆனால் அரச குடும்பத்தினருக்குச் சிகிச்சை செய்யுமளவுக்குத் தெரியாது'' என்று அடக்கமாகக் கூறினார் காங்கேயன்.

''அடடா, அரச குடும்பத்தினர் என்றால் அவர்களும் மனிதர்கள்தாம்; ஐயா! உடனே வந்து பாருங்கள். இள வரசி துடியாய்த் துடிக்கிறார். யாராவது மருத்துவர் பார்த்தால்கூட நோயின் கடுமை குறைந்துவிடும்'' என்று அதிகாரிகள், காங்கேயனைச் சூழ்ந்து கொண்டு கேட்டனர்.

''மருந்துப் பெட்டி கொண்டு வரவில்லையே'' என்றார் காங்கேயன். ''அப்புறம் கொண்டு வரலாம். கொஞ்சம் உள்ளே வாருங்கள். இளவரசியின் புலம்பல் சற்று நிற்கும்'' என்று அவசரப்படுத்தினர் அதிகாரிகள்.

காங்கேயன் அந்த வீட்டிற்குள் நுழைந்தார். வீரமா தேவி இருகைகளையும் நெற்றியில் பிடித்துக் கொண்டு தாளாமல் துடித்துக் கொண்டிருந்தாள். தனது திட்டம் இவ்வளவு எளிதில் நிறைவேறிவிடும் என்று காங்கேயன் நினைக்கவேயில்லை!

## 14. விடிவதற்குள் ஒரு முடிவு

காங்கேயனுடைய தோற்றத்தைப் பார்ப்பவர்கள், அவரை பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்றும், சதி செய்வதற்காக இங்கு வந்துள்ளார் என்றும் ஒருபோதும் சந்தேகப் படமாட்டார்கள். அதிகாரிகள் காங்கேயனை அரச குடும்பத்தவர் தங்கியுள்ள வீட்டிற்குள் அழைத்துச் செல்லும்போதே, ''மருத்துவர் வருகிறார்; வழி விடுங்

கள், வழி விடுங்கள்'' என்று குரல் கொடுத்தனர். காங்கேயனுடைய மதிப்பு உயர்ந்தது.

விசாலமான கூடங்களும் தாழ்வாரங்களும் கொண்ட சத்திரம் போன்ற அந்த வீடு பழமையானது. அரச குடும்பத்தினர் அந்தச் சிற்றூர்க்கு வருகிறார்கள் என்று தெரிந்தவுடன் குறுகிய காலத்தில் அந்த வீட்டைச் சுத்தப் படுத்திஅரசகுலப் பெண்டிர் தங்க வசதி செய்திருந்தார்கள் என்றாலும் வெளவால் நாற்றம் இலேசாக வீசிக் கொண் டிருந்தது. காற்று அதிகம் புக வசதியில்லாததால் புழுக்கமாயிருந்தது.

பட்டத்து அரசி கோக்கிழானடிகள் தங்குவதற்கு என்று விசாலமாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பராந்தக சோழதேவரின் மற்ற மனைவியர்களான அருண்மொழி நங்கை, வானமாதேவி, வளவன்மாதேவி முதலானோர் வேறு இடத்தில் இளைப்பாறிக்கொண்டிருந்தனர். பணிப் பெண்களும் ஓய்வு எடுத்துக்கொள்ளக்கூடிய உச்சி வேளையாக இருந்ததால் வீரமாதேவியின் அருகே ஒருவரு மில்லை. திடீரென வீரமாதேவி வலி தாங்காமல் அலறினாள். பரபரப்புடன் அனைவரும் அவளருகே ஓடிவந்தனர். அந்த வீடே அவளைச் சுற்றிக் கூடி விட்டது. காற்று புகக்கூட வழியில்லாமல் போனதால் வீரமாதேவி மேலும் களைப்புற்றாள்.

வீரமாதேவி பழுவேட்டரையர் மகளாக இருந்தாலும், அரசி கோக்கிழானடிகள், அவளைத் தனது சொந்த மகள் போல் பாவித்தாள். வீரமாதேவி கூச்சலிட்டவுடன் ஓடோடி வந்து அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டாள்

''கண்ணே, என்ன நேர்ந்துவிட்டது. பயணத்தின் போதே உடல்நிலை சரியில்லையென்றால் சொல்லியிருக்க லாமே; என்ன செய்கிறது உனக்கு?'' என்று வீரமாதேவி யைத் தன்னுடன் மெல்ல அணைத்துக் கொண்டாள்.



''அம்மா சொல்லமுடியாத அளவுக்குத் தலையை வலிக்கிறது. பெரும் பாறையைக் கொண்டு மோதுவது போல் தோன்றுகிறது. கண்ணையும் விழிக்க முடியாது வேதனை தருகிறது'' என்று மெல்லிய குரலில் வீரமாதேவி பேசினாள்.

வீரமாதேவியின் கூந்தலை மெல்லத் தடவிவிட்ட அரசி, ''பெண்ணே! உனக்கு என்று இப்படி வேதனை ஏற்படுகிறதே. ஆண்டவன் ஏன் உன்னை இப்படிச் சோதனை செய்கிறான்!'' என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

''மருத்துவரும் அருகிலில்லையே, என்ன செய்வேன். யாராவது சக்கரவர்த்தியிடம் சென்று செய்தி சொல்லுங் களேன்'' என்று அரசி புலம்பவும், அங்குள்ளோர் பரபரப் படைந்தனர். நான்கு பக்கமும் ஓடினர். அரசு அதிகாரி கள் ஓடி வந்தனர். பணியாட்கள் சூழ்ந்தனர். கணத்தில் அந்த இடமே, ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது போன்ற நிலையை அடைந்தது.

''தேவி கவலைப்படாதீர்கள், மருத்துவரைத் தேடி அழைத்து வந்துவிட்டோம்'' என்று அரசியாரைப் பார்த்து அதிகாரி ஒருவர் கூறினார்.

கோக்கிழானடிகள் நிமிர்ந்து காங்கேயனைப் பார்த் தாள். முதல் பார்வையிலேயே மரியாதை தருமளவுக்கு அவர் தோற்றமிருந்ததால், அரசி காங்கேயனைப் பார்த்து, ''மருத்துவரே, என் மகள் சிறு வலி என்றாலும் தாங்கமாட்டாள். உடனே கவனியுங்கள். நல்ல வேளை யாக ஆண்டவன் தங்களை இங்கே அனுப்பினார்'' என்றாள்.

''அம்பலவாணர் ஒரு குறையும் வைக்கமாட்டார்'' என்ற காங்கேயன், ''ஒரு வாய் உணவு எனக்கும் என் மகனுக்கும் என் சகோதரியின் மகனுக்கும் கிடைத்தது. என்

மகளுக்கு மாற்றுடை தேடிப் புறப்பட்டேன். நல்ல வேளையாக இங்கே வந்தேன்'' என்று சுற்று முற்றும் பார்த்தவாறு கூறினார்.

ஒரு பட்டுத் துணியைக் கொண்டுவரச் செய்து வீரமாதேவியின் கரங்களின் மீது போர்த்தி நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு மெள்ள நகைத்தார். மருத்துவர் என்ன சொல்லப்போகிறாரோ என்ற கவலையுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவர் நகைத்ததைப் பார்த்து ஒன்றும் புரியாமல் திகைத்தனர்.

''ஒன்றுமில்லை. கவலைப்படவேண்டாம்'' என்றார் காங்கேயன்.

''நல்ல வாக்குச் சொன்னீர்கள்'' என்றாள் அரசி.

''இவள் தங்கள் மகளா?'' என்று காங்கேயன் கேட்டார்.

''என் மருத்துவரே. தாங்கள் ஊருக்குப் புதிதா? அரசியாரின் மகளைத் தங்களுக்குத் தெரியாதா?'' என்று அங்கேயிருந்த அதிகாரி ஒருவர்—கேட்கவும், ''ஊருக்கு என்ன, நான் இந்த நாட்டிற்கே புதிது'' என்று சற்றுக் கடுமையாகக் கூறியவர், ''இதோ பாருங்கள், கருணை கூர்ந்து இங்கிருந்து அனைவரும் விலகிச் செல்லுங்கள், முதலில் நல்ல காற்றோட்டம் வர வேண்டும். விசிறி இருந்தால் கொண்டுவரச் சொல்லுங்கள்'' என்றார்.

நான்கைந்து விசிறிகள் கொண்டுவரப்பட்டன. ''இந்த விசிறி போதாது; மயில்பீலி இல்லையா?'' என்று சற்றுக் ண்கடிப்பான குரலில் கேட்டார் காங்கேயன்.

''அந்தப் பெரிய தோகை விசிறியைக் கொண்டு வரவில்லையோ? எங்கே விசிறி? ஏன் இப்படிச் சூழ்ந்து கொண்டு நிற்கிறீர்கள்? விலகுங்கள்; அவரவர் வேலையை அவரவர்கள் போய்ப் பாருங்கள்'' என்று அரசி கட்டளையிட்டாள்.



பெருந்தோகை விசிறி கொண்டு வரப்பட்டது. இரண்டு பணிப்பெண்கள் விசிறவும் குளிர்ந்த காற்று அங்கு பரவியது. வீரமாதேவியின் முகத்திலும் குளிர்ந்த காற்று படவே அவள், ''அப்பாடா'' என்று மெல்லக் கூறி பெருமூச்சு விட்டாள்.

அரசிக்கு மருத்துவர் மீது பெரும்நம்பிக்கை பிறந்தது ''மருத்துவரே! வீராமதேவியை என் மகள் போல்தான் வளர்க்கிறேன். அவள் இராட்டிரக்கூட நாட்டு அரசி. போதாத காலம் அவளுக்கு; இங்கே வந்து சேர்ந்துவிட்டாள். தாங்கள் புதியவர். அதனால் தெரியவில்லை. வீரமாதேவிக்கு என்ன நோய் என்று நன்றாகப் பரீட்சித்துப் பாருங்கள்'' என்று கவலையும், ஆனால் அதே போது மருத்துவரிடம் நம்பிக்கையும் நிறைந்த குரலில் கேட்டுக் கொண்டாள் கோக்கிழானடிகள்.

''மேதகு அரசியார் அவர்களே! என்னைப் பொறுத்தருளுங்கள். ஓர் அரசிக்கு வைத்தியம் பார்க்கிறோமென்று எனக்கு முதலில் தெரியவில்லை. சொல்லப்போனால், சோழவள நாட்டு அரசியார் எதிரே ஒன்றும் புரியாமல் பேசியது மகத்தான தவறுதான்'' என்று காங்கேயன் கூறும்போது அரசியார் அவரது அடக்கத்தைப் பாராட்டி, ''அடடா! தாங்கள் தவறாக ஏதும் சொல்லவில்லையே. தெரியாததைக் கேட்டீர்கள்... துடி துடித்த வீரமாதேவி, இப்போது ஒரு நொடியில் 'அப்பாடா' என்று பெருமூச்சு விடுகிறாள். உங்கள் கைராசி எடுத்த எடுப்பிலேயே தெரிகிறது...'' என்றவுடன், காங்கேயன் துணிவுடன், ''தேவி! தங்கள் மகளுக்கு கவலைப்படும் எந்தவித நோவுமில்லை'' என்றார். பிறகு தொடர்ந்து ''கொடிய வெய்யிலில் வந்து உடனே நீராடினார்களா?'' என்று கேட்டார் காங்கேயன்.

அரசி, வீரமாதேவியின் பக்கம் திரும்பி, ''இங்கு வந்த உடனேயே நீராடினாயா?'' என்று கேட்டாள். ஆம் என்ப

தற்கு அடையாளமாகத் தலையசைத்தாள் வீரமா தேவி.

''வியர்வை அடங்கியபிறகு குளித்திருக்க வேண்டும்; உடனே இளநீர் வேறு குடித்திருக்கிறார்கள் போலிருக்கிறது'' என்றார் காங்கேயன்.

வீரமாதேவிக்கு முகத்தில் இளநகை தோன்றியது. அருகிலிருந்த பணிப்பெண், ''ஆமாம், தேவி! இரண்டு இளநீர் காய்களை வெட்டித்தரச் சொல்லி ஒரே மடக்கில் குடித்து விட்டார்கள்'' என்றாள். அரசிக்கு வியப்பு அதிகமாகியது. மருத்துவர் சோதிடமும் அறிந்தவரா?

''அதனால் நீர்ச்சளி உடனே பிடித்திருக்கிறது... அத்துடன்...'' என்று கூறி நிறுத்திய காங்கேயனைப் பார்த்து, அரசியார், ''என்ன, என்ன? சொல்லுங்கள்...'' என்று ஆவலும் பரபரப்பும் ததும்பக் கேட்டாள்.

''நான் பேசிக்கொண்டே இருப்பதற்குக் காரணம் இளவரசி தலைவலியைச் சற்று மறக்கவே'' என்று கூறிய காங்கேயன், ''உடனே தலைவலியை நிறுத்திவிடலாம்; என் மூலிகைப் பெட்டி நான் தங்கியுள்ள சத்திரத்தில் இருக்கிறது. தலைவலி மூலிகை கைவசமிருக்கிறதா என்பது தெரியாது. மூலிகைக் கொடியைத் தேடிப்பிடித்து கொண்டு வருவதற்குள் உடனே வலி குறைக்க வைத்தியம் சொல்கிறேன். ஏலக்காய் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஆகா, ஏலம், மிளகு, வால் மிளகு, லவங்கம் எல்லாம் இருக்கின்றன'' என்று உடனிருந்தவர்கள் கூறினர்.

''ஏலக்காய் இருந்தால் கொண்டுவரச் சொல்லுங்கள். தாய்ப்பால் சுரக்கும் பெண்ணிடமிருந்து சிறிது பால் வாங்கி வாருங்கள், ஏலக்காயைப் பொடி செய்து துணியில் நனைத்துப் போடுங்கள். தலைவலி ஓடிவிடும்'' என்றார்.



பிறகு மெல்ல சிரித்துக் கொண்டு ''அந்தத் துணியில் ஈரம் காயக்காயப் பாலில் நனைத்துக் கொண்டே யிருக்க வேண்டும்' என்றார்.

தாய்ப்பால் கொணரச் சிலர் ஓடினர். அப்போது சுற்றும் முற்றும் பார்த்த காங்கேயன் ''தேவி, மிகவும் முக்கியமான ஒன்றை நான் கேட்க வேண்டும். ரகசியமானதுங் கூட'' என்றார்.

அரசியார் சுற்றிலுமுள்ளவர்களை நோக்கினாள். அனைவரும் அங்கிருந்து விலகிச் சற்றுத்தொலைவில் போய் நின்று கொண்டனர்.

''தேவி! தங்கள் மகளுடைய கணவர் இங்கு வரவில்லையா?'' என்று கேட்டார் காங்கேயன்.

''இங்கு வரவில்லை. ஆனால் சிதம்பரத்தில் மாளிகையில் தங்கியிருக்கிறார். இராட்டிரகூட நாட்டு வேந்தர் அவர் என்பது தங்களுக்குத் தெரியுமா?'' என்று அரசி கேட்டாள்.

அதைக் காதில் போட்டுக் கொள்ளாத காங்கேயன் 'தேவி இளவரசியிடம் அவருக்குத் தணியாத அன்பு என்று நினைக்கிறேன்'' என்று மெல்லப் புன்முறுவலுடன் கேட்டார்.

அரசியார் மெல்ல நகைத்தார். அதில் ஒருவித நாணமும் இருந்தது. அரசியாயினும் பெண்தானே? ''கோவிந்த வல்லவரையருக்கு வீரமா தேவியை விட்டு ஒரு கணம் கூடப் பிரிந்திருக்க முடியாது. இங்கே புறப்படும் வரையில் அவருடன்தான் வீரமாதேவி இருந்தாள். ஏன், எதற்குக் கேட்கிறீர்கள்?' என்று அரசி கேட்டாள்.

''பத்து நாட்களாவது, கணவனுடன் சேராமல் இருந்தால்தான் இந்தத் தலைவலி போகும். தலைவலி எப்படி

ஏற்படுகிறது? வெயிலில் வந்து உடனே குளிப்பதால், உடனே இளநீரைப் பருகுவதால், அதிகக் கவலையால், இராப்பகலாய்க் கண் விழித்திருப்பதால்...காலங்கடந்து உணவு கொள்வதால்...மேலும் மேலும்...இன்னும் பெண்கள் எதிரே சொல்லக் கூடாது. நான் இதைச் சொல்வதற்கு என்னைப் பொறுத்தருளுங்கள்'' என்று கூறிச் சற்று நிறுத்தினார் காங்கேயன்.

அரசியார் ஆவலை அடக்க முடியாமல் ''மருத்துவரே, நீங்கள் கூறிய அனைத்தும் வீரமாதேவி தெரிந்தோ, தெரியாமலோ செய்து இருக்கிறாள்; மற்றொன்றையும் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லுங்கள். மருத்துவரே, தாங்கள் நோயை மட்டும் தீர்ப்பவராகத் தோன்றவில்லை. மனநோயை அறியும் சோதிடராகவும் காட்சியளிக்கிறீர்; தங்களை நான் பெரிதும் மதிக்கிறேன். சொல்லுங்கள், மருத்துவரே'' என்ற அரசியார் குரலில் நெகிழ்ச்சியிருந்தது.

''தேவி! கோவிந்த வல்லவரையர் சுக போகங்களில் அளவுக்கு மீறிப் பிரியமுடையவர் என நினைக்கிறேன். நேற்று இரவு கூட அவர் தேவியாரைப் பிரியவில்லை போலிருக்கிறது. அளவுக்கு மீறினால் அமுதமும் விஷம். இப்போது இளவரசி கருவுற்று இருக்கிறார்'' என்று கூறி முடிக்கவும் அரசியார் முகத்தில் மகிழ்ச்சி பொங்க, வீரமாதேவியை அணைத்துக் கொண்டு ''குழந்தாய், உண்மை தானா?'' என்று கூவினாள்.

வீரமாதேவியின் முகத்தில் நாணம் படர்ந்தது. அரசியார் உடனே கையைத் தட்டி, ''யாரங்கே! சக்கரவர்த்திகளிடம் உடனே போய் மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்றைத் தெரிவிக்க நான் விரும்புவதாகச் சொல்'' என்று பரபரப்புடன் கூறினாள்.

சிறிது நேரத்தில் அந்தக் கூடத்திற்கு சோழ சக்கரவர்த்தி பராந்தக சோழ தேவர் வந்தார். அவரைக் கண்ட



ராதித்தன் பின் தொடர்ந்தார். அரிஞ்சயன் உடன் வந்தார். உத்தமசீலி விரைந்து வந்தான்.

சக்கரவர்த்திக்கேற்ற விசேஷ உடை அணியவில்லை. மகுடமில்லை, உடைவாள் இடையிலில்லை. மேலே ஒரே ஒரு பட்டு உத்தரீயம் மட்டுமே. நரைத்த முடியும், விழுப்புண்கள் பட்ட வடு நிறைந்த மார்பும், முதுமையடைந்தாலும் தளராத திரண்ட கரங்களுமாக பராந்தகரை அந்தச் சமயம் பார்க்கும்போதும் காங்கேயனுக்குத் தனிப்பட்ட மரியாதை உணர்ச்சி ஏற்பட்டது. ஏதோ குடும்பம் ஒன்றில் பழகுவது போன்றே தோன்றியது; பாண்டிய குலத்தை நாசம் செய்ய வந்த சோழ சக்கரவர்த்தியின் மிக அருகே நின்று கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் தோன்றியபோது காங்கேயன் மெய்சிலிர்த்தது.

அரசி எழுந்து பணிந்து நின்றாள். வீரமாதேவி மெல்ல எழ முயன்றாள். பணிப்பெண்கள் கைகட்டி வாய் பொத்தி நின்றனர்.

''நீங்கள் பாட்டனாராகப் போகிறீர்கள்'' என்று கோக்கிழானடிகள் மகிழ்ச்சி மிகுதியால் கலகலவென்று பேசினாள்.

பிறகு நடந்தவற்றைச் சொல்லி, ''தில்லையம்பலத்து எம்பிரான்தான் இவரை இங்கே கொண்டு சேர்த்திருக்கிறார். சிறிது நேரத்திற்கு முன்பு வீரமாதேவி துடித்த துடிப்பென்ன? இப்போது பாருங்கள் அவள் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியை! அவளுக்கு ஓய்வு வேண்டுமாம்'' என்றாள்.

பராந்தகர் சைகை செய்தார். ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு பழங்களுடன் புத்தாடையும், முத்து மாலை ஒன்றுமிருந்தது.

''மருத்துவரே, இப்போதைக்கு இந்தப் பரிசை ஏற்றுக் கொள்ளுங்கள். நாளை சிதம்பரத்திற்கு வாருங்கள். வேண்டியதைத் தருகிறேன். வீரமாதேவியின் உடல்

நலத்தை உடனிருந்து கவனித்துக் கொள்ளுங்கள்'' என்றார் சக்கரவர்த்தி.

ஃ ஃ ஃ

காங்கேயன் மீண்டும் சத்திரத்திற்குத் திரும்பிய போது குமுதமும், பெருமாளும் கவலையுடன் உட்கார்ந்திருந்தனர். இரண்டு வீரர்கள் பின்தொடர காங்கேயன் முகமலர்ச்சியுடன் வருவது கண்டபிறகே குமுதத்திற்கு நிம்மதி ஏற்பட்டது.

நடந்த சம்பவத்தைச் சொல்லிய பிறகு காங்கேயன் கவலையுடன், ''பெருமாள், இந்த நகை மூட்டையை என்ன செய்வது? இதையும் போகுமிடமெல்லாம் எடுத்துப் போக முடியாது'' என்றார்.

''பிறகு, ஒருவேளை, சக்கரவர்த்தியிடமிருந்து மீண்டும் அழைப்பு வரலாம். நாமெல்லாரும் புறப்படும்படி நேரலாம்'' என்றார்.

''நகைகள் அனைத்தும் பாண்டியராணியினுடையவை இதை மீட்பது நமது கடமை. சோழர்கள் அரண்மனையில் பணிசெய்யச் சேரப்போகிறோமென்பதற்காக நம் நாட்டு நகைகளை இழந்துவிடக் கூடாது'' என்றாள் குமுதம்.

''என்ன செய்வது? தர்ம சங்கடமான நிலை. நம்மிடம் இருக்கும் ஆபரணங்களை அவர்கள் கண்டுவிட்டாலும் நமது திட்டமே பாழாகிவிடும். நகையைப் பறி கொடுத்த இளவரசன் உத்தம சீலியை அங்கே பார்த்தேன்'' என்றார் காங்கேயன்.

''பாண்டிய அரசியின் நகைகளை இழக்க நான் விரும்பவில்லை'' என்றாள் குமுதம்.

''நகை மூட்டையுடன் நாம் மூவரும் சென்றால் அகப்பட்டுக் கொள்ள மாட்டோமா?'' என்றார் காங்கேயன்.



''எங்காவது புதைத்து விடுவோமே! பிறகு எடுத்துக் கொள்வோம்'' என்றான் பெருமாள்.

குமுதம் மெல்லச் சிரித்தாள். ''பிறகு என்றால் எப்போது? சோழ நாட்டிலேயே தங்கியிருக்கும் எண்ணமா?'' என்றாள்.

''மண்ணாசை, பொன்னாசை பொல்லாதது என்பார்கள். பொன் சேர்ந்தவுடனேயே நம்மை எப்படிக் குழப்புகிறது பாருங்கள்'' என்றார் காங்கேயன்.

''நமக்கு எந்த ஆசையுமில்லை; மண்ணாசை கொண்ட சோழர்களை முறியடிக்க நாம் புறப்பட்டோம். பொன்னாசை கொண்டு அவர்கள் தாமே நகைகளைக் கவர்ந்து வந்திருக்கிறார்கள்? அந்த ஆசையும் அவர்களுக்கு நிறைவேறாமல் செய்வோம்'' என்றாள் குமுதம்.

''அதற்கு வழி என்ன? புதைக்கவும் கூடாது. கையிலும் வைத்திருக்க முடியாது. வேறு என்ன செய்யலாம்?'' என்றார் காங்கேயன்.

''நான் ஒன்று சொல்லட்டுமா? இந்த நகை மூட்டைகளுடன் நான் மதுரைக்கே திரும்பவும் சென்று தலைவரிடம் ஒப்படைத்து விடுகிறேன். இங்கு நானிருந்து என்ன செய்யப் போகிறேன்?'' என்றாள் குமுதம்.

''நீ திரும்பிச் செல்வதா?'' பெருமாள் கவலையுடன் கேட்டான்.

''ஆமாம், மாறவர்மனையும் கடலில் இழந்தோம். திட்டமிடாவிட்டால் மூவரும் சோழ மண்ணிலேயே மறைந்து விடுவோம். விலைமதிப்பற்ற ஆபரணங்களைத் திரும்பவும் மதுரைக் கருவூலத்தில் சேர்த்து விடுவோம். நீங்கள் அரண்மனை வைத்தியராகி விடுவீர்கள். பெருமாளுக்கு ஏதாவது முக்கியப் பணி கிடைத்துவிடும். நானி

ருந்து என்ன செய்யப்போகிறேன்? நான் நகை மூட்டைகளுடன் சென்று வருகிறேன்'' என்றாள் மீண்டும் தீர்மானமாக.

காங்கேயனால் அவளுடைய யோசனைக்குச் சமாதானம் கூற முடியவில்லை. என்ன செய்வது என்று திகைப்பும் கவலையும் மேலிட அன்றைய பொழுதைப் போக்கினார். விடிவதற்குள் குழகத்திற்கு முடிவு ஒன்று சொல்லவேண்டுமே!

## 15. சிரிப்பும் சிந்தனையும்

மர வேரில் அமர்ந்து கொண்டு மாறவர்மன் ஆற்றில் செல்லும் தோணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். விழிகள் தாம் பார்த்துக்கொண்டிருந்தன; ஆனால் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட கவலையைச் சொல்லி முடியாது. சலபதிபுரத்துச் சூழலில் அவனன்றி வேறு இளம் வாலிபன் எவராவது இருந்தால் சுக போகத்தில் ஐக்கியமாயிருப்பார்கள். வேளைக்கு நல்ல விருந்து. ராஜவிருந்து!

மன்னர்களின் அரண்மனையில் நடக்கும் விருந்தை அவன் கண்டதில்லை. ஆனால் சிங்கவரையன் வீட்டில் தினம் விருந்துதான். ஒரு வேளைக்கு குறைந்தது நூறு பேராவது உண்பார்கள். தலை வாழை இலைக்குப பஞ்சமில்லாததால் இலை விரித்து நாச்சியாரின் உபசரிப்புடன் மணக்க மணக்க வெஞ்சனங்களும், சோறும், குழம்பும் பரிமாறப்படும்.

மாறவர்மன் வெளிக்குத்தான் வயிறார உண்பது போல் தோற்றமளிப்பான். ஆனால அவன் எப்போதும் சிந்தனையிலாழ்ந்திருப்பான். பெரியவர் காங்கேயன் எங்கிருக்கிறாரோ என்று எண்ணுவான். பிறந்த பாண்டிய நாட்டிற்குத் தொண்டு செய்யாமல் ஒவ்வொரு நாளும்



வீணே கழிகிறதே என்று வேதனைப்படுவான். அப்படி கவலையில் மூழ்கியிருந்த ஒருநாள்-ரங்கதேவி அவன் அருகே வந்து நின்றாள். அவள் கையில் வெள்ளித்தட்டில் அதிரசம் இருந்தது. தேன்குழல் இருந்தது. வெள்ளைப் பணியாரம் வாய்திறந்து நகைத்தது.

'இவற்றை யார் செய்தது தெரியுமா?'' என்று தேன்குழலைக் கையிலெடுத்து அவன் கண் எதிரே அசைத்தபடி கேட்டாள்.

மாறவர்மன் மெல்ல நகைத்து, ''வேறு யார் செய்திருக்க முடியும்? நீ தான் செய்திருப்பாய்'' என்றான்.

ரங்கதேவி வியப்பால் புருவம் வளைய, ''எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?'' என்று அவனை நெருங்கிக் கேட்டாள்

''இதன் பெயரென்ன?'' — மாறன் கேட்டான். ''தேன்குழல்...''—நாணம் மெல்லப் பரவியது அவள் முகத்தில்.

''உன் சொல்லில் மிளிர்வது தேன். உன் பார்வையில் பாய்வது தேன்; உன்னைத் தேன்மொழி என்றே அழைக்க வேண்டும் என்று நான் எண்ணுவேன். அதனால் தேன் குழலைத் தேன்மொழி செய்யாமல் வேறு யார் செய்திருப்பார்களாம்?'' அவன் பேச்சுச் சுவையில் ரங்கதேவி மயங்கினாள்.

''நான் அதிரசம் சுட்டேன். குழலில் மாவை இட்டுப் பிழிந்தேன். நறுமண நெய்யில் தளதளவென்று அவை மிதக்கும்போது உங்கள் நினைவுதான் எனக்கு வந்தது'' என்றாள் ரங்கதேவி, ஒரு தேன்குழலைச் சிறிது விண்டு.

''தளதளவென்று மிதக்கும்போது என் நினைவு வந்ததா? கொதிக்கும் நெய்யில் தவிப்பது தேன் குழலுக்குத்தான் தெரியும். அதுபோல்தான், நானும்

இங்குத் தவிக்கிறேன்..." என்று கூறிய மாறவர்மன் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"என்ன சொன்னீர்கள், என்ன சொன்னீர்கள்?" என்று ரங்கதேவி கேட்டாள். "நீங்கள் கடலில் அப்படித் தானே மிதந்திருப்பீர்கள். கடல்—நெய். அதிரசம் நீங்கள். உங்கள் செழுமையான கன்னங்களும், விரிந்த மார்பும் — ஆகா! இந்தத் தேன்குழல் எப்படியிருக் கிறது சொல்லுங்கள்?" என்று கூறி அவன் வாயில் ஒரு துண்டு தேன்குழலைத் தானே ஊட்டினாள். அவன் வாயில் வைத்த விரலை எடுக்காமல் அவனுடைய பற்களுடன் விரலை விளையாட விட்டாள். உதடுகளை மெல்ல விரலால் ஸ்பரிசித்தாள்.

மாறனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. "இரு... இரு...ஐய்யே...தூ தூ" என்று கூறியவன் வாயில் திணிக்கப்பட்ட தேன்குழலைத் துப்பினான்.

ரங்கதேவி அதிர்ச்சியால் நகர்ந்து கொண்டு, "ஏன் ஏன்...என்ன நேர்ந்தது...?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"உப்பு அதிகம்..."

"ஐயோ...பார்த்துதானே கலந்தேன்..."

"யாரைப் பார்த்துக் கொண்டு கலந்தாய்? அந்த அடுக்களை வேலைகளை நீ செய்திருக்கக் கூடாது; நான் அடுப்படிக்குப் போனால் எப்படியிருக்குமோ அப்படியாகி விட்டது..."

"நான் உங்களைத்தான் மனக்கண்ணால் பார்த்துக் கொண்டு கலந்தேன்."

"இப்படி உப்பையும், புளிப்பையும் அளவுக்கு மீறிப் போட்டால்...உன்னைப் பெண் என்று யாரும் சொல்ல



மாட்டார்களே!" மாறன் இப்படிக் கூறியது கேட்ட ரங்கதேவி முகத்தைச் சிணுங்கி, "மற்றவர் சொல்லா விட்டால் போகிறது. நீங்கள் சொன்னால் சரிதான். எனக்கு எப்போதும் உங்களுடைய நினைவுதான். அதனால்தான் இந்தத் தவறு நேர்ந்து விட்டது."

"என்னை நினைக்காதிரு"

"அதெப்படி முடியும். நான் இப்போது வாழ்வதே உங்களுக்காகத்தான். ஆடை அணிவது, அலங்காரம் செய்து கொள்வது எல்லாம் உங்களுக்காகத்தான். எனக்கு உங்கள் மீதுள்ள ஆசை என் தந்தைக்குத் தெரியும். விரைவில் நமது திருமணத்தை நடத்த வேண்டும் என்று கண்டிப்பாக அவருக்கு உத்தரவிட்டு விட்டேன்" என்று ரங்கதேவி கூறியபோது மாறன் திடுக்கிட்டான். அவளிட மிருந்துச் சற்று நகர்ந்தான்.

'கலபதிபுரத்துத் தலைவன் சிங்கவரையன் மகளைத் திருமணம் செய்து கொள்வதற்காகவா மதுரையினின்று நாம் புறப்பட்டோம். திருமணத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாத நேரத்தில் இந்த அழகுப் பெண் இப்படியொரு விதையைத் தூவுகிறாளே...' என்று நினைக்கும்போதே அவனுள்ளத்தில் ஒரு வித நடுக்கமேற் பட்டது. ரங்கதேவி முகமிருந்த இடத்தில் குமுதத்தின் முகம் வந்து நகைத்து நின்றது.

'குமுதத்துடன் சிறிது நாட்கள் தாம் பழகினோம். நினைத்துப் பார்த்தால் தொண்டித் துறைமுகத்தில் ஒரு நாள், மதுரையில் சில நாட்கள். கடலில் ஓரிரு நாட்கள். அவ்வளவே! அந்த முகத்தை இபபோது நினைத்துப் பார்த்தாலும் உள்ளத்தில் வேறு எந்த விதச் சிந்தனையும் ஓடாமல் அவள் நினைவே பரவிவிடுகிறது. ஒருவேளை இன்னும் சிறிது நாட்கள் பழகியிருந்தால் நம்போக்கே மாறியிருக்கலாம். அதனால் தான் கடவுள் குமுதத்தினிட

மிருந்து நம்மைப் பிரித்துக் கடலில் தள்ளி விட்டாரோ?'' என்றெல்லாம் எண்ணலானான்.

''என்ன சிந்தனை? — என்னைப் பார்த்தவுடனே ஏதாவது சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறீர்கள். என்னிடம் கலகலப்பாகப் பேசுவதில்லை. என்ன காரணம் என்று சொல்லக் கூடாதா?'' என்று ரங்கதேவி அவனை நெருங்கினாள். அதில் வேகமிருந்தது. கையிலிருந்த வெள்ளித் தட்டை தரையிலே வீசினாள்.

''நசுங்கி விடப் போகிறது!'' மாறன் தட்டைக் கையிலெடுக்கக் குனிந்தான்.

''வெள்ளித்தட்டு ஒரு பொருட்டல்ல; உங்கள் அன்புதான் எனக்கிப்போது வேண்டும்''—ரங்கதேவி அவன் தோள்களைத் தழுவிக் கொண்டாள்.

''ரங்கதேவி, நான் ஒன்று சொல்கிறேன்; கேட்கிறாயா?'' என்று மெல்ல அவள் கரங்களை கொடியை விலக்குவதுபோல விலக்கினான்.

''ஒன்று என்ன, ஓராயிரம் சொல்லுங்கள். நீங்கள் சொல்லமாட்டீர்களா, கட்டளையிட மாட்டீர்களா, பேசமாட்டீர்களா, கொஞ்சும் மொழி கூறமாட்டீர்களா என்று தானே ஏங்குகிறேன்'' ரங்கதேவியின் முகம் மலர்ந்தது.

''இனி என்னிடம் பேசும் போது சற்று விலகி நின்றே பேசுகிறாயா?'' மாறன் இவ்வாறு சொன்னவுடன் ரங்கதேவியின் முகம் சுருங்கியது.

''ஏன்?''

''பொது இடத்தில் யாராவது பார்த்து விடப் போகிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேன்.''

''பார்க்கட்டுமே? நான் வேறு ஆடவருடனா பழகுகிறேன்? திருமணம் உறுதியானதால் தங்களுடன் நெருங்கிப் பேசுகிறேன். இதயத்தைத் திறந்து பேசுகிறேன்....''



''அப்படியே உறுதியாகி விட்டது என்றே வைத்துக் கொள். அப்போது தான் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். திருமணம் ஆகும்வரை, சந்திக்காமல் இருப்பதே முறை. நமது பண்பாடு.''

''எது பண்பு என்பது எனக்குத் தெரியும். பண்பு தெரியாதவளாய் இருந்தால், கலபதிபுரத்தில் ஆண் பிள்ளைகள் எவ்வளவோ பேரிருக்கிறார்களே அவர்களுடன் நெருங்கிப் பழகியிருக்கமாட்டேனா?''

''அது மங்கையருக்குப் பொது விதி. பருவமடைந்த பிறகு வீட்டைவிட்டு அதிகம் வெளிவரக் கூடாது. துணையில்லாமல் கோயிலுக்குக் கூடச் செல்லக்கூடாது. சகோதரனுடன் கூட நெருங்கிப் பேசக்கூடாது.''

''ஓ...''

''நீ சிற்றரசர் மகள்.''

''என் தந்தை சிற்றரசர் அல்லர், கலபதி...''

''சிற்றரசருக்கும் மேலானவர். படைகள் உள்ளன. படைத் தலைவனாக என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் உன் தந்தை.''

''உங்கள் அந்தஸ்தை உயர்த்தி எனக்கு மணமுடிப்பதற்காக.''

''அப்படியே இருக்கட்டும்; மதிப்பு மிகுந்த அரச அந்தஸ்துக்குச் சமமான நீ அந்தப்புரத்தை விட்டே வெளியே வரக்கூடாது.''

''என்னை இதுவரை யாரும் கட்டுப்படுத்தியது இல்லை...''

''நான் இப்போது கட்டுப்படுத்துகிறேன்....''

''உம். கட்டுப்படுத்துங்கள். கண்டியுங்கள், கட்டளையிடுங்கள்; சொல்லுங்கள். என்னென்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள், கேட்கிறேன்.''

''அந்தப்புரத்தை விட்டு வரக்கூடாது. ஆடவர் எதிரே நகைக்கக் கூடாது. சிவிகையில்தான் செல்ல வேண்டும்...''

''தங்களைக் கூட சந்திக்கக் கூடாதா?''

'நிச்சயமாக என்னைச் சந்திக்கக் கூடாது!''

''பிறகு? நீங்கள் என்னை வந்து சந்திப்பீர்களா?''

''எதற்காக?''

''என்னைப் பார்ப்பதற்காக, மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருப்பதற்காக.''

''கலகலவென்று எனக்குப் பேசத் தெரியாதே. சதா சிந்தனையிலாழ்ந்திருப்பேன்...''

''தங்களை மாற்றி விடுவேன்...நான் சொன்னபடி தான் நீங்கள் கேட்க வேண்டும்.''

''என் குலத்துக்கே அந்த வழக்கமில்லை. அடிமைத் தனம் எந்த வடிவில் வந்தாலும் அனுமதிக்க மாட்டேன்...''

''சொன்னபடி கேட்காவிட்டால் நான் விட மாட்டேனே'' என்று நகைத்ததாறு அவன் கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு, ''நீங்கள் எப்போது என்னைச் சந்திப்பீர்கள் என்று சொல்லுங்கள்'' என்றாள்.

''பார்த்தாயா, பார்த்தாயா தொடக் கூடாது என்று சொன்னேனே...''என்று மாறன் அவள் கரங்களிலிருந்துத் தன்னை விடுவிடுத்துக் கொள்ள முயன்றான்.

ரங்கதேவியின் பிடி மேலும் இறுகியது. மாற வர்மனுக்கு இப்போது சற்றுக் கோபமே வந்தது. ரங்க தேவியின் மலர் ஸ்பரிசம் அவன் உடலெங்கும் புதுப் உணர்ச்சியை ஊட்டியது.





இளமங்கையின் மெல்லிய மூச்சும், மென்மையான ஸ்பரிசமும், உடல் அழுத்தியதால் ஏற்பட்ட சிலிர்ப்பும் அவனுக்குப் புது அனுபவமாய் இருந்தன. மாறனைத் தவிர வேறு இளைஞராயிருந்தால் நல்ல வாய்ப்பை இழக்காமல் பயன்படுத்தியிருப்பர். ஆனால் மாறன் அவளிடமிருந்து விடுபட என்ன உபாயம் என்று சிந்திக்கலானான்.

திடீரென்று, ''அதோ பார் உன் தாய்...'' என்று கூறினான். ரங்கதேவி திரும்பப் பார்த்தவுடன் அவளிடமிருந்த விடுபட்டு விரைந்து மறைந்தான்.

அவன் பொய் கூறினான். ஆனால் உண்மையிலேயே ரங்கதேவியின் தாய் நாச்சியார் அங்கு வந்து கொண்டிருந்தாள்.

''ரங்கா...'' என்ற குரல் தொலைவிலிருந்துக் கேட்டாலும் சற்றுக் கடுமையுடனும் அழுத்தந்திருத்தமாகவும் அவளிடமிருந்து வந்தது. அது போன்ற அதட்டும் குரலை ரங்கதேவி தாயிடமிருந்து என்றுமே கேட்டதில்லை.

''என்னம்மா...?''

''இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்?''

''பேசிக்கொண்டிருந்தேன்.''

''யாருடன்?''

''நீ பார்க்கவில்லையா... அவருடன்தான்...''

''நீ சின்னவளா....சிரித்துப் பேசக்கூடாது.''

''ஏன் அம்மா... அழுதுகொண்டே பேசமுடியுமா?''

''பருவப்பெண் ஓர் ஆடவருடன் இப்படி நெருங்கிப் பேசக்கூடாது.''

''இவ்வளவு நாட்கள் இப்படிக் கண்டிப்பாகக் கூற வில்லையே?''

''ஆமாம்; இப்போது கூறுகிறேன்!''

''நீங்கள் ஏன் கூறுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். திருமணம் நிச்சயிக்கப்பட்டவருடன் திருமண மாகுமுன்பு பேசக்கூடாது; அதனால்தானே!''

''யாருக்கும் யாருக்கும் திருமணம்?''—நாச்சியார் மிகுந்த ஆத்திரத்துடன் கேட்டவுடன் ரங்கதேவி கலுக் கென்று சிரித்துவிட்டாள். சிரிப்பு கோபத் தீயை மேலும் வளர்த்தது, நாச்சியாரிடம்.

''சிரிக்காதே...நீ நினைப்பது போல் நடக்காது. நீ மாறனைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது...'' நாச்சியாரின் சுடு சொற்களைக் கேட்டு ரங்கதேவி திடுக் கிட்டாள். ''அம்மா'' என்று கூவினாள்.

நாச்சியார் மறுமொழி கூறாமல், விழிகளில் தணல் கக்க நோக்கினாள்.

''வா என்னுடன்'' என்று மகளின் கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றாள்.

போகும்போது பல உபதேசங்களை, நல்லுரைகளைக் கூறிக்கொண்டே சென்றாள். ரங்கதேவியின் செவிகளில் ஒன்றுமே விழவில்லை. எப்போதும் தன்னைப் பரிவுடன் நடத்தும் தாய் ஏன் இன்று இப்படிக் கடிந்து கொள் கிறாள்? மாறனைக் கண்டால் தாய்க்குப் பிடிக்க வில்லையா? அவர் என்ன தவறு செய்துவிட்டார்?

''ஏனம்மா, அவரைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்க வில்லையா? அந்நியர் என்பதாலா?'' என்று ரங்கதேவி கண்களில் நீர்மல்கக் கேட்டாள்.

''மாறனைத்தானே, எனக்கு மிகவும் பிடித்திருக் கிறது. மிகவும் நல்ல பிள்ளை. அவனை அந்நியராக நான் நினைக்கவில்லை.''

''பிறகு? நான் அவருடன் பேசிக்கொண்டிருப்பதற்கு ஏன் கோபித்தீர்கள்?''



''அது வேறு விஷயம்; பருவப்பெண் ஆடவருடன் பழகுவதில் கட்டுப்பாடு இருக்கவேண்டும். உம்...இதைப் பற்றியே பேசவேண்டாம். வா வீட்டிற்குப் போகலாம்'' என்று கூறிக் குறுக்கு வழியாக ரங்கதேவியையும் அழைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடக்கலானாள்.

வீட்டிற்குள் நுழையும்போது கூடத்தில் சிங்கவரைய னுடன் மாறன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். மாறன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. நாச்சியார் தன் மகளை அழைத்துக் கொண்டு பின் கட்டிற்குச் சென்று விட்டாள்.

தான் சேமித்து வைத்திருக்கும் ஆபரணங்களைப் பெட்டிகளில் இட்டு, உருக்குவதற்குக் கொண்டு செல்ல தைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தான் சிங்கவரையன்.

''விலை மதிப்பற்ற ஆபரணங்கள். அந்தக் குவியலை நீ பார்த்திருப்பாயே? அவற்றை ஆற்றின் அக்கரையி லுள்ள ஊரில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். நீயும் உடன் போய் வா'' என்று கூறினான் சிங்கவரையன்.

மாறவர்மனுக்கு உற்சாகம் பிறந்தது. கலபதிபுரத்தை விட்டு வெளியே செல்ல வாய்ப்பு ஏற்படுகிறதென்றால் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா?

ஃ ஃ ஃ

ஆற்றங்கரையில் தோணிகள் நின்றுகொண்டிருந்தன. பணியாட்கள் மதிப்பு மிகுந்த ஆபரணங்கள் நிறைந்த பெட்டிகளைச் சுமந்து வந்து தோணிகளில் ஏற்றிக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு முறையும், பெட்டிகளை ஏற்ற பணியாள் தோணிக்குள் ஏறும்போது தோணி மெல்ல அசைந்தது.

கணக்குப்பிள்ளை ஒருவர் கரையில் அமர்ந்து பெட்டிகளின் எண்ணிக்கையைக் குறித்துக் கொண்டிருந்தார். மாறவர்மன் மர வேரொன்றில் அமர்ந்து ஆற்றின் மறு கரையை நோக்கிக் கொண்டிருந்தான். அவன் மிகத் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தான்.

நன்றாகப் படகு ஓட்டத் தெரிந்த ஒருவர் இப்போது கிடைத்தால் போதும். நகைப் பெட்டிகளுடன் கடலை நோக்கித் தோணிகளைச் செலுத்திப் பிறகு தொண்டிக்கே சென்றுவிடலாம். மதுரைக்குச் சென்று தலைவரிடம் சொன்னால் தலைவர் இவ்வளவு ஆபரணங்களையும் கண்டு வியப்பார். பாண்டிய நாட்டினின்று கொள்ளை போன ஆபரணங்கள் திரும்பி வந்துவிட்டன என்று மகிழ்ச்சியடைவார். இருந்தாலும் அவருக்குத் திருப்தி இராது...

'உங்களை அனுப்பியது ஆபரணங்களைக் கொண்டு வர மட்டுமன்று; அதைவிட மகத்தான காரியம் ஒன்றிருக்கிறது என்று தலைவர் வல்லபன் கூறுவார். மீண்டும் சோழ நாட்டிற்கு வருவோம், நம்மை கலபதிபுரத்தவர்கள் பார்த்துவிட்டால், சும்மா விடுவார்களா?—கண்ட துண்டமாக்கிக் கடலில் எறிந்துவிடுவார்கள்''—இதை நினைக்கும் போது மாறவர்மன் உடல் நடுங்கியது.

''என்ன மாறா, பலமான யோசனை? எந்தக் கோட்டையைப் பிடிக்கப்போகிறாய்?'' என்ற குரல் கேட்டது. ''எந்தக் கோட்டையையும் பிடிக்க வே[illegible]டாம். இந்த ஆபரணங்களைக் கோட்டைவிடாமல் [illegible]ந்தால்போதும்'' என்று கூறிச் சிரித்தார் சிங்கவ[illegible]யன். தொடர்ந்து கிண்கிணி நாதம் போல் மற்றொ[illegible] சிரிப்பொலியும் எழுந்தது மாறவர்மன் திரும்பிப் ப[illegible]த்தான்.

தந்தையின் அருகே ரங்கதேவி கம்பீர[illegible]ய் நின்று கொண்டிருந்தாள்.



''மாறா, ரங்கதேவியும் ஆபரணங்களை உருக்குவதைப் பார்க்க வருகிறேன் என்று கூறுகிறாள். இவளையும் அழைத்துப் போ'' என்று கூறி மகளைப் பார்த்து மீண்டும் நகைத்தார்;

பிறகு மகளை நோக்கி, ''உன் குறும்புத்தனத்தை இங்கேயே மூட்டைகட்டி வைத்துவிடு. பிறகு உன்னைப் பொல்லாதவள் என்று மருகப்பிள்ளை நினைத்துக் கொள்ளப் போகிறார்'' என்று கண்களைச் சிமிட்டியவாறு கூறினார் சிங்கவரையன்.

ரங்கதேவியின் இதழ்களில் குறும்புத்தனமான புன்னகை 'நெளிந்தது. மாறவர்மனுக்கோ புரியமுடியாத திகிலொன்று அடிவயிற்றில் பாய்ந்துக் கலக்கியது.

## 16. சிவ சிவ

''நாம் ஒன்று நினைக்க, நமச்சிவாயம் ஒன்று நினைப்பார்'' என்று கூறிக்கொண்டே மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தார் துறவி ஒருவர். 'சிவ சிவ' என்று அவர் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. கம்பீரமான தோற்றம். தோள்கள் வரை ஊசலாடும் கற்றைச் சடை. முகத்தை மறைத்து விழியை மட்டும் வெளியே புலப்படுத்தும் அடர்ந்த மீசை தாடி. கழுத்திலே கணக்கற்ற உருத்திராட்ச மாலை. நீண்ட காவி அங்கி. கையிலே மணிமாலையும் தண்டமும், மற்றொரு கரத்திலே கமண்டலம். தோளிலே தொங்கும் துணி மூட்டை, காலிலே பாதக் குறடு. நெற்றியிலே வெண் நீறு.

அவரது பார்வையிலே ஒரு காந்த சக்தியிருந்தது.

காங்கேயனும், குமுதமும் அந்த இடத்திலே திடீரென்று வந்து கொண்டிருந்த துறவியைக் கண்டு திடுக்கிட்டனர். குமுதத்தின் யோசனைப்படி கைவச

யிருந்த ஆபரணங்களை ஆற்றங்கரையில் மறைவான இடத்தில் பள்ளம் ஒன்று வெட்டி அதில் புதைத்தனர். அந்தப் அடையாளத்திற்காக கள்ளிச் செடியை நட்டனர். அந்தப் பக்கம் ஒருவரும் வரமாட்டார்கள் என்பதால் தைரியமாக அவர்கள் செய்தனர். பெருமாள் பள்ளத்தைத் தோண்டும் போது குமுதமும், காங்கேயனும் ஒவ்வொரு பக்கமாக நின்று யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தனர். பள்ளம் வெட்டி முடிந்தவுடன், பெருமாள் குளிப்பதற்கு ஆற்றங்கரையை நோக்கிப் போய்விட்டான். காங்கேயனும், குமுதமும் நகைகளைப் போட்டுப் புதைத்த பிறகு மேலே ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிக்கொண்டு வந்தபோது துறவியின் "சிவ சிவ" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டனர்.

"நாம் நகைகளைப் புதைத்திருப்பதைச் சாமியார் பார்த்திருப்பாரோ?" என்று குமுதம் கவலையுடன் கேட்டாள்.

"பார்த்திருக்க மாட்டார். விழிகளை மூடிக்கொண்டு சிவ நாமத்தைச் சொல்லிக் கொண்டு வருகிறார்" என்றார் காங்கேயன்.

"நாமொன்று நினைக்க...என்று அவர் சொல்லுவது நமக்கும் ஏற்புடையதா யிருக்கிறதே?"—குமுதம் கவலையுடன் கேட்டாள்.

"அப்படித்தான் சில வேளைகளில் பெரியோர் வாக்கு அசரீரி போல கேட்கும்"—காங்கேயன் சமாதானப் படுத்தினார்.

"நாம்தான் திசை தெரியாமல் இங்கு வந்து சிக்கிக் கொண்டோம்...சாமியார் இந்த ஊருக்கு ஏன் வந்தார்?" குமுதம் கேட்டாள்.

"துறவிகளுக்கு யாதும் ஊர்தான். தில்லை நகரத் திற்குச் சைவத் துறவிகள் நாலா திசையிலிருந்தும் வருவார் கள்" காங்கேயன் அதற்கும் சமாதானம் கூறினார்.



"சரி. இந்தக் குக்கிராமத்திற்கு அவர் ஏன் வரவேண் டும்? இந்தக் கிராமத்தில் நான்கே வீடுகள். தங்கத்தை உருக்குவது தவிர இங்கு வேறு தொழிலுமில்லை" குமுதம் சந்தேகம் எழுப்பினாள்.

"நான்கைந்து வீடுகள் மட்டுமா? நாம் தங்கும் சத்திரம் நூறு வீடுகளுக்குச் சமம். சோழ மன்னர் தங்கி யிருக்கும் இடம் நூறு வீடுகளுக்குச் சமம். ஒரு காலத்தில் பெரிய ஊராக இருந்திருக்கலாம். அரசர்கள் இங்கு அவ்வப்போது வருவார்கள் என்று தெரிகிறது. இந்தக் கிராமம் கடலுக்கு மிக அருகே இருக்கிறது. ஆறு கடலுடன் சேருமிடத்தில் இருக்கிறது. அரசியல் முக்கியத் துவம் மிகுந்த இடமாயிருக்கவேண்டும்"—காங்கேயன் கூறினார்.

"அதனால்தான் எனக்குக் கவலையாயிருக்கிறது. இந்தத் துறவியும் சோழ அரசருக்கு வேண்டியவராயிருக்க லாம். அரச பரிவாரங்களுடன் வந்தவரா யிருக்கலாம்" என்று குமுதம் சந்தேகத்தை விடாமல் கேட்டாள்.

"ஆகா...பெண்ணே! நீ பெரும் ராஜதந்திரியாக இருக்கவேண்டியவள். தவறிப் பெண்ணாகப் பிறந்து விட்டாய்" என்றார் காங்கேயன்.

"ஏன், ஒரு பெண் ராஜதந்திரியாக, இருக்கக்கூடாதா? மங்கையர்க்கரசி பாண்டிய நாட்டில் புகழ்பெற்ற அரசி யாகத் திகழ்ந்ததையும், தன் கணவரையே மனம் மாற்றி, மதம் மாற்றி சைவ சமயத்தில் சேருமாறு செய்ததையும் மறந்து விட்டீர்களா?" என்று குமுதம் விட்டுக் கொடுக் காமல் பேசினாள்.

"சரி, சரி. நாம் வீணே விவாதித்துக் கொண்டிருக்க வேண்டாம். நம் வேலையைக் கவனிக்கச் செல்வோம். சோழ மன்னர் என்னைத் தேடிட ஆளை அனுப்பியிருப் பார். நான் இப்போது ராஜ வைத்தியர்; நினைவிருக்

கட்டும். நீ இளவரசியின் பணிப் பெண், மறந்துவிடாதே'' என்றார்.

''எனக்கும் வேலை கொடுக்க மன்னர் சம்மதித்து விட்டாரா?'' என்று குமுதம் கேட்டாள்.

''இதையெல்லாம் சக்கரவர்த்திகளிடம் கேட்க முடியுமா? இளவரசர் மட்டத்திலேயே முடித்து விட்டேன். உன்னை எனது மகள் என்று சொல்லிக் கொண்டேன்...'' என்றவுடனேயே குமுதம் குறுக்கிட்டு,''நான் மிக மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன்; தாங்கள் தந்தைக்கும் மேலானவர்'' என்றாள்.

''என்னைப் புகழ்வது பிறகு இருக்கட்டும். இளவரசி வீரமாதேவியின் தலைவலியை நிறுத்திவிட்டதில் அவர்களுக்கு மிக மகிழ்ச்சி. என்னைப் பற்றி மிகமிக விசாரித்தார் சோழமன்னர்.''

''அதனால்தான் மன்னரின் கடைசி புதல்வர் சத்திரத்திற்கே நம்மைத் தேடி வந்துவிட்டார் போலிருக்கிறது'' என்று முதல் நாள் நிகழ்ச்சியை நினைவு படுத்தினாள் குமுதம்.

''ஆமாம்,உத்தமசீலி என்று இளவரசருக்குப் பெயர்!''

ஆனால், டெயருக்கு விரோதமான குணமுடையவர் என்று நினைக்கிறேன்.''

''அது எப்படியோ, அவர் நம்மிடம் வந்து சென்ற பிறகு தன் தந்தையிடம் மிக உயர்வாக நம்மைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அதனால்தான் உனக்கு வேலை கிடைத்துவிட்டது!'' என்றார் காங்கேயன்.

''எனக்கு அந்த இளவரசரின் முகத்தைக் கண்டாலே பிடிக்கவில்லை. அவர் பார்வையும், விழிக்கிற விழியும், அசட்டுச் சிரிப்பும், உம்;நான் எப்படித்தான் இளவரசியின் பணிப் பெண்ணாக மாளிகையில் இருக்கப் போகி



றேனோ...'' என்று குமுதம் தன் கருத்தையும் கவலையையும் தெரிவித்தாள்.

காங்கேயன் மெல்லச் சிரித்தார். ''குமுதம், நீ பயப்படுவதற்கு நியாயமிருக்கிறது. ஆனால், உன்னைக் காப்பாற்றிக்கொள்ள உன்னால் முடியும் என்பது எனக்குத் தெரியும்.ஏதாவது சங்கடங்கள் ஏற்படும்போது நான் உன் உதவிக்கு வந்துவிடுவேன். கொஞ்ச நாட்கள்தாம் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டிரு. நமக்குத் தலைவர் இட்ட கட்டளை; அவர் வகுத்த திட்டம்; கடவுள் அருளால் ஈடேறுகிறது. நான் மருத்துவர்; நீ இளவரசியின் பணிப்பெண். இப்படிப் பழகுவதில் மிகுந்த கவனம் தேவை.எச்சரிக்கையுடன் பழகவேண்டும்'' என்று கூறும்போது குமுதம் குறுக்கிட்டு, ''பெருமானுக்கு என்ன வேலை கொடுக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''இப்போதைக்கு ஒன்றுமில்லை. என்றாலும் சிதம்பரம் சென்றவுடன் ஏதாவது வேலை கிடைத்து விடும்'' என்றார்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே இவர்களைக் கடந்து சென்று நீராடி விட்டுத் திரும்பி வந்து விட்டார் துறவி.

''துறவி நீராடிவிட்டுத் திரும்பிவிட்டார். பெருமானைக் காணவில்லை, பார்த்தாயா?'' என்றார் காங்கேயன்.

துறவி, அவர்களது அருகே வந்தவுடனே குமுதமும், காங்கேயனும் அவரை வணங்கினார்கள்.

''சிவ, சிவ. குழந்தைகளே! சிவனருள் பெருகட்டும்'' என்று கூறி விபூதியை எடுத்தளித்தார்.

காங்கேயன் திருநீறை நெற்றி முழுவதும் பரவியிருக்குமாறு அணிந்து கொண்டார். குமுதம் புருவத்தில் அணிந்து, சிறிது விபூதியை வாயிலும் போட்டுக் கொண்டாள்.

''குழந்தைகளே! நீங்கள் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தவர்களோ?'' என்ற துறவி கேட்டார்.

காங்கேயனும், குமுதமும் திடுக்கிட்டனர். துறவி எப்படி இதை அறிந்தார் என்ற கவலை அவர்களுக்கு.

''குழந்தைகளே! திகைக்காதீர்கள்; உங்கள் பேச்சிலிருந்துத் தெரிந்து கொண்டேன். இந்தச் சிற்றூருக்கு வந்த காரணம் யாதோ?'' என்று துறவி கேட்டார்.

குமுதமும் காங்கேயனும் ஒருவரை யொருவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டனர். காங்கேயன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''சுவாமி, நீங்கள் நினைப்பது போல் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தவர்களல்லர் நாங்கள். தொண்டை நாட்டின் வடபகுதியைச் சேர்ந்தவர்கள், திருத்தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்டோம்'' என்றார் காங்கேயன்.

''ஓகோ! ஆனித் திருமஞ்சனம் வருகிறது; அதைக் காணச் சிதம்பரம் வந்தீர்களோ?'' என்று துறவி கேட்டார்.

இருவரும் தலையை அசைத்தனர். துறவி மெல்ல நகைப்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

சிதம்பரம் வந்தவர்களுக்கு இங்கு என்ன வேலை என்று அடுத்த கேள்வியைத் துறவி கேட்டு விடலாம். அதற்குள் பேச்சை மாற்ற விரும்பிய குமுதம், ''அடிகளுக்கு எந்த ஊரோ?'' என்று கேட்டாள்.

துறவி மெல்லச் சிரித்தது, முக அசைவிலிருந்தே தெரிந்தது. ''துறவிக்கு ஓர் ஊர் என்றுண்டா?'' என்று



கூறிய அவர், அடுத்துக் கேட்பதற்குள் குமுதம் முந்திக் கொண்டு, ''இந்தக் குக்கிராமத்தில் அடிகளார் உணவுக்கும் உறைவிடத்துக்கும் மிகவும் தொல்லைப்பட வேண்டியிருந்திருக்குமே'' என்று கேட்டாள். குரலில் கவலை ததும்பியது.

துறவி மெல்ல தனது தாடியைத் தடவிய வண்ணம், ''பெண்ணாயிருந்தாலும் மிகவும் சாதுர்யமாகப் பேசுகிறாய். நீங்கள் இங்கு ஏன் வந்தீர்கள் என்று கேட்காமல் இப்படிக் கேட்டு விட்டாய், அப்படித்தானே?'' என்று கூறிய அவர், ''நீங்கள் எல்லாம் உணவுக்கு என்ன செய்கிறீர்கள்?''. என்று கேட்டார்.

காங்கேயன் தானே மறுமொழி கூற முற்பட்டு. ''அடிகளாருக்கு உணவைப் பற்றிய கவலை இல்லை, ஆராசாங்க விருந்து இருக்கும்போது'' என்றார்.

''ஓ! நீங்களும் அரச பரிவாரத்துடன் வந்தவர்களா? அதனால்தான் அரசாங்க விருந்தைப் பற்றித் தெரிகிறது'' என்று துறவி கேட்டார்.

''இல்லை, இல்லை...இங்கு வந்த பிறகுதான் நாங்கள் ராஜ கடாட்சம் பெற்றோம்...'' என்றாள் குமுதம்.

இப்படிச் சொல்லி விட்டோமே என்று சற்றுக் கவலையுடன் காங்கேயனைக் கீழ்க்கண்ணால் பார்த்தாள். பிறகு, தான் கூறியதில் தவறில்லை என்றும் சமாதானப் படுத்திக் கொண்டாள். துறவி ஒருவேளை சோழ அரச சபையைச் சேர்ந்தவராயிருக்கலாம். அவரிடம் பொய் சொன்னால் பிறகு சங்கடம் ஏற்படும் உண்மையும் கூற முடியாது.

குமுதம் கூறியதைக் காங்கேயன் ஆமோதித்தார். மேலும் துறவியிடம் பேச்சுக் கொடுக்க விரும்பாமல், ''அடிகளாரை இவ்வாறு நிறுத்தி வைத்துப் பேசுவது சரியில்லை. தங்கள் பணிக்கு நாங்கள் இடையூறு விளை

வித்து விட்டோம் என்று நினைக்கிறேன். நாங்கள் விடைபெற்றுக் கொள்ளலாமா?'' என்று மிகவும் பயபக்தியுடன் கேட்டார்.

''நமச்சிவாய! சென்று வாருங்கள் குழந்தைகளே! சத்திரத்தில்தானே தங்கியிருக்கிறீர்கள்? பிறகு வந்து சந்திக்கிறேன்'' என்று கூறிப் புறப்பட்டார்.

குமுதம் அவர் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றாள். பிறகு காங்கேயனை நோக்கி, ''ஐயா, நாம் நகைகளைப் புதைத்து வைத்ததை அடிகளார் பார்த்திருப்பாரோ?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''குமுதம், இனி என்னை அழைக்கும்போது ஐயா என்று அழைக்காதே. நாம் தந்தை, மகள் வேடம் பூண்டிருக்கிறோம்...'' என்றார்.

''நம் பக்கத்தில் தந்தையை ஐயா என்று அழைப்பதும் உண்டு. இருந்தாலும் இனி கவனமாக இருக்கிறேன். எனக்கு ஒரு சந்தேகம் தந்தையே? இங்கு இப்போது வந்தாரே, அந்த அடிகளாரை நான் எங்கோ பார்த்திருப்பதாக உள்ளுணர்வு கூறுகிறது'' என்றாள்.

''எங்கும் பார்த்திருக்க முடியாது. எல்லா துறவிகளும் ஒரே மாதிரியாகக் காவிஉடை அணிந்துச் சடைமுடியுடன் இருப்பார்கள். அதனால் ஒன்று போல இருக்கலாம்'' என்று சமாதானம் கூறினார். பிறகு பெருமாள் நீராடி விட்டு வந்தவுடன் மூவருமாக இருப்பிடம் சென்றனர்.

குமுதமும், காங்கேயனும் ஒவ்வொரு நாளும் மன்னர் தங்கியிருந்த இடத்திற்குச் செல்வதும், நாள்முழுவதுமிருப்பதும், இரவில் உறங்குவதற்கு மீண்டும் சத்திரத்திற்கு வந்து விடுவதுமாக இருந்தபோது ஒருநாள் காலையில், தங்கம்உருக்குமிடத்திற்கு அரச குடும்பத்தவர்கள் தங்கம் உருக்கப்படுவதைக் காணப் புறப்பட்டனர்.



பராந்தக சோழ சக்கரவர்த்தியும், இளவரசர் கண்டராதித்தரும் தங்க ஆபரணங்கள் தூகும் அழுக்கும் போக சுத்தம் செய்யப்படுவதையும், பிறகு கொப்பரையிலிட்டு உருக்கப்படுவதையும், ஆபரணங்களில் கலந்துள்ள செம்பையும், மற்ற கலப்பு உலோகங்களையும் பிரித்துச் சுத்தத் தங்கமாக்கப்படுவதையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடன் துறவியும் இருந்தார். அவரை அங்கே கண்டபோது காங்கேயனும், குமுதமும் திடுக்கிட்டனர். ஒருவரையொருவர் பொருள் புதைந்த பார்வையால் நோக்கிக் கொண்டனர்.

''பார்த்தீர்களா, அடிகளார் அரசகுடும்பத்துக்கு வேண்டியவர் என்று நான் சொன்னேனே'' என்று கூறுவது போலிருந்தது குமுதத்தின் பார்வை. கண்டராதித்தர், துறவியிடம் பயபக்தியுடன் பேசிக் கொண்டிருந்தார். சிதம்பரம் கோவில் திருப்பணியைப் பற்றிப் பேசினார், கோயில் விமானத்துக்குப் பொற்தகடுகள் வேயவிருப்பதைப் பற்றிப் பேசினார். அதற்காகவே இங்குத் தங்கம் உருக்கப்படுவதாகவும், பிறகு பொற்தகடுகளாக அவை ஆக்கப்படும் என்றும் கூறினார்.

''நமசிவாய...! இளவரசே, உமது எண்ணம் இறையருளால் ஈடேறட்டும். பொன்னார் மேனியனது திருச்சபைக்குப் பொன்தகடு இடப்பட வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு எப்படி உதித்தது?'' என்று துறவி கேட்டார்.

கண்டராதித்தன் விழிகளைச் சற்று மூடிக்கொண்டு ''எல்லாம் அந்தப் பொன்னம்பலவாணன் திருஅருள் தான்'' என்றார்.

''இவ்வளவு தங்கத்தையும் கருவூலத்திலிருந்து எடுத்தால் கருவூலம் வற்றிவிடாதா?'' என்றார் துறவி.

''சிற்பேசன் கருணை எம்பால் மிகுதியாக உள்ளது. பாண்டியநாட்டைவென்று அவர்களது பொக்கிஷத்தில்

இருந்த தங்க நகைகளைக் கொண்டு வந்தோம்...'' என்று கண்டராதித்தர் கூறினார்.

''தென்னாடுடைய சிவன் தனது இருப்பிடமான மதுரையம்பதியினின்றே பொன்மழை வரவழைத்து விட்டாரோ? உம். பகைவர்கள் பொக்கிஷத்தைக் கொள்ளை கொள்வது அரசர்களிடையே குற்றமாகக் கருதப்படவில்லை'' என்றார் துறவி, காங்கேயனையும் குமுதத்தையும் ஓரக்கண்ணால் பார்த்தவண்ணம்.

''சிவ சொத்தைக் கொள்ளையிடுவது பாவம். சிவனுக்குச் சொத்து சேர்ப்பது பாபமாகாது. பாண்டியர் பொக்கிஷ அறையில் பாசி பிடித்துக் கிடந்த நகைகளைக் கொண்டு வந்தோம்; அவை போதவில்லை. மேலும் அங்கிருந்து நகைகளை எனது இளவல் சிறிது நாட்களுக்கு முன்புதான் கொண்டு வந்திருக்கிறார்'' என்றார் கண்டராதித்தர்.

''ஓ அப்படியா?'' என்று துறவி கூறினார். அப்போது பொற்கொல்லர் ஒருவர் சக்கரவர்த்திகளைப் பணிவுடன் அணுகி சிதம்பரத்தில் வேயப்படவிருக்கும் ஓடு போன்ற பொன் தகட்டின் மாதிரியைக் காட்டினார்.

பராந்தகர் அதை வாங்கிப் பார்த்துத் தனது விழிகளில் ஒத்திக் கொண்டு துறவியிடம் நீட்டினார். துறவி அதை ஒரு முறை திருப்பிப் பார்த்துவிட்டு, ''செம்பியன் பரம்பரையில் வந்த சோழமன்னா, உங்கள் நல்லறம் வெல்க. உமக்கு அடுத்த பிறவி நற்பிறவியாகுக. இந்தத் தகட்டிலும் உமது பெயரைப் பொறிக்கலாமே'' என்றார்.

பராந்தகன் செவிகளை இரு கரங்களாலும் பொத்திக் கொண்டு, ''சிவ, சிவ, அடிகளாரே! என்ன பாவம் செய்தேனோ, நான் என் தலைப் பிள்ளையைப் போர்க்களத்தில் இழந்து, தவிக்கிறேன். இறைவன் மகுடத்தில் என் பெயர் வேண்டாம் சுவாமி!'' என்று உள்ளம் உருகக் கூறினார்.



''அப்போது நான் ஒரு யோசனை கூறட்டுமா?'' அடிகளார் சொன்னார்.

''ஆகா, நன்றாகச் சொல்லுங்கள். சிவ கைங்கர்யத்திற்கு ஏற்ற யோசனை எதுவாயினும் எமக்குச் சம்மதமே. தங்களை முதன் முதல் பார்த்தவுடனேயே எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. எங்கள் குலகுரு சதுரானன பண்டிதர் என்பவர் திருவொற்றியூரில் உள்ளார். எப்போதும் அவரையே நான் நினைத்த வண்ணமிருந்தேன். தங்களைக் கண்டவுடன் எனக்கு அவரே நேரில் வந்துவிட்டது போன்ற திருப்தி. பொன் வேயும் திருப்பணியைத் தாங்களே முன்நின்று கவனித்துக் கொள்ளுமாறு தங்களிடம் விண்ணப்பிக்க எண்ணியுள்ளேன்'' என்று கூறினார்.

துறவி மெல்லத் தலையை அசைத்து, ''பார்ப்போம் பார்ப்போம். நான் ஓரிடத்திலேயே நிலைத்து நிற்பதில்லை. இந்தப் பொற் தகடுகளில் 'சிவசிவ' என்று பொறித்துவிடுங்கள்'' என்றார்.

பராந்தகனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. ''அடிகளே! அப்படியே ஆகட்டும்'' என்று கூறி பொற்கொல்லரிடம் ஒவ்வொரு பொற் தகட்டிலும் 'சிவ சிவ' என்ற எழுத்துக்களைச் செதுக்குமாறு கட்டளையிட்டார்.

பொற்கொல்லர் மற்றொன்றும் விண்ணப்பித்தார்: ''உருக்குவதற்கான நகைகள் இன்னும் ஒரு வாரத்திற்கு மட்டுமே உள்ளன. பிறகு கைவசமில்லை'' என்றார்.

பராந்தகன் சற்று நேரம் சிந்தித்தார். பிறகு திருமந்திர ஓலை நாயகத்தை அழைத்து, ''கலபதி புரத்திற்கு உடனே ஆள் அனுப்பி சிங்கலவரையனிடம் கூறு அவன் சேர்த்து வைத்துள்ள ஆபரணங்களை உடனே அனுப்புமாறு நான் சொன்னதாகத் தெரிவியுங்கள்'' என்றார்.

பராந்தக சோழர் இட்ட கட்டளையை மேற்கொண்டே சிங்கவரையன் தங்க ஆபரணங்களை, மாறவர்மன் மேற்பார்வையில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தான்.

தங்க ஆபரணங்கள் நிறைந்த பெட்டியுடன் இரண்டு தோணிகள் ஆற்றைக் கடந்து வந்து கொண்டிருந்தன.

மாறவர்மனும் ரங்கதேவியும் தோணிகளில் இருந்தனர்.

## 17. சந்திரஹாரம்

''அதோ வருகிறார் சிவனடியார்'' என்றான் பெருமாள் ஈரத் துணிகளை உலர்த்திக் கொண்டே. பெருமாளுக்கு இன்னமும் எந்த வேலையும் கிடைக்கவில்லை. வேளைக்கு உணவு மட்டும் கிடைத்துக் கொண்டிருந்தது. தங்க ஆபரணங்கள் புதைக்கப்பட்ட இடத்தை அவ்வப்போது சென்று கண்காணித்துக் கொண்டான். நகைகள் புதைக்கப்பட்டிருக்கும் ஆற்றங்கரைத் தோப்பிற்குப் பெருமாள் செல்லும்போதெல்லாம் அங்கே சிவனடியார் தென்படுவார். ஒரு சமயம் குளித்துவிட்டு வருவார். ஒரு சமயம் குளிக்கச் செல்வார். இல்லாவிடில் மரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருப்பார். சிவனடியாரைக் கண்டவுடனேயே பெருமாளுக்கு மரியாதையுடன் ஒருவித பயமும் தோன்றிவிட்டது. அடியாரிடம், திருநீறு பெற்றுக்கொள்வது, தான் செய்த பாக்கியம் என்றே கருதினான். ஆனால் அடியாரோ பெருமாளைக் கண்டவுடனே நேருக்கு நேர் சந்திப்பதை கூடிய வரையில் தவிர்த்தார்.

அடியாரைச் சந்திக்க விரும்பினாலும், பெருமாள் அதிக நேரம் அவரிடம் பேச விரும்பவில்லை. மரத்தடிக்குச்



செல்லதன் காரணத்தை அவர் கேட்டுவிடப் போகிறார் என்று அஞ்சினான். நகைகள் புதைக்கப்பட்டிருப்பதைத் தெரிந்து கொண்டு விட்டால், வந்தது ஆபத்து என்பதையும் புரிந்து கொண்டிருந்தான். இருவரும் ஒருவரையொருவர் தவிர்க்க விரும்புவதும், ஆனால் அதே சமயம் சந்திக்க விரும்புவதும் ஒவ்வொருவரிடையேயும் ஒருவிதப் பரபரப்பை ஊட்டின.

தனக்கு ஏற்படும் உணர்ச்சியை காங்கேயனிடம் பெருமாள் கூறுவான்.

''அடியாரைப் பார்க்கபார்க்க எனக்குப் புரியமுடியாத பயமும் பக்தியும் ஏற்படுகின்றன'' என்பான் பெருமாள்.

காங்கேயனும், குமுதமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''நல்லவேளை, பக்தியுடன் பயமும் ஏற்பட்டதே'' என்றாள் குமுதம்.

பெருமாளுக்குப் புரியவில்லை. ''பயம் ஏற்பட்டது நல்லதா? கெடுதலா?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

காங்கேயன் சொன்னார்: ''பெருமாள், பக்தி மட்டும் ஏற்பட்டிருந்தால் இந்த நேரம் புதைக்கப்பட்டிருக்கும் ஆபரணங்களைச் சிவனடியாரிடம் கொடுத்திருப்பாய். பயமும் கூடவே ஏற்பட்டதால் நாம் பிழைத்தோம்.

பெருமாளுக்கு அவர் சொல்வதில் உண்மை புலப்பட்டது. சிவனடியார் விழிகள் தன்னைக் கட்டியிழுப்பதை உணர்ந்தான்...தன்னை எப்படியும் மயக்கிவிடக் கூடிய சக்தி அவரிடமிருப்பதும் அவனுக்குப் புரிந்தது. அதனால் சிவனடியாரிடம் நெருங்காமலேயே திருநீறு மட்டும் பெற்றுக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்று விடுவான்.

''திருநீறு பெறுவதற்காகக் கூட நீங்கள் அங்கு நிற்கக் கூடாது'' என்று குமுதம் கண்டிப்பாகக் கூறினாள்.

''ஏன் அதிலென்ன தவறு''—பெருமாள் கேட்டான்.

''அந்த ஒரு கணத்திலும் அவர் உங்களிடமிருந்து பல செய்திகளைக் கேட்டறிந்து விடுவார்'' குமுதம் குரலில் அழுத்தமிருந்தது.

''அடியாருக்குப் பிறர் செய்தியை அறிவதில் சுவையிருக்காது'' பெருமாள் வாதிட்டான்.

இப்போது காங்கேயனும் பேச்சில் கலந்து கொண்டார்.

''அதென்ன, நீ அடியாரை மிகவும் சந்தேகப்படுகிறாய்?'' என்று குமுதத்தை நோக்கி அவர் கேட்டார்.

''எனக்கென்னவோ அவரைப் பார்த்த கணத்திலிருந்தே ஒருவித சந்தேக உணர்ச்சி தோன்றுகிறது. அவர் நம்மிடமிருந்துப் பலவிதச் செய்திகளை அறிய முயல்கிறார் என்று தோன்றுகிறது'' என்றாள் குமுதம்.

''அதனால் அவருக்கு என்ன பலன்?'' காங்கேயன் கேட்டார்.

''இருக்கிறது. அதனால்தான் நம்மிடம் மிக நெருங்கிப் பழக விரும்புகிறார். நமது ஊர் எது எங்கிருந்து வருகிறோம்? இங்கு ஏன் தங்கியிருக்கிறோம்? என்று பலமுறை கேட்டு விட்டார்.''

''அதனால் அவரை நீ சந்தேகிக்கிறாயா?''

''அதனால் மட்டுமன்று; அவர் நாம் செல்லும் இடத்திற்கெல்லாம் பின் தொடர்கிறார்.''

''உனக்கெப்படித் தெரியும். நாம் வெளியே எங்கே இதுவரையில் சென்று விட்டோம். குளிப்பதற்கு ஆற்றங்கரைக்குச் செல்கிறோம்.''



''அங்குத்தான் வருகிறார்.''

''காங்கேயன் கடகடவென நகைத்து, ''பேதாய்! அவரும் குளிப்பதற்கு வருகிறார்'' என்றார்.

''ஏன் நாம் குளிக்க வருவதைப் பற்றிச் சந்தேகப்படுவது போல் கேட்கிறார்?''

''உன்னைக் கேட்டாரா?''

''ஆம்; பெண்ணே! நீ ஏன் ஆற்றங்கரைக்குக் குளிக்கச் செல்கிறாய்?'' என்று கேட்டார்.

''வேறு எங்குக் குளிப்பதாம்?'' என்றேன்.

''நீ அரண்மனைப் பணிப் பெண்; அரசகுலத்தவர் நீராட தனியே குளமிருக்கிறதே'' என்றார்.

''நான் என்ன மறுமொழி கூறுவது. நியாயம்தானே? குளத்தில் குளிக்காமல் ஆற்றங்கரைக்குச் செல்வது ஏன் என்று அவர் கேட்பது நியாயம்தானே?''

காங்கேயன் கவலையுடன், ''நீ என்ன சொன்னாய்?'' என்றார்.

''ஒரு கணம் ஒன்றும் கூறாமல் நான் மௌனமாயிருந்தேன். பிறகு, அரச குடும்பத்தவரின் அந்தரங்கத்திற்கு நான் இன்னும் பாத்திரமாகவில்லை'' என்றேன். அதற்கு அவர், ''நீ ஏன் சோழ அரண்மனையில் பணிபுரியச் சேர்ந்தாய் என்று கேட்டார்'' என்று கூறி, சற்று நிறுத்தினாள் குமுதம். காங்கேயன் திடுக்கிட்டார். ''அடடா? அப்படியொரு கேள்வியைக் கேட்டு விட்டாரா? பொல்லாதவராய் இருப்பார் போலிருக்கிறதே; நம்மைச் சந்தேகப்படுகிறாரா?'' என்று காங்கேயன் கவலையுடன் கேட்டார்.

''பொல்லாதவராயிருப்பதே நல்லது, கொடியவராயிருந்தால்தான் சங்கடம்''—காங்கேயன் மேலும் கூறினார்

''அதென்ன? பொல்லாதவராயிருப்பதைவிடக் கொடியவராயிருப்பதில் சங்கடமிருக்கிறது?'' குமுதம் கேட்டாள்.

காங்கேயன் மெல்ல நகைத்து, ''நீ குளிக்கும்போதும் வருகிறார் என்றாயே; கொடியவராயிருந்தால் ஏற்படும் விளைவு வேறு இல்லையா?'' என்றவுடன் குமுதம் தலையசைத்தாள்.

''ஆமாம், அடிகளார் பொல்லாதவராயிருப்பார் என்று தோன்றுகிறது'' என்றாள்.

''நீ என்ன மறுமொழி கூறினாய்? அதில்தானே நாம் தபபித்துக் கொள்ளும் வழி இருக்கிறது?'' என்று காங்கேயன் கேட்டார்.

''நான் உங்கள் மீது பழியைப் போட்டு விட்டேன்?'' என்ற குமுதம் மெல்ல நகைத்தாள். காங்கேயன் திடுக்கிட்டு, ''என்ன கூறினாய், என்னைச் சிக்கவைத்து நீ தப்பித்துக்கொள்ளுமாறு உன் பேச்சு இருந்து விட்டதா?'' என்று கேட்டார்.

''ஐயா, நீங்கள் இப்போது பயப்படுவதைப் பார்த்தால் அடிகளார் மீது தங்களுக்கும் நம்பிக்கை இல்லையென்று தோன்றுகிறது. நான் மிகவும் கவனமாகப் பேசினேன்.''

''என் தந்தையுடன் தல யாத்திரைப் புறப்பட்டோம். என் தந்தை சிறந்த வைத்தியர். அவருடைய சேவையைச் சோழ சக்கரவர்த்தி விரும்பினார். தந்தையிருக்குமிடத்தில் மகள் இருக்கவேண்டியது அவசியந்தானே! என்றேன். அடிகளார் வாயடைத்து நின்றார்; போய் விட்டார்.''

குமுதம் இப்படிக் கூறியது கேட்டு காங்கேயன் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டார்.

''விஷயம் அத்துடன் தீரவில்லை; நேற்றுத்தான் அடிகளார் போக்கில் பெரிய மாறுதலைக் கண்டேன். அவரது



உண்மைத் தோற்றத்தின் மீதே எனக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது'' என்று குமுதம் கூறவும் காங்கேயன் பரபரப்புடன், ''என்ன, என்ன, அடிகளார் ஓர் ஒற்றரா?'' என்று கேட்டார்.

குமுதம் உடனே மறுமொழி கூறாமல் மெல்ல நகைத்தாள். ''ஒற்றர்...? நாமே இங்கு அந்தத் தொழில்தானே செய்கிறோம். நம்மை மீறி மற்றொருவர் ஒற்றராக இங்கு வருவதா?'' என்றாள்.

''நம்மைச் சந்தேகித்து நம் நடவடிக்கைகளை அறிவதற்காக அவர் வந்திருக்கலாம்'' என்று கூறி காங்கேயன் சற்று குரலைத் தாழ்த்தி, ''சோழ சக்கரவர்த்திகளே நம்மைக் கவனிக்க அனுப்பியிருக்கலாம்'' என்றார்.

குமுதம் திடுக்கிடவில்லை. ஏனெனில் அவள் அதைத்தான் நினைத்தாள். அதைப்பற்றிதான் காங்கேயனிடம் பேசினாள். ஆனால் அதற்கும் மேலாக அவளுக்கு வேறு ஒருவிதச் சந்தேகம்.

காங்கேயனுக்குச் சீற்றம் மிகுந்தது. ''என்ன கேட்டார்? சிஷ்யை வேண்டுமாமா? சரிதான், சரிதான். கபட சந்நியாசிதான் சந்தேகமில்லை. பெருமானை வேண்டுமானால் சிஷ்யராக ஏற்றுக் கொள்ளட்டுமே. உம்; இப்போது நிலைமை சரியில்லை. குழப்பம் ஏற்படுத்தினால் நமக்குத்தான் சங்கடம். வேறு என்ன கேட்டார்?''

''தங்கம் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்கிறாராம்; வேண்டிய நகைகளை எடுத்துக் கொள்ள வழி செய்கிறாராம்'' குமுதம் கூறியவுடன் காங்கேயன் திடுக்கிட்டார்.

''என்ன, ஆபரணங்களைத் தருகிறாராமா? கள்ளனுக்குள் கள்ளனாக இருப்பார் போலிருக்கிறதே. பாண்டி நாட்டினின்று சோழமன்னர் அபகரித்த நகைகளை இவர் தாராளமாக நமக்கு எடுத்துத் தருகிறாரோ?'' காங்கேயன் குரலில் வியப்பும் சீற்றமும் கலந்திருந்தன.

''எனக்கு நகைகள் மீது ஆசை இருக்கிறதா என்று ஒரு
வேளை சோதனை செய்திருப்பாரோ? நம்பவே முடிய
வில்லை. அவர், வேடதாரியா அல்லது உண்மைச்
சிவனடியாரா? சிவனடியாராயிருந்தால் அரசருக்கு
வேண்டியவரா அல்லது...'' என்று சந்தேகத்தைத் தெரி
வித்தாள்.

''எனக்கும் ஒன்றும் புரியவில்லை. எவ்வளவு நாட்
களுக்கு நாம் இப்படியே இருப்பது? மாறவர்மன் கதி
என்ன? பாண்டிய நாட்டில் தலைவர் செய்வதறியாமல்
கவலையுடனிருப்பாரே'' என்று காங்கேயன் கூறியவுடன்
சிவனடியார் அவர்கள் அருகே நெருங்கி வந்துவிட்டார்.

''நமசிவாய'' என்று ஒரு தடவை கூறிக்கொண்டார்.
''என்ன வைத்தியரே, காலைப் பொழுது நன்றாக விடிந்து
விட்டதா?'' என்று கேட்டுப் புன்னகை பூத்தார்.

காங்கேயன் திடுக்கிட்டார். அந்தச் சிரிப்பு, அந்தக்
குரல் பழக்கப்பட்ட குரல். அறிந்த சிரிப்பு, நினைவுப்
படுத்திப் பார்த்தார்; நினைவு வரவில்லை.

''பொழுது நன்றாக விடிந்து விட்டதா?'' என்று
எதற்குக் கேட்கிறார், என்ன பொருள்?

''முப்புறம் எரித்த சிவனருளால் பொழுது தினமும்
விடிகிறது. அவனருளால் நல்ல வேளையாகவே
கழிகிறது'' என்றார் காங்கேயன்.

''ஆற்றங்கரைக்கு நாள்தோறும் வருகிறீர்களே'
இந்தத் தோப்பில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டார்.

காங்கேயனும் குமுதமும் திடுக்கிட்டனர். காங்கேயன்
உடனே மறுமொழி கூறினார், ''நீராட வருகிறோம்.
தோப்பில் என்ன இருக்கிறது? அடிகளாருக்குத் தோப்பில்
ஏதோ விசேஷம் இருக்கிறது; அதனால்தான் அடிகளார்



தினமும் இங்கு வருகிறார்கள் போலிருக்கிறது''
என்றார்.

''ஆம், ஆம். இந்தச் சூழ்நிலை எனக்குப் பிடித்திருக்
கிறது. இங்கேயே தங்கிவிடலாம் என்று ஒரு சமயம்
தோன்றுகிறது. ஒரு சமயம் பாண்டியநாட்டுத் திருத்
தலங்களைக் காணச் செல்ல வேண்டும் போலிருக்கிறது.
தில்லைச் சிற்றம்பலத் திருப்பணி தொடங்கியதும் புறப்
பட்டு விடுவேன்'' என்றார்.

''பாண்டிய நாட்டிற்கு எப்போதாவது சென்றிருக்
கிறீர்களா?'' என்று காங்கேயன் கேட்டான்.

''என் பூர்வாச்ரமமே பாண்டியநாடுதான்'' என்றார்
சிவனடியார்.

''பாண்டிய நாட்டவர் என்றால் சோழர்களுக்குத்
துளிக்கூடப் பிடிக்காதே; தங்களைச் சக்கரவர்த்தி எப்படி
ஆதரிக்கிறார்?'' என்று குமுதம் கேட்டாள்.

அடிகளார் குமுதத்தைக் கடைக்கண்ணால் பார்த்த
வாறு, ''பாண்டியநாடு, சோழ நாடு என்ற பேத உணர்ச்
சியே எனக்குக் கிடையாது. மதுரை அமைச்சர் மாணிக்க
வாசகரின் பக்திப் பாடல்களை இங்கே தில்லையில் பாடக்
கேட்கிறோம். அங்கு எப்படி பேத உணர்ச்சி இல்லையோ,
அதுபோன்றே என் உள்ளத்திலும்'' என்றார்

''இருக்கலாம்; பாண்டியர்கள் பரந்த மனப்பான்மை
உடையவாகள். சோழர்களோ பாண்டிய நாட்டு
செல்வத்தின் மீதே கவனமாயிருக்கிறார்கள்...'' குமுதம்
சட்டென்று கூறிவிட்டாள்.

''வைத்தியரே தங்கள் மகள் அதிபுத்திசாலி. அவளு
டைய புத்திசாலித்தனத்தை சோழ இளவரசர் அறிந்தால்
அவ்வளவுதான்...பாண்டிய நாட்டவர்களைக் கண்டால்
சோழர்களுக்குப் பிடிக்காது என்று துல்லியமாகக் கூறி

விட்டாளே. உம்... தங்கள் மகளுக்கு அரசாங்க விஷயங்களும் தெரிந்திருக்கின்றனவே. மிகக் கவனமாகப் பேசுங்கள். என்னிடம் பேசுவது போல் அரண்மனையில் பேசிவிட வேண்டாம். தங்களைப் போல் உள்ளத்துக்குள்ளேயே அடக்கிக் கொள்ளும் சக்தி தங்கள் மகளுக்கு இல்லை!'' என்றார்.

அடிகளார் பேச்சு காங்கேயனுக்குப் பிடிக்கவில்லை. அடிகளாரிடமிருந்து விடுபட எண்ணி, ''அடிகளாரே! எங்களுக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்றார்.

''அடாடா! எனக்கு வேலையேயில்லை என்பதை எவ்வளவு அழகாகச் சொல்கிறீர்கள். உங்களுக்கு ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும். நீங்கள் இருவரும் சக்கரவர்த்திகளின் அருகேயே இருக்கிறீர்கள். பாண்டிய நாட்டவர்கள் என்பதை அறிந்து விட்டால், காராகிருக வாசம்தான்'' என்று கூறவும், குமுதமும் காங்கேயனும் திடுக்கிட்டனர். ''ஒருவேளை தங்களை அடிகளார் அறிந்திருப்பரோ?''

''அடிகளே, இங்கே விவாதித்துக் கொண்டிருக்க நேரமில்லை. நாங்கள் பாண்டிய நாட்டவர்கள் என்று தவறாக நினைத்து விட்டீர்கள். சோழ இளவரசி நீராடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை என் மகள் செய்யவேண்டும். நாங்கள் போய் வருகிறோம்'' என்று புறப்பட்டனர்.

''வைத்தியரே, ஒரே நொடிதான்; உங்களைத் தாமதிக்க விடமாட்டேன். இளவரசி வீரமாதேவி நீராடும் போது கழற்றி வைத்திருக்கிறாரே சந்திரஹாரம், அதை உங்கள் மகள் பார்த்திருக்கிறாளா?'' என்று கேட்டார்.

குமுதமும், காங்கேயனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.



''சந்திரஹாரம், பாண்டியர் பொக்கிஷத்தைச் சேர்ந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று அடிகளார் கேட்டார்.

அடிகளார் சோழசக்கரவர்த்திகளுக்கு வேண்டியவரா? நம்மை யார் என்று கண்டறிய இப்படி நடிக்கிறாரா? அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

''எங்களுக்கு எதற்கு இந்தக் கவலை யெல்லாம்? சந்திரஹாரம் எந்த நாட்டைச் சேர்ந்ததாயிருந்தால் என் மகளுக்கு என்ன ஆகவேண்டும்? என் மகள் ஆடை ஆபரணங்களின் பிரமையி லின்றும் விடுபட்டவள். அவள் தாயற்றவள். உடுக்க உடையும் உண்ண உணவும், அறிவு வளர ஏற்ற கல்வியும் தட்டாமல் கொடுத்துக் குணவதியாக அவளை வளர்த்து வருகிறேன்'' என்று மிகவும் கவனத்துடன் பேசினார் காங்கேயன்.

''அந்த சந்திரஹாரம் உங்கள் மகள் கழுத்தை அலங்கரிக்க வேண்டுமா? இப்போது சொல்லுங்கள் இங்கே வரவழைக்கிறேன்'' என்று சிவனடியார் கூறவும், குமுதமும் காங்கேயனும் நடுங்கிவிட்டனர். சற்றுத் தொலைவில் நின்றிருந்த பெருமானுக்கு ஒன்றும் புரியவில்லை.

''சாமி, சாமி வேண்டாம், வேண்டாம். தங்கள் மாய மந்திர சக்தியால் அப்படியெல்லாம் இங்கே வரவழைத்து விடாதீர்கள்'' என்று கூறிய காங்கேயன் அங்கிருந்து ஓடத் தலைப்பட்டார். குமுதமும் அவரைத் தொடர்ந்தாள். பெருமானும் ஓடினான்.

சிவனடியார் அவர்கள் ஓடுவதைப் பார்த்து மெல்ல சிரித்துக் கொண்டார்.

துணி மூட்டையிலிருந்து அவர் கையை விட்டு ஏதோ ஒன்றை எடுத்தார்.

அது சந்திரஹாரம். சோழ இளவரசி வீரமாதேவியின் கழுத்தை அலங்கரிக்கும் ஒளி வீசும் மாலை.

சிவனடியாரிடம் அந்த ஹாரம் எப்படி வந்தது ?

# 18 பாண்டியன் தந்த பரிசு

ழ சக்கரவர்த்தி தங்கியிருந்த மாளிகையில் மிகுந்த பரபரப்புக் காணப்பட்டது. காவலர்கள் கையைப் பிசைந்து கொண்டு நின்றனர். அதிகாரிகள் இங்குமங்கும் அலைந்தனர். பெண்டிர்கள் தங்கியிருந்த இடத்தில் அனைவரும் கவலை தோய்ந்த முகத்துடனிருந்தனர்.

வீரமாதேவி சற்று நேரத்திற்கு முன்வரை கண்ணீர் விட்டுக் கலங்கியிருக்க வேண்டும். இயற்கையாகவே கரிய மேனி படைத்த வீரமாதேவி அழுததால், கண் மை வழிந்து முகத்தை மேலும் கறுப்பாக்கியிருந்தது. அவளுக்கு அரசி, ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள். பொங்கி வரும் சிரிப்பும், வீணை அல்லது குழலொலியும் எழுந்து எப்போதும் கலகலப்பு நிறைந்திருக்கும இடத்தில் வெறும் அமைதி நிறைந்திருந்தது.

''குழந்தாய், சந்திரஹாரத்தை நீ எப்போது கடைசியாகப் பார்த்தாய்?'' என்று அரசி கேட்டாள்.

விசும்பலுக்கிடையே வீரமாதேவி, ''நான் பார்த்து நீண்ட நாட்களாகின்றன'' என்றாள்.

''அப்படியென்றால், உன் கழுத்தை அது அலங்கரிக்கிறதா, இல்லையா என்பது கூட உனக்கு நினைவில்லையா?'' என்று மீண்டும் கேட்டாள் அரசி.



''நினைவில்லாமல் என்ன? என் தந்தை அளித்த விலை மதிப்பிட முடியாத இந்த ஹாரத்தை நான் கழுத்தை விட்டுக் கழற்றுவதே யில்லை....'' என்று விழி நீரைத் துடைத்துக் கொண்டே கூறினாள் வீரமாதேவி.

''அப்படியானால், அதைப் பற்றிய நினைவு உனக்கு எப்போது வந்தது?'' அரசியார் விடவில்லை. கேட்டுக் கொண்டே இருந்தாள்.

''இன்று காலை நீராடச் சென்றேன்; உடலெங்கும் தைலம் பூசிக் கொண்டேன். தொட்டியிலே பன்னீர் கொண்டு கொட்டிக் கொண்டிருந்தார்கள். நான் மெலலிய ஆடை அணிந்து கதிரொளியில் தைலம் உடலெங்கும் பரவ நின்று கொண்டிருந்தேன்''—வீரமாதேவி சற்று நிறுத்தினாள்.

''குழந்தாய், உனக்குப் பலமுறை ஆலோசனை கூறியுள்ளேன். மெல்லிய ஆடை அணிந்து பலர் காண நிற்காதே என்று. விழிகள் பொல்லாதது. யாருடைய கொடிய விழியாவது உன் அங்க அழகின் மீது பட்டுவிட்டால் உனக்குச் சங்கடம் ஏற்படலாம், கண்ணேறு பொல்லாதது'' என்று மெல்லக் கடிந்து கொண்டாள். தொடர்ந்து, ''உம, பிறகு என்ன நடந்தது? தைலம் பூசிக் கொண்டாயே, அப்போது ஹாரத்தைக் கழற்றி வைத்தாயோ?'' என்று கேட்டாள்.

''அதுதான் நினைவில்லை...'' என்று கூறி தலையைக் குனிந்து கொண்டாள் வீரமாதேவி.

''ஹாரத்தைக் காணவில்லை என்பது உனக்கு எப்போது தெரியும்...?'' சற்றுக் கடினமான குரலில் கேட்டாள் அரசி.

''அந்தப் புதிய பணிப் பெண் கூறிய பிறகுதான் தெரிந்தது...''

''எந்தப் பெண்?''

''வைத்தியர் மகள்?''

''வைத்தியர் மகளா? நல்லவள் போல் நடிக்கிறாளே?''

''ஐயோ, அதற்குள் அவள் மீது குற்றம் சாட்டி விடாதீர்கள். அவள்தான் 'சந்திரஹாரம் எங்கே?' என்று என்னிடம் கேட்டாள்''—என்று கூறி நிறுத்திய வீரமாதேவி, விழிகளை மெல்ல மூடிக்கொண்டாள். கனியிலிருந்து சாறு பிழிவது போல் ஓரிரு சொட்டுக் கண்ணீர் கன்னத்தில் வடிந்தது.

''தைலத்தை அவள்தான் என் உடலெங்கும் பூசினாள். என்ன மென்மையான கரங்கள் தாயே, அவளுக்கு. அன்னத்தின் தூவியால் உடலெங்கும் பூசுகிறாளோ என்று கூடத் தோன்றிவிட்டது. என் முதுகில் எண்ணெயைத் தடவும் போது உடலெங்கும் புல்லரித்தது. 'அம்மா' என்றழைத்தாள் அவள். நான் மெல்லத் திரும்பினேன். 'என்னடி?' என்று விழிகளாலேயே கேட்டேன். 'மயிலின் கழுத்தை உவமை சொல்கிறார்களே, இப்போதுதான் உண்மையென்று உணர்ந்தேனம்மா...' என்றாள். எனக்குப் பெருமையாக இருந்தது. இன்னும், இன்னும் அவள் வர்ணிக்கமாட்டாளா எனத் தோன்றியது. நான் நாணங் கொள்வதுபோல் பாசாங்கு செய்தேன். அவளிடமிருந்து, மேலும் புகழ்ச் சொல்லை வரவழைக்க 'உனது அழகு மட்டும் என்ன சாதாரணமானதா? நீ அரச குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டியவள்' என்றேன். 'உன்னுடைய அழகுக்காகத்தான் நானுன்னை பணிப் பெண்ணாக என்னிடம் வேலை செய்ய ஏற்றுக் கொண்டேன். உன்னுடைய மாந்தளிர் நிறம் எனக்கிருந்தால் என் தலைவரை மேலும் நான் கவர்ந்திருப்பேன். என்றேன். அவள் சிறியதோர் முறுவல் பூத்தாள். அவள் கரங்கள் என் தோளில் இறங்கின. மார்பில் மெல்ல பூச்



செண்டை எண்ணெயில் தோய்த்துத் தெளிப்பது போல் தெளித்தாள். மெல்ல அவள் சிரித்துக் கொண்டாள். அவள் எதற்காக சிரிக்கிறாள் என்று எனக்குத் தெரியும். அவளுக்கிருப்பது போன்ற பூரிப்பான இளமையின் எழில் சின்னங்கள் எனக்கில்லைதான். அதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது போல் நகைக்கிறாள். அவள் சொல்வதற்கு முன்பே நான் கேட்டுவிட முடிவு செய்தேன்.

''என்ன இருந்தாலும், உன்னைவிட எனக்கு வயது அதிகமில்லையா? உன் வயதில் எனது எழிலுக்காகத்தான் என் தலைவர்-இரட்டர் நாட்டரசர் மயங்கி என்னை மணந்தார்!''. என்றேன். ஆனால் அவள் முகம் மாறியது. சற்று நிமிர்ந்து நின்று, 'தேவி, என்னைப் பொறுத்தருளுங்கள். நான் அதற்காக நகைக்கவில்லை. தங்கள் கழுத்தில் ஊசலாடும் ஒவ்வொரு ஆபரணமும் பாக்கியம் செய்தவை. அவற்றிற்குத்தான் எத்தனை உரிமை. தங்களுடைய கழுத்தோடு உறவாடி, மார்பிலே தவழும் அவை தங்கள் தலைவருக்கும பொறாமையை அளித்து விடும். அவருக்கு அதனால் கோபம் வரும். இதை எண்ணியபோது எனக்குச் சிரிப்பு வந்தது' என்றாள். நான் நெகிழ்ந்திருந்தேன். அவளுடைய பூங்கன்னங்களைப் பிடித்து மெல்லக் கிள்ளினேன். அவள் நாணமுற்று ''எல்லா ஆபரணங்களையும்விட அந்த சந்திரஹாரம் பெரும் பாக்கியம் செய்தது. தங்கள் அவயத்தின் அழகை சந்திரஹாரத்து வைர வைடூரியங்கள் பிரதிபலித்து ஒளி வீசுகின்றன'' என்றாள். உடனே அவள் ஏதோ நினைவுக்கு வந்தவளாய், 'தேவி, நகைகளை எங்கே கழற்றி வைத்தீர்கள்?' என்று கேட்டாள்.

''நகைகளைக் கழற்றி நான் மற்றொரு பணிப் பெண்ணிடம் கொடுப்பது வழக்கம். அநதப் பணிப் பெண்ணிடம் கொடுத்திருப்பதைப் பற்றிச் சொன்னேன் நீராடிவிட்டு ஆபரணங்களை அவள்தான் அணிவித்தாள். அப்போது சந்திரஹாரத்தைக் காணவில்லை'' என்று கூறி

வீரமாதேவி அரசியின் மார்பின் மீது முகத்தைப் புதைத்துக் கொண்டு விசும்பத் தொடங்கினாள்.

ஃ ஃ ஃ

குமுதம் நடுங்கியவாறு ஓர் ஓரத்தே நின்று கொண்டிருந்தாள். பராந்தக சோழசக்கரவர்த்தி கூண்டுப்புலிபோல் குறுக்கும் நெடுக்குமாக அந்த முற்றத்தில் உலவிக்கொண்டிருந்தார். பணிப் பெண்கள், வேலையாட்கள் குனிந்த தலையுடன், கைகட்டி நின்று கொண்டிருந்தனர்.

''அந்த ஹாரம் எங்கே போய்விடும்? இவ்வளவு நாட்களில்லாமல் இப்போது இந்தத் திருட்டு நடந்திருக்கிறது' உடனே கண்டுபிடித்தாக வேண்டும். விலைமதிப்பற்ற ஆபரணங்களை உலையிலிட்டு உருக்குகிறோம். இதுவரை ஒரு சிறு துரும்பும் தொலைந்து போகவில்லை. வீரமாதேவியின் கழுத்திலிருந்த ஆபரணம் தொலைகிறதென்றால், கள்வன் இங்கேதான் இருக்கவேண்டும். இன்னும் இரண்டு நாழிகைக்குள் அந்த ஹாரம் இங்கு வந்தாக வேண்டும்'' என்று கர்ஜித்தார்.

பிறகு அதிகாரிகளிடம், ''மிகப்பெரிய சிவத் தொண்டு புரிய நாம் தஞ்சையிலிருந்து வந்திருக்கிறோம். பொக்கிஷ நகைகள் போதவில்லை. சிங்கவரையனிடம் சொல்லி அனுப்பியுள்ளோம். நமது கவனம் பொன் வேய்வதில் இருக்கும் போது என் மகள் வீரமாதேவியின் கழுத்தை அலங்கரிக்கும் ஆபரணத்தைக் களவாடும் துணிவு கொண்ட கயவன் யார்?'' என்று சீறினார்.

''அந்த ஹாரம், என் வெற்றியின் சின்னம். பாண்டிய ராஜசிம்மனை வெற்றி கொண்டவுடன் அவன் அளித்த முதல் காணிக்கை சந்திரஹாரம். அதை என் மகள் இராட்டிரகூட நாட்டிற்குப் புகுந்த வீடு செல்லும்போது பரிசாக அளித்தேன். அந்த ஹாரத்தைக் காணவில்லை என்பதை என்னால் தாங்க முடியவில்லை... நீங்கள் என்ன செய்வீர்களோ தெரியாது; அந்த ஹாரம் வந்தாக வேண்டும்...'' என்று கட்டளையிட்டார்.



அமைதியைக் கிழித்துக் கொண்டு அரசரது குரல் கோடையிடி போல் ஒலித்தது. வைத்தியர் மகளை அவர் ஒரு தடவை பார்த்தார். பிறகு வைத்தியரை நோக்கி, ''உமது மகளிடம் தீர விசாரியுங்கள். குற்றவாளி தாமே ஒப்புக் கொண்டு விட்டால் தண்டனை கிடையாது. இல்லாவிட்டால் கடுந்தண்டனை உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள். தெய்வத் தொண்டு செய்ய வந்திருக்குமிடத்தில், நான் அடியார்க்கு அடியவனாய் இருந்து, அரசர்க்கான கோப தாபங்களை மறந்திருக்க நினைத்தேன். தில்லைச் சிற்றம்பலத் திருப்பணி முடியும் வரை நான் சோழ நாட்டு எளிய குடி மகனாக இருப்பதென்று சங்கல்பம் செய்து கொண்டிருந்தேன்; சந்திர ஹாரம் காணாமல் போனது என் மனத்தையே மாற்றி விடும் போலிருக்கிறது'' என்று கூறும்போது, அங்கிருந்தவர் அனைவரும் நடுநடுங்கினர்.

பராந்தக சோழருக்குக் கோபம் வந்தால் என்ன ஆகும் என்று அனைவருக்கும் தெரியும். கூண்டோடு எல்லா பணியாட்களுக்கும் சேர்த்துத் தண்டனை வழங்கி விடுவார் என்பதும் அனைவரும் அறிந்ததே. புயலுக்கு முன்பு ஏற்படும் ஒருவித பயங்கர அமைதி அங்கு நிலவியது.

நமசிவாய—என்ற குரல் அங்கிருந்த அமைதியை குலைத்ததுடன் அனைவரையும் திகைக்க வைத்தது.

சிவனடியார், கால்களில் பாதக் குறடு ஒலிக்க வந்து கொண்டிருந்தார். குமுதமும், காங்கேயனும் அவரைக் கண்டவுடன் திடுக்கிட்டனர்.

பராந்தகர், அடிகளாரை இருகரம் கூப்பி வரவேற்றார்.

1467
2792611

அங்கிருந்த கடும் அமைதியை அடிகளாரே கலைத்தார். ''சபை கூடியிருக்கிறது போல் தோன்றுகிறது. நீதி விசாரணை நடக்கிறதோ? சமயம் தெரியாமல் நான் வந்து விட்டேனா?'' என்று கேட்டார்.

''சிவ, சிவ'' என்று மெல்ல முணு முணுத்த பராந்தகர், ''அபசாரம், அபசாரம். தாங்கள் அப்படிச் சொல்லலாமா? தங்கள் வருகைக்காக அரண்மனைக் கதவு எப்போதும் திறந்திருக்கிறது. நல்ல சமயத்தில் தான் வந்துள்ளீர்கள். அடிகளாரே, என் மனக் குழப்பத்தைத் தாங்கள்தாம் தீர்க்க வேண்டும்'' என்று குரல் தழுதழுக்கக் கேட்டுக் கொண்டார்.

''சிவ சிவ. சோழ சக்ரவர்த்தி! உன் மனத்தில் என்ன குழப்பம்...? தில்லை அம்பலத்தைப் பொன்னம்பலமாக்க நினைக்கும் புண்ணியவானான உமக்குக் குழப்பமா? ஓகோ? திருப்பணி எப்படி முடியுமோ? எப்போது முடியுமோ? என்ற கவலையால் ஏற்பட்ட குழப்பமோ?'' என்று கூறி நகைத்த அடிகளார், ''பராந்தகா! பொற்தகடடிக்கப் பொன் போதவில்லை என்று கவலைப் பட்டாய். கலபதிபுரத்து சிங்கவரையன் பொற்குவியலே அனுப்பியுள்ளான். படகுத் துறையில் பெட்டி பெட்டியாக இறங்கி வந்து கொண்டிருக்கிறது. பிறகு என்ன குழப்பம்?'' என்று கேட்டார்.

''சுவாமி, என் மகள் கழுத்திலிருந்த சந்திர ஹாரத்தைக் காணவில்லை. அந்த ஆபரணம் பாண்டியன், பரிசாகக் கொடுத்தது'' என்றார்.

அடிகளார் மெல்ல நகைத்தார். அவரது பார்வை குமுதம் இருக்கும் திசையை நோக்கியது.

குமுதத்தின் முகத்தில் கோபம் பொங்கி நிற்பதைக் கண்டார். உண்மையில் குமுதம் ஏதோ சொல்லத் துடித்துக் கொண்டிருந்தாள்.



''அடிகளாரை நம்பாதீர்கள்: சந்திர ஹாரத்தைப் பற்றி அவர் என்னிடம் விசாரித்தார். அதைத் திருடிக் கொண்டு வந்து விடுமாறு கூறினார்'' என்று கூவ வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. நல்ல வேளை அவள் அப்படிச் செய்யவில்லை. அவளுடைய உள் மனம் கேட்டது: ''பேதையே! அடிகளார் மீது நீ பழியைப் போட்டால், முதலில் நீதான் இங்கு அகப்பட்டுக் கொள்வாய். 'சந்திர ஹாரத்தைத திருடிக் கொண்டு வந்து விடு' என்று அடிகளார் சொன்னதை நீ ஏன் அதிகாரிகளிடம் உடனே சொல்லவில்லை என்று அவர்கள் கேட்கலாமல்லவா? ஒரு வேளை அடிகளார் நம்மைச் சோதிப்பதற்காக அப்படிக் கூறியிருக்கலாம். பாண்டிய நாட்டு ஒற்றர் நாம் என்பதை சோழசக்கரவர்த்தியிடம் நிரூபிக்க அடிகளார் இப்படியொரு சூழ்ச்சி செய்திருக்கலாம். இப்போதுகூட காட்டிக் கொடுத்து விடலாம். எது எப்படியிருந்தாலும் அடிகளார் போலியானவர் என்பது உறுதி. அவரிடம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்'' என்று நினைத்துக் கொண்டாள்.

''சக்கரவர்த்திகளே! ஒரு ஹாரம் போய் விடடதற்காக இப்படிக் கலங்கலாமா?'' என்று கூறி சுற்று முற்றும் பார்த்தார் அடிகளார். பிறகு ''ஆயிரமாயிரம் பொன் நகைகளை அழித்துத் தகடாக்கி விடும் நீங்கள் ஒரு ஹாரத்திற்கு வருந்தலாமா? ஒரு ஹாரம் என்ன, ஆயிரம் ஹாரம் வரவழைத்துத் தரட்டுமா?'' என்று கேட்டார்.

பராந்தகர் உடனே ஏதும் பேசவில்லை. பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''நகைகள் மீது எனக்குப்பற்றுப்பாசம் ஏதுமில்லை. ஆனால் அந்த ஹாரம் பாண்டிய மன்னன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு அளித்த முதல் காணிக்கை. அதனால் தான் மனத்தில் தாங்க முடியாத வேதனை. நாடிழந்து வந்து நிற்கும் என் மருமகன் கோவிந்த வல்லவரையன் என்ன நினைப்பான்

சோழ நாட்டிலே பாதுகாவலே இல்லை என்று நினைக்க மாட்டானா? மேலும், இந்த ஹாரம் களவு செய்தவனைக் கண்டுபிடிக்காமல் விட்டு விட்டால், பிறகு, கள்ளன் தைரியமடைந்து விடுவான். அதனால் தான் கவலைப் படுகிறேன்'' என்று கூறி நிறுத்தினார்.

அடிகளார் வைத்தியர் காங்கேயனை நோக்கினார். குமுதத்தை ஒரு முறை பார்த்தார். பிறகு ''புதிய ஆட்களை வேலைக்கு அமர்த்தும்போது அவர்களைப் பற்றி நன்றாகக் கேட்டு அறிய வேண்டாமா?'' என்றார்.

''என்ன சொல்கிறீர்கள், அடிகளே! புதிய பணியாள் தான் இந்தக் களவுக்குக் காரணம் என்கிறீர்களா?'' என்று சக்கரவர்த்தி பரபரப்புடன் கேட்டார்.

அதற்குள் அங்கிருந்த வீரமாதேவி சீற்றமுடன், ''அவள் மீது சந்தேகப்படவே கூடாது. அவள் தான், சந்திர ஹாரத்தைப் பற்றிய நினைவையே எனக்கு உண்டாக்கினாள்'' என்றாள்.

அடிகளார் குமுதத்தை ஒருமுறை பார்த்து விட்டு மெல்ல நகைத்து, ''சக்கரவர்த்தி, கவலைப்பட வேண் டாம்! உனக்குக் கவலை தந்தது ஈசன் செயல். அதே சந்திரஹாரம் உனக்கு வேண்டுமா?'' என்று கேட்டார்.

''அடிகளாரே, எனக்கு சந்திரஹாரத்தின் மீது ஆசையே இல்லை, ஆனால் வெற்றிப் பரிசாகக் கிடைத்த ஹாரத்தை இழக்க மனம் ஒப்பவில்லை'' என்று பராந்தகர் குரல் தழு தழுக்கக் கூறினார்.

''அப்படியா! ஆசையை முற்றிலும் துறந்து விட்ட தாகக் கூறினாய். பாண்டிய நாட்டினின்று கொண்டு வந்த ஆபரணங்களை அப்படியே பொற் தகடு செய்யக் கொடுத்து விட்டதாகக் கூறினாய். ஆனால் சந்திரஹார மும பாண்டிய நாட்டைச் சேர்ந்ததுதானே. அதுவும் ஒரு விதத்தில் கொள்ளையடித்தது போல்தானே ஆகும்.



அந்த ஹாரத்தையும் தில்லை நடராசருக்கு அர்ப்பணித்து விடுவதாகக்கூறு; ஹாரம் அகப்பட்டுவிடும்'' என்றார்.

பராந்தகருக்கு ஒன்றுமே புரியவில்லை, ஹாரத்தை இழக்க அவருக்கு விருப்பமில்லை என்றாலும் தொலைந்து போன ஹாரம் உடனே கிடைப்பது என்றால் மகிழ்ச்சி தானே!

''சுவாமி, அந்த ஹாரத்தை எப்படியும் கிடைக்குமாறு செய்யுங்கள். கள்வன் யார் என்று தெரியட்டும். நீங்கள் சொல்வது போல நான் அந்த ஹாரத்தைக் கொழுந்து விட்டு எரியும் கொப்பரையில் போட்டு உருக்கி விடு கிறேன்.'' என்றார்.

''அதெப்படி முடியும்? என் அனுமதி இல்லாமல் அந்த ஹாரத்தை நீங்கள் எப்படி அழிக்க முடியும்?'' என்ற குரல் கேட்டது

வீரமாதேவியின் கணவர் இராட்டிரகூட நாட்டை இழந்து சோழ நாட்டிலே மனைவியுடன் அடைக்கலம் புகுந்திருக்கும் கோவிந்தவல்லவரையன் மிகக்கண்டிப்பான குரலில் கேட்டான்.

பராந்தகர் சினத்துடன் கோவிந்த வல்லவரையரைப் பார்த்தார். உடனே ஏற்ற மறுமொழி கூறத் துடித்தார்.

## 19. மாயமில்லை மந்திரமில்லை

கோவிந்த வல்லவரையருக்கும் கோபமே இதுவரை வந்தது கிடையாது. சோழ சாம்ராஜ்யத்துக்கு நிகரான இராட்டிரகூட நாட்டை இழந்து மாமனார் வீட்டோடு வந்து அமர்ந்து விட்ட நாளிலிருந்து அவருடைய பொழுதுபோக்கு நல்ல இசையைக் கேட்பது.

நாட்டியத்தை ரசிப்பது; அதற்கும் மேலே அவரைத் தாண்ட விடமாட்டாள் இளவரசி வீரமாதேவி. இராட்டிரகூட நாட்டு அரசியாகத் திருமணமாகிச் சென்றவள், பதவியிழந்து சோழநாட்டு இளவரசியாகத் திரும்பி வந்ததால், சோழ சக்கரவர்த்தி பராந்தகசோழ தேவருக்கு மகள் மீது ஓர் அனுதாபம். இயற்கையாக இருந்த அன்பும், அனுதாபமும் உடன் சேரவே வீரமாதேவியை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். அரண்மனையில் அவள் தான் அரசி. ஆனால், இயற்கையான சர்வாதிகாரத்தை அவனால் நிறைவேற்ற முடியாமல், தன் கணவருடனேயே சுற்றி வருவதை தன் முக்கிய கடமையாகக் கொள்ளலானாள். கடமை நாளடைவில் பொழுதுபோக்காகவும் மாறிவிட்டது. அழகிய பெண்களைக் கண்டால் தன் கணவருக்குச் சபலம் என்பதை அவள் அறிவாள். கணவனைச் சபலத்திற்கு இரையாக்காமல் இருக்கவே வேலியாகத் திகழ்ந்தாள். கோவிந்த வல்லவரையரும் அந்த வேலியைத் தவிர்க்கவில்லை. வீரமாதேவியின் அகன்ற விழிகளும், சோழநாட்டினர்க்கே உரிய உடல் வாளிப்பும், வடிவழகும், அவள் சிரிக்கும் போது தனியே பூத்துக் குலுங்கும் முக எழிலும் அவளை விட்டுப் பிரியாமலிருக்கச் செய்தன.

அரச குடும்பத்துச் சுக சௌகர்யங்கள், அழகிய மனைவி, இயற்கையான சோம்பேறித்தனம் கேட்கவா வேண்டும். கோவிந்த வல்லவரையருக்குக் கோபம் ஏன் வரும்?

ஆனால் இன்று வந்துவிட்டதே! சந்திரஹாரம் இப்படியொரு தொல்லையைத் தரவேண்டுமா?

''யாரது?'' என்று பராந்தகர் விழிகளில் போர்க் கோலம் பொங்கக் குரல் கொடுத்துத் திரும்பினார். அவருக்குத் தெரியாதா அந்தக் குரல் கோவிந்த வல்லவரையருடைய குரல் தானென்று.



''நான்தான் இரட்டர் நாட்டு வேந்தன்'' என்றார் கோவிந்தன். உடனே பராந்தகர் மீசை குலுங்க நகைத்தார். நகைப்பு, விபரீதத்தில் போய் முடிந்துவிடப் போகிறது என்று தோன்றியதோ என்னவோ ''என்ன மருமகரே, என்ன சொல்கிறீர்கள்?'' என்று பராந்தகர் கோபக் குரலை அடக்கிக் கொண்டு விட்டார்.

''சந்திரஹாரம் எனக்குச் சொந்தமானது. என் அனுமதியின்றி உருக்கிவிட நான் அனுமதிக்கமாட்டேன்'' என்றார் கோவிந்தன், துணிவை வரவழைத்துக்கொண்டு.

''அப்படியா...'' என்று மட்டுமே வார்த்தைகளை உதிர்த்தார். கூடியிருந்தவர்கள் பயத்தால் மார்பைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தனர். பெண்கள் அச்சத்தால் எந்தச் சமயம் கிரீச்சிட்டுக் கூவிவிடுவோமோ என்று வாயை இரு கரங்களாலும் மூடிக் கொண்டிருந்தனர்.

சிவனடியார், குழுகத்தை ஒருமுறை பார்த்து மெல்ல நகைத்தார். காங்கேயனைப் பார்த்து முறுவலித்தார். குமுதத்திற்கு அப்போது ஓவென்று கூச்சலிட வேண்டும் போலிருந்தது. சிவனடியாரிடம் எச்சரிக்கையாக இருங்கள் என்று சொல்லிவிட வேண்டும் என்று தோன்றியது.

''இரட்டர் நாட்டு வேந்தரே! இன்றாவது வாய் திறந்து பேசிவிட்டீர்களே, மகிழ்ச்சி. சந்திரஹாரம் தங்களுக்குச் சொந்தமானதா, இல்லையா என்பதைப் பிறகு விவாதிப்போம். சந்திரஹாரத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஒத்தாசை செய்வீர்களா?'' என்று சற்றும் எதிர்பாராத விதமான மெல்லிய குரலில் பராந்தகர் பேசினார்,

''ஏன்—கண்டு பிடித்துக் கொடுத்தால் உருக்கிப் போட்டு விடலாமென்பதற்காகவா?'' கோவிந்தன் வழக்கத்துக்கு விரோதமாக உரத்த குரலில் பேசினார்.

''ஆமாம்...'' பராந்தகரின் குரல் இடிபோல் எழுந்தது.

''நான் அனுமதிக்க மாட்டேன். நகை என்னுடையது!'' கோவிந்தனும் அழுத்தமான குரலில் பேசினார்.

''சந்திரஹாரம் என் வெற்றிக்குக் கிடைத்த பரிசு. அதை என் பிரியப்படி என் மகளுக்கு அளித்து விட்டேன். நீங்கள் உரிமை கொண்டாடுவது முறையன்று''— பராந்தகர் குரல் தாழ்ந்து ஒலித்தது.

''தங்கள் மகளுக்கு அளித்தது எனக்குத் தெரியும். தங்கள் மகளை எனக்கு அளித்துவிட்டீர்கள் என்பது நினைவிருக்கட்டும். சீதனமாக அளித்ததைத் திருப்பிப் பறிக்கும் வழக்கம் சோழர்களுக்குப் புதிது என்று நினைக்கிறேன்''— கோவிந்தனுடைய பேச்சு வீரமாதேவிக்கும் வியப்பை அளித்தது. இந்தப் பேச்சு விபரீதத்தில் முடிந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை அவளுக்கு. அதனால் இருக்குமிடம் விட்டு மெல்ல நகர்ந்து தன் கணவரருகே வந்தாள். ஈரம் காயாத கூந்தல். எண்ணெய்க்குளித்து, மஞ்சள் பூசியதால் மினுமினுக்கும்கரியமேனி, பளிச்சிடும் வெண்பற்கள்; கச்சை அணியாததால் மெல்லிய துகில் மூலம் கட்டுப்பாடற்று வெளி உலகைக் காணத் துடிக்கும் மார்பகங்கள், பயத்தால் கையிரண்டையும் சேர்த்துப் பிசைந்து நிற்கும் தோற்றம்—இவற்றுடன் கூடிய வீரமாதேவியை, சிவனடியார் ஒரு முறை நோக்கினார்.

பராந்தகர் என்னும் சிங்கம் சீண்டி விடப்பட்டது. ''ஹூங்'' என்று ஹூங்காரமிட்டவாறு கோவிந்தன் பக்கம் திரும்பி, ''சோழர்களுக்குப் புதியதான பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அவற்றுள் இதுவும் ஒன்று. அன்புக்கன்பான மகளை அரசியாகக் காண வேண்டிய சோழ மன்னர் சாதாரண இளவரசியாகக் காலங்கழிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதும் புதிது தான். மகளுக்கு நாட்டை மீட்டுக் கொடுக்க முடியாமல், மீட்கப்போன தலைப்பிள்ளையை இழந்து உயிருடன்



இருக்கிறாரே சோழமன்னர், அவருக்கு அது புதுமைதான். வல்லவரையரே, என் மகளுக்கு ஆசையாகக் கொடுத்தது அந்த ஹாரம், சீதனமாகக் கொடுத்ததன்று. அதனால் திருப்பிக் கேட்க எனக்கு உரிமை உண்டு. கோவிந்த வல்லவரையரே! சந்திர ஹாரத்தைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாமல் உரிமை பேசுகிறீர்களே—நல்ல வேளை இது ராஜசபையன்று...சபையாக இருந்திருந்தால் நகைத்திருப்பார்கள்...'' என்று பராந்தகர் முழங்கவும், கோவிந்தனும் ஏதோ வாயெடுக்கும் போது வீரமாதேவி தடுத்து அவர் வாயை மூட முயலவும், சிவனடியார் அந்தச் சலசலப்பைச் சற்று நிறுத்தினார்.

''இது என்ன வாதப் பிரதிவாதம்? இப்போதுள்ள பிரச்சினை சந்திரஹாரம் கிடைத்தால் அதை நடராஜர் கோயில் விமானத்திற்கு பொன்வேய அக்னியில் இடுவீர்களா மாட்டீர்களா என்பது தான். சொல்லுங்கள்? சந்திர ஹாரம் கிடைத்தால இறைவனுக்கு அர்ப்பணிப்பீர்களா மாட்டீர்களா?'' சிவனடியார் குரல் கணீரென்று ஒலித்து அனைவரையும் பேச முடியாது வாயடைக்க வைத்தது.

குமுதத்திற்குச் சிரிப்பதா சீற்றமடைவதா என்று தோன்றவில்லை. காங்கேயனை நோக்கினாள். காங்கேயன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''எண்ணெய் தேய்த்து நீராடி விட்டுக் கூந்தலுக்கு மருந்துப் பொடிப் புகை போடாவிட்டால் மீண்டும் கடும் தலைவலி வந்து விடும். அதனால் இளவரசி அவர்கள் இந்தச் சந்நடியினின்று விலகிச்சென்று ஓய்வெடுப்பது நல்லது என நினைக்கிறேன்'' என்று வைத்தியர் என்ற முறையில் கூறினார்.

''வைத்தியரே! உமது கவலை உமக்கு. மீண்டும் இளவரசிக்கு உடல் நோய் வந்தால் எப்படிக் குணப்படுத்துவது என்ற கவலையில் திசை திருப்புகிறீர்கள். சக்கரவர்த்தியோ சந்திரஹாரம் காணாமல் தவிக்கிறார். நகை போனது பெரிதன்று; சந்திரஹாரம் வெற்றியின்

சின்னம். அதை யார் எடுத்திருப்பார்கள் என்ற கவலை அவருக்கு. புதிதாக வந்துள்ள தங்கள்மீதும் சந்தேகப்படாமல் இருக்கிறாரே. அதற்காக சிற்றம்பலவாணனை வேண்டிக் கொள்ளுங்கள்'' என்று சிவனடியார் வைத்தியரை நோக்கிப் பேசவும், கோவிந்த வல்லவரையர், சிவனடியார் பக்கம் திரும்பிக் கோபமுடன் ''வேறு என்ன செய்யச் சொல்கிறீர்கள். சந்திரஹாரத்தை நெருப்பிலே ஏன் போடச் சொல்கிறீர்கள். வெற்றியின் சின்னமான அந்த ஹாரத்தை கூத்தரசர் திருமேனியில் அலங்கரிக்கச் செய்யக் கூடாதா?'' என்று கேட்கவும்,

''வல்லவரையரே! நன்றாகக் கேட்டீர்கள். கூத்தரசருக்கு புது ஆபரணம் செய்துபோடத் தங்கள் மாமனார், பராந்தகர் இங்கு வரவில்லை! விமானத்திற்கு பொன் வேய வந்திருக்கிறார். சந்திரஹாரம் விலைமதிப்பற்றது: பாண்டியர்களின் பரம்பரை ஆபரணம் அது. அது பாண்டியர்களிடம் மட்டுமே இருக்கவேண்டும்; பாண்டியர் பரிசாக அளித்த இரகசியமே அந்த ஹாரம் வேறு யாரிடமாவது அது சென்றால் அவர்கள் குடும்பத்தில் ஒற்றுமை குலைந்துவிடும்; வம்சம் அழிந்துவிடும் என்ற காரணத்தால் தான் தங்களுக்குக் கொடுத்து விட்டார்கள். அந்த ஹாரத்தை உருக்கித் தகடாக்கிவிட்டால்... நான் சோழகுல நன்மைக்காகவே சொன்னேன்'' என்று கூறி நிறுத்தியவுடன் அங்கே 'ஆஹாகாரம்' எழுந்தது.

பராந்தகர் பரபரப்புடன் சிவனடியார் பக்கம் திரும்பி, ''அப்படியா, அடிகளாரே! தங்களுக்கு இவ்வளவும் எப்படித் தெரிந்தது? தாங்கள் முக்காலும் உணர்ந்த ஞானியா?'' என்று கேட்டார்.

''ஆம்...'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார் சிவனடியார். ''சுவாமி, என்ன செய்யச் சொல்கிறீர்கள்? ஒரே குழப்பமாக இருக்கிறதே!'' பராந்தகர் குரல் தழுதழுத்தது.



''சிவபிரான் திருக்கோயில் விமானத் திருப்பணியைச் செய்ய முன் வந்த சக்கரவர்த்தியே! சொல்கிறேன் கேளும்! பாண்டியர் தோல்வியுற்று, தங்கள் பொக்கிஷ ஆபரணங்களை இழந்து எங்கோ தலை கவிழ்ந்திருப்பதாக எண்ண வேண்டாம். மீண்டும் அவர்கள் தலை தூக்கிவிடுவார்கள். அவர்கள் பொருள் ஒன்றும் உமக்கு வேண்டாம். ஆபரணங்களை உருக்கித் தகடாக்கிய முயற்சி மிகச் சிறப்பானது அந்த எண்ணத்தை உமக்களித்த நமச்சிவாயத்தின் கருணையே கருணை. பராந்தகா! யுத்தமொன்று மிக விரைவில் வரப்போகிறது. இப்போதே ஆயத்தம் செய்து கொள்...'' என்று சிவனடியார் கூறும்போது சரேலென்று பராந்தகரும், அரிஞ்சயனும் தமது உடைவாளை உருவினர்.

''சொல்லுங்கள் சுவாமி, சொல்லுங்கள்'' என்றனர். ''வீரவேல், வெற்றிவேல்'' என்ற ஒலி அருகே சூழ்ந்தவர்களிடமிருந்து எழுந்தது. அவர்கள் சாதாரண பிரஜை போல் தோற்றமளித்தனர். அவர்கள் வேளக்காரப் படையினர் என்பதை சிவனடியார் அப்போதுதான் உணர்ந்தார். குமுதமும், காங்கேயனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவன் உடல் சிலிர்த்தது. சிவனடியார் தொடர்ந்து, ''பராந்தகா, உனது புதல்வர்களைப் போருக்கு ஆயத்தமாகச் செய்...போரில் வெற்றி உன் பக்கம்தான். வெற்றியடைந்தால் உனது மருமகன் கோவிந்த வல்லவரையனைப் பாண்டிய நாட்டை ஆளுமாறு செய்துவிடு. பாவம், நாடிழந்துவிட்ட வேதனையில் வாடியிருக்கும் அவனுக்குப் பாண்டிய நாட்டைக் கொடுத்துவிடு...'' என்றார்.

பராந்தகர் வாளை உறையிலிட்டு, ''சுவாமி! போர் எப்போது வரும்?'' என்றார்.

''எப்போது வேண்டுமானாலும் வரலாம். சந்திரஹாரத்தை தீயிலிட்டவுடனேயே போர் வரப் போகும்

அறிகுறியைக் காணலாம்'' என்றார், சிவனடியார் குமுதத்தை நோக்கியவாறு

''சந்திரஹாரத்தைத் தீயில் போடாமலே இருந்தால்'' என்று கேட்டார் கோவிந்தன்.

சிவனடியார் மெல்ல நகைத்து, ''உனக்குப் பாண்டிய நாட்டு அரியணை வேண்டாமா? தீயிலிட்டால் போர் வரும். போர் வந்தால் வெற்றி வரும். வெற்றி வந்தால் மகுடம் வரும், தெரிந்ததா?'' என்றார்.

''ஏன்? இப்போதே வல்லவரையரைப் பாண்டியநாட்டு அரியணையில் அமர்த்திவிட்டால் சரியாகிறது''. என்றான் அரிஞ்சயன்.

''நடக்காது...'' — சிவனடியார் அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

''ஏன்?''

''சந்திரஹாரம் அகப்படும் வரையில் தங்களால் ஏதும் செய்ய முடியாது. சோழநாட்டிற்குத் தீமை வருவது உறுதி...''

''ஐயோ, அப்படியென்றால்...''

''சந்திரஹாரம் கிடைக்க வேண்டும். ஹாரம் கிடைத்தால் அதை உருக்குவதற்குச் சம்மதமா? அதைச் சொல்லுங்கள்...''

சிவனடியாரின் இந்தக் குரல் அங்கே பெரும் அமைதியை ஏற்படுத்தியது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''கோவிந்த வல்லவரையரே! உமக்குச் சம்மதமா? சீதனத்தை இழக்கமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பீரா?''



''இல்லை...இல்லை...பிடிவாதம் பிடிக்க மாட்டேன். எனக்குப் பாண்டியநாட்டு அரியணையில் அமர வேண்டும்'' என்று ஆவலுடன் பேசினான் கோவிந்தன்.

குமுதம் உதட்டை மடித்துக் கோணலாக்கினாள். அப்படியே பாய்ந்துக் கோவிந்தன் முகத்தை நகங்களால் பிராண்டிவிடத் தோன்றியது. 'பாண்டிய அரியணையா, பாண்டிய அரியணை! உம்மையும் சிவனடியாரையும் கொப்பரையில் போட்டு விடுகிறேன்' என்று முணுமுணுத்தாள்.

''சக்கரவர்த்திகளே! உமக்குச் சந்திரஹாரத்தைப் பிரியும் துணிவு இருக்கிறதா?'' என்று சிவனடியார் கேட்டரர்.

''ஆஹா! சிவபிரானுக்கு என் உடல் பொருள் ஆவியைக் காணிக்கையாக்கச் சித்தம். சோழர் குலத்துக்கு எந்தவித ஆபத்தும் வராமலிருந்தால் போதும். ஆனால், சந்திரஹாரம் கிடைக்கவில்லையே சுவாமி...'' என்று ஏக்கத்துடன் பேசினார்.

''கிடைத்தால், சொல் மாறி விடுவீர்களா?''

''மாட்டோம்'' ''மாட்டோம்'' என்ற குரல் அங்கு எழுந்தது. ''ஹாரம் கிடைத்தவுடன் இரண்டு நிபந்தனைகள். ஒன்று அது எப்படிக் கிடைத்தது என்று கேட்கக் கூடாது. மற்றொன்று உடனே அதை என்னிடமே கொடுத்துவிட வேண்டும். நானே கொப்பரையில் இட்டு விடுவேன். இல்லாவிட்டால் உங்கள் மனது மாறிவிடும். ஒப்புக்கொள்கிறீர்களா?'' என்று சிவனடியார் அழுத்தந் திருத்தமாகக் கேட்டார்.

சோழசாம்ராஜ்யத்தைப் பெரிதும் விரிவுபடுத்தி எதிரிகளுக்கு அஞ்சாத அரிமாபோல் திகழ்ந்த பராந்தகர் குழந்தையைப் போல் தலையசைத்தார்.

''ஓம் நமசிவாய...'' என்று முழங்கினார் சிவனடியார். ''ஒரு கணம் அனைவரும் கண்களை மூடிக் கொண்டு 'நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க' என்று ஒரே குரலில் கூறுங்கள்'' என்றார்.

அங்கே ''நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க'' என்ற குரல் கணீரென்று ஒலித்தது.

அனைவரும், விழிகளைத் திறந்தபோது சிவனடியார் கரத்தில் சந்திரஹாரம் அசைந்தாடிக் கொண்டிருந்தது.

''உம், எல்லோரும் கவனமாகப் பாருங்கள், அதே சந்திரஹாரம் தானா என்று'' கூறி சந்திரஹாரத்தைச் சக்கரவர்த்தியிடம் நீட்டினார். ஒவ்வொருவராக ஹாரத்தைக் கையில் வாங்கிப் பார்த்தனர்.

வீரமாதேவி ஹாரத்தைக் கண்ணில் ஒத்திக் கொண்டாள். குமுதத்தை அருகழைத்து, ''நீயும் பார்! அதே ஹாரம்தானே'' என்று கேட்டாள்.

குமுதம் சிவனடியாரை ஒரு கணம் பார்த்தாள். அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ''ஆம்'' தலையசைத்தாள். வீரமாதேவியைப் பார்த்து''உம்,என்று கழுத்தில் அணிந்துகொள்'' என்று சிவனடியார் கூறினார்.

''கூடாது ... அவள் அணியக் கூடாது; வாக்குத் தவறவே கூடாது. வாக்குத் தவறுவது சோழர் பரம்பரைக்கே கிடையாது. இதோ, நீங்களே ஹாரத்தை கொப்பரையிலிடுங்கள்'' என்று சக்கரவர்த்தி கூறினார்.

ஃ ஃ ஃ

வழக்கம்போல் நீராடிவிட்டு வரும்போது குமுதம் சிவனடியாரைத் தனியே சந்திக்க நேர்ந்தது.



''தங்களைக் கண்டால் எனக்குப் பயமாயிருக்கிறது அடிகளாரே! சந்திரஹாரத்தைக் களவாடிக் கொண்டு வருமாறு என்னிடம் கூறிவிட்டு நீங்கள் எப்படிக் களவாடினீர்கள்? மாய மந்திரமாயிருக்கிறதே!'' என்றாள்.

''மாயமந்திரம் ஒன்றுமில்லை ... அதோ பார்! படகுகளிலிருந்து பாண்டியநாட்டு நகைகள் பெட்டி பெட்டியாக இறங்குவதை. அது பெரிய மாயமந்திரம் போல் தோன்றப் போகிறது பார்!'' என்றார்.

குமுதம் ஆற்றங்கரையை நோக்கினாள். இரண்டு படகுகள் வந்துக் கரையோரமாக நின்றன. பணியாட்கள் பெட்டிகளை இறக்கினார்கள். தொடர்ந்து மாறவர்மன் இறங்கினான். குமுதம் கண்களைக் கசக்கிக் கொண்டாள். ''ஆ, மாறவர்மன்!'' என்று கூவவேண்டும் போலிருந்தது.

## 20. எப்படித்தான் நம்புவதோ?

தோணியிலிருந்து மாறவர்மன் இறங்கினான். தோணி ஆடியது. மாறவர்மன் நிலை தடுமாறி கீழே விழாமல் ரங்கதேவி அவனைப் பிடித்துக்கொண்டாள். பிடி அழுத்தமாகவே இருந்தது. மாறவர்மன் அவள் கரத்தை மெல்ல நீக்கி அவளைத் திரும்பிப் பார்த்து முறுவலித்தான்.

''உங்களுக்கு நீந்தத் தெரியாது; கீழே விழுந்து விட்டால் என்ன செய்வது? அதனால்தான் பிடித்துக் கொண்டேன்'' என்று ரங்கதேவி தன் கீழுதட்டை மடித்துக்கொண்டு கூறினாள்.

''கரையருகே வீழ்ந்தாலும் நீந்தத் தெரிய வேண்டுமா?'' என்று கூறிக்கொண்டே மாறவர்மன் தோணியினின்று இறங்கி, முழங்கால்வரை நீரில் நின்றுகொண்டு, ரங்கதேவியைக் கைலாகுக் கொடுத்து இறங்குவதற்கு உதவினான். தோணி மீண்டும் பலமாக ஆடியது.

''மெல்ல, மெல்ல...'' என்றான் மாறவர்மன். உதவிக்கு மற்றொரு கரத்தை நீட்டினான். ரங்கதேவி சிறு குழந்தை போல் அவனிரு கரங்களிலும் படர்ந்தாள்.

''உம்...உம் இறங்கிவிடு'' என்றான் மாறவர்மன். ஒரு கால் தோணியிலும்,மற்றொரு கால் நீரிலும், இரு கரங்கள் மாறவர்மனைக் கழுத்தைத் தழுவி நிற்க, அந்தக் காட்சி, சிற்பம் ஒன்று மதில்மீது சாய்ந்து நிற்பது போல் தோன்றியது.

குமுதம் கரையருகே நீராட வந்தவள். தென்னை மரத்தின் மறைவில் நின்றவாறு அந்தக் காட்சியைக் கண்டாள். அவள் தன் விழிகளை அகலவிரித்து நோக்கினாள். கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டாள்.

ஆம்; மாறவர்மனேதான்.குமுதத்திற்குத் தான் காண்பது கனவில்லை என்பது தெளிவாகப் புரிந்தது. அவள் உடலில் அப்போது ஏற்பட்ட உணர்ச்சி அதிர்ச்சியா, ஆத்திரமா என்று புரியவில்லை. அதிர்ச்சியடையாமல் ஆனந்தமடைந்தால் நியாயமுண்டு. கடலில் விழ்ந்தவன் என்ன ஆனானோ என்ற கவலையடைந்தவளுக்கு மாறவர்மனை உயிருடன் கண்டவுடன் ஆனந்தமேற்படுவது நியாயம். ஆனந்தம் திடீரென்று முதலில் ஏற்பட முடியாது. திகைப்பு, வியப்பு, பிறகே ஆனந்தம்! ஆனால், உடன் ஆத்திரம் ஏன்?

மாறவர்மன் ரங்கதேவியின் பிடியை மெல்ல விலக்கி, ஒரு குழந்தையைப்போல் இடுப்பில் கை கொடுத்துக் கரையில் இறக்கினான். அதைத்தான் அவள் எதிர்பார்த்தாள். அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது.

''ஏன் சிரிக்கிறாய் தேவி?'' என்று மாறவர்மன் கேட்டவாறு, தோணியிலிருந்த பெட்டிகளை இறக்குமாறு பணியாட்களுக்கு உத்தரவிட்டான்.



''என் தாய் பார்த்திருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள் என்று நினைத்தேன், சிரிப்பு வந்தது'' என்றாள் ரங்கதேவி.

''தாய் என்ன சொன்னால் என்ன, நீ செய்வதைத் தானே செய்கிறாய்?'' என்றான் மாறவர்மன் மெல்லச் சிரித்தவாறு.

''என் செய்கையில் என்ன தவறு? நீங்கள்தானே என் இடையைச் சுற்றித் தழுவி கைலாகுக் கொடுத்து இறக்கினீர்கள்?'' என்று ரங்கதேவி பொய்க் கோபம் கொள்வது போல் முகத்தை மாற்றிக் கொண்டாள்.

''கரை இறங்க உதவுவதற்காக நான் கைலாகுக் கொடுத்தேன்...'' என்றான் மாறவர்மன்.

''அதற்காக என் இடையைச் சுற்றி கரங்களைத் தவழ விடவேண்டுமா? என்னதான் உதவுவதாக இருந்தாலும் கல்யாணமாவதற்குமுன்...'' என்று ரங்கதேவி சொன்னாள்.

மாறவர்மன் திடுக்கிட்டான். அவளுடன் தர்க்கம் செய்துகொண்டு நின்றால் பணியாட்களும் தமது கடமையைச் செய்யாமல் நின்றுவிடுவார்கள்.

''ஆமாம், தவறுதான் தேவி, அதனால்தான் என்னுடன் வரவேண்டாம் என்று உன்னைக் கேட்டுக் கொண்டேன்; உன் தாயும் அப்படியே கூறினாள்''. என்று வருத்தப்படுபவன் போல் கூறியவுடன், ரங்கதேவி கலகலவென்று நகைத்து அவன் கழுத்தை தன் கரங்களால் வளைத்துக்கொண்டு, ''ஆகா,ஒருகணத்தில் கோபம் வந்துவிடுகிறதே'' என்று கூறி அவன் உதடுகளை மெல்லத் தன் விரல்களால் மீட்டி, மீசையை மெல்லத் தடவி அவன் முகம் முழுவதும் தன் விரல்களைத் தவழ விட்டாள்.

அவளது பிடியினின்று விடுபட முயன்ற மாறன், ''தேவி, உம், நகர்ந்துகொள். அதோ பணியாட்கள்

அப்படியே நின்று நம்மைப் பார்க்கிறார்கள். அவர்கள் என்ன நினைப்பார்கள்?'' என்று கேட்டு நகர்ந்தான்.

''என்ன நினைப்பார்கள்? தங்கள் தலைவரது மகளுக்கேற்ற மணாளன் நீங்கள் என்று நினைப்பார்கள். அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி ததும்புகிறது. அவர்கள் தங்கள் வீட்டிலுள்ள மனைவியையோ, காதலியையோ நினைத்துக் கொள்வார்கள். அதனால் ஏற்படும் உற்சாகத்தால் தங்கள் தலையில் சுமந்துள்ள பெரும் பாரத்தை மறந்து விடுவார்கள்'' என்று கூறி கலகலவென்று நகைத்தாள்.

''மிகவும் அழகாகப் பேசுகிறாய், தேவி'' என்று கூறியவாறு மாறவர்மன் நகர முற்பட்டான்.

''பேச்சு அழகா, பேசும் நானழகா?'' என்று கூறி அவனது கரத்தைப் பிடித்து நிறுத்தினாள்.

''தேவி, சற்று நேரம் நீ சும்மாயிருந்தால் நல்லது நகைப் பெட்டிகளைச் சக்கரவர்த்தியிடம் சமர்ப்பித்து விட்டு விரைவிலே திரும்பலாம்...'' என்று மற்றொரு அடியெடுத்து வைத்தான்.

''விரைவில் திரும்பக்கூடாது என்பதற்காகவேதான் நான் உங்களுடன் வந்தேன். நாம் இன்று இங்குத் தங்க வேண்டும். என் தாயாரின் பார்வையினின்று இன்று ஒரு நாளாவது தப்பவேண்டும்'' என்று ரங்கதேவி அவன் கரத்தை அழுத்தினாள்.

மாறவர்மன் திடுக்கிட்டான். அவனுக்கு அவளுடைய இனிய பேச்சு ரசிக்கவில்லை. மலர்க் கரங்கள் உடலிலே ஏற்படுத்தும் கிளுகிளுப்பு தணல் போன்றிருந்தது.

தோணியிலே வரும்போது அவள் சிரித்துப் பேசிவந்த போதுகூட அவன் நினைவெல்லாம் குமுதமும், காங்கேயனும், பெருமாளும் எங்கேயிருக்கிறார்களோ, என்ன செய்கிறார்களோ என்ற கவலையிலேயே சுழன்று கொண்டிருந்தது.



தோணியிலுள்ள ஆபரணங்கள் அனைத்தும் பல நாடுகளிலிருந்துக் கொள்ளையடிக்கப்பட்டவை. இப்படித்தானே பாண்டிய நாட்டுப் பொக்கிஷத்தைக் கொள்ளையடித்திருப்பார்கள்? இந்தத் தோணியை இப்படியே கடல் பக்கம் திருப்பித் தொண்டித் துறைமுகத்திற்கு ஓட்டிச் சென்றுவிட்டால்...கடலில் நீந்தத் தெரியாததும், சிறு தோணியைக்கூட செலுத்தத் தெரிந்துகொள்ளாததும் எவ்வளவு பெரிய தவறு என்பதை நினைத்தான். எல்லாவற்றையும்விட, ரங்கதேவி உடன் வருவதிலுள்ள பெரிய ஆபத்தை அவன் உணர்ந்தான். அவள் உடன் வராமலிருந்தால் நகைப்பெட்டிகளைச் சக்கரவர்த்தியிடம் ஒப்படைத்துவிட்டு, திரும்பவும் கலபதிபுரம் வராமலேயே தப்பியிருக்கலாம்.

கலபதிபுரத்தில் வேளைக்கு நன்றாக உண்டு, உறங்கி ரங்கதேவியின் மென்மையான ஸ்பரிசத்தை அவ்வப்போது உணர்ந்து, காலங்கழிக்கவா தொண்டியினின்று வந்தோம்? உடல் வலிமை இருந்தென்ன! இளமையிருந்தென்ன? இன்னும் சிறிது புத்திக் கூர்மை நமக்கில்லாது போய் விட்டதே என்று நினைக்கும்போது அவனுக்கு நாணமாக இருந்தது.

இன்னும் சில நாட்களிருந்தால் தனக்கும் ரங்கதேவிக்கும் சிங்கலரையன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விடுவார்.

திருமணம் — ரங்கதேவி போன்ற பேரழகியை ஓர் இளைஞன் அடைய முற்பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

ஒரு கணம் மாறவர்மன் யோசித்தான். ரங்கதேவியை மணந்துகொண்டு கலபதிபுரத்திலேயே இருந்துவிட்டால் என்ன? குமுதமும், காங்கேயனும், பெருமாளும் தலைவருடைய கட்டளையை எப்படியாவது நிறைவேற்றிவிடுவார்கள்.

நாமிருந்து என்ன செய்யப்போகிறோம். மேலும் நம்மால் ஏதாவது தொல்லை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

மாறவர்மன் இப்படி நினைத்தபோதே அவனுடல் சிலிர்த்தது. 'ஏ, பாழும் மனமே, என்ன நினைக்கிறாய்! பெண் ஒருத்தி அருகிலிருந்துவிட்டால் இப்படியா சிந்தனை சிதறும்?' என்று அவனது உள்மனம் குத்திக் காட்டியது. கலபதிபுரத்தில் தங்கியிருக்கும் எண்ணத்தை எப்படியும் மறந்துவிட வேண்டும். தக்க தருணம் பார்த்துத் தப்பி ஓடிவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவுடன் அவன் முகத்தில் தெளிவு ஏற்பட்டது. ஏதோ சிந்தனையி லிருப்பது போன்ற தோற்றம் மாறியது. "அப்பாடா! இவ்வளவு நேரம் ஏதோ கவலையில் மூழ்கியிருந்தீர்களா? சொந்த ஊரை நினைத்துக் கொண்டீர்களா?" என்று ரங்கதேவி கேட்டு அவன் அருகே வந்தமர்ந்தாள். ரங்க தேவியின் கேள்விகளுக்குத் தக்க மறுமொழி கூறினான். சிரித்துப் பேசினான். கரையை யடைந்தவுடன், ரங்க தேவி தன் மீது படர்வதற்குச் சம்மதித்தான். ஆனால், அவள் அங்கேயே தங்கவேண்டும் என்று கூறிய யோசனையை மட்டும் அவனால் ஏற்க முடியவில்லை.

"ஏன் நிற்கிறீர்கள்! உம் செல்லுங்கள். நகைப் பெட்டிகளைச் சக்கரவர்த்தியிடம் ஒப்படைத்துவிட்டு விரைவில் திரும்ப வேண்டும்" என்று பணியாட்களை நோக்கிக் கூறினான் மாறவர்மன்.

பெட்டிகளைச் சுமந்து கொண்டு பணியாட்கள் செல்ல, மாறவர்மனும், ரங்கதேவியும் பின்தொடர்ந் தனர். ரங்கதேவி மாறவர்மன் தோளோடு தோள் நெருங்கிச் சென்றாள். அவள் கரம் அவனுடைய கரத் துடன் பின்ன முயன்றன.

"தேவி, இது சோழ சக்கரவர்த்தியின் ஆளுகைக் குட்பட்ட இடம் தங்கள் தந்தையின் தளபதி யாக நான் வருகிறேன். கட்டுப்பாடு, கண்ணிய



மிகவும் அவசியம். உன் தந்தையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும், என் மதிப்பையும் நீ உயர்த்த வேண்டும், ஒரு பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டு தளபதி செல்கிறான் என்றால், மற்றவர்கள் தவறாக நினைப்பார்கள். கட்டுப்பாடு இருக்காது" என்று உபதேசம் செய்துகொண்டே மாறவர்மன் நடந்தான்.

"ஏன் தவறாக நினைக்கிறார்கள்? நான் என்ன அந்நியப் பெண்ணா?" ரங்கதேவி சிணுங்கினாள்.

"சோழ சக்கரவர்த்திக்கு அதெல்லாம் தெரியுமா?"— மாறவர்மன் சற்று நடையைத் துரிதப்படுத்தினான்.

"நான் அவரிடம் சொல்கிறேன்; எனக்குத் திருமணம் நிச்சயமாயிருக்கிறது என்று சொல்கிறேன்"—ரங்கதேவி அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

"அங்குதான் ஆபத்து திருமணம் நிச்சயமானவுடன் அரசகுலப் பெண்கள் வெளியே வரமாட்டார்கள். அதிலும் கணவனாக உறுதி செய்யப்பட்டவருடன் இப்படி வெளிப் படையாகச் சேர்ந்து வருவதைச் சக்கரவர்த்தி ஆமோதிக்க மாட்டார்" மாறவர்மன் சமாதானம் கூறினான்.

"நான் அரசகுலப் பெண்ணில்லையே!"

"கலபதிபுரத்துக் குறுநில மன்னர் உன் தந்தை. உன் தந்தை சிற்றரசர், அதனால்தான் என்னைத் தளபதி யாக நியமித்திருக்கிறார். நீ அரசகுலப் பெண்ணில்லா விட்டால் நானும் தளபதியல்லன்" என்று மாறவர்மன் கூறியவுடன், ரங்கதேவி, இதுவரை அவனது கைவிரல் களுடன் குறும்புத்தனம் செய்து கொண்டிருந்தவள் சற்று விலகியவாறு நடந்தாள்.

ஃ ஃ ஃ

தோணித் துறையில் மாறவர்மன் இறங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்த குமுதம், மாறவர்மன் அருகே

ரங்கதேவியைக் கண்டவுடன் திடுக்கிட்டாள். அவனுடைய நடவடிக்கையைக் கண்டு கோபமடைந்தாள். ஆத்திரமும் அவள் உள்ளத்தில் பொங்கி வழிந்தது.

மாறவர்மன்தானா? ஆம், அவனேதான். படகில் நம்முடன் வந்த அதே மாறவர்மன். தலைவரால் திறமிகுந்தவன் என்று பாராட்டுதல் பெற்ற அதே மாறவர்மன். சோழ நாடு சென்றவுடன், தலைநகரிலே சோழ மன்னரின் மாளிகைக்குள் புகுந்து ஓர் இளவரசரையாவது தீர்த்துக் கட்டச் சபதம் பூண்ட அதே மாறவர்மன். நான்கு பேர்களுக்கு நான்கு விதக் கடமைகளை அளித்திருந்த தலைவர் மாறவர்மனிடம் மேலும் பல எதிர்பார்த்தார். பாண்டிய மன்னனின் மீது அபார காதல் கொண்டிருந்த திருப்புமிருந்த மாறவர்மனின் சேவையைப் பயன்படுத்திக் கொண்டு வருங்காலத்தில் பாண்டிய மகுடத்திற்கு உதவியாக அவனிருப்பான் என்று பல பல எதிர்பார்த்த தலைவர் வல்லபனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அதே மாறவர்மன் படகில் வரும்போது ஒருகணம் நாம் அவனது துடிப்புள்ள முகத்திடம் நெஞ்சைப் பறி கொடுத்தோம். பிறகு நாட்டுக்காக ஆற்றவேண்டிய மகத்தான பணிக்காக பயணம் மேற்கொண்ட நாம் மனத்தைச் சஞ்சலத்தில் ஆழ்த்தக்கூடாது என்பதற்காக மனத் தெளிவு பெற்று அவனது தோற்றத்தை இதயத்தில் ஏற்றாமல், மறக்கக் கண்டிப்பாக உறுதி பூண்டோம். ஆனால் முடியவில்லையே? படகிலிருந்து காங்கேயனும், பெருமாளும் குதித்தபோது மாறவர்மன் குதிக்கவில்லையே என்பதற்காக நாமும், சிறிது நேரம் படகில் இருந்தோம். பிறகு கடலில் குதித்துவிட்டு நீந்தும் போதும் அவர் என்ன ஆனாரோ என்று கவலைப்பட்டோம். இதெல்லாம் எதற்காக...?

இப்படி ஒரு காட்சியைக் காண்பதற்காகவா? கடலில் மூழ்கி இறந்து விட்டாரா அல்லது எங்காவது திக்குத் திசை தெரியாத இடத்தில் கரையேறித் திண்டாடு



கிறாரா என்று கவலைப்பட்டோமே, இப்படி ஒரு காதல் காட்சியைக் காண்பதற்காகவா?

குமுதம் முகத்தை மூடிக் கொண்டாள். விழிகளை மூடிக் கொண்டாள். 'ஆண்டவனே, இவர் நமது மாறவர்மனாக இருக்கக் கூடாது. அப்படியே யிருந்தாலும் ஓர் அழகியுடன் செல்வதாக நாம் காணும் இந்தக் காட்சி உண்மையாக இருக்கக்கூடாது. கனவாக இருக்க வேண்டும்.'

''குமுதா, இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு குமுதம் விழிகளைத் திறந்தாள். மிக அருகே சிவனடியார் நின்று கொண்டிருந்தார்.

'ஐயோ, இவர் நம்மை விட்டுப் போகவே மாட்டாரா? நம் பெயரை எப்படித் தெரிந்து கொண்டார்?'' என்ற பயத்துடன் ''சுவாமி நீங்களா?'' என்று திடுக்கிட்டவள் போல் கேட்டாள்.

''ஆம், நானே தான். மாறவர்மன் தோணியிலிருந்துப் பெட்டிகளை இறக்குவதைப் பார்த்து வியப்புடன் நிற்கிறாயா?'' என்று கேட்டார்.

''நான் ஏன் திகைத்து நிற்கவேண்டும். பெட்டியை யார் இறக்கினால் எனக்கு என்ன?'' என்று குமுதம் பளிச்சென்று கேட்டுவிட்டாள். அவளுக்குச் சிவனடியாரைப் பார்க்கப் பயமாக இருந்தது. தன் பெயரைத் தெரிந்து வைத்திருக்கிறார். மாறவர்மனையும் இவருக்குத் தெரிந்திருக்கிறது. ஐயோ—விபரீதம் ஏதாவது விரைந்து வரும் போலிருக்கிறதே! உண்மைச் சிவனடியாராயிருந்தால் இவருக்கு இந்த வம்பெல்லாம் எதற்கு? மாறவர்மன் பெயரை எப்படித் தெரிந்து கொண்டார்?

''சுவாமி, என் பெயர் தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"ஏன், உன்னை உன் தந்தை பெயரிட்டு அழைப் பதைப் பலமுறைக் கேட்டிருக்கிறேன்'' என்று அடிகளார் கூறியவுடன் மேலும் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

காங்கேயனுடன் பேசிக் கொண்டிருப்பதை மறைந் திருந்துக் கேட்டிருப்பாரோ?

"மாறவர்மன் என்கிறீர்களே, தங்களுக்கு அவரை முன்பே தெரியுமா? அவருடன் பழக்க முண்டா?'' என்று குமுதம் ஆவலுடன் கேட்டாள்.

"ஆகா, மாறவர்மனைத் தெரியாதவர்கள் இருக்க முடியுமா? ஆனால் அவனுடன் வரும் அந்த அழகியைத் தான் எனக்கு யார் என்று தெரியவில்லை. உனக்குத் தெரியுமா?'' என்று சிவனடியார் கேட்டு விட்டு குமுதத் தின் முக மாறுதலைக் கவனித்தார்.

"அந்த அழகி யாரென்று எனக்குத் தெரியவில்லை. மாறவர்மனுக்கு அப்படியொரு உறவினர் இருப்பதாகத் தெரியவில்லையே'' என்று கூறியவள், வாய்தவறி அப்படிக் கூறிவிட்டதை உணர்ந்து உதட்டைக் கடித்துக் கொண்டாள். பேச்சை உடனே மாற்ற விரும்பி, "அடிகளாரே! எனக்கெதற்கு இந்த வம்பெல்லாம்; உமமுடன் பேசிக் கொண்டு நின்றாலே ஏதாவது வம்பில் சிக்க வைத்து விடுவீர்கள் போலிருக்கிறது. சந்திர ஹாரத்தைக் களவாடி வருமாறு என்னிடம் சொன்னீர் கள். ஆனால், நீங்களே உமது பையிலிருந்து அரசர் எதிரே எடுத்துக் காட்டினீர்கள். சுவாமி உம்மை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; உம்மை நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. சந்திரஹாரத்தைப் பற்றிய கதை ஒன்றைக் கூறினீர்களே அது உண்மைதானா?'' என்று கேட்டாள்.

"உண்மை—முக்காலும் உண்மை. சந்திரஹாரம் சோழ சக்கரவர்த்தியிடம் இருக்கும் வரை அவர்களுக்குப்



பெரும் தொல்லைதான். அதனால்தான் அதை உருக்கிவிட வேண்டும் என்றேன்'' என்றார் சிவனடியார்.

"சோழர்களுக்குத் தொல்லை இருந்தால் இருந்து விட்டுப் போகட்டுமே. உங்களுக்கு அதனால் என்ன தொல்லை? அதை ஏன் உருக்க வேண்டும் என்கிறீர்கள்?'' என்று கேட்ட குமுதம், தன் வார்த்தையே தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்று பயந்து வாயை மூடிக் கொண்டாள்.

"என்ன பெண்ணே! சோழ சக்கரவர்த்தி வேதனைப் பட வேண்டும் என்பதுதான் உனது ஆசையா? சோழ மன்னர் குடும்பத்தில் துயரம் நேருவதுதான் உனது எண்ணமா? சக்ரவர்த்தியிடம் நீ பணி புரிகிறாய். நீ அவரது நலனைக் கோரவேண்டாமா?'' என்று அதட்டு பவர் போலக் கேட்கவும்,

"சுவாமி, எனக்குச் சோழநாடும் தெரியாது. அவர் களது நலனும் தெரியாது. சந்திரஹாரத்தைத் திருடி வருமாறு என்னிடம் ஏன் சொன்னீர்கள். பிறகு உங்களிடம் அது எப்படி வந்தது? அதைச் சொல்லுங்கள்'' என்று கூறிப் பேச்சை மாற்ற முயன்றாள்.

"அதெல்லாம் மிக ரகசியம்...'' என்றார் சிவனடியார்.

"உண்மையிலேயே சந்திரஹாரத்தை நெருப்பிலிடப் போகிறீர்களா?''

"இன்னும் சிறிது நேரத்தில் நகைகளை உருக்கு மிடத் திற்குச் செல்லப் போகிறேன். சக்கரவர்த்தியும் பரிவாரங் களுடன் வருவார். இதோ போகிறானே மாறவர்மன் அவனும் வருவான். மந்திரங்களை உச்சாடனம் செய்து கொண்டே அந்த ஹாரத்தைக் கொப்பரையிலிடுவேன். பாண்டிய மன்னன் கபடமான எண்ணத்துடன் கொடுத்த அந்த சந்திரஹாரம் தங்கத்தோடு தங்கமாகிவிடும். நீயும் வந்து பார்...'' என்று கூறிக்கொண்டே சென்ற சிவனடியார் பார்வை, சற்றே விலகியிருந்த அவன்

மார்புச் சேலை மீது விழவே, குமுதம் மார்புக் கச்சையை ஒழுங்குபடுத்திக் கொண்டு சேலையை சரி செய்து கொண்டு, ''சுவாமி; எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. உம்மிடம் பேசவும், உம் அருகே நிற்கவும் பயமாயிருக்கிறது. என்னை ஏன் அடிக்கடி தேடிவருகிறீர்கள்? உங்கள் காவி உடைமீதே எனக்குச் சந்தேகம். சுற்றைச் சடைமீது சந்தேகம்; கமண்டலத்தின் மீது சந்தேகம்: கைத் தண்டத்தின் மீது சந்தேகம்; தோளிலே தொங்கும் மூட்டைமீது சந்தேகம்; நெற்றியிலே அணிந்துள்ள திருநீற்றின் மீது சந்தேகம். சுவாமி நீங்கள் ஒரு கபட சந்நியாசி என்பதை நிரூபிக்கக்கூடிய காலம் வெகு தொலைவில் இல்லை'' என்று கூறிக்கொண்டே குமுதம் அங்கிருந்து மிக வேகமாக ஓடினாள்.

சிவனடியார் 'ஹஹ்ஹா' என்று நகைத்த ஒலி அந்த ஆற்றங்கரைத் தோப்பில் எதிரொலித்தது.

## 21. அதிர்ஷ்ட தளபதி

தங்க ஆபரணங்கள் உருக்கும் கூடத்தில் அனைவரும் கூடியிருந்தனர். மாறவர்மன் கொண்டுவந்த ஆபரணங்கள் குவியலாகக் குவிக்கப்பட்டிருந்தன. பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட பலவித நகைகள் அவை. கடல் கடந்த நாடுகளில் இருந்துச் சிங்கவரையன் குழுவினரால் கொள்ளையடிக்கப்பட்ட ஆபரணங்கள் அவை. செம்பொன் ஆபரணங்களும், பசும்பொன் நகைகளும், மாற்றறியா செழும் பசும் பொன்னும் தங்கக், கட்டிகளும் குவியலில் நிறைந்திருந்தன.

மருத்துவராக அங்கே கருதப்படும் காங்கேயனும், சிங்க வரையனின் தளபதியாகக் கருதப்படும் மாறவர்மனும், இளவரசர்கள் கண்டராதித்தனும், அரிஞ்சயனும் அங்கே கூடியிருந்தனர், காங்கேயனும், மாறவர்மனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். விழியால்



பேசிக் கொண்டனர். ஒருவரையொருவர் முன்பே அறிந்ததாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று சைகை மூலம் பேசிக் கொண்டனர்.

மாறவர்மன் அந்தக் கிராமத்திற்கு வந்துவிட்ட செய்தியைச் சற்று முன்பே காங்கேயனுக்கு குமுதம் தெரிவித்திருந்தாள்.

அவள் ஆற்றங்கரையிலிருந்து ஓடோடி வந்து மூச்சு இரைக்க, அந்தச் செய்தியைக் கூறமுடியாமல் கூறினாள்.

''ஐயா, ஐயா, அவர் வந்துவிட்டார்... இந்தச் சாமியாரை நம்பாதீர்கள்... எனக்கு ஒன்றுமே புரியவில்லை..'' என்று சொல்வதற்குள் அவளுக்கு மூச்சு வாங்கியது.

''குமுதம் என்ன சொல்லுகிறாய்'' என்று காங்கேயன் அமைதியாகக் கேட்டார். அவர் பச்சிலையைச் சாறு பிழிந்து கொண்டிருந்தார். அவருடைய அமைதி, நிதானம் குமுதத்திற்கு எரிச்சலை ஊட்டியது. மாறவர்மனைக் கண்டுவிட்டோம் என்றால், வியப்பு. ஆனந்தம், அதிர்ச்சி எல்லாம் அடைய வேண்டாமா?' என்ன சொல்கிறாய்?'' என்று நிதானமாகக் கேட்கிறாரே....

''ஐயா... மாறவர்மனைக் காணவில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோமே, அவர் வந்து விட்டார்'' என்று குமுதம் கூறினாள். அதில் கோபங் கலந்திருந்தது.

''மாறவர்மன் இங்கே வருகிறானா? பிழைத்திருக்கானா? இறைவன் நம் பக்கம்தான். யார் வடிவிலாவது அவர் நம்மைக் காப்பாற்றுவார், நம் திட்டத்திற்கு கைகொடுப்பார்...'' என்றார் காங்கேயன்.

''இறைவன் யார் வடிவில் வந்து காப்பாற்றுவாரோ, மாட்டாரோ எனக்குத் தெரியாது. சிவனடியார் வடிவில்

வந்து நம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறார். பச்சிலையைக் கலனிப்பதை நிறுத்திவிட்டுக் கொஞ்சம் மாறவர்மன் வருவதைக் கவனியுங்கள். மாறவர்மன் வருகிறார். புதிய தோற்றம், புதிய உடை, கம்பீரம். பணியாட்கள் பின் தொடர அழகிய பெண் ஒருத்தியுடன் வருகிறார்'' என்று பரபரப்புடன் கூறினாள்.

சத்திரத்து வாயிலுக்கு அவர்கள் வந்து நிற்பதற்கும், மாறவர்மன் தன் குழுவினருடன் செல்வதற்கும் சரியாக இருந்தது. மாறவர்மன் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் ரங்கதேவி இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டு சென்றாள். அவள் விழியும், குமுதத்தின் விழியும் சந்தித்தன. அதனால் விளைவு ஒன்றுமில்லை.

''பார்த்தீர்களா; மாறவர்மன் செல்வதை?'' என்று குமுதம் காங்கேயனிடம் கூறினாள். குரலில் சோகம் இருந்ததா, அல்லது பொறாமையிருந்ததா என்று சொல்ல முடியவில்லை.

''நம் மாறவர்மனா? புதிய உடை; இடையில் வாள், பட்டாடையோ என்னவோ புதிய ஆடை''—காங்கேயன் வியப்பிலாழ்ந்தார். பிறகு தொடர்ந்து, ''அரசாங்கத்தில் முக்கிய பதவி வகிப்பவர்கள் அணியும் தலைப்பாகை. மாறவர்மன்தானா, சரியாகப் பார்த்தாயா?'' என்றார்.

''அவரேதான்; தலைப்பாகை இருக்கட்டும். அருகே செல்லும் அழகியைப் பார்த்தீர்களா?'' குமுதம் குரலில் ஏக்கமிருந்ததா, ஏளனமாயிருந்ததா? சொல்ல முடியவில்லை.

''ஆமாம், ஆமாம், அரசகுமாரி போல் தோன்றுகிறாள். பணியாட்கள் பெட்டிகளைச் சுமந்து வருவதைப் பார்த்தால் சக்கரவர்த்தி தென்ன தங்க நகைகள் நிறைந்த பெட்டியை அவர்கள் கொண்டு வருகிறார்கள் என்பது தெரிகிறது'' என்று கூறி, காங்கேயன் பெருமூச்சு விட்டார். பிறகு மெல்லிய குரலில், ''குமுதம்,



இன்று ஆற்றங்கரைக்குச் சென்றாயா? நகைகள் புதைத்த இடத்தை ஒரு முறை பார்த்தாயா?'' என்று கவலையுடன் கேட்டார்.

''உம். நகைகளைப் பார்க்கப் போன போதுதான் இந்த நங்கையையும் பார்த்தேன். அங்கே ஒரு காதல் நாடகமே நடந்தது. சேச்சே, மாறவர்மன் இப்படி மாறிவிடுவார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை''—குமுதத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அருகேயிருந்த பெருமாள் ஹூங்காரம் செய்தான். ''எனக்கு அப்போதே தெரியும். மாறவர்மன், பெண்கள் விஷயத்தில் ஒரு மாதிரி என்று. படகில் வரும்போதே நான் பல தடவைகள் கண்டித்தேன். கடலில் வீழ்ந்து இறந்து விட்டான் என்று நினைத்தவனுக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா?'' என்று பெருமாள் கூறியது குமுதத்திற்கு எரிச்சலாக இருந்தது.

''அதிர்ஷ்டம், என்ன அதிர்ஷ்டம்? நமது அதிர்ஷ்டத்தைச் சோதிக்கவா புறப்பட்டோம்? உயிரைப் பணயம் வைத்துப் புறப்பட்ட போதே நாம் அதிர்ஷ்டம், புண்ணியம், பாவம் எல்லாவற்றையும் மறந்துவிட்டோம். எந்தவிதக் கொடுமையை அனுபவிக்கவும் ஆயத்தமானோம்; எந்தவிதக் கொடுமையைச் செய்யவும் துணிந்திருந்தோம். பெயர் தெரியாத ஊருக்கு வந்து இரண்டு வேளையும் உண்டு, உறங்கி, ராஜபார்வையில் சுகமாக இருக்கவா நாம் தொண்டித்துறைமுகத்திலிருந்துக் கிளம்பினோம்? நமது தலைவர் என்ன சொல்லியனுப்பினார்? நமக்கு அவர் இட்ட இரகசியக் கட்டளை என்ன? நம் எல்லாரையும் விட மாறவர்மனைத்தான் அவர் நம்பினார். கடலில் விழ்ந்த மாறவர்மன் உயிர் தப்பியவுடன் தனது இலட்சியத்தையே மறந்து விட்டாரென்று நினைக்கிறேன்'' என்று படபடவென்று ஆத்திரம் தீரப் பேசினாள்.

குமுதம் அவ்வாறு எரிச்சலும், கோபமும், கலந்து பேசி இதுவரையில் காங்கேயன் பார்த்ததில்லை. குமுதத்தைச் சமாதானப்படுத்த விரும்பினார்.

''குமுதம், நமது கடமையை நாம் மறந்து விடவில்லை. நான் மருத்துவர் போல் நடிப்பதும், நீ பணிப் பெண்ணாகத் தோன்றுவதும், வயிறு வளர்க்கவா? நமது இலட்சிய யாத்திரையில் இது ஒரு கட்டம். நம்மிடம் நகைகள் சிக்கி, அதை மறைவாகப் புதைத்து வைக்க வில்லை என்றால் நாம் எப்போதோ இந்த ஊரினின்று சென்றிருக்கலாம்'' என்று பேசிக் கொண்டே சென்ற வரை குமுதம் இடைமறித்து, ''என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? நமது இலட்சியப் புருஷர்கள் இங்கே தானே இருக்கிறார்கள். தேடிச் சென்ற மூலிகைக்கொடி நமது காலில் சிக்கிவிட்டதுபோல், இங்கேயே சோழ அரச குலத்தவர்கள் ஒரு சேர இருக்கிறார்கள். வாய்ப்பைப் பயன்படுத்துவோம். நகைகளை நாம் இழந்தாலும் சரியே'' என்றாள்.

காங்கேயன் மெல்ல நகைத்தார். மாறவர்மனிடம் தான் ''நம் தலைவர் அந்தப் பணியை ஒப்படைத்தார். முடிந்தால் ஓர் இளவரசரையாவது பலி வாங்க வேண்டும் என்பது தலைவரது கட்டளை. நாம் என்ன செய்ய முடியும்?'' என்றார்.

குமுதம் கையைப் பிசைந்தாள். ''ஒருத்தருக்கு மூன்று இளவரசர் இங்கே இருக்கிறார்கள். அதிலும் அந்தக் கடைசி இளவரசரின் முகத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள்.

''யாரைச் சொல்கிறாய்? முதல் இளவரசர் கண்ட ராதித்தர் எப்போதும் சிவநாமத்தை ஜெபித்துக் கொண் டிருப்பவர். இரண்டாமவர் அரிஞ்சயன். தந்தையின் அருகேயிருந்து அரசியல் விஷயங்களைக் கவனிக்கிறார். மூன்றாமவர்...'' என்று காங்கேயன் கூறும்போது, ''அவர்



தான் உத்தமசீலியாம். உத்தமசீலி பெயரை வைத்தார் களே, அதமசீலி என்று வைக்காமல்...'' என்றாள் குமுதம்.

''என்ன குமுதம்! இன்று கடுகு வெடிப்பதைப் போல் வெடிக்கிறாய்?'' என்று பெருமாள் கேட்டான்.

''ஆமாம், இந்த ஆண்களுக்குப் பெண்கள் என்றால் சபலம்தான். காவியுடை அணிந்த சாமியாரும் சரி. சோழ சாம்ராஜ்ய இளவரசரும் சரி, அவர்கள் பார்வையே வேறு தான்'' என்று சீறினாள்.

காங்கேயன் பேச்சை மாற்ற விரும்பினார். ''நாம் இங்கு பேசிக்கொண்டிருப்பதைவிட மாறவர்மன் அங்கே என்ன செய்கிறான் என்பதைப் பார்ப்போம் வாருங்கள்'' என்றார். குமுதத்திற்கு அந்த யோசனை சரியெனத் தோன்றியது.

காங்கேயனும், குமுதமும் பெருமாளுடன் சென்ற போது தான் பராந்தக சோழரும் ஆபரணக் குவியலைக் காண வந்தார். சிங்கவரையன் அனுப்பிய ஓலையைக் கொடுத்த மாறவர்மன் பணிந்து நின்றான். சிவனடி யாரும் சொல்லி வைத்தாற்போல் அங்கே சந்திரஹாரத் துடன் வந்து சேர்ந்தார். சிவனடியார் குமுதத்தை ஒரு தடவைத் திரும்பிப் பார்த்தார். காங்கேயனைப் பார்த் தார். குமுதம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பராந்தகன், மாறவர்மனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். தன் அருகேயிருந்த திருமந்திர ஓலை நாய கத்தை நோக்கி, சிங்கவரையனுக்கு நன்றி தெரிவித்து ஓலை அனுப்புமாறு கட்டளையிட்டார்.

அரசரின் வாய்மொழிக் கட்டளையை நிறைவேற்று பவர் திருமந்திர ஓலைநாயகம். மன்னரின் குறிப்பறிந்தே அவர், மாறவர்மனை நோக்கி, ''சிங்கவரையன் நலமாக

இருக்கிறாரா?'' என்று பொதுவாக வினவினார். பிறகு மாறவர்மனைக் குறித்து வினவினார்.

''தம்பி, கலபதிபுரத்தில் பல ஆண்டுகளாக நீ தங்கி இருக்கிறாயா? உனக்கு சிங்கவரையரிடம் என்ன பணி?'' என்று கேட்டார்.

''தளபதி'' என்று கம்பீரமாகச் சொன்னான் மாறவர்மன். பராந்தகன், பொருள் பதிந்த பார்வையைத் தனது புதல்வர்கள் பக்கம் செலுத்தினார்.

''தளபதி என்றால்...? ஏராளமாகப் படை வீரர்களை உங்கள் தலைவர் வைத்திருக்கிறாரா?'' என்று கேட்டார்.

மாறவர்மன் மறுமொழி கூறுவதற்குள் பராந்தகன், திருமந்திர ஓலைநாயகத்தை நோக்கி, ''சில மாதங்களுக்கு முன்பு சிங்கவரையனுக்குப் பரிசில்கள் கொடுத்து கௌரவித்தது நினைவில்லையா?'' என்று கேட்டார்.

ரங்கதேவியை அழைத்துக் கொண்டு வீரமாதேவி அங்கு வந்து விட்டாள். குமுதத்தின் மிக அருகே ரங்கதேவி நின்று கொண்டாள். குமுதத்திற்கு முட்புதரருகே நிற்பது போலிருந்தது.

மாறவர்மன் குமுதத்தை நோக்கினான். குமுதமும் மாறவர்மனை நோக்கினாள், பயங்கலந்த பார்வையால் இருவரும் பேசிக்கொண்டனர்.

சிவனடியார் பராந்தகனை நோக்கி, ''பராந்தகா! சந்திரஹாரத்தை உலையிலிடவே வந்தேன். பிறகு இந்த நகைகளை இடலாம்'' என்று சொல்லிக் கொண்டே ''ஹர ஹர மகா தேவ்'' என்று கோஷமிட்டவாறு சந்திர ஹாரத்தைக் கொழுந்துவிட்டெறியும் தீயின்மீது அமைந்த கொப்பரையில் இட்டார், தளதளவென்று கொதித்துக் கொண்டிருந்த குழம்பு போன்ற உருகிய தங்கத்துடன் ஹாரமும் சேர்ந்தது.



''பராந்தகா, இனி உமக்கு நல்ல காலம், உமக்குள்ள ஒரே விரோதியான பாண்டியனையும் நீ விரைவில் வென்று விடலாம். வீரபாண்டியன் உயிருடன் இருக்கும் வரை உன் மனத்தில் அமைதி இராது'' என்றார் சிவனடியார்.

''நான் நினைத்ததைச் சொன்னீர்கள், அடிகளாரே!'' என்று புகழ்ந்தார் பராந்தகன்.

மாறவர்மன், சிவனடியாரைக் கோபத்துடன் திரும்பி நோக்கினான். அவனுடல் துடித்தது. அவனால் அப்போது என்ன செய்ய முடியும்? சிவனடியார் கம்பீரமாக தலையசைத்து, ''வீர விஜயாலயன் மரபில் வந்த குஞ்சரமல்லனே! உனக்கு உறுதுணையாக களிறுகள் பலர் துணையுள்ளனர். அரிஞ்சயனும், உத்தமசீலியும், கோவிந்த வல்லவரையனும், போர்க்களத்தில் வீரதீரப் பராக்கிரமங்களைக் காட்டுவது போன்று உங்களுக்கு மற்றொரு இளஞ்சிங்கம், இப்போது கிடைத்திருக்கிறான்'' என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

அடிகளார் யாரைச் சொல்லுகிறார் என்று அனைவரும் அவர் முகத்தையே நோக்கினார்கள்.

''கலபதி சிங்கவரையன் சரியான தளபதியைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார். இந்த வீரவாலிபன் முகத்தைப் பார்த்தாலே அஞ்சா நெஞ்சமுடன் போர்க்களத்தில் சாகசங்கள் பல புரிய வல்லவன் என்று தெரிகிறது. சோழ சக்கரவர்த்தி அவர்களே! விரைவில் மதுரையை நோக்கிப் படைகளை அனுப்புங்கள், இந்த வாலிபன் மாறவர்மன் தலைமையில் படைகள் செல்லட்டும்'' என்றார்.

அங்குக் கூடியிருந்தவர்கள் அனைவரும் திகைத்தனர். மாறவர்மனை அங்கிருந்தவர்கள் அனைவரும் நோக்கினர். குமுதத்தின் விழிகளில் ஒளிவீசியது. அன்பா, பெருமையா, பொறாமையா என்று இனம் தெரியாவிட்டாலும் குமுதத்தின் உள்ளத்தில் ஒருவிதப் பய உணர்ச்சி எழுந்தது.

அது விழிகளில் பிரதிபலிக்கவில்லை. மதுரை மீது படையெடுத்துச் செல்ல மாறவர்மனா? அடிகளார் மீது குமுதத்திற்குக் கோபம் பொங்கியது. நிச்சயமாக அடிகளார் தம்மை ஒழித்துக்கட்டத் திட்டமிடுகிறார் என்று அவள் முடிவு செய்துவிட்டாள். காங்கேயனைக் கவலையுடன் நோக்கினாள்.

''என்ன சொன்னீர்கள்? சிங்கவரையனின் தளபதி போர்க்களத்தில் தலைமை தாங்குவதா? எங்கள் வாள் மழுங்கி விட்டதா? தோள்கள் சரிந்து எலும்புக்கூடாகி விட்டனவா? வீரக்கழல்களை அவிழ்த்து எறிந்து வளையல்களைப் பூண்டோமா? என் இளவல் இல்லையா? மருமகன் கோவிந்த வல்லவரையர் இல்லையா? யாரோ ஒரு புதிய இளைஞனைச் சிபாரிசு செய்கிறீர்களே! அடிகளாரே என்ன வார்த்தை புகன்றீர்கள்?'' என்று அரிஞ்சயன் கோபக்குரல் கொடுத்தான்.

தொடர்ந்து உத்தமசீலியும், கோவிந்தனும் ஹூங்காரமிட்டனர்.

அடிகளார் கையமர்த்தி, ''உங்களை நான் குறைவாக மதிப்பிடவில்லையே! நூறு பேர்கள் அடங்கிய சிறுபடை போதும் வீரபாண்டியனைச் சிறைபிடிக்க. அந்த படைக்கு இந்த வாலிபன் தலைமை தாங்கினால் போதும் என்ற பொருளில் சொன்னேன். ஆகா! அரிஞ்சயன் செல்லட்டும். உத்தமசீலி செல்லட்டும். மருமகன் கோவிந்த வல்லவரையர் போரை மறந்துப் பல ஆண்டுகள் ஆகியிருக்கும். அவரும் யுத்த சன்னத்தராகட்டும். சிறுபூச்சியை நசுக்க மாவீரர்கள் எதற்கு என்ற பொருளில் கேட்டேன்'' என்றார்.

அமைதி நிறைந்த அந்த இடத்தில் கலகலப்பு அதிகமாகியது. பராந்தகன் கையமர்த்தி ஆரவாரத்தை அடங்கச் செய்தார்.



''அடிகளாரே! என் புதல்வர்களின் வீர உணர்ச்சி மங்கவில்லை. மருமகனாரும் போருக்குச் சித்தமாகி விட்டார். மதுரை அரியணை தனக்குக் கிடைக்கும் என்ற ஆவலில் அவர் ஒருவரே படைகளுக்குத் தலைமை தாங்குவார். என் எண்ணமே வேறு. உத்தமசீலி இதுவரை போர்க்களங்களுக்குச் செல்லவில்லை. உத்தமசீலி படைகளை நடத்திச் செல்லட்டும். மாறவர்மன் உடன் செல்லட்டும். சுவாமி, படைகள் புறப்பட நல்ல நாளாகப் பார்த்துச் சொல்லுங்கள்'' என்றார்.

''வீரவேல், வெற்றிவேல்'' என்ற கோஷம் அங்கே எழுந்தது.

மாறவர்மன் திகைத்தான்; தான் காண்பது கனவா நனவா என்று அவனுக்குப் புரியவில்லை. ''இது என்ன கொடுமை? எனது பிறந்த நாட்டின் மீது நானே படையெடுத்துச் செல்ல வேண்டுமா?'' என்று வேதனையுடன் திரும்பினான்.

ரங்கதேவியின் முகத்தில் ஒருவிதக் கோபம்; குமுதத்தின் முகத்தில் வேறு ஒருவிதக் கோபம்!

## 32. மதியும் தோளும்

''தளபதியாரே, நில்லும், நில்லும்'' என்று கூவிக் கொண்டே சிவனடியார் மாறவர்மனைப் பின் தொடர்ந்தார். மாறவர்மன் திரும்பிப் பார்க்காமலேயே நடந்தான். அவனுக்கு ஏனோ சிவனடியாரின் பேச்சும் போக்கும் பிடிக்கவில்லை. சிவனடியார் 'சிவ சிவ' என்று பக்தியில் ஈடுபட்டு எங்காவது கோயில், குளக்கரை, குகை, காடு என்று இருக்காமல் ராஜ்ய விவகாரங்களில் தலையிடுவது கண்டு கோபமே வந்தது. 'அவர் உத்தரவிடுகிறார். சோழ மன்னர் அதற்குத் தலையசைக்கிறார். சோழ

சாம்ராஜ்யம் உருப்பட்ட மாதிரிதான்' என எண்ணினான். மறுகணம், சோழநாடு உருப்படாமல் அழிந்து போவதற்குச் சிவனடியார் மிகவும் உதவுகிறார் என்றால் அவரைப் பாராட்டத்தான் வேண்டும். அவர் மேலும் மேலும் யோசனைகள் சொல்லட்டும். சோழ நாடு பாழாகட்டும் என்று நினைத்தான்.

மறுகணமே அவன் சிந்தனை இப்படி ஓடியது. பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல நல்ல சமயமிது என்று யோசனை சொல்கிறாரே, இது என்ன அநியாயம் என்றும் எண்ணினான். அவன் உடல் ஒருமுறை குலுங்கியது. சோழர் படைகள் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்கும்போது நாம் தலைமை வகிக்க வேண்டுமாம்; இதிலும் சிவனடியாரின் சூழ்ச்சிதான் மேலோங்கி நிற்கிறது. இதை எப்படித் தலைவர் வல்லபனுக்குத் தெரிவிப்பது என்று வேதனைப்பட்டான். மதுரையில் தலைவர் வல்லபன் எப்படியிருக்கிறாரோ, என்ன செய்கிறாரோ என்ற கவலையும் அவனுக்கு ஏற்பட்டது.

''நம்மிடம் மகத்தான பொறுப்பை ஒப்படைத்தார். நாம் என்ன செய்கிறோம்? நல்ல வேளை காங்கேயனையும் குழந்தையும் சந்தித்துவிட்டோம். அவர்களும் முன் ஏற்பாட்டின்படி சோழ சக்கரவர்த்திகளிடம் பணி புரியச் சேர்ந்து விட்டார்கள். ஆனால் நாம் என்ன செய்கிறோம்...? கலபதிபுரத்தில் தளபதியாக இருக்கிறோம். என்ன பயன்? இந்தக் கணமே கலபதிபுரத்திலிருந்து ஓடிப் போய் விடலாமா? ஓடிப்போய் என்ன செய்வது?''

என்ன செய்வது என்று யோசனை கேட்பதற்காகத் தான் மாறவர்மன் காங்கேயன் தங்கியிருக்குமிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அந்தச் சமயம் அந்தப்புரத்துப் பெண்களின் அழைப்பை ஏற்று ரங்க தேவி அவர்களுடன் குதூகலமாகப் பேசி காலங்கழிக்கச் சென்றுவிட்டாள்.



பராந்தக சோழருக்கு ரங்கதேவியைக் கண்டதுமுதல், தனது புதல்வர்களுள் ஒருவருக்கு அவளை மணம்புரிவித்து விட்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. சிங்கவிரையனிடம் நேரே சென்று பேசினால் என்ன என்ற யோசனையும் உதித்தது. அதனால் ரங்கதேவியையும் மாறவர்மனையும் உடனே புறப்பட விடை கொடுக்காமல் 'இரவு தங்கிவிட்டுச் செல்லலாம்' என்று கூறினார். ரங்க தேவி அந்தப்புர மகளிருடன் பேசச் சென்றபோது மாறவர்மன் இதுதான் தக்க சமயம் என்று காங்கேயன் தங்கியிருக்குமிடத்தை நோக்கிச் சென்றான். அப்போதுதான் அடிகளார் அவனைப் பின் தொடர்ந்தார்.

''என்ன தளபதியாரே! போர்க்களத்திலிருந்து ஓடுவது போல் விரைந்து ஓடுகிறீரே? கொஞ்சம் நின்று மெல்லத் தான் செல்லுங்களேன்'' என்றார்.

மாறவர்மன் கோபத்துடன் சட்டென்று திரும்பினான். காவியுடை அணிந்த சந்நியாசியாக மட்டும் அவரில்லாமலிருந்தால் மேலே பாய்ந்துக் குத்திக் குதறியிருப்பான்.

''அடிகளாரே! சிதம்பரம் கோயில் மேற்குத் திக்கில் இருக்கிறது'' என்றான் சற்றுக் கோபத்துடன்.

''ஆமாம், இருக்கிறது இருந்து விட்டுப் போகட்டும்'' என்றார் அடிகளார்.

''அங்கே போகாமல் ஏன் என்னைத் தொடர்ந்து வந்து இப்படித் தொல்லை கொடுக்கிறீர்கள்...?'' என்று சீறினான் மாறவர்மன்.

''உன்னைத் தனியே சந்திக்கவேண்டும் என்ற ஆவலில் உன்னைத் தொடர்ந்து ஓடிவருகிறேன். நீ ஓடுகிறாய்-நானும் ஓடி வருகிறேன். ஆமாம் எங்கே போகிறாய்?'' அடிகளார் விடவில்லை.

மாறவர்மனுக்குக் கோபம் பொங்கியது, ''எங்கே போனால் என்ன உமக்கு? அடிகளாரே, இப்படியே திரும்

பிப் போய்விடுங்கள். நீங்கள் சோழ சக்கரவர்த்திக்கு வேண்டியவர் என்பதால் என் சொந்த விஷயத்தில் தலையிடலாம் என்று நினைத்துவிட்டீர்களோ?'' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தான்.

''தம்பி மாறவர்மா! நான் உனக்குத்தான் வேண்டியவன். உன்னிடம் தனியே பேசவேண்டும் என்று சொன்னது உன் நன்மைக்காகத்தான். நீ காங்கேயனைக் காணப் போகிறாயோ?'' என்று அடிகளார் கூறியவுடன் மாறவர்மன் திடுக்கிட்டான்.

உண்மையிலேயே முற்றும் உணர்ந்த ஞானியோ இவர்? அவன் நடையில் வேகம் குறைந்தது. சற்று நின்றான்.

''தம்பி! காங்கேயனிடம் பேச மிக முக்கியமான செய்தி இருக்கும் என்பது உண்மைதான். நான் தடுக்கவில்லை. ஆனால், ஒரேயொரு சந்தேகம் நீ எப்படியப்பா கலபதிபுரம் போய்ச் சேர்ந்தாய்? உன்னுடன் வந்த பெண்ணை உனக்கு மணம் முடிக்கப் போகிறார்களா?'' என்று அடிகளார் கேட்டவுடன் அவனுக்கு வியப்பு மிகுந்தது. என்றாலும் உடனே மறுமொழி கூறி தனது மிடுக்குத்தனத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதற்கு மாறாக அடிகளாரை நோக்கி ஒரு கேள்வியைக் கேட்டான்.

''நீங்கள் சிவனடியாரா அல்லது சோழநாட்டின் ஒற்றரா? என்னைப் பற்றி உங்களுக்கு இவ்வளவு அக்கறை ஏன்?'' என்றான்.

அடிகளார் மெல்லிய முறுவலுடன், ''தம்பி, மாறவர்மா! உன் மீது எனக்கு அக்கறைதான் ஒற்றர்கள்தாம் இப்படி விசாரிப்பார்களா? கேட்காமலேயே தெரிந்து கொள்வார்கள். நான் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு காரணம் எனக்குச் சில விஷயங்களை அறிந்து கொள்ள முடியவில்லை'' என்றார்.



''ஏன், உங்கள் ஞான திருஷ்டியினால் அவற்றை அறிய முடியாதா? நீங்களே அறிந்து கொள்ளுங்களேன். நான் எப்படிக் கலபதிபுரம் போய்ச் சேர்ந்தேன். என் மீது சிங்கவரையன் மகளுக்குக் காதலா? எனக்குத்தான் கல்யாணம் செய்து கொடுக்கப்போகிறார்களா? இவற்றையெல்லாம் தாங்கள் அருள்பார்வையினின்று அறிய முடியாதா'' என்று கேட்டவுடன் அடிகளார் சற்றுத் திரும்பிக் கொண்டார்.

''சரி, நீ சொல்ல வேண்டாம். என்னால் தெரிந்து கொள்ள முடியாதா? பாண்டிய நாட்டினின்று நீங்கள் நாலு பேர் வந்தீர்கள். நீ கடலில் வீழ்ந்தாய். பாண்டிய நாட்டு ஒற்றன் என்று உன்னைத் தெரிந்து கொள்ளாமல் சிங்கவரையன் உன்னைத் தன் வீட்டிலேயே வைத்துக் காப்பாற்றுகிறான். தன்னிடமுள்ள செல்வத்தைக் கொண்டு தான் ஓர் சிற்றரசன் என்றே எண்ணிவிட்டான். படை வீரர்கள் நிறைய இருப்பது போலும், அதற்குத் தளபதி ஒருவன் தேவை என்பது போலும். நினைத்து உன்னைத் தளபதியாக்கி விட்டான். தன் மகளையும் உனக்கு மணம் செய்விக்க நினைக்கின்றான். இவ்வளவுதானே! நீ சொல்லாவிட்டால் போ! ஏதோ உன் மீது எனக்குப் பார்த்தவுடனேயே ஏற்பட்ட பாசத்தால் நெருங்கிப் பேச வந்தேன். எனக்குத் தலைக்கு மேல் வேலையிருக்கிறது. நான் போகிறேன். சிங்கவரையனை இன்று இரவே சந்திப்பேன் அவன் காதிலும் உன்னைப்பற்றி ஒரு வார்த்தைப் போட்டு வைக்கிறேன்'' என்று கூறிக் கொண்டே மாறவர்மனது மறுமொழிக்கு எதிர்பாராமலே விரைந்து நடந்தார்.

மாறவர்மன் ஒரு கணம் சிலைபோல் நின்றான். பிறகு ''சுவாமி சுவாமி'' என்று அழைத்தான். அவரைப் பின் தொடர்ந்துச் சென்று அவரிடம் சமாதானமாகப் பேச நினைத்தான். இவர் என்ன சொல்கிறார்? நமது பூர்வ கதையையும் தெரிந்து வைத்திருக்கிறார். அதே சமயம்

பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்லத் தளபதியாகவும் விளங்கச் சொல்கிறாரே?

அடிகளார் மிக வேகமாக நடந்தார். அவர் நடைக்கு ஏற்ப அவனால் நடந்து ஓடி அவரைப் பிடித்து விட முடியும். ஆனால் யாராவது பார்த்து, ஏதாவது நினைத்தால்... அதனால் அங்கேயே நின்று விட்டான்.

நடப்பது நடக்கட்டும். இவர் சோழ சக்கரவர்த்தி யிடம் சொல்லி அவர் என் தலையை வாங்குவதற்குள் எவ்வளவோ மாறுதல் இங்கே நேர்ந்துவிடப் போகிறது. அதற்குள் காங்கேயனையும் குமுதத்தையும் சந்தித்துவிட வேண்டும். அவர்களைச் சந்தித்து அடுத்த திட்டத்தை மிக விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத் துடன் காங்கேயனைச் சந்திக்க விரைந்தான்,

காங்கேயனும், பெருமாளும் சத்திரத்துத் திண்ணை யில் கவலையுடன் உட்கார்ந்திருந்தனர். மாறவர்மனை எப்படிச் சந்திப்பது என்பது அவர்களது கவலை. கவலையுடன் பயமும் சேர்ந்தது.

மாறவர்மன் வருவதைப் பார்த்தவுடன்தான் அவர்களுக்குப் புதுத்தெம்பு வந்தது. 'தம்பி' என்று ஓடிப் போய் அவனைத் தழுவிக் கொண்டார் காங்கேயன்.

''உச் உச்'' என்று அவரது கரங்களைத் தோளிலிருந்து விலக்கி, ''என்ன, நீங்கள் கூடவா சமய சந்தர்ப்பத்தை மறந்து விடுகிறீர்கள். என்னை முன்பாகவே தெரிந்த தாகக் காட்டிக் கொள்வது உங்கள் நோக்கமா?'' என்று மரியாதையுடன் கடிந்த பிறகு தான் காங்கேயனுக்கு விவரம் புரிந்தது.

''சரி...சரி... நீ சௌக்கியமாயிருந்தால் சரி'' என்றார் காங்கேயன்.

''நலமாயிருந்தது என்ன பலன் ஐயா! அதற் காகவா இங்கு வந்தோம்'' என்றான் மாறன். நாற்



புறமும் திருப்பிப் பார்த்து ''நாம் இங்கேயே நின்று பேசுவது சரியல்ல என்று நினைக்கிறேன்; வேறு எங்காவது போய் விடுவோமா?'' என்றான்.

''ஆமாம், ஆமாம். நாம் அந்த மாந்தோப்பிற்குப் போய் விடுவோம் தம்பி! அங்கே நிறைய ஆபரணங்களைப் புதைத்து இருக்கிறோம். எல்லாம் நமது அரசரின் நகைகள்'' என்றார் காங்கேயன்.

''நமது அரசர் என்று யாரைச் சொல்கிறீர்கள்? இப்போது தலைவணங்கி குற்றேவல் செய்கிறோமே சோழ மன்னரையா?'' என்று சிரித்தவாறு கேட்ட மாறவர்மன் தன் முக பாவத்தை மாற்றிக் கொண்டு ''ஐயா, நாம் ஒரு கணப்கூட வீண் வார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. அந்தச் சிவனடியாருக்கு நம்மைப்பற்றிய செய்தி முழுவதும் தெரியும்போலிருக் கிறது, ஒருவேளை இன்றே அவர் சக்கரவர்த்திகளிடம் சொல்லிவிட்டாலும் சொல்லி விடலாம். நாம் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்'' என்றான்.

''எனக்கும் அடிகளாரின் போக்குப் பிடிபடவில்லை. அவர் உண்மையான சிவனடியார் என்றே தோன்ற வில்லை. பராந்தக சோழர் படைகளுக்குத் தலைமை வகித்துப் பாண்டிய நாட்டிற்குச் செல்லப் போகிறாயா?'' என்று கேட்டார்.

''அதைப்பற்றி நாம் உடனே பேசி முடிவு செய்ய வேண்டும். வாருங்கள் போவோம்'' என்றான் மாறன்.

''நான் குமுதத்தையும் தோப்பிற்கு வருமாறு செய்தி சொல்லி வருகிறேன், நீயும் பெருமாளும் ஆற்றங்கரை தோப்பிற்குச் செல்லுங்கள். நானும குமுதமும் வந்து விடுகிறோம்'' என்று காங்கேயன் புறப்பட்டார்.

''அந்தப்புரத்தில் இளவரசிக்குப் பணிப் பெண்ணாக இருக்கும் குமுதத்தால் அவ்வளவு எளிதில் வெளியே வரமுடியுமா?'' என்று கேட்டான் மாறன்.

''நேற்று சந்திரஹாரம் களவு போன பிறகு பணிப் பெண்களை இளவரசியிடம் அதிக நேரமிருக்க அனுமதிப்ப தில்லை. ஆனால் எனக்குள்ள மரியாதை மட்டும் இன்னும் குறையவில்லை. பராந்தகருக்கு எங்களிடம் சந்தேகம் ஏற்படும் முன்பு நாம் புறப்பட்டு விட வேண்டும். நாம் தோப்பில் சந்திக்கும்போது பேசிக் கொள்வோம்'' என்றார் காங்கேயன்.

ஃ ஃ ஃ

மாந்தோப்பில் ஆபரணங்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்தை பெருமாள் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தான்.

''மாறவர்மா, நீ இன்றே உனது ஊருக்குத் திரும்பி விடுவாயா?'' என்று பெருமாள் கேட்டான்.

''எனது ஊர்...'' என்று வேதனையுடன் சிரித்த மாறன், ''வேண்டா வெறுப்பாக இருக்கிறேன். உங்களை யெல்லாம் காண்போமா என்ற கவலை எனக்கு ஏற்பட்டு விட்டது. இந்த ஆற்றுக்கு மறுகரையில் நான் இருக்கிறேன். நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். சந்திக்க முடியாமல் நாட்கள் ஓடி விட்டன'' என்று தன் கவலையைத் தெரிவித்தான் மாறவர்மன்.

குமுதம் விரைந்து வந்து கொண்டிருந்தாள். உடன் காங்கேயனைக் காணவில்லை. குமுதத்திற்கு மாற வர்மனைக் காண்பதில் மிகுந்த குதூகலம். இவ்வளவு நாட்களாக வெளியிடாமல் திணறிக் கொண்டிருந்த உணர்ச்சியை வெளிப்படுத்தி விடலாமா என்ற வேகம் அவள் உடலெங்கும் பொங்கிப் பிரவாகித்தது. அதே போதில் அவனை நெருங்கிப் பழகி, அவனுக்கே சொந்தம் போல் அவனுடன் வந்திருக்கும் ரங்கதேவியின் நினைவு வந்தவுடன் குமுதத்திற்கு வேதனை மிகுந்தது.

ரங்கதேவியிடம் மாறவர்மன் நெருங்கிப் பழகியிருக்க வேண்டும். இல்லாவிடில் அரசரைக் காண மாறவர்மன்



வரும்போதும், அவ்வளவு உரிமையுடன் பின் தொடர் வாளா?

ரங்கதேவியை அந்தப்புரத்தில் பார்த்ததால் சிற்றர சரின் மகள் என்பதால் அவளுக்குச் சிறப்பான உபசாரம் நடந்தது.

தன்னுடன் சமதையாக உட்கார வைத்து அரசியார் பகல் உணவு பரிமாறும்போது குமுதமும் கலந்து கொண்டாள். ரங்கதேவியை நெருங்கிப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவள் அங்கலாவண்யத்தைப் பெண் என்ற முறையில் மதிப்பிட்டாள்.

கடலருகே வாழும் கலபதியின் பெண் ஆதலால் பரம் பரையாக வந்த உடற்கட்டு அவளிடம் காணப்பட்டது. மென்மையான கரம் என்றாலும் அதில் தேக்கு மரத்தின் உறுதி யிருந்தது.

'பெரிய இடத்துப்பெண் என்பதால் எல்லளவு மரியாதை...சரியாகப் பேசக் கூடத் தெரியவில்லை' என்று அவளது உரையாடல் திறமையைப் பற்றி குமுதம் முடிவு செய்து கொண்டாள். சாதுர்யமான அறிவில்லாமல் இவள் எப்படி மாறவர்மனிடம் பேசியிருப்பாள் என்பதைக் கற்பனைச் செய்து பார்த்தாள்.

''காதல் மொழி பேசுவதற்குத் திறமையோ அறி வாற்றலோ தேவையா?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

''என் உள்ளத்தில் உணர்ச்சிகளைக் குவித்து வைத்தி ருக்கிறேன். மாறவர்மனைச் சந்திக்கும்போது என்னென்ன பேச வேண்டுமென்று ஒத்திகையும் பார்த்துக் கொண்டி ருக்கிறேன். ஆனால் பேசுவதற்கு வாய்ப்பு? சந்திக்கும் போது நம்மால் ஒருசொல் கூடப் பேச முடியப் போவ தில்லை. அதனால் நமக்குச் சாமர்த்தியம் போதாது என்று

பொருளா?'' என்று தன்னைத்தானே கேட்டுச்சமாதானப் படுத்திக் கொண்டாள்.

அவள் நினைத்தபடியே ஆகிவிட்டது. மாறவர்மனும் குமுதமும் சந்தித்தனர்.

குமுதத்தின் விழிகளைச் சந்திக்க மாறனால் முடிய வில்லை.

'எனக்கு என்ன வந்துவிட்டது? கடலில் படகில் வந்த போது எவ்வளவு முறை அவளைப் பார்த்தோம். அப்போது தோன்றாத நாணம், இந்த விழிகளுக்கு இப்போது எங்கிருந்து வந்தது?' அவனுக்குப் புரியவில்லை.

'என்னென்னவோ பேசவேண்டும் என்று வந்தோமே. பேசுவதற்கு வார்த்தைகளே வரவில்லையே. இந்த நாக்கு இப்படிச் சதி செய்கிறதே. நெஞ்சம் ஒத்துழைக்க மறுக் கிறது. இதயம் வழக்கத்தைவிட அதிக ஒலி எழுப்புகிறதே', என்று குமுதம் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

'அவருக்கும் அப்படித்தானோ?' என்று கீழ்க் கண்ணால் பார்க்கும்போது மாறவர்மன் தலை குனிந் திருப்பது தெரிந்தது.

'நமக்குத்தான் மனத்தில் ஒருவித சஞ்சலம். உள்ளத் திலே வேறுவித எண்ணம்; அது விழிகளில் பிரதிபலிக் கிறது. பேச்சிலும் பிரதிபலித்து விட்டால்...? குமுதம் தவறாக நினைத்து விட்டால்...?' குமுதம் என்ன நினைக்கிறாள் என்று பார்க்க விரும்பி விழிகளை உயர்த்தினான் அவன்.

குமுதம் தரையில் கால் விரலால் ஏதோ கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

குமுதம் முன்பைவிட எழில் நிறைந்துக் காணப்படு கிறாள். புது வனப்பு உடலெங்கும் தழுவி நிற்கிறது. 'ஓ! ராஜபோகமான உணவு, அந்தப்புரத்தில் இளவரசி



யிடம் பணியென்றால் கேட்க வேண்டுமா?' மாற வர்மனுக்குச் சிரிப்பு வந்தது.

மௌனத்தை யார் கலைப்பது, மாறவர்மனே கலைத்தான். ''பெரியவர் காங்கேயன் உன்னுடன் வரவில்லையா?'' என்று கேட்டு அவள் முகத்தை முறுவலு டன் நோக்கினான்.

''அவர் வந்து விடுவார்'' என்று குமுதம் பேசினாள். இப்போது மௌனக் குளத்தில் சிறிய அலைகள் எழத் தொடங்கின. சங்கோஜம் பறந்தது.

''என்னைப்பற்றிய நினைவு உங்களுக்கு இருந்ததா? கடலில் வீழ்ந்து விட்டவன் கடலோடு போயிருப்பான் என்று தானே நினைத்தீர்கள்?'' — மாறன் கேட்டான்.

குமுதம் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளது அகன்ற விழிகள் மேலும் விசாலமாயின.

''கடற்கரையிலேயே நாங்கள் காத்திருந்தோம். கேட்டுப் பாருங்கள் பெருமானை'' என்று, பெருமான் பக்கம் திரும்பிய போது பெருமான் அங்கில்லை. சற்றுத் தொலைவில் அவன் மரத்தடியில் எதையோ தேடிக் கொண்டிருந்தான். புதைத்திருக்கும் ஆபரணங்களைத் தேடுகிறானோ?

குமுதம் குரலை இப்போது மாற்றிக் கொண்டாள். தைரியம் பிறந்தது. ''நாங்கள் காத்திருந்தோம். நான், கவலைப்பட்டேன். ஏனோ எனக்கு அப்படியொரு வேதனை. அதற்குச் சாட்சியிருக்கிறது தங்களுக்கு எப்படியோ?'' என்று குமுதம் கேட்டாள்.

மாறன் பரபரப்புடன், ''எனக்கும் அப்படித்தான். கடலிலிருந்து மீட்கப்பட்டு நான் கண் விழித்த போது நீ இருக்கிறாயா என்று தான் தேடினேன்.''

''நானில்லை, ஆனால் அங்கே அவள் இருந்தாள். நான் தான் என்று அவளை நினைத்துக் கொண்டீர்கள். அப்படித்தானே?''

மாறனுக்குப் புரிந்துவிட்டது. ரங்கதேவியைத்தான் குமுதம் குறிப்பிடுகிறாள் என்று புரிந்து கொண்டான்.

''அதெப்படி குமுதம் ரங்கதேவியாகிவிட முடியும்?'' என்று மாறன் குறும்பு நகைமிளிரக் கேட்டான்.

''ஆம்; முடியாதுதான். சிற்றரசர் மகளாகி விட முடியுமா? தளபதிக்குச் சமமாக ஒயிலாக நடந்து வர முடியுமா?'' என்று குமுதம் மறுமொழி கூறும்போது அதில் சீற்றமிருந்தது; பொறாமையாகக்கூடக் கூறலாம்.

மாறன் புரிந்துகொண்டு விட்டான். படகில் ஓரிரவு பழகிய குமுதம் தன் உள்ளத்தை ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழகியவள்போல் மாற்றிக் கொண்டு விட்டதையும் உணர்ந்தான். தனக்கு ரங்கதேவியின் மீது எள்ளளவும் அபிமானமில்லை என்பதை. அவன் எப்படிச் சொல்லுவான் மேலும் குமுதத்திற்குத் தன் மீது உள்ள அன்பு காதல் வயப்பட்டது என்பது உறுதிதானோ என்பதை எப்படி அறிந்து கொள்வான்.

''தளபதி — என்ற போலிப் பட்டத்தைவிட பாண்டிய நாட்டுத் தொண்டன் என்று நான் அழைக்கப்படுவதில் தான் பெருமை அடைகிறேன். இந்தத் தொண்டன் அருகே ஒயிலாக நடந்துவர ஒரே ஒருவருக்குத்தான் உரிமையுண்டு'' என்றான் மாறவர்மன்.

''அந்தப் பாக்கியசாலி யாரோ?'' என்று குமுதம் கேட்டாள். மாறவர்மன் குமுதத்தின் அருகே நெருங்கினான். ''வேறு யாராக இருக்க முடியும்? எந்த ஒரு பாண்டிய நாட்டிற்காக உயிர் உடலைத் தியாகம் செய்யச் சபதமெடுத்துப் பெண் குலத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக, துணிவுடன் வந்தி -க்கும் நீதான்'' என்று கூறி அவள்



எதிர்பாராதபோது அவள் கரங்களை எடுத்துத் தன் கரங்களுடன் சேர்த்துக் கொண்டான். குமுதத்தின் உடல் சிலிர்த்தது.

காலையில் ஆற்றங்கரையில் படகிலிருந்து இறங்கும் போது ரங்கதேவியைக் கைலாகு கொடுத்து இறக்கியதும், அவள் அவனுடைய தோள்களைத் தழுவிக் கொண்டதும் அவன் நினைவுக்கு வந்தன.

''குமுதம் ஏமாந்து விடமாட்டாள். இந்தக் கரத்துக் குரியவள் ரங்கதேவி. தங்கள் தோள்களைத் தழுவக் கூடியவள் ரங்கதேவி. ஏன் என்னிடம் பொய் சொல்கிறீர்கள்'' என்று கூறியவள் மாறன் ஏதோ கூற வாயெடுக்கும்போது குறுக்கிட்டு, ''உம், அதைப் பற்றி இப்போது என்ன பேச்சு? காதல் நாடகம் நடத்தவா நாம் இங்கு வந்தோம். நம் முன்பு மகத்தான பணி விரிந்து கிடக்கிறது. நாம் இரண்டு விரோதிகளை எதிர்த்து நிற்க வேண்டும். ஒருவருடன் புஜ பலத்தைக் காட்ட வேண்டும், மற்றவருடன் மதிபலத்தைக் காட்ட வேண்டும்'' என்றாள்.

''மதிபலத்தை யாரிடம் காட்ட வேண்டும்?'' என்று மாறவர்மன் கேட்டான்.

''என்னைக் கேட்டால், மதிபலத்தால் வெல்ல வேண்டியவர் சிவனடியார் என்பேன். அப்படி வெல்ல வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு இருந்தால் கலபதி புரத்து சிங்கவரையனும், அவன் மகள் ரங்கதேவியும் தான்'' என்றாள்.

மாறவர்மன் குமுதத்தின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். மிக அருகே அவள் நின்றுகொண்டு பேசியபோது விம்மிய மார்பகமும், துடிக்கும் உதடுகளும் அப்படியே அவளை அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பை அளித்தன. மாறவர்மன் நெருங்கினான்.

# 23. இருவருக்குப் பரிசு!

காங்கேயன் விரைந்து வருவது மட்டும் தெரிந்திராவிடில் மாறவர்மன் குமுதத்தை அணைத்துக் கொண்டிருப்பான்.

குமுதம் சற்று விலகியே நின்றாள். 'பொறுத்தருளுங்கள். நானும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிட்டேன். காதல் பேச்சுப் பேச இப்போது நேரமுண்டா? அது நியாயம்தானா?'' என்றாள்.

மாறவர்மனும் தலை குனிந்து கொண்டான். ''என்னை நீ தவறாக நினைக்காதிருந்தால் சரி'' என்றான். பிறகு ஏதோ பேசினான்.

''கேட்க வேண்டாம் என்றுதான் நினைக்கிறேன்.. நீங்கள் அவளிடம் அப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது...'' என்றாள் குமுதம்.

''யாரிடம்? எதைச் சொல்கிறாய் நீ?'' மாறவர்மன் பரபரப்புடன் கேட்டான்.

குமுதம் காலையில் ஆற்றங்கரையில் தான்கண்ட நிகழ்ச்சிகளைக் கூறினாள்.

மாறவர்மன் பெரிதாகச் சிரித்து விட்டான். ''ஐயோ பேதைப் பெண்ணே! படகிலிருந்து அவள் இறங்க உதவினேன், அவ்வளவுதான்'' என்று கூறும்போது ''அவள் தழுவிக் கொண்டாள் இல்லையா?'' குமுதம் குறுக்கிட்டாள்.

''குமுதம், அவள் என்னை உயிருக்கு உயிராய் நேசிக்கிறாள். அவளை எனக்கு மணம் புரிவிக்க அவள் தந்தைக்கும் எண்ணம் உண்டு'' என்றான் மாறவர்மன்.



''நீங்கள் அவளை விரும்பவில்லையா?'' குமுதம் கேட்டாள்.

மாறவர்மன் மறு மொழி கூறவில்லை; அவள் முகத்தையே உற்று நோக்கினான்.

''மணம் புரிந்து கொள்வதாக அவளிடமும் வாக்குக் கொடுத்து விட்டீர்கள். என்னிடம் என்ன சொல்லப் போகிறீர்கள்? பயப்படாதீர்கள். நான் தங்களைக் காதலிக்கவில்லை; என்னை மறந்து விடுங்கள்'' என்றாள் குமுதம் பொய்க் கோபத்துடன்.

''மிகவும் நல்லதாகி விட்டது...'' என்றான் மாறன்.

குமுதம் திடுக்கிட்டாள்! ''என்ன சொல்கிறீர்கள்?''

''குமுதம்! காதல், திருமணம் என்ற பிரச்சனையே என் கொள்கைக்கு அப்பாற்பட்டது. நான் இங்கே வந்தது ரங்கதேவியைக் காதலிக்க அன்று. தலைவர் இட்ட பணியை மறந்து நாம் இப்படியே பேசிக் கொண்டிருப்பதே தவறு! எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிப்போம். மன்னர் வீரபாண்டியன் மீண்டும் அரியணையில் அமர்ந்தவுடன் திருமணத்தைப் பற்றி முடிவு செய்வோம். குமுதம், அடுத்து நடக்க வேண்டியதைப் பேசுவோம். இருதலைக் கொள்ளி போல் நான் சிக்கிக் கொண்டிருக்கிறேனே அதிலிருந்துத் தப்ப எனக்கு வழி ஏதாவது சொல்லு...'' என்றான்.

குமுதம் இப்போது ஏதும் பேசவில்லை. அவள் உடல் ஒருமுறை நடுங்கியது. மாறன் சொல்வது நியாயம்தான். காதல் பேசவா இங்கு வந்தோம்? மறைத்து வைத்திருக்கும் ஆபரணங்களை எடுத்துச் செல்ல வேண்டும். யார் எடுத்துச் செல்வது? சோழ சக்கரவர்த்திகளிடம் பணி செய்வதிலிருந்து நாம் விலகுவது எப்படி? இதற்கு வழி யார் சொல்வார்கள்?

''உமக்கு மட்டுமா வழி? எங்களுக்கும் யாராவது உதவி செய்தாக வேண்டும், சக்கரவர்த்திகளிடம் தொடர்ந்துப் பணியாற்றுவதில் பலன் இருப்பதாகத் தெரியவில்லை. எனக்கு வரும் ஆத்திரத்தில் குறுவாளெடுத் துச் சக்கரவர்த்தியின் மார்பில் குறிவைத்துத் தாக்கி விட்டு ஓடிவிடலாம் என்று தோன்றுகிறது'' என்றாள்.

''குமுதம், குமுதம், அந்தப் பெருமையை என்னிடம் விட்டுவிடு. அதை நான் செய்து விடட்டுமா? எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இன்று இரவு நான் இங்கேயே தங்குகிறேன். ஒரே இரவில் சக்கரவர்த்தி, இளவரசர்கள் அனைவரையும் கொலை செய்து விடு கிறேன். முன் ஜாமத்திலேயே நீங்கள் படகேறித் தப்பி விடுங்கள்...'' என்றான். அவன் விளையாட்டாகக் கூற வில்லை. சொல்லும்போது அவன் உடல் துடித்தது.

முகம் ஜ்வலிக்க, கண்கள் தணலாக, உடல் ஆடமாறன் பேசுவதை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் குமுதம். அவன் சொல்வது போல் செய்துவிடக் கூடியவன்.

''சக்கரவர்த்திகளையும் மற்றவர்களையும் படு கொலை செய்வது அவ்வளவு எளிதன்று. நாம் இன்னும் சிறிது சிந்திப்போம். பெரியவர் காங்கேயனும் வந்து விடட்டும்'' என்று கூறி அவனைச் சமாதானப்படுத்திய போது காங்கேயன் விரைந்து வந்து கொண்டிருந்தார்.

காங்கேயன் முகத்தில் வழக்கத்தை விடத் தெளிவு இருந்தது.

''என்ன மாறா, புதைத்து வைக்கப்பட்ட ஆபரணங் களையெல்லாம் பார்த்தாயா? அவற்றை எப்படி எடுத்துச் செல்வது என்பது பெரிய கவலையாக இருந்தது. அந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டது. அடிகளாரிடம் பேசிக் கொண்டிருந்தேன்'' என்று காங்கேயன் உற்சாகத்


1467
8492611

தோடு பேசியபோது மாறவர்மன் குறுக்கிட்டு ''ஐயா, அடிகளாரிடம் எப்போது பேசினீர்கள். ஆபரணங்களைப் பற்றியா பேசினீர்கள்?'' என்றான் பரபரப்புடன்.

''ஏன்? சிறிது நேரத்திற்கு முன்புதான்...ஐயோ ஆபரணங்களைப் பற்றிப் பேசுவேனா?'' என்றார் காங்கேயன்.

''அடிகளார் என்ன சொன்னார்?'' மாறன் கேட் டான்.

''அடிகளார் உன்னைப் பற்றிப் மிகவும் புகழ்ந்தார். உன் முகத்தைப் பார்த்தாலே வீரம் ஜ்வலிக்கிறதாம். பாண்டியரை வெல்ல உன்னால்தான் முடியுமாம். அதனால்தான் சோழ சக்கரவர்த்திகளிடம் உன்னைப் பற்றி எடுத்துக் கூறி படைகளுடன் அனுப்ப முன் வந்தா ராம்'' காங்கேயன் பெருமையுடன் கூறினார்.

''பொய்...சூது...கபடம்...ஐயா, நீங்கள் கூட அடிக ளாரை நம்புகிறீர்களா? நம் நாட்டின்மீது நாமே படை எடுத்துச் செல்வதா? தாங்கள் சிந்தித்தீர்களா? அடிகளார் செய்யும் சதி இது. அவர் சோழநாட்டு ஒற்றர். நம்மைப் பற்றிப் பூர்ணமாக அறிந்து கொண்டிருக்கிறார். சரியான சமயத்தில் நம்மைச் சிக்க வைக்க அவர் சதி செய்கிறார். நாமும் சிக்கி விட்டோம். என்னைப் போர்க்களத்திற்கு அனுப்புகிறார். நானும் போகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கே தக்க சமயத்தில் என்னைச் சிறைப்படுத்திவிட அவர் செய்யும் சதி இது....'' என்று பரபரப்புடன் பேசினான்.

''ஏன், இப்போதே உன்னைச் சிறை செய்யுமாறு அரசரிடம் சொல்ல அடிகளாராலே முடியாதா? ஏன் அவர் சுற்றி வளைக்க வேண்டும்? எனக்குத் தெரிந்த வரை யில் அவர் ஒற்றரோ, சதிகாரரோ அல்லர். அவர் ஒரு சிவயோகி. வருங்காலம் தெரிந்து வைத்திருப்பவர், சித்து

விளையாட்டறிந்தவர். சந்திரஹாரம் காணாமல் போய் விட்டது. ஆனால், அதை அவர் நொடியில் தன்னிடம் வரவழைத்துவிட்டார். இல்லாவிடில் குமுதத்தின் மீது பழியைச் சுமத்தியிருப்பார்கள்'' என்று மிகவும் மெல்லப் பதட்டமில்லாமல் கூறினார்.

''மாறன் சொல்வதுபோல் எனக்குக் கூட அடிகளார் மீது ஆரம்பத்திலிருந்தே நம்பிக்கை இல்லை. அவர் பார்வையிலேயே விஷமிருக்கிறது...'' என்றாள் குமுதம். மாறனை ஆதரித்துப் பேசுவதிலும் ஓர் ஆனந்தம் அவளுக்கு.

''உனக்கெப்படித் தெரியுமாம்?''—காங்கேயன் கேட்டார்.

''பெண்களுக்குத் தெரியாதது உண்டா?'' என்றான் மாறன். அவனுக்கும் அப்படிச் சொன்னதில் மகிழ்ச்சி.

''அடிகளாரைச் சோழ நாட்டு ஒற்றர் என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் நாம் ஏமாளிகளல்லர். அவரிடம் பேச்சுக் கொடுத்துப் பல விஷயங்களை அறிந்து கொண்டேன். பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதில் அவர் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார். அதன் காரணந்தான் தெரியவில்லை. படையெடுப்பில் நம் எல்லோரையும் சம்பந்தப்படுத்த விரும்புகிறார். மாறன், சோழர் படைகளுடன் செல்கிறானாம். குமுதம் பெருமாள், நான் அனைவரும் படைகளுக்கு உதவியாகச் செல்கிறோம்...'' என்று கூறிச் சற்று நிறுத்தவும், குமுதமும், மாறனும் ஒரே சமயத்தில் ''எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. தங்களை அடிகளார் பேச்சில் மயக்கியிருக்கிறார்'' என்றனர்.

''குமுதம், மாறவர்மா! எனக்கும் உங்களைப் போல் வேகம் உண்டு. இப்போது நமது அறிவைப் பயன்படுத்த வேண்டும். நான் அடிகளாரை நம்பிவிடவில்லை. நம்பி



விடுவதைப் போல் நடிக்கிறேன். இங்கிருந்து நாம் அனைவரும் தப்பிச் செல்ல ஒரே வழி சோழர் படைகளுடன் செல்வதுதான்'' என்றார்.

குமுதமும், மாறனும் தங்களுக்கு இசைவில்லை என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தனர்.

''அதில் ஆபத்து இருக்கிறது. எனக்கு ஏனோ ஒருவிதப் பய உணர்ச்சி ஏற்படுகிறது. பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அடிகளார் அறிந்து வைத்திருக்கிறார். தந்திரத்தால் நம் அனைவரையும் இங்கிருந்து வெளியேறச் செய்து, தக்க தருணத்தில் நால்வரையும் பழிவாங்குவது அவர் திட்டம்'' என்றான் மாறன்.

''நான் அவ்வாறு நினைக்கவில்லை, தும்பைவிட்டு விட்டு வாலைப் பிடிப்பார்களா? சக்கரவர்த்திகளிடம் ஏன் ஒரு சிறு அரச அலுவலரிடம் சொன்னால் போதுமே. ஒரு நொடியிலேயே நம்மைச் சிறைப்படுத்தி விடலாம். ஆனால், படையெடுப்பு ஒன்றை உருவாக்குகிறார். அதைச் சக்கரவர்த்தி ஆமோதிக்கிறார்'' என்றார் காங்கேயன்.

''நாம் இப்படியே மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. அடிகளாரை நமது விரோதி என்று எண்ணியே திட்டம் தீட்டுவோம்'' என்றாள் குமுதம்.

''அதுதான் சரி, நான் கலபதிபுரம் சென்று மீண்டும் வருகிறேன். வரும்போது கடலில் நெடுந்தூரம் செல்லக் கூடிய உறுதி வாய்ந்த பாய்மரக் கலம் ஒன்றைக் கொண்டு வருகிறேன்'' என்று கூறும்போது காங்கேயன் குறுக்கிட்டார்.

''அவ்வளவு எளிதில் கிடைத்துவிடுமா?'' என்றார்.

''மாறன் மனது வைத்தால்கிடைக்காததும்உண்டோ. ரங்கதேவியிடம் தெரிவித்தால் பெரிய மரக்கலமே

கிடைத்து விடும்'' என்று குமுதம் மெல்ல நகைத்தவாறு கூறினாள்.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். என் காதலி ரங்கதேவியிடம் கேட்பேன் என்றே வைத்துக் கொள். புதைத்து வைத்திருக்கும் ஆபரணப் பெட்டிகளுடன் நீங்கள் கலத்தில் ஏறிவிடுங்கள். நமது பயணத்தின் முதல் கட்டமாக அது அமையும். நான் சோழர் படைகளுடன் பாண்டிய நாட்டை நோக்கி வருவேன். வழியில் தக்க தருணம் பார்த்து, மருமகன் கோவிந்த வல்லவரையன், இளவரசருள் ஒருவன்—இவர்களுக்கு முடிவு கட்டிவிட்டுத் தப்பி ஓடி மதுரையை வந்தடைந்து விடுவேன். சோழர் படைகள் செத்தோம் பிழைத்தோம் என்று சிதறி ஓடி விடும்...பிறகு...அங்கே தலைவர் வல்லபன் என்ன திட்டம் தீட்டியிருக்கிறாரோ...அதன்படி நடப்போம்...நம்மிடம் இட்ட பணியை நாம் சரியாக முடித்துவிட்டோம் என்று கம்பீரமாகத் தலைவரிடம் சொல்லலாம்...'' என்றான் மாறன்.

''ஆம்; தலைவர் நம்மைப் பாராட்டுவார் அவரது திட்டம் நிறைவேறியதாகப் பரிசு கொடுப்பார்'' என்றார் காங்கேயன்.

''பரிசா...? பரிசு பெறவா நாம் பயங்கரமான இந்தத் திட்டத்தில் இறங்கினோம்'' என்றான் மாறவர்மன்.

''நீ எதிர்பார்க்கவில்லை...ஆனால், நான் எதிர்பார்க்கிறேன்'' என்றான் காங்கேயன்.

''என்ன சொல்கிறீர்கள் ஐயா? இன்று உங்கள் பேச்சு விசித்திரமாக இருக்கிறதே...'' என்றான் மாறவர்மன்.

''நான் பரிசை எதிர்பார்க்கவில்லை. ஆனால், குமுதத்திற்குச் சிபாரிசு செய்து ஒரு பரிசைப் பெற்றுத் தரப் போகிறேன்'' என்று கூறி இருவரையும் பார்த்தார் காங்கேயன்.



''சுவாமி, எனக்குப் பரிசா? நான் பரிசை எதிர் பார்த்து ஏதும் செய்யவில்லையே...'' என்றாள் குமுதம்.

''சரி, உனக்கு வேண்டாம். மாறவர்மனுக்கு வாங்கித் தருகிறேன்'' என்றார் காங்கேயன்.

''நானும் எதிர்பார்க்கவில்லை சுவாமி.ஏதோ, இந்தத் தளபதி வேடமும், ராஜபோகமும் வேறு வழியில்லை என்றுதான் ஏற்றிருக்கிறேன்'' என்றான் மாறவர்மன்.

''நீங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால், உங்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதை நீங்கள் தடுக்க முடியுமா?'' என்றார் காங்கேயன், முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் வரவழைக்காமல்.

குமுதமும், மாறவர்மனும் அந்தப் பேச்சை மாற்றி மேலே நடக்கவேண்டிய காரியத்திற்குத் திட்டமிடத் துடித்தனர்.

''பரிசு கொடுப்பதில் தலைவருக்கும் மிக மகிழ்ச்சியாக இருக்கும். உங்கள் இருவருக்குமே பரிசு தருவதில் அவரை விட மகிழக் கூடியவர் யார்?'' என்றார் காங்கேயன்.

மாறவர்மனுக்கு எரிச்சல் தாங்கவில்லை. ''என்ன சுவாமி பரிசு? இரண்டு கிராமங்களைக் கொடுப்பார்'' என்றான்.

''இல்லை...இல்லை...உனக்குக் குமுதத்தையும்,குமுதத்திற்கு உன்னையுமாகப் பரிசாக வழங்க ஏற்பாடு செய்வேன்'' என்று காங்கேயன் கூறியபோது, மாறவர்மனும் குமுதமும் ஒரே சமயத்தில் ''சுவாமி'' என்று கூவிவிட்டார்கள்; இருவரிடமும் நாணத்துடன் கூடிய பரபரப்பு மிகுந்தது. ஏதோ கூற வாயெடுத்தவர்களைக் காங்கேயன் கையமர்த்தி, ''அமைதி, அமைதி. இதில் என்ன தவறு? வருங்காலத் திட்டம் என்று என்னென்னவோ தீட்டுகிறோம். நாட்டிற்காக உழைக்கும் உங்களுக்கு என்று திட்டம் தீட்ட ஒருவருமில்லை...எல்லாம் நல்லபடியாக

முடிந்து நாம் எல்லோரும் மதுரையில் ஒன்றுசேர்ந்த பிறகு நடக்க வேண்டியதைக் கூறினேன்'' என்றார்.

குமுதமும், மாறவர்மனும் ஒரே ஒரு கணம்தான் பார்த்துக் கொண்டனர். அதில் ஆயிரம் வார்த்தைகள் மலர்ந்தன.

''சுவாமி, நாளை நடப்பதைப் பற்றி யோசியுங்கள். அவர் எப்போது கலத்தைக் கொண்டு வருகிறார்? எப்படி யாருமறியாமல் கலத்தில் ஏற்றுவது? நாம் எப்படித் தப்பிச் செல்வது? இதைப் பற்றித் திட்டமிடுவோம்'' என்று குமுதம் கண்டிப்பு நிறைந்த குரலில் பேசினாள்.

''நான் இன்று இரவோ, நாளையோ புறப்படுகிறேன். மீண்டும் இரண்டு நாட்களில் வருவேன். மாலைப் போதில் மரக்கலம் வரும். அதைப் பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம். நீங்கள் மூவரும் கலத்தில் ஏறி அமருங்கள். அது தொண்டித் துறைமுகத்தில்தான் போய் நிற்கும். சிவனடியாரிடம் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள்'' என்று மாறவர்மன் கூறினான். அந்தச் சமயம் பெருமாள் பரபரப்புடன் ஓடி வந்தான்.

அவனுக்குப் பேச்சு வரவில்லை. மூச்சு இறைத்தது. ''ஐயோ, ஐயோ...புதைத்து வைத்த இடத்தில் நகை மூட்டைகளைக் காணவில்லை. வெறும் பள்ளம்தான் இருக்கிறது'' என்று சொல்வதற்குள் அவனுக்கு உயிரே நின்று விடும் போல் இருந்தது.

''என்ன?'' என்று ஏக காலத்தில் காங்கேயனும், குமுதமும் கூறினார்கள். மாறவர்மன் எரிச்சலும், கோபமுமாகப் பெருமாளை நோக்கினான்.

''சரியாகப் பார்த்தாயா?'' என்று மாறவர்மன் கேட்டான்.

''நாங்கள் வந்துத் தேடுகிறோம்'' என்றார் காங்கேயன். மூவரும் எழுந்தனர்.



அப்போது, முரசு ஒலி எழுந்தது. சோழசக்கரவர்த்தி தங்கியிருக்குமிடத்திலிருந்து எழுந்தது.

போர் வீரர்களை அணிவகுக்க அழைக்கும் ஒலி. மாலையில் கதிரவன் மறைவதற்குள் ஒரு முறை வீரர்களின் அணிவகுப்பு நடைபெறும்.

கலபதிபுரத்து வீரர்களும் அதில் கலந்து கொள்வார்கள். அப்போது மாறவர்மனும் அங்கிருக்க வேண்டும்.

''முரசொலிக்கிறது. நான் உடனே போக வேண்டும். நன்றாகத் தேடிக் கண்டுபிடியுங்கள். இரவு தங்களைச் சத்திரத்தில் நான் சந்திக்கிறேன்'' என்று கூறி மாறவர்மன் விரைந்தான்.

## 24. அடிகளாரை எப்படி நம்புவது?

''சோழ சக்கரவர்த்தி தனது பரிவாரங்களுடன் மறு நாள் தில்லைச் சிதம்பரத்திற்குப் புறப்பட முடிவு செய்து விட்டார்.

சக்கரவர்த்தியின் முடிவு அனைவருக்கும் வியப்பை அளித்தது. ஏன் என்று ஒருவரும் கேட்கத் துணிய மாட்டார்கள். மேலும் தில்லையில் தங்கியிருந்துத் திருப்பணியைக் கவனித்து விரைவில் தஞ்சை திரும்பவேண்டும் என்ற நோக்குடன் வந்த சக்கரவர்த்தி இவ்வளவு நாள் சிறு கிராமத்தில் தங்கியிருந்ததே யாரும் எதிர்பாராஒன்று. இளவரசர்களான கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி ஆகியோருக்குத் தஞ்சையைவிட அந்தக் கிராமச் சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது. ஆனாலும் பெரிய மாளிகையில் வாழ்ந்த அவர்களுக்கு அந்தகிராமத்து வீடு போன்ற அமைப்பு நடமாடுவதற்கு மிகவும இடையூறாக இருந்தது. மேலும் சிவனடியார் அங்கு வந்துக்

குறுக்கீடு செய்து வந்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக உத்தமசீலிக்கு சிவனடியார் மீது மிகவும் ஆத்திரம். குமுதத்திடம் தனியே பேசச் செல்ல அவன் முயலும்போது எங்கிருந்தாவது சிவனடியார் வந்து விடுவார்.

உத்தமசீலி, தனது சகோதரர் அரிஞ்சயனிடம் சிவனடியாரைக் குறித்துப் புகார் செய்தான். அரிஞ்சயனுக்கும் சிவனடியாரின் போக்குப் பிடிக்கவில்லை.

சக்கரவர்த்தியிடம் தம் கருத்தைத் தெரிவிக்க அவர்களுக்கு அன்று சரியான வாய்ப்புக் கிடைத்தது.

அரிஞ்சயன் முதலில் பேச்சைத் தொடங்கினான். "உத்தமசீலிக்கு இரண்டு நாட்களாக மிகவும் கோபம்" என்றான்.

பராந்தக சோழ சக்கரவர்த்தி அப்போது குதூகலமான மனநிலையில் இருந்தார். அவர் உத்தமசீலியைப் புன்முறுவலுடன் நோக்கினார்.

"இளவரசரே" என்று உற்சாகம் நிறைந்த குரலில் அழைத்தார். உத்தமசீலி வந்து வணங்கி நின்றான். தன் தந்தை சந்தோஷமான மன நிலையிலிருப்பதை அவன் புரிந்து கொண்டான்.

"என்ன, முகத்தில் கோபக் குறியையே காணோமே?" என்றார் பராந்தகர்.

உத்தமசீலி வியப்புடன் தந்தையை நோக்கினான்.

"கோபமா, எனக்கா?" என்று அசடு வழியக் கேட்டவுடன் அரிஞ்சயன் முகத்தைப் பின்புறம் திருப்பிக்கொண்டு சிரித்தான்.

"உனது சகோதரன் கூறினான், உனக்கு இரண்டு நாட்களாகக் கோபம் என்று. ஆனால், உன் முகத்தில்



அந்தச் சாயையே காணோமே. கோபம், வீரம், சீற்றம் இவையெல்லாம் உனக்கு வராதே. அதுதானே பார்த்தேன்" என்று கூறி சக்கரவர்த்தி பலமாகச் சிரித்தார்.

உத்தமசீலி, உதட்டை அழுத்தமாகக் கடித்துக் கொண்டான். "தங்களுக்கு எப்போதும் என்னிடம் நம்பிக்கைக் குறைவு. வீரத்தைக் காட்ட ஒரு சிறு வாய்ப்பாவது இதுவரை எனக்கு ஏற்படுத்தியிருக்கிறீர்களா?" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டான்.

அரிஞ்சயன், இப்போது முகத்தைச் சரியாகத் திருப்பி, "பார்த்தீர்களா, அரசே! அவனுக்குக் கோபம்தான். மறைக்கிறான்" என்று கூறி தானும் கடகடவென்று சிரித்தான்.

"வீரத்தைப் புலப்படுத்த உனக்குச் சந்தர்ப்பமா? உனக்கு இப்போது வாய்ப்பு ஒன்று நேர்கிறதே..." என்றார் சக்கரவர்த்தி.

"பாண்டிய நாட்டின் மீது திடீர் தாக்குதலைத்தானே சொல்கிறீர்கள்? அதற்குக்கூட எனக்கு வாய்ப்புத் தரவில்லை. யாரோ சாமியார் சொன்னார் என்று மீன் பிடிப்பவர்களைப் படைவீரர்களாக அனுப்பவும், ஊர் பெயர் தெரியாதவர்களைப் படைகளை நடத்திச் செல்லவும் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்" என்று சிணுங்கினான் உத்தமசீலி.

பராந்தகர் மீண்டும் சிரித்தார். "நமது மகத்தான மருமகப்பிள்ளையும் உடன் வருகிறார். படையெடுப்பை மிகவும் குறைவாக நீ மதிப்பிட்டு விட்டாயா?" என்று கேட்டார்.

இப்போது அரிஞ்சயன், பேச்சில் கலந்து கொண்டான்.

"இது, தாங்களே செய்த முடிவு இல்லை என்று தோன்றுகிறது. சக்கரவர்த்திகளே! நான் அறியாமல் தான் கேட்கிறேன். திடீரென்று ஏதோ சிறு படைவீரர்களுடன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்வது நமது கௌரவத்திற்குக் குறைவாகத் தோன்றவில்லையா? மாடு பிடித்தவர்களை மடக்குவதற்குப் பத்து நூறு பேரை அனுப்புவது போல் அனுப்புகிறீர்கள் என்பதால் எனக்கு மிகவும் சந்தேகம் ஏற்படுகிறது" என்றான்.

"யார் மீது?" என்று சற்று அழுத்தம் நிறைந்த குரலில் கேட்டார் சக்கரவர்த்தி.

"அந்தச் சிவனடியார் மீது. அவர் ஏதோ சொன்னார். நம்பிவிட்டீர்கள். காவியுடை அணிந்தவர்களை நம்பும் தன்மை இப்போது அதிகமாகி விட்டது. எனக்கு என்னவோ அவர் மீது சந்தேகம்" என்று சற்று வேகமாகவே பேசினான் அரிஞ்சயன்.

"எனக்குக் கூடத்தான். அவர் பார்வையும் பேச்சும் எள்ளளவும், பிடிக்கவில்லை. அவருக்கு அந்தக் கலபதி புரத்து வீரருடன் என்ன தனியே பேச்சு வேண்டிக் கிடக்கிறது?" என்றான் உத்தமசீலி.

இரு செவிகளையும் மூடிக்கொண்ட கண்டராதித்தன், "அபசாரம், அபசாரம்! என்ன பேசுகிறீர்கள்! சிவனடியாரைச் சந்தேகிப்பதா? அவர் முக்காலமும் உணர்ந்தவராகத் தோன்றுகிறார். சித்து விளையாடல்கள் அவர் கைவரப் பெற்றவர் என்று தோன்றுகிறது. சோழ நாட்டிற்கு ஏற்படவிருந்த மாபெரும் ஆபத்தை நீக்க வழி சொன்ன அவரையா சந்தேகித்து விட்டீர்கள்?" என்றான்.

"என்ன ஆபத்தோ? என்ன வழி சொன்னாரோ?" என்றான் உத்தமசீலி, சற்றுக் குத்தலாக.



"சந்திரஹாரத்தைத் தீயிடச் சொன்ன சம்பவம் ஒன்று போதாதா?" என்றான் கண்டரன்.

"அதில் ஏதோ பெரும் சூழ்ச்சியிருக்கிறது. அந்தப்புரத்தில் காணாமல் போன சந்திரஹாரம் அடிகளார் கரத்தில் எப்படி வந்தது? யாராவது கேட்டீர்களா?"— உத்தமசீலி சீறினான்.

"அதில்தான் அடிகளாரின் பெருமை தெரிகிறது. அடிகளார் அந்தப்புரத்திற்குப் போனாரா? வீரமாதேவி எங்கோ கழற்றி வைத்த மாலையைப் பற்றி அவருக்கு எப்படித் தெரியும்? அதை அவர் தன் கைப்பையிலிருந்து எடுத்ததில் சூழ்ச்சியும் சூதும் என்ன இருக்கிறது?" என்று கண்டராதித்தன் கேட்டான். மேலும் அவன் தொடர்ந்து. "மதுரைக்கு அருகே வீரபாண்டியன் திடீரெனத் தோன்றினான் என்று நமது ஒற்றர்களும் தெரிவித்துள்ளனர். அடிகளாருக்கு அரசியல் அந்தரங்கம் தெரிந்திருக்க நியாயமில்லை. அப்படியென்றால் அவர் இங்கிருந்தபடியே எப்படிச் சொன்னார், வீரபாண்டியன் மீண்டும் மதுரையை நோக்கிப் படையெடுக்கப் போகிறான் என்ற செய்தியை?" என்று கண்டராதித்தன் கேட்கவும், மற்ற இரு சகோதரர்களான அரிஞ்சயனும், உத்தமசீலியும் மறுமொழி கூற முடியாமல் வாயடைத்து நின்றனர் என்றாலும் அடிகளார் மீது ஏற்பட்ட சந்தேகம் அரிஞ்சயனுக்குக் குறையவில்லை.

"என்ன இருந்தாலும், காவியுடை அணிந்தவர்களை அப்படியே நம்பிவிடக் கூடாது. முன்பே ஒருமுறை சக்கரவர்த்திகள் அனுபவப்பட்டவர்; இருந்தும் அடிகளார் சொல்வதை அப்படியே ஏன் ஏற்கிறார் என்று தெரியவில்லை" என்று அரிஞ்சயன் முணுமுணுத்தான்.

"அடிகளார் நமக்கு விரோதமாக ஏதாவது சொன்னாரா?" கண்டரன் கேட்டான்.

''சாதகமாகச் சொல்வதிலும் சதித்தன்மை மறைந்திருக்குமோ என்ற சந்தேகம்தான்'' உத்தமசீலி குறுக்கிட்டான்.

''சந்தேகப்படும் விஷயங்களில் சந்தேகப்படலாம்; நாளை வரப் போவதைச் சொல்லுபவரிடம் சந்தேகப்படுவது சாதுர்யமானதாகாது'' கண்டரன் விடவில்லை.

வாதப் பிரதிவாதங்கள் வளருவதைச் சக்கரவர்த்தி விரும்பவில்லை. அதனால் அவர் குறுக்கிட்டார். கையமர்த்தி, ''உங்கள் வாதப் பிரதிவாதங்களைப் பிறகு வைத்துக் கொள்ளுங்கள். நாளைக்குச் சிதம்பரம் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். தங்கத்தகடுகளை ஒழுங்காகச் சிதம்பரத்திற்கு அனுப்பிவர ஏற்பாடுகளைச் செய்யுங்கள். சிதம்பரம் சென்றவுடனே சிறுபடை தெற்கு நோக்கிப் புறப்படுகிறது'' என்றார்.

அரிஞ்சயன் ஏதோ கூற வாயெடுக்கும் முன்பு பராந்தகர், ''கலபதிபுரத்திலிருந்து வந்திருக்கிறானே அந்த வாலிபனை அழையுங்கள். அவன் நாளையே கலபதிபுரம் சென்று படை வீரர்களுடன் திரும்பி வரட்டும். நம்மிடமுள்ள தேர்ந்த வீரர்கள், நூறுபேரை அவனுடன் சேர்த்து அனுப்புங்கள். உத்தமசீலியும் கோவிந்த வல்லவரையரும் உடன் செல்லட்டும்'' என்றார்.

பிறகு குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''என தருமைப் புதல்வர்காள்! நீங்கள் ராஜதந்திரத்தில் எவ்வாறு அனுபவப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நான் மௌனமாகக் கண்காணித்து வருகிறேன்: உத்தமசீலி சொல்வதிலும் அரிஞ்சயன் அபிப்பிராயப்படுவதிலும் உண்மையும், நியாயமும் இருக்கத்தான் செய்கின்றன. கண்டராதித்தன் என்னைவிட சிவபக்தன். சிவநாமம் உச்சரிப்பவர்களை முழுவதும் நம்பும் தன்மைப் படைத்தவன். அங்குதான் ராஜதந்திரத்தைப் பயன்படுத்தவேண்டும். சிவனடியாரை எனக்கு முன் பின் தெரியாது. ஆனால் அவர் கூறுபவை நமக்குச் சாதக



மாகவே உள்ளன. என்றாலும் நான் அவரை முழுவதும் நம்பிவிடவில்லை. இங்கே நம்மை படையெடுக்கத் தூண்டிவிட்டு, உடனே பாண்டியனுக்குத் தகவல் அனுப்பவும் அவர் ஏற்பாடு செய்திருக்கலாம். அவர் தகவல் அனுப்பும் முன்பே நமது படைகள் புறப்பட்டுவிடுவதன் மூலம் எதிரிகளின் சதியைத் தவிர்த்து விடலாம். படைகளுடன்போகச் சொல்கிறேனே தவிர படைகளை எப்படி அணிவகுத்துச் செல்வது என்று அவரிடம் சொல்லவில்லையே...?

''உத்தமசீலி, அரிஞ்சயா கவனமாகக் கேளுங்கள்! படை அணியை மூன்றாகப் பிரித்துக் கொள்ளுங்கள். முதல் அணியில் கலபதிபுரத்தவர்கள் செல்லட்டும்; இரண்டாவது அணியில் வல்லவரையர் செல்லட்டும். மூன்றாவது அணியை நீ தலைமை வகித்து நடத்து. இந்தச் செய்தியை மூச்சுவிடாதீர்கள். எதற்கும் சிவனடியார் நடவடிக்கைகள் மீது உங்களுக்கு ஒரு கண் இருக்கட்டும்'' என்றார்.

''ஒரு கண் என்ன, இரண்டு கண்களுடன் விழிப்பாகவே இருக்கிறோம்'' என்று அரிஞ்சயன் சொல்லி வாய் மூடுமுன் ''நமச்சிவாய'' என்ற குரல் வெளியே கேட்டது.

அனைவரும், அடிகளார் வருகிறார் என்று பரபரப்படைந்தனர். அடிகளார் உள்ளே நுழைந்தார்.

''சக்கரவர்த்திகளே! நான் விடைபெற்றுச் செல்வதற்காக இப்போது வந்திருக்கிறேன்'' என்று கூறியவுடன் அனைவரும் திடுக்கிட்டனர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஏன் சுவாமி, இவ்வளவு சீக்கிரம் புறப்பட முடிவு செய்துவிட்டீர்கள்? தில்லைச் சிற்றம்பலத்திற்கு எங்களுடன் வந்து, பொன்தகடு வேயும் பணியை ஆரம்பித்து வைத்த பின் புறப்படலாமே'' என்றார் பராந்தகர். இவ்வளவு நேரம் அடிகளாரைப் பற்றி விவாதித்த அறிகுறியே அவர் முகத்தில் நிழலாடவில்லை.

''ஆமாம், சுவாமி. நீங்கள் திருநாவுக்கரசரின் 'குனித்த புருவமும்' பாடக் கேட்கவேண்டும் என்ற ஆசை எங்களுக்கு. அதிலும், பொன்னம்பலச் சபையில் பாடக் கேட்டு மெய்மறந்து நிற்க எங்களுக்கு ஆசை'' என்றான் கண்டராதித்தன்.

''இளவரசே! நான் எங்கே போய்விடப் போகிறேன்? காஞ்சிபுரம் வரையில் செல்கிறேன். அடுத்த பௌர்ணமிக்கு மீண்டும் வந்து விடுவேன். காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்தில் நடக்கும் குரு பூஜையில் ஆண்டு தோறும் எங்கிருந்தாலும் வந்து கலந்து கொள்வது என் வழக்கம். பண்டிதர்கள் கூடுவார்கள். தர்க்க, வியாகரண ஆகம, புராண பிரசங்கங்கள் நடக்கும். தங்கள் தந்தை பண்டிதவர்கள் ஆயிற்றே, அவரும் காஞ்சிபுரம் வந்தால் மிகவும் நலமாயிருக்கும்'' என்றார் அடிகளார், உத்தம சீலியைக் கடைக் கண்ணால் பார்த்தவாறு.

பிறகு பராந்தக சக்கரவர்த்தியை நோக்கி, ''மாமன்னரே உங்கள் திருப்பணி இனிது நடக்கும். பாண்டியநாட்டின் மீது படையெடுத்துச் செல்வதாகவே எண்ண வேண்டாம். ஏதோ தீர்த்த யாத்திரை செல்வது போல் நினைத்துக் கொள்ளுங்கள். மதுரை வரையிலேயே நீங்கள் செல்ல வேண்டி நேரிடாது. வீரபாண்டியனே காவிரிக்கரை நோக்கிவருகிறான் என்று தோன்றுகிறது...'' என்று கூறி சற்று நிறுத்தவும், உத்தமசீலியும், அரிஞ்சயனும், ''ஆ, வீரபாண்டியன் படைகளுடன் வருகிறானா?'' என்றனர் பரபரப்புடன்.

''ஆமாம்; அவனை நீங்கள் மூன்று பிரிவினராகச் சென்று தாக்குங்கள். ஒருபுறம் மாறவர்மனும், ஒருபுறம் கோவிந்த வல்லவரையனும், ஒருபுறம் உத்தமசீலியும் பிரித்துச் சென்று தாக்கட்டும்'' என்று கூறியவுடன், அங்கிருந்த மூவரும் அதிர்ச்சியால் தாக்குண்டு பேசுவது அறியாமல் திகைத்து நின்றனர். சக்கரவர்த்திகள்



சொன்னதையே அடிகளார் திரும்பவும் சொல்கிறாரே, எப்படி இது சாத்யமாயிற்று என்று அதிர்ச்சியடைந்தனர்.

சிவனடியார் கமண்டலத்தைக் கையிலெடுத்துக் கொண்டு தோளில் பையைச் சரிவர மாட்டிக் கொண்டு, ''உத்தமசீலி, போர்க்களத்தில் புகழை அடையப்பாடுபடு. ஈசன் அருள் இருப்பின் மீண்டும் சந்திக்கிறேன்'' என்று கூறிப் புரப்பட்டார்.

பராந்தகர் பரபரப்புடன் எழுந்து, ''சுவாமி, சுவாமி சற்று இருங்கள்; தக்க மரியாதை செய்யாமல் தங்களை அனுப்புவதா? யாரங்கே?'' என்று கைதட்டிப் பணி யாட்களை அழைத்தார்.

''சோழ மன்னரே! தங்களிடமிருந்து பிரியாவிடை பெறவில்லையே நான். மீண்டும் சிதம்பரத்தில் வந்து சந்திக்கிறேன். அப்போது தங்கள் திருக்குமாரர் உத்தமசீலி தனது கரத்தால் எனக்குப் பரிசு வழங்குவார்'' என்று கூறிப் புறப்பட்டார்.

மாலை மங்கியது காவலர்களை அணிவகுப்புக்கு அழைக்க முரசு முழங்கியது.

மாறவர்மன் வந்து கொண்டிருந்தான். வெளியே சென்ற சிவனடியார் மீண்டும் திரும்பி வந்து, ''ஒரே ஒரு வேண்டுகோள்! இன்று இரவு கலபதிபுரம் செல்லலாம் என்ற எண்ணம். சிங்கவரையனுக்கு ஓர் அறிமுக ஓலை அனுப்புங்கள், எனக்கு அவனைத் தெரியாது. சிவநெறியில் அவனுக்கு ஈடுபாடு உண்டா என்பதும் தெரியாது'' என்று கேட்கவும் பராந்தகர், ''ஆகா! கலபதிபுரத்துத் தளபதியே இங்கே வந்து விட்டார். அவரிடம் இப்போதே தெரிவிக்கிறேன். தங்களை, அவருடனேயே அழைத்துச் செல்லச் செய்கிறேன். இதோ இந்த அடையாளச் சின்னத்தையும் வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

மாறவர்மன், அடிகளாரை உற்று நோக்கினான். அடிகளார் கைப் பையினின்று திருநீரையெடுத்து பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் வீரரே! உமக்கு வெற்றி கிட்டுவதாக'' என்று கூறி அவனிடம் கொடுத்தார். அவன் நெற்றியிலும் அணிவித்தார்.

வெளியே போர்வீரர்கள் அணிவகுக்கும் ஒலியும், ''வாழ்க பராந்தக சோழ சக்கரவர்த்தி! வாழ்க குஞ்சர மல்லன்; பாண்டிய நாடு கொண்ட இருமுடி சோழன் வாழ்க! வாழ்க'' என்று முழங்கும் வாழ்த்தொலியும் கேட்டன. வாழ்த்தொலியைக் கேட்கக் கேட்க மாறவர்மனின் இரத்தம் கொதித்தது.

## 25. பெருமையும், பொறாமையும்

ஆற்றங்கரையிலிருந்து மெல்ல மெல்ல படகு நகர்ந்தது. துடுப்பைப் போடுபவன் தன் முழுச் சக்தியையும் பயன்படுத்தி படகின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்குச் சென்று படகை எதிர்க்கரைக்குச் செலுத்திக் கொண்டிருந்தான்.

ரங்கதேவியும், மாறவர்மனும் மட்டும் அந்தப் படகில் அமர்ந்திருந்தனர். மற்றொரு படகில் வீரர்களும், பணியாட்களுமிருந்தனர். படகு நகர்வதை குமுதம் ஆற்றங்கரைத் தோப்பில் மரங்களின் மறைவிலிருந்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அங்கே நிற்பது மாறனுக்குத் தெரியாது. மாறன் படகில் ஏறுவதையும், ரங்கதேவியைக் கைலாகு கொடுத்து ஏற்றுவதையும் அவள் காண விரும்பாமல் முகத்தை மூடிக்கொண்டாள். படகில் மாறனும், ரங்கதேவியும் எதிரெதிரே அமர்ந்து



கொண்ட பிறகுதான் அவனுக்குச் சற்று மன நிம்மதி ஏற்பட்டது.

நிம்மதியா? அவனுக்கு அது ஏது? அவன் மனம் அலைகடல் போல் பொங்கிக் கொண்டிருந்தது: அவனுடைய திட்டம் ஒன்றும் நிறைவேறவில்லை. 'அவன்' என்று சொல்லும்போது அவன் நிறைந்த 'அவர்கள் குழுவின் திட்டம்' என்றே கூறலாம். புதைத்து வைத்த ஆபரணங்களைக் காணவில்லை. அது முதல் பெருமாள் பிரமை பிடித்தவன் போலாகி விட்டான். காங்கேயன் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துப் பேசாமலிருக்கிறார். மாறன் ஒருவன்தான் உற்சாகமாக ஓரிரு யோசனைகள் கூறியிருக்கிறான் என்றாலும், அவனுடைய நடவடிக்கை—ரங்கதேவியிடம் தொடர்பு கொண்டுள்ள நடவடிக்கை—அவனுக்குப் பிடிக்கவில்லை.

மாலையில் அணிவகுப்பு முடிந்து மாறன் தனியே நடந்து வந்தபோது குமுதம் அவனிடம் ஓடோடி வந்து அவனருகே நின்று பேச எத்தனித்தபோது அருகேயிருந்த வீட்டு வாயிற்படியில் ரங்கதேவி நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். மாறன் தன்னிடம் ஏதோ சைகை செய்வது அவளுக்குப் புரிந்தது. அவன் ஏதோ முணுமுணுப்பதும் காதில் விழுந்தது.

''புறப்படும் முன்பு சந்திக்கிறேன்'' என்ற வார்த்தைகள் மெல்லக் கேட்டன.

ரங்கதேவி பார்த்துக் கொண்டிருக்கிறாள்; அவன் மிகக் கவனத்துடன் பேசுவது நியாயமே. அவள் தங்கியிருக்கும் வீட்டருகே மாறனைச் சந்திக்க அவள் வந்திருக்கக் கூடாது.

குமுதம் மெல்ல அங்கிருந்து ரங்கதேவியின் அருகே சென்றாள். மாறன் செல்லத் தொடங்கினான்.

தன்னிடம் பேசாமல் மாறன் அங்கிருந்துச் செல்லுவதை ரங்கதேவி எதிர்பார்க்கவில்லை. எப்படி

அழைப்பது? குமுதம் ஒரு பணிப் பெண் என்று முன்பே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறாள்.

குமுதத்தை விரல் சொடுக்கி அழைத்த ரங்கதேவி- ''ஏ, பெண்ணே அதோ போகிறாரே தளபதி அவரை நான் அழைத்ததாகக் கூப்பிடு'' என்றாள்.

குமுதம் திடுக்கிட்டாள். ஒன்றும் பேசாமல் சற்று அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள். மிக நெருக்கமாக அவளை அப்போதுதான் குமுதம் பார்க்கிறாள்.

''நான் சொல்வது காதில் விழவில்லையா? அவர் போய்விடப் போகிறார். கூப்பிடு, கூப்பிடு...'', என்றாள் ரங்கதேவி. குரலில் அதிகாரம் எதிரொலித்தது.

குமுதம் அவளை எரித்துவிடுவது போல் விழித்து நோக்கினாள். பிறகு மிக அமைதியுடன், ''எந்தத் தளபதியைச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

ரங்கதேவிக்கு ஏற்பட்டது அதிர்ச்சியா? வேதனையா என்பது புரியவில்லை.

எந்தத் தளபதி என்று கூறுவாள். அவர் பெயரைச் சொன்னால் பணிப் பெண்ணுக்குப் புரியாது. சோழ சக்கரவர்த்தியின் அந்தப்புரத்தில் வீரமாதேவிக்குப் பணி செய்பவளாக இருப்பதால் இப்படி அசம்பாவத்துடன், ''எந்தத் தளபதி'' என்று கேட்கிறாள்.

''ஊர், பெயர் சொன்னால்தான் நீ ஒரு வேலை செய்வாயோ? இங்கே ஒரே ஒரு தளபதிதான் வந்திருக்கிறார். அதோ போகிறார். அவர் கலபதிபுரத்துத் தளபதி. உம், சீக்கிரமாக ஓடிப்போய் அவரைக் கூப்பிடு'' என்று ரங்கதேவி சீறினாள்.

குமுதத்திற்குச் சிரிப்பு வந்தது.

''ஏன் சிரிக்கிறாய்?''—விழிகளை உருட்டிக் கேட்டாள் ரங்கதேவி. ''ஓர் ஊருக்கு ஒரு தளபதியா என்று நினைத்தேன், சிரிப்பு வந்தது.''



''கலபதிபுரத்தைப் பற்றி உனக்குத் தெரியாது. எங்களைத் தனிப் படை, கொடி வைத்துக்கொள்ளச்சொல்லி உங்கள் சக்கரவர்த்தி அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.''

''ஓ, அப்படியா? தெரியாது!'' குமுதம் இவ்வாறு கூறியவுடன், ரங்கதேவியின் சினம் அதிகமாகிறது.

''ஏ, அதிகப் பிரசங்கி! என்னை யாரென்று நினைத்தாய்? நான் சொல்கிறேன், கேட்காமல் எதிர்த்துப் பேசிக் கொண்டிருக்கிறாயா? இப்போதே உன் இளவரசியிடம் சொல்கிறேன்'' என்று சினத்துடன் உள்ளே திரும்ப முயன்ற ரங்கதேவியை நோக்கி, ''அம்மா! உங்கள் தளபதியை எங்கே வரச் சொல்வது, இங்கா, அல்லது எங்கள் இளவரசியிருக்குமிடத்திற்கா?'' என்று மிகவும் பணிவான குரலில், ஒன்றுமே தெரியாதவள்போல் கேட்டாள் குமுதம்.

குமுதம் தன்னை 'அம்மா' என்று அழைத்ததில் ரங்கதேவிக்கு வருத்தம் ஏற்பட்டாலும் இப்போது பேச்சை வளர்த்த விரும்பாமல் ''உம்...போ, போ! இங்கேயே நிற்கிறேன், அவரை அழைத்து வா'' என்றாள்.

குமுதத்திற்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. சரி; இதுவும் ஒரு நன்மைக்கே என்று எண்ணியவாறு, ஓடினாள். ''தளபதியாரே, தளபதியாரே'' என்று குரல் கொடுத்துக்கொண்டே ஓடினாள். குமுதத்தின்குரல் கேட்டு மாறவர்மன் திரும்பிப்பார்த்தான். குமுதம் ஓடிவருவது பார்த்தும் நிற்காமல் சென்று கொண்டேயிருந்தான்.

''தளபதியாரே! தளபதியாரே!கலபதிபுரத்து இளவரசி தங்களைக் கூப்பிடுகிறார்கள். கொஞ்சம் நில்லுங்கள்'' என்று குரல் கொடுத்துக் கொண்டே விரைந்தாள்.

''ஏன் ஓடி வருகிறாய் குமுதம்? யாராவது பார்த்தால் தவறாக எண்ணிவிடப் போகிறார்கள்'' என்று மாறன் கூறி நின்றான்.

குமுதம் அவனை ஒருமுறை எரித்துவிடுபவள்போல் பார்த்தாள். "இட்ட வேலையை ஒழுங்காகச் செய்தால் இந்தப் பணிப் பெண்ணை ஏன் தவறாக நினைக்கப் போகிறார்கள்?" என்று கூறுவதற்குள் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"கலபதிபுரத்துத் தளபதி அவர்களே! தங்களை இளவரசி ரங்கதேவி அழைக்கிறாள். நான் ஓடோடிவந்து அழைத்திரா விட்டால், என்னை வேலையிலிருந்து அனுப்பி விடுவதற்கு ஏற்பாடு செய்திருப்பார்கள்" என்றாள்.

"வேலை போனால் நல்லதாகப் போயிற்று" என்று மெல்லவே சிரித்தான் மாறன்.

"ஆமாம்; பாண்டிய நாட்டு சாதாரண பிரஜை கலபதிபுரத்து தளபதியாகிவிட்டார். நான் ஒரு ஏழைப் பணிப் பெண். வேலையைக்கூட இழந்து நிற்கதியாக நின்றால், தளபதிக்குச் சந்தோஷம்தானே!" என்று கூறிய குமுதத்தின் குரலில் ஏற்பட்ட மாறுதலைக்கண்ட மாறன், "அடடா, நான் வேடிக்கைக்குச் சொன்னேன் குமுதம். நீ சோழநாட்டில் அந்தப்புர வேலையில் நீடித்து இருக்கவா போகிறாய்? நாளையோ மறுநாளோ வேலையை விட்டு விடப் போகிறாய். அந்த வேலை இப்போதே போனால் போகட்டுமே என்பதற்காகக் கூறினேன்" என்று சமா தானப்படுத்த முயன்றான்.

"நான் வந்த வேலையை விட்டுவிட்டு மதுரையைப் பார்க்கப் போகிறேன். நீங்கள் கலபதிபுரத்து தளபதியாக இருந்து, அந்த அகம்பாவக்காரியை மணம் புரிந்து கொண்டு, கலபதிபுரத்து மன்னராகி விடுங்கள்" என்று சீற்றத்துடன் பேசிய குமுதம், சற்று நின்று "இதோ பாருங்கள்! இங்கேயே சிறிது நின்று பேசிவிட்டுச் சொல் லுங்கள்" என்றாள்.



"வேண்டாம், வேண்டாம் பிறகு பேசலாம். உன் னுடன் நின்று பேசுவதால் தவறாக நினைக்கப்போகிறார் கள்" என்றான் மாறன்.

"வேலைக்காரியுடன் பேசுவதால் ஒன்றும் தவறாக நினைக்கமாட்டார்கள்" என்ற குமுதத்தை வியப்புடன் நோக்கினான் மாறன்.

"தளபதியாரே! அடுத்து என்ன செய்வதாக எண்ணம்! கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போல் மதுரை மீது படையெடுத்துச் சென்று அங்கே சோழ இளவரசைக் கொன்று விடுவதாகத் திட்டமோ? ஒருவேளை பாண்டிய மன்னரைச் சிறைப்பிடித்து கொடுப் பதற்குச் சிவனடியார் செய்திருக்கும் தந்திரமாக இருக்க லாம். கலபதிபுரத்து அழகியை மாலையிட நீங்கள் விரும்பும் ஒரு திட்டமாக இருக்கலாம். நீங்கள் யாரை வேண்டுமானாலும் மணம்புரிந்து கொள்ளுங்கள். யாருக்கு வேண்டுமானாலும் அடிமையாயிருங்கள், எனக்குக் கவலையில்லை. ஆனால் இந்தக் குமுதம் இனி ஒருத்திக்கு அடிமையாக மாட்டாள். நாம் புறப்பட்ட நோக்க மென்ன? நம்மைத் தலைவர் அனுப்பிய நோக்கமென்ன? இப்போது இலட்சிய மாற்றம் ஏன்?" என்று மளமள வென்று பேசினாள்.

மாறன் வாயதிறப்பதற்கு முன்பே, "புதைத்து வைத்த ஆபரணங்களைக் காணவில்லை. நமது திட்டத் திற்கு மாற்றுத் திட்டத்தை யாரோ செய்ய முனை கிறார்கள். சிவனடியாரின் வேலைதான் இது. என் திட்டத்தைச் சொல்லட்டுமா? முதலில் அவரைத் தீர்த்துக் கட்டிவிட்டு இரவோடிரவாக, பராந்தகர் நெஞ்சில் வாளைவீசி முடிந்தால் தப்பி ஓடுவது; இல்லாவிடில் இந்த மண்ணிலேயே உயிரை விடுவது" என்று ஆக்ரோஷத் துடன் பேசினாள். ஆனால் மெல்லிய குரலில் பேசினாள். மெல்லிய குரலிலும் அழுத்தம் நிறைந்திருந்தது.

ரங்கதேவி தொலைவில் வீட்டு வாயிற்படியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

''குமுதம் சற்றுப்பொறுமையாய் இரு. உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்'' என்று மாறன் ஏதோ பேச வாயெடுத்தவுடனேயே,''நான் உணர்ச்சியை எப்போதோ கட்டுப்படுத்தி விட்டேன். பெண்ணாகப் பிறந்ததனால், இயற்கையாக ஏற்பட்ட உணர்ச்சியைக்கூட நான் அடக்கிக் கொண்டுவிட்டேன். பிறந்த பாண்டிய நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையை ஆற்றிய பிறகு இதய உணர்ச்சியை வெளிப்படுத்தி நிறைவேற்றிக் கொள்ள எண்ணினேன். அதைக்கூட அடக்கிக்கொண்டுவிட்டேன். மனம் எனும் தடாகத்தில் மெல்லப் பூக்க காதல் மலரின் அரும்பை முளையிலேயே கிள்ளிவிடத் துணிந்துவிட்டேன். உங்கள் அருமைக் காதலி ரங்கதேவியை வெற்றிப் பரிசாகப் பெற்று இனிதாக வாழுங்கள்'' என்று குமுதம் நெஞ்சு தழதழக்கக் கூறினாள். சந்தியா காலத்தின் கருந் துகில் குமுதத்தின் விழி நீரை மறைத்தது

''குமுதம்! நீ மற்றப் பெண்களைவிட மாறுபட்டவள் என நினைத்திருந்தேன். ஆனால், பெண்களுக்கே உரிய பொறாமையைப் புலப்படுத்திவிட்டாய்'' என்று பேச வாயெடுத்தவனை நோக்கி, ''எனக்குப் பொறாமையே இல்லை, பெருமைதான். மிகமிகப் பெருமைதான். என்னுடன் கூடப் படகில் வந்த பாண்டிய மகனுக்குக் கிடைக்கும் அதிர்ஷ்டத்தைப் பார்த்து பெருமை தான்! மற்றப் பெண்களிடமிருந்து முற்றும் மாறு பட்டவள் நான் என்பதை வெளிப்படுத்தக் கூடிய காலம் வரத்தான் போகிறது. பாண்டிய மண்ணுக்கு விரோதமாக நடப்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பதில் எனது மாறுபட்ட தன்மையைப் புலப் படுத்துகிறேன்'' என்று கூறித் திரும்பிச் செல்ல முற்பட்ட குமுதத்தின் கரத்தை சட்டென்று பிடித்து நிறுத்தி, ''குமுதம், நீ தவறாக நினைத்து விட்டாய்.



நான் ஆணையிட்டுச் சொல்கிறேன். என் முதல் காதலி பாண்டிய நில மங்கைதான், அவளைச் சிங்காரித்துப் பழைய நிலைக்கு உயர்த்தாமல் நான் மணம் புரிந்து கொள்ள மாட்டேன் என்பது உறுதி. குமுதம், நான் முன்பு கூறிய திட்டப்படி மீண்டும் ஒரு மரக்கலத்துடன் வருவேன். நீயும், காங்கேயனும், பெருமாளும் ஆயத்த மாயிருங்கள்...'' என்றான்.

குமுதம் அங்கேயே நின்று விட்டாள். மாறன் ரங்க தேவியை நோக்கிச் சென்றான். ஒருவர் முகத்தை ஒருவர் அறிந்துகொள்ள முடியாத இருள் எங்கும் சூழ்ந்து விட்டது.

''தேவி, என்னை அழைத்தீர்களா?'' என்று மாறன் கேட்டான்.

ரங்கதேவிக்கு ஏனோ ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''மரியாதையே அற்ற மனிதர்கள் வாழும் ஊரில் ஒரு கணம்கூட இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. நாம் எப்போது புறப்படுகிறோம்?'' என்று கடுகடுத்தாள் ரங்கதேவி.

''இன்று இரவு...'' ஒரே வார்த்தையில் மறுமொழி கூறினான் மாறன்.

ரங்கதேவி அவன் அருகே மிக நெருங்கினாள். அவனது கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள். இருள் துணையாயிருக்கிறது என்ற துணிவில்.

''அந்தப் பணிப்பெண் என்னிடம் மரியாதையுடன் நடந்து கொள்ளவில்லை. அவளுடன் உங்களுக்கு என்ன நீண்ட நேரப் பேச்சு?'' என்று கேட்டாள்.

அவளது கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்ட மாறன், ''சோழ நாட்டுப் பணிப்பெண்கள் கூட இளவரசிகள் போல நடந்து கொள்கிறார்கள்'' என்றான் மெல்ல நகைத்தவாறு.

''தங்களிடம் அவள் என்ன சொன்னாள்? என்னைப் பற்றிக் குறை கூறினாளா?'' என்று ரங்கதேவி கேட்டாள்.

''தங்களை மிகவும் புகழ்ந்தாள். கலபதிபுரத்து இளவரசியிடம் பணியாற்ற அவளுக்கு மிக ஆசையாம். தன்னையும் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டாள்.''

''நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

''இன்று இரவு கலபதிபுரம் புறப்படப் போவதாகவும் உடன் வருமாறும் அவளிடம் கூறினேன்.''

ரங்கதேவி திடுக்கிட்டாள். பொறாமை; அதனால் ஆத்திரம் மிகுந்த குரலில், ''அவளை அழைத்துச் செல்ல உத்தரவிட உங்களுக்கு ஏது அதிகாரம்?'' என்றாள்.

''கலபதிபுர இளவரசிக்குப் பணிவிடை செய்யப்பணிப் பெண்ணை நான் நியமிக்கக் கூடாதா?'' மாறன் குரலை மாற்றிக் கேட்டான்.

''எனக்கு ஏற்ற பணிப்பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எனக்குத்தான் உண்டு.'' ரங்கதேவியின் ஆத்திர ஜ்வாலை மிகக் கொழுந்து விட்டது.

''உன் தந்தைக்கும் உரிமை கிடையாதா?''

''இல்லை. என் தாய்க்குத்தான் உரிமை.''

''உன் தாய்தான் உரிமை மிக்கவளோ?''

''ஆமாம்.''

''தாயைப் போல்தான் பெண்ணும். இப்போதுதான் புரிந்து கொண்டேன். நான் உன் தந்தையைப் போலப் பயந்தவனல்லன்.''

இதை மாறன் சொன்னவுடன்தான் ரங்கதேவி, பேச்சின் போக்கைப் புரிந்து கொண்டாள்; திடுக்கிட்டாள்.



''ஐயோ, நான் எதையோ சொல்கிறேன். நீங்கள், எதையோ சொல்கிறீர்கள். நாம் இந்த ஊரில் ஒரு கணங் கூட இருக்க வேண்டாம்...சோழ நாடே எனக்குப் பிடிக்க வில்லை. நம் ஊருக்கு நாம் போய்விடுவோம்'' என்று கூறி அவனை இருக அணைக்க முயன்றவளை மெல்ல விலக்கி, ''தேவி, நாம் இந்த ஊரில் ஏன் தங்கியிருக்க வேண்டும்? நமது வேலை முடிந்தது. இரவே புறப்பட்டு விடுவோம்'' என்றான்.

''அந்தப் பணிப் பெண்?''

''அவளுந்தான் வருகிறாள். அவள் தங்களுக்குப் பணிவிடை செய்யவேண்டும். தங்களை அவமரியாதைப் படுத்தியவளுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டாமா?'' என்றான் மாறன்.

''வேண்டாம் வேண்டாம். அவள் வேண்டாம்'' என்று அலறினாள் ரங்கதேவி.

வீட்டிற்குள்ளிருந்து வேறு சில வேலையாட்கள் விளக்கு எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள். மாறவர்மன் விலகி நின்றான். ரங்கதேவி ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டாள். மறைந்திருந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த குமுதம் மேலும் தன்னை நன்றாக மறைத்துக் கொண்டாள். ரங்கதேவி மாறனுடன் நெருங்கிப் பழகுவது அவளுள்ளத்தில் வேதனையை அளித்தது. என்னதான் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாலும், இயற்கையாக மாறன் மீது ஏற்பட்ட காதல் உணர்ச்சியை அவளால் மறக்க முடிய வில்லை.

ஃ ஃ ஃ

நடுநிசிக்குச் சற்றுமுன்பு, நிலவொளி பூரணமாகத் தவழ்ந்து கொண்டிருந்த வேளையில் படகுத் துறைக்கு

கலபதிபுரத்து வீரர்கள் சூழ, மாறனும் ரங்கதேவியும் சென்றனர்.

படகுத் துறையில், ரங்கதேவியும் மாறனும் படகில் ஏறுவதைப் பார்ப்பதற்காக விரைந்து சென்று மறைந்து நின்றாள் குமுதம்.

படகில் ஏறுமுன்பு மாறன் சிவனடியாரைச் சந்தித்ததும் வாளெடுத்து அவரைத் தாக்க முற்பட்டதும் குமுதத்திற்குத் தெரிய நியாயமில்லை.

படகு நகருவதைக் கண்களில் நீர்த் துளிர்க்கப் பார்த்துக்கொண்டே நின்றாள் குமுதம்.

## 26. கூடாது, திருமணம் கூடாது!

கலபதிபுரத்தில் சிங்கவரையன் எதிரே மாறவர்மன் நின்று கொண்டிருந்தான். அவன் சிந்தனைக் கடல், ஆரவாரித்து எழுந்துத் தணிந்து கொண்டிருந்தது. அவன் உடனே முடிவு செய்ய வேண்டிய பிரச்சினைகள் இரண்டு அவனைச் சங்கடப் படுத்திக் கொண்டிருந்தன. கலபதிபுரத்திலிருந்துத் தப்பி ஓடித் தில்லைச் சிற்றம்பலத்தில் பராந்தக சோழர் தனித்திருக்கும்போது அவரைக் கொன்று விடுவது என்பது ஒன்று. கலபதிபுரத்தினின்று சொற்ப வீரர்களுடன் புறப்பட்டு, சோழ இளவரசர்களுடன் ஒன்றுபட்டு, பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்வது மற்றொன்று.

பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்லத் தான் துணையாக இருப்பது போல் துரோகமான செயல் வேறு இல்லைதான். அதில் ஆபத்து இருக்கிறது. கடைசி நொடியில் சோழர்களுக்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டு, உடன் வந்த இளவரசர்



களைக் கொன்று சோழர் படைகளைத் தோற்றோடச் செய்வது எனும் மகத்தான விளைவு ஏற்பட இரண்டாவது திட்டத்தில் வழி இருக்கிறது. அதைததான் குமுதத்திடமும், காங்கேயனிடமும் கூறியிருக்கிறோம்.

படகில் வரும்போது இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். ரங்கதேவியின் நகைச்சுவைப் பேச்சுக்கோ, அவளுடைய சீண்டலுக்கோ ஈடுகொடுத்து மறுமொழி கூறவில்லை.

கலபதிபுரம் வந்தடைந்தவுடன் இரவு முழுவதும் உறங்காமல் படுக்கையில் கிடந்தான். விடியும் வேளையில் அவனையறியாமல் தூக்கம் வந்து விட்டது. யாரோ குரல் கொடுத்துத் தட்டி எழுப்பிய பிறகுதான் உறக்கம் கலைந்தது. எழுப்பியவர் ரங்கதேவியாக இருக்கக் கூடாதே என்ற அச்சத்துடன் கண் விழித்தான்.

ரங்கதேவி எதிரே நின்று கொண்டிருந்தாள். நீராடிப் புத்தாடை அணிந்து, விதவிதமான ஆபரணங்களைப் பூண்டு, ரங்கதேவி, தோழியுடன் அவனருகே நின்று கொண்டிருந்தாள். கூந்தலில் சூடியிருந்த மலரும், விலையுயர்ந்த வாசனைத் தைலங்களும் மயக்கத்தை ஊட்டக் கூடிய மணத்தை வீசிக் கொண்டிருந்தன. இயற்கையான அழகும், அழகுக்கு அழகு செய்த ஆடை ஆபரணங்களும், போதை தரும் நறுமணமும் முற்றுந் துறந்த முனிவரையும் நிலை தடுமாற வைக்கும். மாறன் எந்த மூலைக்கு?

ரங்கதேவி, முத்துப் பல்வரிசை தெரிய நகை முகத்துடன் "தளபதியாரே, வணக்கம்" என்றாள். அவள் அணிந்திருந்த கச்சையின் பொன் வண்ண நிறத்தை மெல்லிய துகில் மறைப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தது.

அங்கிருந்து எழுந்து உடனே தப்பி ஓடிவிட வேண்டும் என்ற பரபரப்பு அவனுள் எழுந்தது. அவன் கண்களில்

ஒருவித எரிச்சல், தூக்கம் கலைந்ததால் ஏற்பட்ட சோர்வு, உள்ளத்தில் முடிவு காணா பிரச்சினைகளால் ஏற்பட்ட களைப்பு, எல்லாம் சேர்ந்து அவன் முகத்தில் பிரதிபலித்தன.

அவன் ரங்கதேவியை நேருக்கு நேர் பார்க்க விரும்பாமல் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

''தளபதியாரே! நேரமாகிறது. பள்ளி எழுச்சி பாடட்டுமா? தங்களை உடனே காணத் தந்தை விரும்புகிறார்'' என்றாள்.

மாறவர்மன் மறுமொழி கூறாமல், மீண்டும் உறங்குபவன் போல் நடித்தான்.

''தளபதியாரே, தளபதியாரே! நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. தந்தை வழக்கத்துக்கு மாறாக சீக்கிரம் எழுந்து விட்டார். அவரைக் காண சோழ சக்கரவர்த்தி அனுப்பிய தூதர் வந்திருக்கிறார். அதனால் தங்களை உடனே அழைத்துவரச் சொன்னார்'' என்று மீண்டும் குரல் கொடுத்தாள்.

ரங்கதேவியை மெல்ல அங்கிருந்துச் சென்றுவிடச் செய்ய மாறவர்மன் முடிவு செய்தான்.

''என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. களைப்பு மிகுந்திருக்கிறது. தூக்கம் தூக்கமாக வருகிறது; நான் சற்று ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்'' என்று முணுமுணுத்து விட்டு உறங்குவது போல் பாவனை செய்ய ஆரம்பித்தான்.

ரங்கதேவி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். தோழியை நோக்கி, ''நாம் போகலாம் வாடி. அவருக்கு மட்டும்தான் தூக்கம் தூக்கமாக வருகிறதாம். நமக்கு மட்டும் தூக்கமில்லையா?'' என்று கேட்டாள்.



''ஆமாம், தேவி! நேற்று நீங்கள் மஞ்சத்தில் எங்கே தங்கியிருந்தீர்கள்? காலடியோசை கேட்டால் எழுந்தோடி சாளரத்தின் வழியே எட்டிப் பார்த்த வண்ணமிருந்தீர்கள்'' என்று தோழி கூறினாள்.

''உஷ்...சும்மாயிருடி. நான் ஒரு பைத்தியக்காரி. ஒருதலைபட்சமாக அவர் நினைவுடனேயிருக்கிறேன். அவருக்கு அந்தப் பணிப்பெண் மீதுதான் நினைவு...கால் கடுக்க நின்று நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார். அதனால் அவருக்குக் களைப்பு, இரவெல்லாம் அவள் நினைவு...'' என்றாள்.

''அதெப்படிச் சொல்ல முடியும்? அந்தப் பணிப் பெண்ணைத்தான் நினைத்துக் கொண்டிருந்தார் என்று எப்படிச் சொல்ல முடியும்? தங்களை நினைத்திருக்கலாமல்லவா?'' என்று தோழி சீண்டினாள்.

''என்னை நினைத்துக் கொண்டிருப்பவராகயிருந்தால் எந்நேரமானாலும் இரகசியமாக என் மாடப்பக்கம் வருவதற்கு முயன்றிருக்கமாட்டாரா?'' என்றாள் ரங்கதேவி.

''அவர் வரவில்லையென்று உங்களுக்கெப்படித் தெரியும். வந்திருப்பார்; உங்கள் தாயார்தான் வெளியே படுத்திருந்தாரே...'' என்றாள் தோழி.

ரங்கதேவி திடுக்கிட்டாள். ''அப்படியா? என் தாய்க்கு என்னை எப்போதுமே கண்காணிப்பதே தொழிலாகி விட்டது. என் தந்தை ஒருவர்தான் என் உள்ளம் அறிந்தவர்'' என்றாள்.

''தேவி! தங்கள் திருமண முடிவு என்னவாயிற்று? தளபதியுடன் சென்றிருந்தீர்களே, மனம் விட்டுப் பேசினாரா?'' என்று தோழி கேட்டாள்.

''என்னுடன் எங்கே பேசினார். அந்தப் பணிப் பெண்ணுடன் பேசிக்கொண்டேயிருந்தார். அந்தக் கர்வக்காரி

யுடன் அப்படி என்ன பேச்சு இருக்குமோ?'' என்று வேதனைக் குரலில் வேதனை சுழல கூறினாள்.

மாறவர்மனுக்கு இரு காதுகளையும் மூடிக்கொள்ளத் தோன்றியது. இவர்கள் போய்விடுவார்கள் என்று பார்த்தால் பேசிக்கொண்டே இடத்தைவிட்டு நகரமாட்டார்கள் போலிருக்கிறதே என்று திரும்பிப் படுத்தான்.

''தேவி, தளபதியின் அழகுக்கு ஆயிரம் பெண்கள் வந்து மொய்ப்பர். ஆனால், தாங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும், அவர் கவனம் வேறு எங்கும் செல்லாமல் இருக்க'' என்றாள் தோழி.

''அதெப்படி முடியும்? கலபதிபுரத்துத் தளபதியாக இன்று இருக்கிறார். நாளைக்கே இளவரசராகிவிடுவார் இளவரசருக்கு என்று சில கட்டுப்பாடுகள் இங்கே உண்டு...'' என்று ரங்கதேவி கூறத் தொடங்கவும், மாறவர்மன் படுக்கையிலிருந்துத்துள்ளி எழுந்து இருசெவிகளையும் மூடிக்கொண்டு, ''என்னைச் சற்று நிம்மதியாக விட்டுச் செல்லமாட்டீர்களா?'' என்று உரத்த குரலில் கூவினான்.

அப்போது உண்மையிலேயே சிங்கவரையன் அழைப்பதாகப் பணியாள் ஒருவன் வந்து பணிவுடன் கூறினான். நீண்ட நேரமாக, மிக முக்கியமான விஷயம் கலந்தாலோசிக்க வேண்டும் என்று காத்திருப்பதாகவும் தெரிவித்தான்.

மாறவர்மன் பரபரப்புடன் எழுந்தான். ''கருணை கூர்ந்து அந்தப் பக்கம் போகிறீர்களா? நான் ஆடையைச் சரி செய்து கொள்ளவேண்டும்'' என்று போர்வையை மார்புவரை போர்த்திக் கொண்டு பேசினான்.

ரங்கதேவியும், அவள் தோழியும் முகத்தைத் திருப்பிக் கொண்டு மறுபக்கம் சென்றனர்.

மாறவர்மன் சிறிது நேரம் யோசித்தான். இன்னும் முடிவுக்கு வரவில்லை. சிங்கவரையனைச் சந்தித்த பிறகு



இறுதிமுடிவுக்கு வருவோம் என்று முகங்கழுவி வேற்றுடையணிந்து சிங்கவரையனைக் காண விரைந்து சென்றான்.

முற்றத்தில், சிங்கவரையன் திண்டில் சாய்ந்து கொண்டு காலை நீட்டியவாறு அங்கு வந்திருப்பவர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். வெளியே புலிக்கொடி தாங்கிய குதிரை வீரர்கள் நின்று கொண்டிருந்தனர். உள்ளே, சோழ சக்கரவர்த்தியின் தூதுவன் அமர்ந்திருக்க வேண்டும்.

மாறவர்மன் உள்ளே நுழைந்தவுடன் அனைவரும் எழுந்து நின்றனர். 'தனக்கு இவ்வளவு மரியாதையா?' என்று மாறவர்மன் வியப்படைந்தான்.

''தளபதியாரே, இப்படி உட்காருங்கள். தங்கள் வருகைக்காகக் காத்திருக்கிறார்கள். சோழச் சக்கரவர்த்தியின் தூதுவர்கள். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய வேண்டிய ஆபரணங்களைக் கொடுத்து அனுப்பியதற்காக திருமந்திர ஓலை நாயகத்திடம் நன்றி தெரிவித்திருக்கிறார்'' என்று சிங்கவரையன் தெரிவித்தார்.

முற்றத்தைத் தாண்டி உட்கூடத்துக் கதவின் ஓரமாக, ரங்கதேவியின் தாய் நாச்சியாரம்மாள் வந்து நிற்பது தெரிந்தது.

மாறவர்மன் அனைவருக்கும் வணக்கம் கூறி நலன் விசாரித்துக் கம்பீரமாக நின்றான். அவனது விழிக் கோணம் வந்திருப்பவர்களை ஒருமுறை ஆராய்ந்தது.

சிங்கவரையனே பேச்சைத் தொடங்கினான்.

''சோழ சக்கரவர்த்தி, உன்னிடம் சொல்லியிருக்கும் செய்தியை நீ சொல்வதற்குள் தூதுவர்களே வந்து சொல்லி விட்டார்கள்'' என்று சிங்கவரையன் கூறி மீசையை மெல்ல ஒதுக்கிவிட்டுக் கொண்டான்.

மாறவர்மன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு — ''நேற்று இங்கே வந்து சேரும்போது நடுநிசிக்கு மேலாகி

விட்டது. அந்த வேளையில் தங்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் செல்ல நாள் குறித்துச் செய்தி சொல்லி யனுப்புவதாக சக்கரவர்த்தி தெரிவித்தார். படைகளுக்கு நான் தலைமை தாங்கவேண்டுமாம். கலபதிபுரத்தினின்று படைப் பிரிவு ஒன்றும் வேண்டுமாம்'' என்றான்.

''நீ என்ன சொன்னாய்?'' சிங்கவரையன் கேட்டான்.

''நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. தங்கள் உத்தரவுப்படி நடக்கவேண்டியவன்தானே!'' என்று மிகப் பணிவுடன் கூறினான் மாறன், உள்ளத்தே எழும் கடும் கோபத்தை மறைத்துக்கொண்டே.

''தூதுவர்கள் இப்போது எனக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள். பௌர்ணமியன்று படை புறப்பட வேண்டுமாம். இது ஏதோ பெரும் யுத்தமில்லையாம். வீரபாண்டியன் மதுரையை நோக்கிப் படைகளுடன் செல்வதற்கு முன்பு நாம் அவனைத் தடுத்து நிறுத்தி விட வேண்டுமாம்'' என்று சிங்கவரையன் கூறிவரும்போது சோழ சக்கரவர்த்தியிடமிருந்து வந்த தூதர்களில் ஒருவன் குறுக்கிட்டு, ''முடிந்தால் வீரபாண்டியனை உயிரோடு சிறைப்படுத்தி விடுவது; முடியாவிட்டால் கொன்றுவிடுவது சக்கரவர்த்தியின் கட்டளை'' என்றான்.

மாறவர்மன் இரத்தம் கொதித்தது. 'பாண்டிய மன்னரை முடிந்தால் சிறைப்படுத்துவதா? செய்து பாருங்களேன்; கொன்று விடுவதா — முடியுமா பாருங்கள். அங்கே என்ன நடக்கப் போகிறது பாருங்கள். ஏ, பராந்தகா! நீ செய்த பாவங்களால் தலைமகனை இழந்து தவிக்கிறாயே, போதாதா? அதற்குப் பிராயச் சித்தமாக சிதம்பரம் கோயில் விமானத்திற்குப் பொற் தகடு அடிக்கப் போகிறாயே! இன்னுமா பாபச் செயல்கள் புரிய வேண்டும்? வீரபாண்டியன் உனக்கு என்ன துரோகம்



செய்தார்? சோழ நாட்டு மண்ணில் அணு அளவேனும் அடைய ஆசைப்பட்டாரா?

அவரது தாய்த் திரு நாட்டை மீண்டும் பெற எண்ணுகிறார். அவர் தந்தை ராஜசிம்மனுடைய மறைவுக்குப் பழிக்குப் பழி வாங்க நினைக்கிறார். அது தவறா?' என்று மாறனுடைய உட்குரல் ஆக்ரோஷமாகக் கேட்டது.

''மாறவர்மா, நீ என்ன சொல்கிறாய்? உன் உதடுகள் ஏதோ முணுமுணுகின்றனவே. உன் உடல் ஏனோ அதிர்ச்சியடைந்தது போல் நடுங்குகிறதே'' என்று சிங்கவரையன் கேட்டான்.

''உங்கள் தனபதியை, சக்கரவர்த்தி மிகவும் பாராட்டு கிறார். அவருடைய தோற்றம், நடை, பார்வை, அளந்து பேசும் குணம் யாவும் அவருக்குப் பிடித்து விட்டது. அவரைப் பார்த்த பிறகு தான், சக்கரவர்த்தி படை யெடுப்பைப் பற்றியே ஊர்ஜிதம் செய்தார். சக்கரவர்த் திக்கு மிகவும் வேண்டிய சிவனடியார் ஒருவர், மாறவர்மனே படைகளுக்குத் தலைமை வகிக்கத் தகுதி யானவன் என்று பாராட்டுரை வழங்கினார்'' என்று தூதுவர் கூறினார்.

சிங்கவரையனுக்குப் பெருமையாக இருந்தது. மீசையை நன்றாக முறுக்கி விட்டுக் கொண்டார். உட்புறமாகத் திரும்பி தன் மனைவியை நோக்கி, ''நாச்சியார், கேட்டுக் கொண்டிருக்கிறாயா. நம் மருமகப் பிள்ளையின் திறமையை?'' என்று பெருங்குரல் கொடுத்துச் சிரித்தார்.

''மாறவர்மா! நீ ஒன்றும் சொல்லவில்லையே! அளந்து பேசும் குணத்தை இங்கும் கடைப் பிடிக்கிறாயா? ரங்க தேவியிடம் பேசும்போது மட்டும் அதைக் கடைப்பிடிப்ப தில்லையே!'' என்று கூறி ஏதோ நகைச்சுவையைக் கூறி

விட்டது போல் நகைத்தார். அந்தச் சிரிப்புக்கு எதிரொலி யாக யாரோ இருவர் 'களுக்'கென்று சிரிப்பது கேட்டது. அதைத் தொடர்ந்து யாரோ அதட்டும் ஓசையும் கேட்டது.

சிரித்தவர்கள், ரங்கதேவியும் தோழியும். அதட்டியவர் யார் என்று சொல்ல வேண்டுமா? ரங்கதேவியின் தாய்!

மாறவர்மன் முடிவு செய்து விட்டான்; சோழர் படைக்குத் தலைமை வகித்து நடத்திச் செல்வது என்று உறுதியுடன் 'முடிவு செய்து விட்டான். சிவனடியாரைக் கடைசியாக அவன் சந்தித்ததையும், அவர் கூறியதையும் மீண்டும் ஒரு தடவை நினைத்துப் பார்த்துக் கொண் டான். சிவனடியாரைக் குறித்து அவன் கொண்ட சந்தேகம் முழுமையாக நிவர்த்தியாகவில்லை. என்றாலும் அவநம்பிக்கை மறைந்து நம்பிக்கை ஏற்படத்தான் செய்தது. அவருடன் அதிக நேரம் பேச முடியவில்லை. நெருங்கி நின்று பேச முடியவில்லை—இருள். மரத்தின் மறுபுறம் அவர். இந்தப் பக்கம் மாறன். என்ன பேசி யிருக்க முடியும்? பேசிய சில வார்த்தைகளும், இவன் கேட்ட சில கேள்விகளுக்கு அவர் கூறியதும் சந்தேகத்தை மாற்றின. அதனால் மாறன் உறுதியுடன் படை களுக்குத் தலைமை வகித்துச் செல்வதென்ற முடிவுக்கு வந்தான்.

மாறன் கம்பீரமாகத் தெளிவாகப் பேச ஆரம்பித் தான்: "கலபதிபுரத்துத் தலைவரே! சோழ சக்கரவர்த்தி கள் தங்களிடம் மிகவும் மதிப்பு வைத்திருக்கிறார். தனிப் படைகளை வைத்துக் கொள்ள அனுமதி கொடுத் திருக்கிறார். போர்க் காலத்தே படைகளைக் கொடுத்து உதவ வேண்டும் என்ற நிபந்தனை சொல்லாமலே விளங்கும். அதனால், சக்கரவர்த்தி அழைக்கும்போது நாம் செல்லக் கடமைப்பட்டவர்களே. பாண்டிய நாட்டின் மீது திடீரெனத் தாக்குவதற்கு அனுப்பப்படும்



படைகளை நான் நடத்திச் செல்லும் வாய்ப்புக் கிடைத்த தற்கு மிக மகிழ்ச்சியடைகிறேன்" என்றான்.

இந்த வார்த்தைகளை அவன் எப்படிச் சொன்னான் என்றே அவனுக்குத் தெரியவில்லை. பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல வாய்ப்புக் கிடைத்ததற்கு மிக மகிழ்ச்சியா? தெய்வமே! சோமசுந்தரக் கடவுளே! என்னை இப்படியும் சோதிக்கிறாயா? இந்த வார்த்தை களைக் கூறியதை தலைவர் வல்லபன் கேட்டிருந்தால் உடனே நாக்கை ஒட்ட நறுக்கமாட்டாரா? என்று அவன் வருத்தத்துடன் நினைத்துக் கொண்டான்.

"ஆஹா..." என்று குரல் கொடுத்தார் சிங்கவரையன். "நாச்சியார்! உன் மருமகப்பிள்ளையின் அடக்கமான, கம்பீரமான வார்த்தையைக் கவனித்தாயா?" என்று உட்புறம் நோக்கி சிங்கவரையன் கேட்டபோது ரங்கதேவி தாயை இறுக்கமாக அணைத்துக் கொண்டாள். நாச்சியார் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். எட்டிப் பார்த்து விட்டு, யார் யாரோ உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு அடக்கிக் கொண்டாள்.

"பராந்தக சோழ சக்கரவர்த்தி அனுப்பிய தூதுவர் களே! படைகளையும் தளபதியையும் அனுப்பச் சித்தமா யிருப்பதாகப் போய்ச் சக்கரவர்த்தியிடம் சொல்லுங்கள். யாரங்கே!" என்று கை தட்டி அழைத்து, "தூதுவர் களுக்கு முத்து மாலையும் பட்டாடையும் பரிசாகக் கொடுங்கள். சக்கரவர்த்தியின் சமூகத்திற்குக் காணிக்கை யாகப் பட்டுப் பீதாம்பரங்கள், முத்தாபரணங்கள், கனி வகைகளைப் பெரிய வெள்ளித்தட்டில் வைத்து அனுப்புங்கள்" என்றார்.

"பௌர்ணமிக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ளன. அதற்குள் தில்லைச் சிற்றம்பலத்திற்குச் சக்கர வர்த்திகள் சென்று விடுவார். அங்கிருந்துப் படைகள் புறப்படுகின்றன" என்று தூதுவர் கூறினார்.

''கலபதிபுரத்து வீரர்களை அழைத்துக் கொண்டு மாறன் முதல் நாளே வந்துவிடுவான்'' என்றார் சிங்கவரையன்.

தூதுவர்கள் போன பிறகு அந்த முற்றம் சந்தடி குறைந்து காணப்பட்டது. மாறன் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தான். வாயிற்படியருகே நாச்சியார் இடுப்பில் இரு கைகளையும் வைத்துக் கொண்டிருந்தாள். அவள் பின்புறம் நின்றிருந்த ரங்கதேவி, தாய் இடுப்பில் வைத்திருந்த கரத்தின் இடைவெளி வழியே குனிந்து மாறனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள்.

சிங்கவரையன் இரு கைகளையும் கொட்டினான். உற்சாகத்துடன், ''நாச்சியார், நாச்சியார்'' என்று அழைத்தான்.

''இங்கே வா! மாறனின் பெருமையைப் பார்த்தாயா! சக்கரவர்த்தி என்னிடம் கொண்டிருக்கும் மதிப்பைப் பார்த்தாயா! மாறன் படைகளுக்குத் தலைமை வகித்துச் செல்கிறான் என்றால், கலபதிபுரத்து மதிப்பு மிக உயர்ந்து விட்டது. காலா காலத்திற்கு அழியாது நிலைத்திருக்கும் நிகழ்ச்சி இது. அதனால், உடனே ரங்கதேவிக்குக் கலியாண ஏற்பாடுகளைச் செய்'' என்றான் குதூகலத்துடன்.

''கலியாண ஏற்பாடுகள் இன்றைக்குள் முடிந்துவிட வேண்டும்'' என்று உற்சாகமாகக் கூறினான்.

சிங்கவரையனுக்குச் சுறுசுறுப்பும் உற்சாகமும் வந்து விட்டதென்றால், அதைத் தடுக்க யாராலும் முடியாது. நிறைவேற்றியே தீருவார்.

நாச்சியார் கூடத்திலிருந்து முற்றத்திற்கு வந்தாள். ''நாச்சியார், நான் சொல்வது உன் காதில் வீழ்ந்ததா? முகத்தில் மகிழ்ச்சியைக் காணோமே, ஏன்?'' என்று சிங்கவரையன் கேட்டார்.



தான் அங்கிருப்பது சரியன்று என்று வெளியே சென்று நின்று கொண்டான் மாறவர்மன்.

''யாருக்குக் கலியாணம்?'' என்று நாச்சியார் கேட்டாள்.

''ஆ! நன்றாகக் கேட்டாய். இவ்வளவு நேரம் நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன். நீ என்ன யோசித்துக் கொண்டிருந்தாய்?'' என்று குரலை மாற்றிக் கொண்டு கேட்டார் சிங்கவரையன். அவருக்குக் கோபம் வரவில்லை. அதற்கு மாறாக சிரிப்புத்தான் வந்தது.

''நமது செல்வப் புதல்வி ரங்கதேவிக்குத்தான் கலியாணம். நான் முதலில் திட்டமிட்டிருந்தேன். நாலா தேசத்து மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பி கோலாகலமாகக் கலியாணத்தை நடத்த வேண்டுமென்று இப்போது அதற்கு நேரமில்லை கலியாண ஏற்பாடுகள் உடனே நடந்தாக வேண்டும்'' என்றார் உற்சாகத்துடன்.

மாப்பிள்ளை யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்? நமது உறவுப் பிள்ளையா?'' என்று கேட்டாள் நாச்சியார்.

''என்ன அப்படி கேட்டு விட்டாய், நாச்சியாரம்மா! மாப்பிள்ளையை இங்கேயே நிற்க வைத்துக் கொண்டு?'' என்று பெரிதாகச் சிரித்தவாறு கூறினார் சிங்கவரையன். திரும்பிப் பார்த்தார், மாறன் அங்கில்லை.

''மாப்பிள்ளை நமது மாறவர்மன் தான்; தளபதி மாறவர்மன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் சோழர் படைகளுக்குத் தலைமை வகிக்கிறான். போர்க்களத்தில் தனது திறமையைக் காட்டுவான். வெற்றி வாகை சூடித் திரும்புவான். தளபதி மாறனைச் சோழ சக்கரவர்த்தி மிகவும் புகழ்வார். நாடெங்கும் கொண்டாடும். அப்போது மாறன் வெறும் தளபதி மாறனாக மட்டுமல்லாமல் சிங்கவரையனின் மாப்பிள்ளை

மாறனாக இருந்து விட்டால் பெருமைதானே!'' என்றார்.

ரங்கதேவிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

நாச்சியார் திடுக்கிட்டாள். அவளுக்கு ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை.

''கூடாது... கூடாது... ரங்கதேவியை மாறன் மணக்கவே கூடாது'' என்று கூவினாள்.

சிங்கவரையன் திகைத்தான். ரங்கதேவி திடுக்கிட்டாள். வெளியே நின்று கொண்டிருந்த மாறன் மெல்லப் புன்னகை பூத்தான்.

## 27. மோதிரத்தைப் பறித்து விடு!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு திரும்பிய குமுதம், அருகே சிவனடியார் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

''பெண்ணே, உனக்கோ மாறன் மீது ஆசை. மாறனுக்கோ வேறொரு பெண்ணின் மீது காதல். என்ன செய்வது? இதுதான் உலகம்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

இருட்டில் அவர் முகம் தெரியவில்லை. ஆனால் குரல் கம்பீரமாக ஒலித்தது. அதில் ஒரு கேலியும் புதைந்திருப்பது புரிந்தது.

''போலிச் சாமியாரே'' என்று கூவினாள் குமுதம். ''என் சொந்த விஷயத்தில் தலையிட நீங்கள் யார்? உமது வேலையைப் பார்த்துச் கொண்டு போய்ச் சேருங்கள்'' என்றாள்.



சிவனடியார் சிரித்தார். குமுதத்திற்கு மேலும் ஆத்திரம் பொங்கியது.

''பெண்ணே! கோபப்படாதே. நான் இன்னும் இரண்டொரு நாள்தான் இருக்கப் போகிறேன். உன் நிலையைப் பற்றி நினைக்கும்போது எனக்குக் கவலையாக இருந்தது. அதனால்தான் கேட்டேன்'' என்றார்.

''என் நிலையைப் பற்றி உமக்கென்ன கவலை?''

''சக்கரவர்த்தி நாளைக்குச் சிதம்பரம் புறப்படுகிறார். அவருடன் சிதம்பரம் செல்லப் போகிறாயா? அல்லது...''

''அல்லது...''

''கலபதிபுரத்திற்குச் செல்லப் போகிறாயா?''

''கலபதிபுரத்தில் எனக்கு என்ன வேலை?''

''அங்கே மாறன் இருக்கிறான்...''

''இருந்து விட்டுப் போகட்டும்...''

''மாறனின் காதலி அங்கேயிருக்கிறாள். அவளிடம் உன் நிலையை எடுத்துச் சொல்லலாம்.''

''அடிகளாரே. உமக்கு நமசிவாய மந்திரம் ஜபிப்பது வேலையா, அல்லது யார் எவரைக் காதலிக்கிறார்கள் என்பதைக் கண்காணிப்பது வேலையா?''

''இரண்டுந்தான். ஒரு சுத்த வீரன் தன் கடமையை விட்டுவிட்டு காதலில் இறங்குகிறாரே என்ற கவலையால் அவனைக் கண்காணிப்பது ஒரு வேலை. 'நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! சோமசுந்தரக் கடவுளே எங்களைக் காப்பாற்று' என்று ஜபிப்பதும் வேலை.''

''சோமசுந்தரக் கடவுளை ஏன் நினைக்கிறீர்கள்? மதுரையில் வாழும் சோமசுந்தரப் பெருமானுக்கு

எதிராக தில்லையம்பல நடராஜரை ஏவிவிடும் நீங்கள், உண்மையிலேயே சிவனடியார்தானா என்பது சந்தேகமே.''

சிவனடியார் சிரித்தார். ''பெண்ணே! தில்லை நடராஜரைத் தொழும் சோழ சக்கரவர்த்தியிடம் பணி புரியும் பெண்ணே! மதுரை சோமசுந்தரரைப் பற்றி நீ நினைப்பது ஏன்? நடராஜநும், சோமசுந்தரரும் சிவபெருமான்தானே, அதில் ஏன் வித்தியாசம் பாராட்டு கிறாய்?' என்று கேட்கவும் குமுதம் மறுமொழி கூறாமல் வாயடைத்துப் போனாள். இவரிடம் எதற்கு வாய் கொடுத்தோம் என்று அவளுக்குத் தோன்றி விட்டது.

அந்த இடத்தை விட்டு வேகமாக நடக்கலானாள். சிவனடியார் தன்னைப் பின் தொடர்வதும் தெரிந்தது.

''அடிகளாரே, என்னை ஏன் பின் தொடர்ந்து வரு கிறீர்கள்?'' என்று குமுதம் திரும்பிப் பார்த்துச் சீறினாள்.

''பெண்ணை ஓர் ஆண் எதற்காகப் பின் தொடர் வான்?''

''தன் வசப்படுத்த; தவறான எண்ணத்துடன்... அருவருப்பான கேள்வி அடிகளார் வாயிலிருந்து வரலாமா?''

''உம்! எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான், நீ சாதாரண பெண் அல்லள் என்று நான் நினைத்தது தவறு. நீ ஓர் அபூர்வப் பெண். தவறிப் போய் சோழ அந்தப்புரத்தில் வேலைக்காரியாக அமர்ந்திருக்கிறாய் என்று நினைத்தேன். ஆனால் ஆண்களைப் பற்றி நீ புரிந்து கொண்டது அவ்வளவு தான்.''

''இரவு வேளையில் ஒரு பெண்ணை, ஆண் எதற் காகப் பின் தொடர்வான் சொல்லுங்களேன், காவியுடைக் குள்ளிருக்கும் கபடச் சாமியாரே?''



''சொல்லட்டுமா? பாதுகாவலுக்காக; பேணிக் காப்பதற்காக.''

''நீங்கள் என்னை எதற்காகப் பாதுகாக்க வேண்டும்?''

''ஓர் ஆபத்து காத்திருக்கிறது. உன்னை இங்கே அடையாளம் கண்டு விட்டார்கள்'' குமுதம் இந்த் வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்டாள்.

''அடையாளங்கண்டு விட்டார்களா? நான் என்ன மாறு வேடத்திலா இருக்கிறேன்?'' என்று குமுதம் கேட்டாள், தான் திடுக்கிட்டதை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல்.

''மாறு வேடத்தில் இல்லை என்றே வைத்துக்கொள். ஏன் திடுக்கிட்டாய்? வெளியே மாறுவேடமில்லை. உள்ளத் துக்குள்ளே வேடம் ... நீ இளவரசியிடம் வேலைசெய்ய வேண்டும் என்பதற்காக சோழ சக்கரவர்த்தியிடம் சேர வில்லை. நான் உண்மைக் காரணத்தைச் சொல்லட் டுமா?'' என்று சிவனடியார் கேட்டவுடன் குமுதம் ஓடத் தொடங்கினாள்.

சிவனடியார் தாவி அவள் கரத்தைப் பிடித்து நிறுத்தி ''ஓடாதே'' என்றார்.

''ஐயோ ஆபத்து. ஆபத்து. பெருமானே, பெரியவரே!'' என்று கூவினாள்.

''ஓலமிடாதே!' — அடிகளார் மெல்லத்தான் ஆனால் அழுத்தமாகக் கூறினார்.

''ஆபத்து, ஆபத்து! ஓடி வாருங்களேன்'' — குமுதம் கூவினாள்.

சிவனடியார் ஒரு கரத்தால் அவளுடைய வாயை அழுத்தமாகப் பொத்தி, ''குமுதா, உன்னை மிகக்

கெட்டிக்கார பெண் என்று நினைத்தேன். கடைசியில் வேடத்தைக் கலைத்து விட்டாயே; மேலும் கூச்சலிட்டு விஷயத்தைச் சிக்கலாக்கி விடாதே'' என்றார்.

குமுதம் அவர் பிடியிலின்றுத் திமிறினாள். பெருமாள் ஓடோடி வருவது தெரிந்தது. பெருமாள் நெருங்கிய போது அடிகளார் பிடியை மெல்லத் தளர்த்தினார். குமுதம் ஓடோடிச் சென்று பெருமாள் அருகே போய் நின்றாள். பெருமாள் தன் கையிலிருந்த மரக்கட்டையைச் சுழற்றிச் சிவனடியாரை நோக்கி வீசினான். சிவனடியார் சிறிது நகர்ந்திராவிடில் அது அவர் மண்டையைப் பதம் பார்த்திருக்கும்,

கீழே விழுந்த அந்த மரக்கட்டையைக் கையில் எடுத்துக் கொண்டார் சிவனடியார். ஒரு சுழற்றுச் சுழற்றினார். பெருமாளும், குமுதமும் அஞ்சி விலகி ஓடினர். அப்போது காங்கேயனும் அங்கே விரைந்து வந்துச் சேர்ந்தார். ''அடிகளாரே, சற்று நில்லுங்கள். பெருமாள் ஏதோ தெரியாமல் செய்து விட்டான்'' என்று பதறியவாறு அடிகளாரின் தாக்குதலை நிறுத்த முயன்றார்.

''மாறன் இருந்திருந்தால் உங்கள் வீச்சையெல்லாம் தொடியில் நொறுக்கியிருப்பார்'' என்றாள் குமுதம்.

''இருந்தால்தானே!'' என்று கூறி நகைத்த அடிகளார் மரக்கட்டையை வீசியெறிந்து ''இவ்வளவுதானா உங்கள் மூவரின் சாமர்த்தியம். மதுரையினின்று சோழ நாட்டிற்கு இதற்காகவா வந்தீர்கள்?'' என்று அடிகளார் கேட்டார்.

குமுதம் முதலில் திடுக்கிட்டாள். பிறகு காங்கேயன் புரிந்து கொண்டு, ''ஐயா!'' என்று பரபரப்புடன் கூவினார். பெருமாள் அவர் காலடியிலேயே வீழ்ந்து விட்டான்.



''சுவாமி, நீங்களா? தெரியாமல் தங்களை அவதூறாகப் பேசிவிட்டேன்'' என்று குமுதம் கண்களில் நீர் பொங்க, குரல் தழுதழுக்கப் பேசினாள்.

''ஒருவாறு நான் யூகித்தேன். ஆனால் உண்மையை இப்போதுதான் உணர்ந்தேன்'' என்றார் காங்கேயன்.

''ஆபரண மூட்டை மரத்தடியில் இருக்கிறது. பெருமாள் அதை எடுத்துக் கொண்டு இருட்டோடு இருட்டாக இங்கிருந்து ஆறு கடலில் கலக்கும் கழிமுகத் தருகே போய்க் காத்திருக்கட்டும்'' என்றார் அடிகளார்.

மூவருக்கும் ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவில்லை.

ஃ ஃ ஃ

சிவனடியாரை மற்றவர்கள் அடையாளம் தெரிந்து வியப்பில் ஆழ்ந்து அடுத்துச் செய்வது பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் அந்த இரவு வேளையில் பராந்தக சோழ சக்கரவர்த்தியின் எதிரே அவரது மூன்று புதல்வர்களும் நின்று கொண்டிருந்தனர். கண்டராதித்தன் நெற்றியில் விபூதி பூசி மார்பிலும் விபூதி பூசி மேல் உத்தரீயத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு 'சிவ சிவ' என்று உச்சரித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

அரிஞ்சயன் ஏதோ சொல்ல முயன்று, முடியாமல் உள்ளக் குமுறலுடன் நின்று கொண்டிருந்தான். கடைசி மகன் உத்தமசீலி தன் இடையிலுள்ள வாளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு உடலை நொடிக்கொரு தடவை குலுக்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

''நீ என்ன சொல்கிறாய் அரிஞ்சயா?'' என்று கேட்டார் பராந்தக சோழர்.

''சிவனடியார், இந்த ஊரைவிட்டுப் போகவில்லை'' என்றான் கவலையுடன். ''ஊரைவிட்டுப் போகாததால்

அவர் மீது சந்தேகப்படலாமா?'' என்று சக்கரவர்த்தி கேட்டான்.

''அவருக்கு, அந்தத் தோப்பில் என்ன வேலை?'' உத்தமசீலி கேட்டான். சக்கரவர்த்தி நகைத்தார். ''மகனே! ஒருவரைப்பற்றி மறைமுகமாக அறியநேர்ந்தால் இந்தச் செயல்களை மட்டும் அறிந்தால் போதாது. தோப்பில் அவருக்கு எவ்வளவோ சொந்த வேலைகள் இருக்கலாம்'' என்றார்.

''தோப்பில் ஒரு பெண்ணுடன் பேசினார். வைத்தியருடன் பேசினார். மரத்தின் மறைவில் மாறவர்மனிடம் பேசினார்'' என்றான் அரிஞ்சயன்.

''தவறல்லவே. நமது பணிப்பெண்ணுடன் தானே பேசினார். நமது வைத்தியருடன்தானே பேசினார். அவர் மீது உனக்கு ஆரம்பத்திலிருந்தே சந்தேகம். அதனால்தான் அவர் செய்கை ஒவ்வொன்றும் உனக்கு தவறாகப்படுகிறது'' என்றார் சக்கரவர்த்தி.

அரிஞ்சயனுக்கு வியப்பாக இருந்தது. எப்போதும் ஒருவரையும் நம்பாத-எவரையும் சந்தேகக் கண்கொண்டு நோக்கும் சக்கரவர்த்தி, சிவனடியாரை எப்படிப் பூர்ணமாக நம்புகிறார்.

''எனக்கென்னவோ, கவலையாயிருக்கிறது. தாங்கள் அவரிடம் தங்கள் முத்திரை மோதிரத்தைக் கொடுத்து விட்டீர்கள். அந்த ராஜ முத்திரையைக் காட்டி அவர் எந்தவிதக் காரியத்தையும் நிறைவேற்றிக் கொள்ளலாம்'. என்றான் உத்தமசீலி.

''நிறைவேற்றிக் கொள்வதற்காகவே அடையாள மோதிரத்தைக் கொடுத்தேன்...'' என்று மெல்லச் சிரித்துக்கொண்டே கூறினார் சக்கரவர்த்தி.

''பொற்றகடு செய்யுமிடத்திற்கு அவர் போவதைப் பார்த்தேன்.''



''எங்கு வேண்டுமானாலும் அவர் போகலாம். பொன் மீது ஆசையற்ற அவர், அங்குப் போய் என்ன செய்து விடுவார்? ஆபரணங்களின் மீது ஆசை உடையவரென்றால், காணாமல் போன சந்திர ஆரத்தைத் தம் சக்தியால் வரவழைத்துத் தந்திருப்பாரா?'' என்று சமாதானப்படுத்தினார் பராந்தக சோழர்.

''இல்லை, இல்லை. இரத்தினமாலை அகப்பட்டு விட்டது. அது தொலைந்து போகவில்லை. அவர் மாய சந்நியாசி.''

''ஆமாம். மாயம் நிறைந்தவர். ஆனால் அருள் மிகுந்தவர். இல்லாவிட்டால், பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல இதுவே தருணம் என்று நமக்கு யோசனை சொல்லியிருப்பாரா? வீரபாண்டியன் கிளர்ந்தெழுந்து நம்மைத் தாக்கப் படைகளைத் திரட்டுவது உண்மை என்பதை நமது ஒற்றர்கள் இப்போது வந்து தெரிவித்துள்ளனர். ஆனால் அடிகளார் பல நாட்கள் முன்பே தெரிவித்துவிட்டார்.''

சக்கரவர்த்தியின் இந்தச் சமாதான வார்த்தைகளுக்குச் சக்கரவர்த்தியின் புதல்வர்களால் மறுமொழிகூற முடியவில்லை. ஆனால் கண்டராதித்தன் இப்போது வாய் திறந்தான்.

''சக்கரவர்த்தி அவர்களே! சகோதரர்கள் கூறுவதில் உண்மை இருக்குமென்று நினைக்கிறேன். அடிகளாரை நான் நம்புகிறேன். ஆனால் தோப்பில் சந்தேகம் ஏற்படும் வகையில் அவர் ஒருவரோடு விவாதித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஒரு பெரிய துணி மூட்டையை அவர் அவனிடம் கொடுப்பதையும் பார்த்தேன்'' என்றார்.

சக்கரவர்த்தி கண்டராதித்தனைத் திரும்பிப் பார்த்தார்.

''உடனே அவரிடம் அது குறித்து ஏன் விசாரிக்கவில்லை; இப்போது குறை சொல்வதுதான் முறையோ?'' என்று கடிந்து கொண்டார்.

''தங்கள் முத்திரை மோதிரத்தைக் கொடுத்த பிறகுதான் இது நடந்தது. நான் அவரை விசாரிக்க முயன்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் அடையாள மோதிரத்தை என்னிடம் எடுத்துக் காட்டினால், நான் மௌனமாகி விடவேண்டித்தானே இருக்கும்'' என்றான் கண்டரன்.

கண்டரன் அதிகம் பேசமாட்டான். பேசினாலும் ஒழுங்காகப் பேசுவான்.

''உங்களுக்கெல்லாம் அடிகளார் மீது சந்தேகம் என்றால் அவரிடமிருந்து அடையாள மோதிரத்தைப் பறித்து விடுவோம். என் அன்பார்ந்த குமாரர்களே! நான் காவியுடைக்கும் சுற்றைச் சட்டைக்கும் மயங்கி விடுபவனல்லன். ஆனால் நீர ஆராய்ந்த பிறகே சிவனடியாரை நம்பினேன். முத்திரை மோதிரத்தைக் கொடுத்ததுகூட கடைசியாக அவரைச் சோதிக்கத்தான். அடையாள மோதிரத்தை அவர் தவறாகப் பயன்படுத்தக் கூடியவரானால் அதைப் பயன்படுத்தும் மறுகணமே அகப்பட்டுக்கொண்டு விடுவார். பொறுத்துப்பார்ப் போம்...'' என்றார் சக்கரவர்த்தி.

இளவரசர்கள் சமாதான மடைந்தவர்களாயினர். அவர்கள் விடைபெறும் போது சக்கரவர்த்தி தமது குமாரர்களை நோக்கி 'நாம் நாளைக்குப் பரிவாரங்களுடன் சிதம்பரம் புறப்படுகிறோம். அங்கிருந்து நமது படைகள் தெற்கு நோக்கிப் புறப்படும்; அதற்குள் கலபதிபுரத்தினின்று மாறனின் தலைமையில் படைகள் வந்துவிடும்...'' என்றார்.

அரிஞ்சயன் தயங்கி நின்றான்; சக்கரவர்த்தியை நோக்கி, ''படைகளுக்கு நான் தலைமை தாங்கிச் செல்லக் கூடாதா? என் வீரத்தைப் புலப்படுத்தக் கூடாதா'' என்று கேட்டான்.



''சக்கரவர்த்தி முன்பே கட்டளையிட்டு விட்டார். அதை நீங்கள் மாற்றாதீர்கள் அண்ணா'' என்றான் உத்தமசீலி.

''சக்கரவர்த்தி உன்னிடம் பொறுப்பை ஒப்படைக்கவில்லை என்பது நினைவிருக்கட்டும்...'' என்றான் அரிஞ்சயன்.

''மருமகர் வல்லவரையர், கலபதிபுரத்து மாறன் இவர்கள் என்னுடன் வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்; ஆனால் தங்களுக்குப் படையெடுப்பில் பங்கில்லை என்பது நினைவிருக்கட்டும்'' என்றான் உத்தமசீலி.

''எனக்குப் பங்கு இல்லாவிட்டால் போகிறது. இந்தச் சிறு பூச்சியை நசுக்க மூன்று பேர் செல்லுங்கள். என் தீரத்தையும், வீரத்தையும் பலப்படுத்த மற்றொரு வாய்ப்பு எனக்கு ஏற்படாமல் போகாது. அப்பொழுது நான் ஒருவனே வீரத்தை நிலைநாட்டுவேன்'' என்றான் அரிஞ்சயன்.

''அரிஞ்சயா! நீ சொல்வது சரி. வீரபாண்டியனை நசுக்கி விட்டு வல்லவரையர் பாண்டிய நாட்டில் இருக்கட்டும். நீ இரட்டர்கள் மீது பெரும் படையுடன் சென்று தாக்கலாம். பொற்தகடு வேய்ந்து, தில்லை நடராஜர் திருக்கோயில் குடமுழுக்குச் செய்து முடிந்தவுடன் புறப்படு. தில்லை அம்பலவாணர் அருள் உனக்குப் பூரணமாக உண்டு'' என்றார் சக்கரவர்த்தி.

''பிறகு அரிஞ்சயனை அழைத்து, நாளைய தினம் நீ சிவனடியாரை நிழல் போலக் கண்காணித்து வா. உனக்குச் சந்தேகம் ஏற்பட்டால் உடனே அவரிடமிருந்து அடையாள மோதிரத்தைப் பறித்துவிடு'' என்றார்

சக்கரவர்த்தி. அரிஞ்சயன் உற்சாகத்துடன் தலையசைத்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. சிதம்பரத்திற்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களில் அனைவரும் ஈடுபட்டிருக்கும்போது, சிவனடியார் பராந்தக சோழச் சக்கரவர்த்தியின் முன்வந்து நின்று, 'நமசிவாய' என்று குரல் கொடுத்தார்.

## 28. அவன் என் மகன்

ரங்கதேவி மஞ்சத்தில் படுத்து விம்மி விம்மி அழுதாள். வாய்விட்டுப் புலம்பி அழுதாள். உணவுக்கு எழுந்து வரவில்லை. தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. அவள் தோழி வந்தபோது அவளை அணைத்துக் கொண்டு 'கோ' வென்று கதறி அழுதாள்.

"அடி, என் தாயே எனக்கு விரோதியாக மாறி விட்டாள், பார்த்தாயா?'' என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

''மறுபடியும் கேட்டுப் பார்த்தாயா?'' என்று தோழி அவளுடைய கலைந்த கூந்தலை மெல்லக் கோதி விட்டாள். சரிந்த ஆடையைச் சரிப்படுத்தினாள்.

''ரங்கா, இப்படி அழுதுகொண்டு அறையில் அடைபட்டுக் கிடப்பதில் என்ன பயன். நீ மீண்டும் தாயாரிடம் செல். மனத்தில் இருக்கும் உன் ஆசையை எடுத்துச் சொல்லு...'' என்றாள் தோழி.

''சொன்னேன், பயனில்லை, பிடிவாதமாயிருக்கிறாள்.''

''பயமுறுத்திப் பார்த்தாயா?''



''என்னவென்று சொல்லி?''

''உன் சகோதரனைப் போல் கடலுக்கு இரையாகி விடுவதாகக் கூறிப் பார். அழுது அட்டகாசம் செய்.''

தோழி கூறியவுடன் ரங்கதேவி மஞ்சத்திலிருந்து எழுந்து உட்கார்ந்தாள்.

''அடி, நான் கூவி, அழுதாகிவிட்டது. ஆனால் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை'' என்றாள் ரங்கதேவி.

தோழி சிறிது யோசித்தாள்.

''எனக்கு ஒன்று தோன்றுகிறது. உன் தந்தையிடம் சொல்லிப் பாரேன். அவர் இட்ட கோட்டை உன் தாய் தாண்டமாட்டாள். கோபம் வராது நீ செய்; உன் தந்தைக்குக் கோபம் வந்தால் தாங்காது...'' என்று யோசனை சொன்னாள் தோழி.

ரங்கதேவி மெல்லச் சிரித்தாள். ''அது நடக்காதடி. என் தாய், என் தந்தையின் கோபத்துக்குப் பயப்பட மாட்டாள், ஏனென்றால் அந்தக் கோபம் அதிக நேரம் நிலைக்காது என்பது அவளுக்குத் தெரியும். ஆனால், கட்டளைக்கு அடிபணிவாள்'' என்றாள்.

''கட்டளையிடச் சொல். கலபதிபுரத்து அரசர் கட்டளையிட்டால் பணிய வேண்டியதுதானே!'' என்றாள் தோழி.

ஃ ஃ ஃ

ரங்கதேவி, தந்தையிடம் ''அப்பா, நான் இதுவரை இந்த உலகத்தில் ஒரு பொருளின்மீதும் ஆசைப்பட்டது கிடையாது'' என்று பேச்சைத் தொடங்கினாள்.

''தெரியுமே...நீ உண்டு, கடற்கரை உண்டு, நதிக்கரை உண்டு, படகுண்டு, மாந்தோப்பு உண்டு என்று

கழித்து விடுகிறாய். அதனால்தான் உனக்குத் திருமணம் செய்து வைத்து மகிழ்விக்க ஆசைப்படுகிறேன்'' என்றார் சிங்கவரையன்.

''என் ஆசைதான் நிறைவேறவில்லை; தங்கள் ஆசைக்குக் கூட இந்தக் கதியா?'' என்று ரங்கதேவி மெல்லச் சிரித்தவாறு கேட்டாள்.

''என்ன சொல்கிறாய்?''

''என் திருமணத்திற்குத் தாயே குறுக்கே நிற்கிறாள்.''

''ஆமாம்...''

''நான் மாறவர்மனை உளமாற நேசிக்கிறேன் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்காது...''

''இதற்கு முன்பு தெரியவில்லை. இன்றுதான் அறிந்தேன். நீ காலையிலிருந்து உணவருந்தவில்லையாம. அழுது அழுது முகஞ் சிவந்து விட்டதே, ரங்கா'' என்றான் சிங்கவரையன்.

''என் துயரத்தை எப்படியப்பா மாற்றிக் கொள்வது.''

''நீ துயரப்படலாமா? நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே, மாறவர்மனை உனக்கு மணமுடித்து வைக்கிறேன். அவன் எந்த ஊர் இளவரசனுமல்லன்; ஆனால் மாவீரன்; அவனுடைய வருங்காலம் கம்பீரமாக இருக்கப் போகிறது என்பது எனக்குத் தெரியும். பராந்தக சோழ சக்கரவர்த்தியிடம் பாராட்டுதல் பெறுவதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அவர் நம் கலபதிபுரத்தை மதித்து நமது படைகளைக் கோரியிருக்கிறார். நமது படைகள் பாண்டியர்களை முறியடிக்கச் செல்கின்றன. இவ்வளவு பெருமையும் யாரால் வந்தது? மாறவர்மனால், எனது



7467
279261

மருமகனாக அவன் வந்துவிட்டால் எனக்கும் கலபதிபுரத்துக்கும் பெருமை'' என்று சிங்கவரையன் கம்பீரமாகப் பேசினான். பெருமையுணர்ச்சி பேச்சில் பொலிந்தது.

ரங்கதேவி கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''உங்களுக்குப் பெருமை வராது போலிருக்கிறதே அப்பா?'' என்று தலைகுனிந்து கொண்டே சொன்னாள்.

''என்ன சொன்னாய் ரங்கதேவி! என் பெருமையை யார் தடை செய்வார்கள்? அந்தத் துணிவு யாருக்கிருக்கிறது? ஜோதிடரை வரச் சொல்லிவிட்டேன். மாறவர்மன் புறப்படுவதற்குள் உனக்குத் திருமணம் முடித்துவிட வேண்டும். நீ அவன் நெற்றியில் வெற்றித் திலகமிட்டு வழியனுப்ப வேண்டும், வெற்றியுடன் திரும்பி வரும் போது என் மருமகன் வெற்றி விஜயத்தை நான் கோலாகல்மாகக் கொண்டாட வேண்டும்'' என்று கம்பீரமாக மார் நிமிர்த்திப் பேசினான், சிங்கவரையன்.

''எனக்கும் அப்படித்தான் அப்பா ஆசை; நேற்று வரை நான் கனவு கண்டேன். மனக்கோட்டை கட்டினேன். அவருள்ளம் அறிவதற்குத்தானே அப்பா, என்னை அவருடன் அனுப்பினீர்கள். திருமணமாகாத கன்னிப் பெண்ணை அவ்வாறு அனுப்புவது நம் மரபல்ல; ஆனால் நீங்கள் மீறிச் செய்தீர்கள்; முன்பே தாங்கள் உள்ளத்தில் உறுதியாக முடிவு செய்துவிட்டீர்கள். என்மீது அவருக்குக் கொள்ளை ஆசை. அப்பா, நான் நாணம் விட்டுச் சொல்கிறேன்: என்னை அவர் படகிலிருந்து இறக்கும்போது என் இடையைப் பிடித்து மலர்போல் மெதுவாக இறக்கினார். அவருடைய ஸ்பரிசம் என்னைக் கந்தர்வபுரிக்குக் கொண்டு சென்றுவிட்டது. சக்கரவர்த்தியின் விருந்தாளியாக நானிருந்த நாட்களெல்லாம் அவருடைய நினைவுதான் எனக்கு. அப்பா, அவரது அழகைக் கண்டு அங்குள்ள பெண்களுக்கு மையல், அவர் வீரத்தைக் கண்டு இளவரசர்களுக்கும் பொறாமை.

நான் பெரும் பாக்கியசாலி என்று நினைத்துக் கொண்டேன். இரவெல்லாம் எனக்கு அவர் நினைவுதான். இவ்வாறு இதயபீடத்தில் அவரை ஏற்றி என் தலைவராக அமர வைத்தபிறகு அவரை இறக்கிவிடுவதோ, மறந்துவிடுவதோ எப்படி அப்பா முடியும்?'' ரங்கதேவி விம்மினாள்.

சிங்கவரையன் பரபரப்புடன் எழுந்து அவளது கண்ணீரைத் துடைத்து, ''உன் கனவு நனவாகாது என்று சொன்னவர்கள் யார்? சொல்; ஒன்று கேட்கிறேன். உன் இதய பீடத்தில் அமர்ந்துள்ள அழகனை இறக்க முயல்வது யார்! சொல் மகளே'' என்றார்.

''சொன்னால் அவர்கள் மனத்தை மாற்ற முடியுமா தங்களால்?''

''மனத்தை மாற்றுவதா? உடனே கட்டளை இடுவேன். அதிகாரக் குரலுக்கு அஞ்சாதவர் யாரிருக்கிறார்கள்?''

''இருக்கிறார்கள்! என் தாய்'' என்று ரங்கதேவி கூறியவுடன், சிங்கவரையன் திடுக்கிடவில்லை. தலை குனிந்து கொண்டான். ஏதோ சிந்தனையிலாழ்ந்தான்.

''ஆமாம்'' ரங்கதேவி. நாச்சியாரின் சம்மதம் இன்னும் வரவில்லை. சில வேளைகளில் அப்படித்தான் முரண்பாடு செய்வாள். அப்புறம் மாறி விடுவாள். முன்பெல்லாம் அப்படியில்லை; உன் சகோதரன் — என் தலைப்பிள்ளை அகால மரணமடைந்த பிறகு அவள் புத்தியில் சிறு கலக்கம் ... நான் அவள் மனதை மாற்ற முயல்கிறேன். நீ மகிழ்ச்சியோடிரு ... அலங்காரம் செய்து கொள். மாறவர்மனை இன்று சந்திக்காதே. புது மணப் பெண்ணுக்குண்டான நாணம், அச்சம் உனக்கு மட்டுமில்லையா?'' என்று அவளை மெல்ல அணைத்துக் கொண்டு கூறினார்.



ரங்கதேவியின் முகத்தில் நம்பிக்கை ஒளி சிறிது ஏற்பட்டது.

''ரங்கா — எங்கே, முகத்தை அலர்ந்த தாமரை போல் மலரச் செய'' என்று கூறி அவள் முகத்தை உற்று நோக்கினான்.

தந்தையின் உற்சாகமுள்ள பேச்சும், நம்பிக்கை மிகுந்த சொற்களும் ரங்கதேவியிடம் புதுத் தெம்பை ஏற்படுத்தின.

அவள் இதழ்கள் மெல்ல விரிந்தன, ''உம். நன்றாகச் சிரிக்க வேண்டும்'' என்றார் சிங்கவரையன்.

ரங்கதேவி தந்தையின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு மெல்ல நகைத்தாள்; பிறகு விம்மினாள். அவள் விழிகளின் கோடியில் இருநீர்த் துளிகள் உருள ஆயத்தமாக நின்றன.

சிங்கவரையன், முன் கூடத்தைத் தாண்டி வீட்டின் பின் கட்டிற்கு, பெண்கள் வசிக்கும் கூடத்திற்குச் சென்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று நாச்சியாரைத் தேடி வீட்டின் இரண்டாவது கூடத்திற்குச் சென்றான்.

பணிப் பெண்கள் பரபரப்புடன் தங்கள் மேலாடையைச் சரி செய்துகொண்டு இங்குமங்கும் ஓடினார்கள்.

''நாச்சியார், நாச்சியார்'' என்று குரல் கொடுத்துக் கொண்டு, கூடத்தில் கீழ்க் கோடியில் உள்ள விசாலமான அறையின் அருகே சென்று ''நாச்சியார்'' என்று குரல் கொடுத்துக் கதவை மெல்லத் தட்டினான்.

கதவு தாளிடப்படவில்லை. மெல்லத் திறந்திருந்தது. நாச்சியார் மஞ்சத்தின் ஓர் ஓரத்தே எங்கோ நினைவாக அமர்ந்திருந்தார். தலைவர் தன்னை அழைத்துக் கொண்டே வந்ததோ, கதவின் அருகே வந்து குரல் கொடுத்ததோ, கதவைத் தட்டியதோ அவளுக்குத் தெரிய

வில்லை. கதவைத் திறந்துகொண்டு, ''நாச்சியார், நாச்சியார் எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறாய்? சிந்தனைத் தேரை எங்கே ஓடவிட்டிருக்கிறாய்?'' என்று கேட்டவாறு மஞ்சத்தின் அருகே வந்தார்.

நாச்சியார் அப்போதுதான் உணர்ந்தாள். தன் தலைவர் தன்னைத் தேடி, தன் இருப்பிடமே வந்துவிட்டதை. அவள் மனமெல்லாம் மகள் ரங்கதேவியின் திருமணத்தைப் பற்றியே இருந்தது. மகள் மனத்தை எப்படி மாற்றலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். கணவரின் குரல் கேட்டவுடன், நாச்சியார் திடுக்கிட்டு எழுந்தாள். அவளது பருத்த சரீரம் உடனே அதற்கு இடங்கொடுக்கவில்லை. அவளை எழவிடாமல் சிங்கவரையன் அவள் தோளைத் தொட்டு அழுத்தி ''உட்கார் நாச்சியாரம்மா!'' என்று அன்புடன் கூறி மெல்ல நகைத்தான்.

நாச்சியாரை அவன் தொட்டுப் பேசி, அருகிருந்துக் குலவிப் பல ஆண்டுகளாகி விட்டன. அந்த அறையின் மஞ்சத்தில் இருவரும் சேர்ந்துறங்கிப் பல ஆண்டுகளாகி விட்டன.

நாச்சியாரின் உடல் சிலிர்த்தது. பெண்களுக்கே இயற்கையாக உள்ள நாணம் அவளை வந்து சூழ்ந்து கொண்டது.

''நாச்சியாரம்மா, கவலைப்பட்டு, சிந்தனையிலாழ்ந்தே நீ மன வியாதியை வரவழைத்துக் கொள்கிறாய். இப்போது உனக்கென்ன புதுச் சிந்தனை?'' என்று சிங்கவரையன் பேச்சைத் தொடங்கினான்.

நாச்சியார் பெருமூச்சு விட்டாள். ''எல்லாம் மகளைப் பற்றிய கவலைதான்...'' என்றாள்.

''கவலையா? மகள் கல்யாணத்தைக் குறித்து மகிழ்ச்சியடைய வேண்டியது போக, கவலைப்படலாமா? நான்



கூறியபோது, 'கூடாது, கூடாது' என்று மட்டும் கூறிவிட்டு உடனே சென்றுவிட்டாய். மாறனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? அவன் குணத்தில் ஏதாவது கேடு கண்டாயா?'' என்று கேட்டான்.

''இல்லை, இல்லை'' என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினாள். ''நல்ல பிள்ளை'' என்று முணுமுணுத்தான்.

''பிறகு என் வார்த்தைக்கு ஏன் தடை சொல்கிறாய்? என் முடிவுக்கு மாறுதலாக ஏன் சொல்கிறாய்? ரங்காவின் உள்ளத்தில் வேதனையை ஏன் ஊட்டுகிறாய்? ரங்காவுக்கு ஏற்ற மணாளன் அவன் இல்லையா?''

''இல்லை...'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினாள் நாச்சியார். சிங்கவரையன் திடுக்கிட்டான்.

''என்ன சொல்கிறாய், நாச்சியாரம்மா?''

''மாறன், ரங்கதேவியை மணக்கக் கூடாது.''

''ஏன்?''

''எனக்குப் பிடிக்கவில்லை. என் மனத்துக்குச் சம்மதமில்லை.''

''மாறனின் குணத்தில் நீ ஏதும் மாறுதல் கண்டாயா? அவன் தகுதியில் குறைவு கண்டாயா?''

''மாறனைப் போல் நற்குணமுடையவனை இனி காண முடியாது. ரங்கதேவி அவனிடம் நெருங்கிப் பழகியபோதே எச்சரித்தேன். தடுத்தேன். அழகிய பெண் தன்னிடம் வலிய வந்து பழகும்போது ஓர் ஆண்மகன் அந்த வாய்ப்பை நழுவ விடமாட்டான். ஆனால், மாறன் அறிவுரைகள் கூறியதை என் காதால் கேட்டேன். வாய்ப்பு ஏற்படும்போது ஒழுக்கத்தை நிலைநாட்டுபவனை விட உயர்ந்த ஆண்மகன் மாறனைப் போல்

இனி காண முடியாது'' என்று கூறும்போது நாச்சியார் குரலில் பெருமை உணர்வு கம்பீரமாக ஒலித்தது.

''அப்படியிருந்தும் நீ மாறனை மருமகனாக்கிக் கொள்ளச் சம்மதிக்காதது ஏன்?'' சிங்கவரையன் குரலில் கடுமை இருந்தது.

நாச்சியார் உடனே மறுமொழி கூறவில்லை. பிறகு மெல்லப் பேசினாள். ''என் வாழ்வில் நான் உயர்ந்த பல நிலைகளைப் பார்த்து விட்டேன். வீரமும், அழகும் நிறைந்த கணவரை அடைந்தேன். என் கண் எதிரேயே கலபதிபுரம் வளர்ந்துச் செழித்தது. பொன்னும், பொருளும் சேர்ந்தன. பல மரக்கலங்களும், நாவாய்களும் நம் செல்வமாகச் சேர்ந்தன. தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன்வேய நாம் பொன்னாபரணங்கள் கொடுக்கும் அளவுக்கு நம் மதிப்பு உயர்ந்தது. நமக்குத் தனிக் கொடியும், படை வீரர்களும் வைத்துக் கொள்ள சோழ சக்கரவர்த்தி அனுமதியளித்தார். இவ்வளவு பெருமைகளையும் நமக்குப் பிறகு அனுபவிக்க நமக்கென்று ஆண் சந்ததியில்லாமல் போய்விட்டதே என்ற மனக்கவலை எனக்கு...'' என்று கூறும்போது சிங்கவரையன் குறுக்கிட்டு, ''அதனால்தான் ரங்கதேவிக்குத் தக்க மணாளனைக் கல்யாணம் செய்து வைத்து, மருமகனைப் பிள்ளையாகப் பாவிக்க நான் ஏற்பாடு செய்தேன். மாறனைப் போன்று உயர்ந்த ஒரு பிள்ளை எங்கே கிடைக்கப் போகிறான்? உனக்கு ஏன் புரியாமல் போய்விட்டது!'' என்று கூறவும் நாச்சியார் தனது மெல்லிய குரலைவிட்டு ஆவேசம் நிறைந்த குரலில்,

''மருமகனைப் பிள்ளையாகப் பார்க்கலாம். ஆனால் பிள்ளையை மருமகனாகப் பாவிக்க முடியுமா? மாறன் கடலிலிருந்துக் காப்பாற்றப்பட்டு அதே நடுக்கூடத்தில் கிடத்தப்பட்டபோதே நான் எனது மகனாக அவனைப் பாவித்து விட்டேன். இப்படித்தான் என் மகனைக்



கொண்டு கிடத்தினார்கள் என்று புலம்பினேன். அப்போதே மாறவர்மனை ஒரு மகன் ஸ்தானத்தில் அமர்த்திவிட்டேன். மகனாகப் பாவித்தவனை, என் மகளின் சகோதரனை எப்படி அவளுடைய மணாளனாக மாற்ற முடியும்? அதனால்தான் ஆரம்பத்திலேயே ரங்கதேவி, மாறனுடன் பழகுவதைத் தடுத்தேன். மாறன் என் மகன்...'' என்று கூறினாள்.

சிங்கவரையன் தலைகுனிந்து நின்றான். நாச்சியார் சொல்வது சரியென்று அவனுக்குத் தோன்றியது.

கூடத்தில் அறைக்கு வெளியே இதைக் கேட்டுக் கொண்டிருந்த ரங்கதேவி விம்மி அழும் ஒலி கேட்டது.

## 29. வெற்றி உறுதி

நிமித்திகன் வீட்டை அடைந்து சிங்கவரையன், கதவைத் தட்டியபோது நாச்சியார் ஓர் உறுதி செய்து கொண்டாள். ''நிமித்திகன் சொல்வதை அப்படியே நான் ஏற்கிறேன். நீயும் ஏற்கவேண்டும்'' என்று சிங்கவரையன் சொன்னதை முழு மனத்துடன் நாச்சியார் ஒப்புக் கொண்டாள்.

தெய்வத் திருவுளம் எப்படியோ அப்படியே நடக்கும், நாம் என்ன கேட்கிறோமோ, அதைத்தான் தெய்வம் நிமித்தகன் வாயிலாகக் கூறும்'' என்றாள் நாச்சியார்.

''ஆமாம், ஆமாம். தெய்வத் திருவுளத்தை அறிவது தான் நம் இருவரின் கருத்து வேற்றுமைக்கு ஒரு முடிவைக் கொண்டு வரும்'' என்றான் சிங்கவரையன் மெல்லச் சிரித்தவாறு.

கதவைத் திறந்த நிமித்திகன் ஒரு கணம் திகைத்தான். கண்களைக் கசக்கிக் கொண்டதில் இருந்து, வந்திருப்பவர் சிங்கவரையன்தானா என்று வியப்படைந்தான். உடன் நாச்சியாரும் வந்திருப்பதறிய அவனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது அதிலும் நடந்தே வந்திருக்கிறார்களே என்று, பேச முடியாமல் நின்றான் ஒரு கணம். மறுகணம், "வாங்க, வாங்க... இவ்வளவு தூரம் நீங்களே வந்துவிட்டீர்களே, சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேன்" என்று காவிப் பற்கள் தெரிய நகைத்தான்.

"நிமித்திகரே! உடனடியான ஒரு பிரச்சினை; தங்களை வரவழைக்கக் கூட நேரமில்லை. எங்களுக்கு சோழி போட்டு முடிவு சொல்லவேண்டும்" என்றான் சிங்கவரையன்.

நிமித்திகன் இருவரையும் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு உள்ளே அழைத்துச் சென்றான். பூசையறையில் முருகனின் வேல் வைக்கப்பட்டிருந்தது. அதன் அருகே நிமித்திகன் அமர்ந்தான். சிங்கவரையனும், நாச்சியாரும் பயபக்தியுடன் அமர்ந்தார்கள்.

சோழிகள் நிறைந்த ஓலைப் பெட்டியை எடுத்து அதனின்று கணக்கிட்டுச் சோழிகளை எடுத்துக் கொண்டான்.

"கந்தா, கடம்பா, குகனே கதிர்வேலவனே" என்று உரத்த குரலில் கூறினான். சிறிதுநேரம் விழிகளை மூடித் தியானத்தில் அமர்ந்திருந்தான்.

"உம்: சொல்லுங்கோ ... என்ன வேண்டும் கேளுங்கோ; ஏதோ மனத்தில் கவலையைக் கொடுப்பதைக் கேட்க வந்திருக்கிறீர்கள்" என்றான்.

சிங்கவரையன் நாச்சியாரைப் பார்த்தவாறு "நாச்சியார் ஒன்று நினைத்து வந்திருக்காங்க நடக்குமா, நடத்தலாமா?" என்றான்.



உடனே, நாச்சியாரும், "நிமித்திகரே, ஐயா நினைத்திருப்பது நடக்குமா, நடத்தலாமா சொல்லுங்கள்" என்றாள்.

நிமித்திகன் இருவரையும் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். "ஐயா குமரப்பா தப்பாமல் வந்து சொல்லு" என்றான். சோழியை எடுத்துக் குலுக்கித் தரையில் சுழற்றிப் போட்டான். எண்ணிக்கையைப் பார்த்துவிட்டு ஏதோ முணு முணுத்தான். பிறகு மீண்டும் போட்டான்.

தலையை அசைத்தவாறு, "உம் நடக்காது; நீங்கள் இருவர் நின்னைப்பதும் நடக்காது" என்றான்.

சிங்கவரையன் மெல்ல நகைத்தான். "நிமித்திகரே, அருள்வாக்குஅதெப்படி நேர்மாறாக வருகிறது? எங்களுள் ஒருவர் நினைப்பது நடக்கவேண்டுமே! நாங்கள் இருவரும் ஒருவரோடொருவர் மாறுதலாகவல்லவோ நினைக்கிறோம்" என்றான்.

"அப்படித்தான் முருகன் சொல்கிறான்" என்றான் நிமித்திகன், "நீங்கள் இருவர் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், வெவ்வேறாக நீங்கள் நினைத்தாலும் நினைப்பது நடக்காது" என்றான் நிமித்திகன்.

சிங்கவரையனும், நாச்சியாரும் அங்கிருந்துப் புறப்பட்டனர். போகும்போது, சிங்கவரையன் சொன்னான், "பார்த்தாயா நாச்சியார்! நீ நினைப்பது நடக்காது. உன் கருத்தை மாற்றிக்கொள். ரங்கதேவியை மாறனுக்குக் கல்யாணம் செய்து வைக்கக் கூடாது எனும் உன் எண்ணத்தை மாற்றிக் கொள்."

"அதெப்படி? நீங்கள் நினைப்பதும் நடக்காது" என்றாள் நாச்சியார்.

சிங்கவரையன் ஒன்றும் பேசவில்லை. நாச்சியாரும் சிந்தனையிலாழ்ந்தாள். பிறகு இருவரும் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு இல்லத்தை அடையும்வரை விவாதித்தனர்.

மாறன் போருக்குப் போய் வரும்வரை இருவரும் தங்கள் எண்ணத்தை வற்புறுத்துவதில்லை என்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

ஃ ஃ ஃ

'டபரடப்...டபரடப்... பூஊம்... பூஊம்...' தாரை, தப்பட்டை ஓசை கேட்டது. கலபதிபுரத்திலிருந்து படை வீரர்கள் நூறுபேர் மாறவர்மன் தலைமையில் அணி வகுத்துப் புறப்பட்டனர்.

நாச்சியார் மாறனுக்கு வெற்றித் திலகமிட்டு, ஆலம் சுற்றி, ''குழந்தாய் வெற்றியுடன் திரும்பி வா'' என்று ஆசி கூறினாள். மாறன் உடல் சிலிர்த்தது. நாச்சியாரின் தாய்ப்பாசம் அவனை நெகிழ வைத்தது. நாச்சியார் சுற்றுமுற்றும் பார்த்தாள், ரங்கதேவி அங்கு இருக்கிறாளா என்று.

ரங்கதேவி படகுத் துறையில் நின்று கொண்டிருந்தாள். அருகே சிங்கவரையனும் நின்று கொண்டிருந்தான். மகளைச் சமாதானப்படுத்த கடல் கடந்த நாடுகளுக்குத் தான் இளம் வயதில் சென்ற கதையைச் சொல்லி உற்சாகப்படுத்த முயன்றான்.

''மாறவர்மா, விரைவில் திரும்பி வா; வெற்றியுடன் திரும்பி வா. கலபதிபுரத்துப் பெருமைக் கொடி கம்பீரமாகப் பறக்க வழி செய்துத் திரும்பி வா. வந்தவுடன் உனக்கு மணமாலை காத்திருக்கிறது'' என்றான்.

தன் மகள் பக்கம் திரும்பி, ''ரங்கா, முகமலர்ச்சியுடன் மாறனை வழி அனுப்பு'' என்றான். ரங்கதேவியின் முகம்



அழுது அழுது வீங்கியிருந்தது. அகன்ற விழிகள் வருத்தத்தால் இடுங்கிப் போயிருந்தன. மை தீட்டாததால் அதில் பளபளப்பு இல்லை. கண்ணீர்க் கோடுகள் சோகச் சித்திரத்தைத் தீட்டியிருந்தன.

ரங்கதேவி தலைநிமிர்ந்தாள். மாறனின் விழிகளை நேருக்கு நேர் சந்தித்தன அவள் விழிகள்.

''விரைவில் திரும்பி வந்துவிடுங்கள்'' என்று அவை பேசின.

''வந்தவுடன் மணமாலை சூட்டுவேன்'' என்று அவை கூறின.

''சிறிது நேரமாவது என்னுடன் தனித்துப் பேசியிருந்துச் சென்றிருக்கலாம். தங்களுக்கு ஏனோர் மனமில்லை'' என்று அவை கூறின.

மாறன் புன்முறுவல் பூத்தான். ''நான் போகிறேன் ரங்கதேவி'' என்றான்.

''போய் வருகிறேன் என்று சொல்வதுதான் மரபு'' என்றான் சிங்கவரையன்.

படகு நகர்ந்தது.

மாறன் கையெடுத்துச் சிங்கவரையனைக் கும்பிட்டான், ரங்கதேவியை நோக்கிக் கையசைத்தான். இதழ் விரித்துச் சிரித்தான்.

அவன் அப்பொழுது என்ன நினைத்தான்? வெற்றியடைந்தாலும் திரும்ப முடியாது. 'இந்தப் பேதைப் பெண் என்னை நினைத்து வீணே ஏங்குகிறாளே' என்று நினைத்தானா?

'கலபதிபுரத்துத் தலைவருக்கு என் மேல் எவ்வளவு நம்பிக்கை; தன் மகளை எனக்கு மணம் புரிவிக்க நினைக்கிறாரே! அவருக்கு ஏமாற்றத்தைத் தரலாமா?' என்று நினைத்தானா?

படகுகளில் வீரர்கள், "வெற்றிவேல், வீரவேல்" என்று வீர முழக்கம் செய்தனர். அந்த முழக்கத்தில் ரங்கதேவி கூறியது காதில் விழவில்லை.

படகுகள் நகர்ந்தன; மாறவர்மன் கரையை நோக்கிக் கொண்டிருந்தான். ரங்கதேவி கையசைத்து விடை கொடுத்தவாறு கரையில் நின்றுகொண்டிருந்தாள். அந்த உருவம் மெல்ல மெல்ல மறைந்து வந்தது.

பிறகு தன் படகில் இருந்தவர்களை நோக்கி, "கரை இறங்கியதும் நீங்கள் ஒரு படகை மட்டும் கரையில் நிற்க வைத்துவிட்டு மற்றவர்களுடன் கலந்து கொள்ளுங்கள்" என்று கட்டளையிட்டான். அவர்களும் பணிவுடன் தலையசைத்தார்கள். படகோட்டியை மெல்ல நோக்கினான் மாறன். படகோட்டி புன்முறுவல் பூத்தான். படகோட்டியிடம் மாறன் இரு நாட்களாகக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

போர்க்களத்துக்குச் செல்லும் கலபதிபுரத்து வீரர்கள் இதுவரையில் கலபதிபுரத்தைத் தாண்டாதவர்கள். கடலில் பல பகுதிகளுக்குச் சென்றவர்கள். மாறன் அவர்களுக்கு வேல்வீசக் கற்றுக் கொடுத்தான். வாள் சுழற்றும் முறையைக் கற்றுக் கொடுத்தான். கேடயம் ஏந்தி எதிரிகள் தாக்கும்போது எப்படித் தற்காத்துக் கொள்வது என்பதைப்பற்றிய நுணுக்கங்களைச்சொல்லிக் கொடுத்தான். மாறனை அவர்கள் போற்றினார்கள். புகழ்ந்தார்கள். ஆனால் படகிலே அவர்கள், "கலபதிபுரத்துச் சிங்கவரையன் வாழ்க! சோழ சக்கரவர்த்தி பராந்தக சோழ தேவர் வாழ்க!" என்று கோஷமிடும் போது மாறனுக்கு இதயத்தை யாரோ பிசைவது போல் தோன்றும். சோழ சக்கரவர்த்தி ஒழிக என்று தனக்குள்ளேயே முணுமுணுப்பான்.

ஆற்றைக் கடந்து கரையில் இறங்கியவுடன் காங்கேயனையும், குமுதத்தையும் எப்படிச் சந்திப்பது



என்ற எண்ணத்தில் மாறவர்மனிருந்தான். பாண்டிய நாட்டினின்று, நாட்டின் மானங் காக்கப் புறப்பட்டு வந்த புனித யாத்திரை முடிவடையும் நேரம் நெருங்கிறது என்ற உள்ளுணர்வு உறுத்தியது.

அவன் தனக்குத்தானே மெல்லச் சிந்தித்துக் கொண்டான். பாண்டிய நாட்டின்மீது படையெடுப்பதாம்! வீரபாண்டியனை முறியடிப்பதாம்! — பாவம் சோழ சக்கரவர்த்தி நன்றாக ஏமாந்துப் போகப் போகிறார்! சோழர்ப் படைகள் சென்று கொண்டிருக்கும் போது ஓரிடத்தில் தக்க சமயத்தில் கூடவே வரும் இளவரசரையும் பராந்தகனின் மருமகனையும் தாக்கிக் கொன்று வெற்றி வாகை சூடுவோம். சோழர்ப் படைகள் அஞ்சி நடுங்கி, சின்னா பின்னமாகிச் சிதறி ஓடும். ஆகா! இளவரசரைப் பறிகொடுத்த பராந்தகன் புத்திர சோகமடைவான். இனி, மதுரையைப் பற்றிக் கனவில்கூட நினைக்க மாட்டான்.

தலைவர் வல்லபனின் இலட்சியம் அதுதானே. அவர் திட்டம் அதுதானே. நான்கு பேர்களையும் தேர்ந்தெடுத்துச் சோழநாட்டிற்கு அனுப்பியதே சோழர் குலத்து வாரிசைக் கிள்ளி எறிவதற்காகத் தானே... அந்தப் புனித கைங்கர்யத்தை நிறைவேற்றுவோம்!

"பாண்டிய மன்னர் வாழ்க! வீரபாண்டியர் வாழ்க" என்று அவன் கூவியது நல்ல வேளையாக மற்றவர்கள் காதில் விழவில்லை.

ஆற்றங்கரையில் இறங்கியவுடன் படைவீரர்கள் அணி வகுத்து நின்றனர்.

தொலைவில் மரங்களின் மறைவில் பெருமான் மறைந்து நின்றிருப்பது மாறவர்மனுக்குப் புலப்பட்டது: அவன் பொன் ஆபரணங்கள் அடங்கிய மூட்டையுடன்

காத்திருப்பான். அவனைப் படகில் ஏற்றி அனுப்ப வேண்டும்.

சக்கரவர்த்தி தங்கியிருக்கும் இடத்தில் குமுதமும், காங்கேயனும் இருப்பார்கள். அவர்களைச் சந்திக்க வேண்டும். குமுதம் தன் விழியால் பேசுவாள்.

வெற்றியடைந்த பிறகு சில நாட்கள் கழித்து மீண்டும் கலபதிபுரத்திற்கு வந்தால், எப்படி வரவேற் பார்கள்? யார் வரவேற்பார்களோ, மாட்டார்களோ ரங்கதேவி மகிழ்ச்சியுடன் வரவேற்பாள். தனக்காக அவள் அதுவரையில் காத்திருப்பாளா?

மாறனுடைய சிந்தனை நீண்டது. சுற்று முற்றும் பார்த் தான். படைவீரர்களை நோக்கி, "இங்கே சற்றுநேரம் இளைப்பாறுங்கள்; நான் சோழ சக்கரவர்த்தியைச் சந்தித்து அடுத்த திட்டத்தைக் குறித்து அறிந்து வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

சற்றுத் தொலைவு சென்றிருப்பான். சிவனடியார் வந்து கொண்டிருந்தார். அவர் கையில் முத்திரை மோதிரமிருந்தது. அவர் விரைந்துகொண்டிருந்தார் சோழ சக்கரவர்த்தியை அவர் சந்தித்த போது, சக்கரவர்த்தி சிவனடியாரை அந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை. அஞ்சா நெஞ்சம் படைத்த சக்கரவர்த்தி ஒரு கணம் திடுக்கிட்டார்.

நேற்று இரவுதான் அடிகளாரைக் குறித்துப் பேசி னோம்; இதோ வந்து நிற்கிறாரே!

சக்கரவர்த்தி பேசுவதற்கு முன்பே அடிகளார் பேசினார்: "மாமன்னரே! முத்திரை மோதிரத்தை இதோ திருப்பித் தருகிறேன், எனக்கெதற்கு சோழ நாட்டின் அடையாளச் சின்னம்? ஒரு வேளை நான் எங்காவது தவற விட்டு விட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்,



அதனால் பெரும் ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும்" என்று கூறி மோதிரத்தைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்து விட்டார். சக்கரவர்த்தி திகைத்தார். அடிகளுக்கு எப்படித் தெரிந்தது அடையாள மோதிரத்தை நாம் அவரிட மிருந்துத் திரும்பிப் பெறவிரும்பியது? உண்மையிலேயே அடிகளார் முற்றும் உணர்ந்தவரோ?

மோதிரத்தை வாங்கிக் கொண்டு தன்னையே இமைக் காமல் நோக்கும் சக்கரவர்த்தியை நோக்கி, "பேரரசே! நான் விடைபெற்றுக் கொள்கிறேன். மீண்டும் தங்களைச் சந்திக்கும் பேற்றினைச் சிவபெருமான் எப்போது அருளு வாரோ?" என்றார் அடிகள்.

"அடிகளாரே! அப்படிச் சொல்லக் கூடாது. தாங்கள் தில்லை அம்பலவாணர் கோயில் குடமுழுக்குக்கு வந்துவிட வேண்டும். தாங்கள் பிரசன்னமாகாவிடில் விழா சிறக் காது" என்று கூறினார்.

"ஈசன் சித்தம் எப்படியோ...நான் தெற்கு நோக்கிச் செல்கிறேன், எப்போது திரும்புவேனோ?" என்றார்.

"நான் பரிவாரத்துடன் இன்று தில்லைக்குச் செல் கிறேன். கலபதிபுரத்திலிருந்து அந்தப் பிள்ளை மாறன் படைகளுடன் வந்தவுடன், உத்தமசீலியும் கோவிந்த வல்லவரையனும் அவனுடன் புறப்படுவார்கள்...தாங்கள் தில்லையில் தங்கியிருந்தால் வெற்றிச் செய்தியைக் கேட்டு மகிழலாம். தங்களுடைய யோசனையின்படிதானே படை யெடுப்பு சிறிய அளவிலாயினும் நடக்கிறது" என்றார் பராந்தக சோழர்.

சிவனடியார் மெல்ல நகைத்தார். "சக்கரவர்த்தி அவர்களே! உங்கள் படைகள் குறுக்கு வழியாகக் கொல்லி டத்தைக் கடந்து உறையூரை அடையப் போகின்றன. அதற்கு இடையிலேயே போர் மூளலாம். நான் போரின் முடிவை அறியும் வேளையில் போர்க்களத்துக்கு அருகே உள்ள ஊரில் இருக்க நேரிடலாம்" என்றார்.

''இளவரசன் கண்டரனை, அரிஞ்சயனை, உத்தம சீலியை, கோவிந்தனை ஆசீர்வாதம் செய்யுங்கள்'' என்றார் சக்கரவர்த்தி.

சிவனடியார் அனைவரையும் ஒரு முறை உற்று நோக்கினார். பிறகு மெல்லச் சிரித்தார். கடகடவென்று சிரித்தார்.

''கண்டராதித்தன் சிவநேசச் செல்வன், அரிஞ்சயன் அஞ்சா நெஞ்சினன்; ஆனால் சந்தேக நோக்குடையவன். உத்தமசீலியோ அவசரக்காரன். இந்த யுத்தத்தில் தனது வீரத்தைப் புலப்படுத்தப் போகிறான். ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொருவருடைய புகழ் அழியாதிருக்கப் போகிறது. அனைவரையும் சிவபெருமான் காப்பாற்றுவார்'' என்று கூறி திருநீறெடுத்து அளித்து விடை பெற்றுக் கொண்டார்.

அவர் சென்றவுடன் தனது புதல்வர்களை நோக்கி, ''பார்த்தீர்களா? வீணே சிவனடியார் மீது சந்தேகப் பட்டீர்களே! முத்திரை மோதிரத்தை அவர் திருப்பிக் கொடுத்து விட்டார்! சோழ நாட்டை விட்டே போகிறார்'' என்றார்.

பராந்தகனின் புதல்வர்கள் பேசுவதறியாது தலை குனிந்து நின்றனர்.

''சிதம்பரத்திற்குப் புறப்படுவதற்கான திட்டங்களை விரைவில் நிறைவேற்றுங்கள்'' என்று கட்டளையிட்டார் சக்கரவர்த்தி.

உச்சிப் பொழுதிற்குள், தில்லைச் சிதம்பரத்தை நோக்கிப் பராந்தகனது பரிவாரங்கள் புறப்பட்டன. அந்தக் கிராமமே பொலிவிழந்தது போல் ஆகியது.

குமுதமும், காங்கேயனும், பரிவாரங்களுடன் உடன் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. படைகள்



செல்லும்போது, வீரர்களுக்கு வைத்திய உதவி செய்யக் காங்கேயனும், அவரை விட்டுப் பிரியாமல் இருப்பதற்காக குமுதமும் உடன் செல்வதென்று ஏற்பாடாகியது. இருவரும் ஒரு காரணத்திற்காகச் சம்மதித்தனர்.

சோழ சக்கரவர்த்தியும் பரிவாரங்களும் அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற மறுநாள் பகல் வேளையில் மாறவர்மன் படைகளுடன் வந்திறங்கினான். சிவனடியார் எதிர்ப்பட்டார்.

சிவனடியார் நெருங்கிப் பேசவும் முடியவில்லை; பேசாமல் இருக்கவும் முடியவில்லை.

''மாறா! சற்று நில். நானும் உன்னுடன் சிலவற்றைப் பேசவேண்டும். மரங்களின் மறைவிற்குச் சற்று வருகிறாயா?'' என்று கேட்டார் சிவனடியார்.

''இங்கேயே சொல்லலாமே'' என்றான் மாறன்.

''இந்த ஹாரத்தை உனக்குப் பரிசளிக்கப் போகிறேன்'' என்றார் அடிகளார்.

''இங்கேயே அதை அளிக்கலாமே!''

''கூடாது, ஓர் ரகசியம் இருக்கிறது!''

''ரகசியத்தை இங்கேயே சொல்லலாமே!'' என்று மாறன் கூறியவுடன், சிவனடியாருக்குக் கோபம் பொங்கியது.

''படைத் தளபதி என்று உனக்குப் பெயர் சொல்கிறார்கள். ஆனால் உனக்குச் சமயம், போது அறிந்து கொள்ளத் தெரியாது போலிருக்கிறது. நீ எப்படி பிழைக்கப் போகிறாய்? இந்த ஹாரம் பாண்டிய நாட்டைச் சேர்ந்தது பலர் அறிய நான் தரலாமா?'' என்றார்.

மாறன் சற்றுத் தயங்கினான். சிவனடியாரிடம் விவாதிக்க நேரமில்லை. மேலும், சிவனடியார் யார் என்று யூகித்து வைத்திருப்பது உண்மையானால்...

அதை நினைக்கும் போது அவன் உடல் புல்லரித்தது. சிவனடியாரை அழைத்துக் கொண்டு மரத்தின் மறைவுக்குச் சென்றான்.

படை வீரர்கள் இளைப்பாறுவதற்கு ஆங்காங்கே குழுக்களாகப் பிரிந்திருந்தனர்.

பிறர் காண முடியாத மறைவிடம் சென்றபின், ''மாறா, நாளைக்கோ, மறுநாளோ படைகள் புறப்படுகின்றன. நீ மிகவும் கவனமாக இருக்க வேண்டும். படைகளுடன் குமுதமும் உடன் வருகிறாள். அதனால் சிந்தனையைச் சிதறவிடாமல் இருக்கப் பழகிக் கொள்'' என்றார்.

''சுவாமி, நான் அதில் வல்லவன். கலபதி புரத்து ரங்கதேவியிடம் நெஞ்சை ஒப்படைக்காது தப்பி வந்த நான் குமுதத்திடம் பறி கொடுத்து விடுவேனா? அது சரி சுவாமி! தாங்கள் யார்? என்னுடைய சொந்த வாழ்க்கையில் குறுக்கிடுகிறீர்களே! தங்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. தாங்கள் யார்? இந்த ஹாரத்தை முன்பே நெருப்பில் இட்டீர்களே! மறுபடியும் எப்படிக் கொண்டு வந்தீர்கள்? தாங்கள் மாயமந்திர வாதியா? துர்த்தேவதைகளை ஏவி விடுகிறீர்களா?'' என்று கேட்டான்.

சிவனடியார் மெல்ல நகைத்தார். ''தம்பி மாறவர்மா, இந்த ஹாரம்தான் உண்மையானது. தீயிலிட்டது போலியானது. உண்மையான ஹாரத்தை சோழச் சக்கரவர்த்தியிடமிருந்து அபகரிக்க நான் செய்த தந்திரம். இந்த ஹாரத்தை அணிந்து கொள். வெற்றி நிச்சயம்'' என்றார்.

''வெற்றி என்றால், சோழர்ப் படைகள் பாண்டியர்ப் படைகளை வெல்லும். அப்படித்தானே சொல்கிறீர்கள். தாங்கள் சோழ சக்கரவர்த்தியிடம் சார்புடையவர்கள் அப்படித்தானே! தாங்கள் யார் என்பதை நான் அறிந்து தானாக வேண்டும்'' என்று படபடத்தான் மாறன்.



''தம்பி! உனக்கு வெற்றி உறுதி. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். இந்த மாலையை அணிந்து கொள்'' என்று கூறி அவன் கழுத்தில் மாலையை அணிவித்தார்.

மாலையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்த மாறன், மாலையைக் கழற்றி ''ஐயா, இந்த மாலையைப் போட்டுக் கொண்டு சோழ சக்கரவர்த்தி எதிரே போய் நின்றால், உடனே எனக்குத் திருட்டுப் பட்டம் கட்டிச் சிறையில் தள்ளிவிட மாட்டார்களா? என்னை சிக்க வைக்கத் தாங்கள் செய்யும் சதியா?'' என்றான்.

சிவனடியார் சற்றுச் சிந்தித்தார். பிறகு, ''நீ சொல்வதில் நியாயமிருக்கிறது. இப்போதுதான் உன்னைப் புத்திசாலி என்று பாராட்டத் தோன்றுகிறது. நான் பெருமானிடம் கொடுத்து விடுகிறேன்'' என்றார்.

சிவனடியார் அப்படிச் சொன்னவுடன் மாறன் சற்றுக் கோபமாக, ''ஐயா, நீங்கள் யார்? உடனே நான் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று அவர் கரத்தைப் பிடித்தான்.

''நான் யார் என்று சொல்ல வேண்டிய வேளை வந்து விட்டது. நீயே தெரிந்து கொண்டிருப்பாய் என்று நினைத்தேன். அவ்வளவு எளிதில் அடையாளம் காண முடியாதபடி வேடம் அமைந்ததில் எனக்கு வெற்றியே! தம்பி மாறவர்மா, நான் யார் என்று உன்னால் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் வேடப் பொருத்தம் மகத்தான வெற்றிதான்'' என்று கூறி தனது தாடியையும், கற்றைச் சடையையும் களைந்தார்.

மாறன் ஒரு கணம் சிவனடியாரை உற்று நோக்கினான். பிறகு, ''சுவாமி தாங்களா? ஐயா, தாங்களா இதுவரையில் காவி உடையில் கற்றைச் சடையில் இருந்தீர்கள்?'' என்று பரபரப்புடன் கூறி அவர் பாதத்தில் வீழ்ந்தான்.

# 30. 'யார் உங்களுடைய காதலி?'

அம்பலவாணனின் திருச்சந்நிதியில் விமானம் மூங்கிலாலும், கீற்றாலும் சுற்றி மறைக்கப்பட்டிருந்தது. பொற்தகடு வேயும் திருப்பணி நாள்தோறும் சூரியோதயம் முதல், அஸ்தமனம் வரை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கீற்றுக்களின் இடைவெளி வழியே காலைக் கதிரொளியும், மாலைச் சூரிய கிரணங்களும் விமானப் பொற்தகடுகளின் மீது பட்டுப் பிரதிபலித்துக் கொண்டிருந்ததைக் கண்டவர்கள் விழி வாங்காது அதையே பார்த்துக் கொண்டிருந்தனர். சுற்றுப்புற ஊர்களிலிருந்து மக்கள் சிதம்பரத்திற்கு வந்து பொன் வேயப்படும் நேர்த்தியைக் கண்டு வியந்தவண்ணமிருந்தனர்.

சோழ சக்கரவர்த்தி நேரிடையே வந்து, திருப்பணியைக் கவனிக்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட பொது மக்கள், ராஜ தரிசனத்துக்காகக் காத்திருந்தனர். சோழ அரசியும், இளவரசர்களும் சக்கரவர்த்தியுடன் வந்திருக்கிறார்கள் என்றறிந்த ஜனங்களுக்கு ஏற்பட்ட குதூகலத்துக்கு அளவேயில்லை. தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தபோது அவருடைய புதல்வர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தனர்.

''திருக்கோயிலிலேயே பெரிய மண்டபமொன்று கட்ட வேண்டும்'' என்று கண்டராதித்தன் தன் ஆசையைத் தெரிவித்துக் கொண்டான்.

''பதினெட்டுத் தூண்கள் உள்ள மண்டபம்'' என்றான் உத்தமசீலி.

''நினைப்பதை உயர்வாக நினைக்கவேண்டும். நூற்றெட்டுக் கால்களை உடைய மண்டபம்'' என்றான் அரிஞ்சயன். பராந்தக சோழ சக்கரவர்த்தி அவர்கள் கூறுவதைக் கேட்டு 'ஹஹ்ஹா' என்று நகைத்தார்.



''குழந்தைகளே! உங்களுடைய ஆர்வத்தை மெச்சுகிறேன். வீர நாராயணபுரத்தில் விண்ணகரம் எழுப்பும் பணி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. பெரிய ஏரி ஒன்று வெட்டப்பட்டுள்ளது. அதன் கரைகள் பலமாக அமைக்கப்பட்டு, கொள்ளிடத்திலிருந்து காய்வாய் வெட்டி நீரைக் கொண்டு வரும் பணியும் முடிவடைந்துவிட்டது. பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கும் திட்டம் இல்லாதிருந்தால் நிச்சயம் ஆயிரங்கால் மண்டபத்தை அமைக்கும் பணியைத் தொடங்க உத்தரவிட்டிருப்பேன்'' என்றார்.

உத்தமசீலி முந்திக் கொண்டான். ''இதென்ன படையெடுப்பு? பூச்சியை நசுக்கப் பாறாங்கல் தேவையா? ஒரு திங்களில் வெற்றிக் கொடியுடன் திரும்பி வருவேன். ஆயிரங் கால் மண்டபத்திற்கு அப்போது என் பெயரை வைப்பீர்களா?'' என்று கேட்டான். பராந்தகர் மெல்லச் சிரித்தார்.

''அதெப்படி, தந்தையே! கடல் போன்ற பெரிய ஏரியை வெட்டியிருக்கிறீர்கள். அதற்குத் தங்கள் பெயரைச் சூட்ட வேண்டும் என்று மக்கள் ஒரு குரலாகக் கேட்கிறார்கள். பராந்தகப் பேரேரி என்று பெயரைச் சூட்டத் துடிக்கிறார்கள். அடக்கங் காரணமாக தாங்கள் மறுத்துவிட்டீர்கள். அது ஒரு படையெடுப்பா என்கிறான். ஆனால் தம்பி உத்தமசீலி பாண்டிய வெற்றிக்குத் தன் பெயரில் மண்டபம் கேட்கிறான்'' என்று அரிஞ்சயன் தம்பியை உற்று நோக்கியவாறு குறை கூறினான்.

உத்தமசீலி அதற்கு மறுமொழி கூறுவதற்குள் அரிஞ்சயன் மீண்டும், ''அப்படியே வெற்றி மண்டபங் கட்டுவதாகவே வைத்துக்கொள்வோம். பாண்டிய வெற்றி அவனுக்கு மட்டும் எப்படி உரித்தாகும்? தலைமை வகிக்கப் போவதோ மாறவர்மன் என்ற புதியவன். உடன் மரு

மகன் கோவிந்த வல்லவரையர் செல்கிறார். முழு வெற்றி உத்தம சீலியை எப்படிச் சாரும்?'' என்று கேட்டான்.

உத்தமசீலி சீறினான். ''நான் யார் தலைமையையும் ஏற்கப் போவதில்லை; மாறவர்மனோ, வல்லவரையரோ எனக்கு அடங்கித்தானிருக்கவேண்டும். என் திறமையை, யுத்த தந்திரத்தை நிருபிக்கப்போகிறேன்'' என்று கோபக் குரலில் சொல்லிக்கொண்டே போனவனை கண்டராதித்தன் தடுத்து, ''அருமைத் தம்பிகளே! இதென்ன தற்பெருமை! புகழும் வீரமும் நம்மை எப்படிச் சாரும்? சக்கரவர்த்தி அவர்களது கட்டளை, கருத்து, யோசனை, ஆசி இவ்வளவும் இருப்பதால்தானே நாம் பரிமளிக்கிறோம்? தம்பி உத்தமசீலி, இன்னும் அடக்கம், பணிவு இவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லாம் ஈசன் செயல் என்ற மனப்பாங்கு வேண்டும். சிவபெருமானது திருக்கோவிலுக்குத் திருப்பணி செய்யும் சக்கரவர்த்தி அவர்கள் திருமாலுக்கும் கோயில் அமைத்துள்ளார். பரந்த மனப்பான்மை கொண்டுள்ள அவர்களது புதல்வர்களான நாம் பெருமையையும், உயர்வையும் அவருக்கே அளிக்கவேண்டும்'' என்று கூறவும், பராந்தகர் அமைதியாக இருக்கச் சொல்லிக் கையசைத்தார்.

''குழந்தைகளே! கண்டரன் சொல்வதிலும் உண்மையிருக்கிறது. தெய்வத்தின் விளையாட்டுப் பொம்மைகள் நாம். அலகிலா விளையாட்டுடையவன் ஈசன். சிவபெருமானும், நாராயணனும் ஒருவரே. அதனால்தான் தில்லை நடராஜர் திருக்கோயிலுக்குப் பொன்வேய்கிறேன். அருகே திருநாராயணபுரத்தில் திருமால் கோயிலையும் விரிவுபடுத்துகிறேன். எனக்கு சிவ-விஷ்ணு பேதமில்லை. அங்கே வெட்டப்பட்டுள்ள ஏரியை நாராயணனது பெயராலேயே அழைக்குமாறு உத்தரவிட்டுள்ளேன். பாண்டிய நாட்டின் மீது இப்போது திடீரெனப் படையெடுத்துச் செல்வதுகூட



இனி பாண்டியன் துளிர்ந்து எழுந்துப் போர் என்ற குரல் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே'' என்றார்!

பராந்தக சோழ சக்கரவர்த்தியின் புதல்வர்கள் இளவரசர்கள் மூவரும் தந்தை சொல்லுக்கு அடிபணிந்து அமைதியுடன் நின்றார்கள்.

''குழந்தாய் உத்தமசீலி! உலகம் மிகப் பெரியது. மாறவர்மன் நமக்குப் புதியவன். ஆனால், அவனிடம் துணிவு, வீரம், சுறுசுறுப்பு அனைத்தும் உள்ளன. அவன் சோழ நாட்டில் பிறந்தவனாக இருக்கமுடியாது என்ற எண்ணம் எனக்கு ஆரம்பத்திலிருந்தே இருக்கிறது. அவன் புதிய போர் முறைகள் அறிந்திருப்பான். அவற்றை நீ கற்றுக்கொள்ள வேண்டும். குறைந்த அளவு வீரர்களைக் கொண்டு மிக எளிதில் போரில் வென்றுவிடக் கூடிய சாமர்த்தியம் அந்தப் பிள்ளைக்கு உண்டு. நாளைக்கு மறுநாள் படைகள் புறப்படட்டும்! கட்டுப்பாட்டையும், போர் நுணுக்கங்களையும், மீறாமல் படைகளுடன் செல். தளபதி சொல்வதைத் தட்டாமல் நடப்பது படைவீரர்களுக்கு அழகு'' என்றார்.

சக்கரவர்த்தி சொல்வதை விடாமல் கேட்டுக் கொண்டிருந்த உத்தமசீலி, தலையை அசைத்தானே தவிர அவனுள்ளத்தில் மாறவர்மனின் தலைமையின் கீழ் படை எடுத்துச் செல்வதா என்ற ஆத்திரம் மேலோங்கி நின்றது.

சிதம்பரத்தில் அரச பரிவாரங்கள் தங்கியிருப்பதற்கான மாளிகை மிகப் பெரியது; புதியது. அருகே நந்தவனம்; புதிதாக வெட்டப்பட்ட குளம். மாளிகை அருகே படை வீரர்கள் தங்குவதற்கான வீடுகள். குதிரைகளின் கனைப் பொலியும் யானையின் பிளிறலும் அவ்வப்போது கேட்டுக் கொண்டேயிருக்கும். இரவில் வீரர்கள்-பல ஊர்களிலிருந்து வந்தவர்கள் - தங்கள் வீட்டைப் பற்றிய நினைவை மறப்பதற்காகப்பாடிக்கொண்டிருக்கும்

விதவிதமான சப்தம் கேட்கும். குமுதமும், காங்கேயனும் அரசப் பரிவாரங்களுடன் சிதம்பரம் சேர்ந்தனர்.

குமுதம், காங்கேயனைச் சந்திக்க வந்தாள். காங்கேயனிடம் மருந்து வாங்க அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் வந்து சென்றார்கள். அவர்கள் அனைவரும் செல்லட்டும் என்று குமுதம் காத்திருந்தாள். அங்கே சிறு ஆதுர சாலையே ஏற்பட்டு விட்டது. "உனக்கென்ன பெண்ணே நோய்?" என்று கேட்டுக் கொண்டே காங்கேயன் கடைசியாக அவளருகே வந்தார். அவர் அவளை மற்றவர் எதிரே அறியாதவர் போல் காட்டிக் கொண்டார்.

"எனக்குச் சொந்த ஊருக்குப் போக வேண்டும் என்ற நினைவு வந்துவிட்டது. அந்த ஏக்கமே நோயாகி விட்டது" என்று சொல்லிக் குமுதம் மெல்ல நகைத்தாள். அப்போது அங்கே யாருமில்லை.

காங்கேயனும் மெல்ல நகைத்து, "இந்த நாடகம் இன்னும் எவ்வளவு நாளைக்கோ? சிவனடியாரின் திட்டப்படிதான் எல்லாம் நடக்கிறது. அதைப் போல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதும், போர் நடைபெற்று வெற்றியும் நமக்குக் கிடைத்து விட்டால் சரி..." என்றார் காங்கேயன்.

"சிவனடியாரை நான் மிகத் தவறாக நினைத்ததுண்டு. ஆகா, அவரது திறமையே திறமை. படையெடுத்துச் செல்பவர்கள் கொள்ளிடக் கரையைத் தாண்டிக் குறுக்கு வழியாக பாண்டிய நாட்டின் எல்லையை அடைவதாக ஏற்பாடாம். அங்குதான் போர் நடைபெறுமாம். மற்றவற்றை மாறனிடம் சொல்லி இருப்பதாகக் கூறினார் அடிகளார். மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று நம்மை எச்சரித்துள்ளார். நான் அவரிடம் கேட்டேன்; 'சுவாமி தாங்கள்தான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வேடம் கலைந்துத்



தாங்கள் அகப்பட்டுக் கொண்டுவிட்டால் எங்கள் கதி...?' என்று கவலையைத் தெரிவித்தேன். அதற்கு அவர் சொன்னார் :

"குமுதம், என்னைவிட உங்கள் இருவர் வேடம்தான் சிறந்தது. காங்கேயன் வைத்தியராக மாறியுள்ளார்; நீ பணிப் பெண்ணாக மாறிவிட்டாய். உங்கள் இருவரை யாரும் எள்ளளவும் சந்தேகிக்கவில்லை. என்னை உத்தம சீலியும், அரிஞ்சயனும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள். என்னைப் பரீட்சிப்பதற்காக சோழ சக்கரவர்த்தி என்னிடம் முத்திரை மோதிரத்தைக் கொடுத்துப் பார்த்தார். நான் அம் மோதிரத்தை வைத்துக்கொண்டு தங்கசாலையில் உள்ள பொன் ஆபரணங்கள், உருக்கிய பாளங்கள் அனைத்தையும் அபகரித்துச் செல்லத் திட்டமிட்டேன். முடியவில்லை; மோதிரத்தைச் சக்கரவர்த்திகளிடம் திருப்பிக் கொடுத்துவிட்டேன், புதைத்து வைத்திருந்த ஆபரணங்கள் மட்டுமே நமக்கு மீதி; அவற்றின் மதிப்பே மிக அதிகம். அந்த ஆபரணங்களைப் பெருமாளிடம் கொடுத்துத் தொண்டித் துறைமுகம் வழியாக மதுரைக்குக் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்துள்ளேன்; மாறவர்மன் கலபதிபுரத்திலிருந்து ஆற்றைக் கடந்துவந்து இறங்கும் படகிலேயே பெருமாளை அனுப்பப்போகிறேன். கடல் வழியே பெருமாள் வந்தது போல் இப்போது திரும்பிச் செல்வான். சோழர்ப் படைகள் பாண்டிய நாட்டு எல்லையை அடைந்து, யுத்தம் நடைபெறுவதற்குள் பெருமாள் மதுரையை வந்தடைந்து விடுவான். எல்லாம் சரிவர நடைபெற்றால் வெற்றி நம் பக்கம். பொன்னாபரணங்கள் நமக்கு. யுத்தம் தொடங்கும் முன்பே காங்கேயனும், நீயும் எப்படியாவது தப்பி மதுரை வந்து சேர்ந்து விடுங்கள்."

"மிகத் தெளிவாக அவர் திட்டம் வகுத்திருந்தார். அவரை நான் சந்தேகித்தேன். சோழநாட்டு ஒற்றர் என்று

எண்ணினேன். நான் கடைசியாக ஒரு சந்தேகத்தைக் கேட்டேன்.

"சுவாமி! தங்களை இன்னார் என்று மாறவர்மனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டீர்களா? பெருமானுக்குத் தெரியுமா? பெருமான் பெரியவர் காங்கேயன் நான், மூவரும் தப்பிச் சென்று மதுரையை அடைய வழி கூறி விட்டீர்கள். மாறவர்மன் தப்பிவருவதற்கு வழி சொல்லிவிட்டீர்களா? கலபதிபுரத்தில் வேல் விழிகள் இரண்டு மாறனைச் சுண்டி விழுக்குமே! போர்க் களத்திலிருந்து வெற்றி பெற்றுக் கலபதிபுரத்திற்குச் சென்று சேர்ந்துவிட்டால் என்ன செய்வது ஐயா?" என்றேன்.

குமுதம் இவ்வாறு ஒன்றுவிடாமல் அடிகளாரிடம் பேசியதனைத்தையும் சொல்லி வருவதைக் கேட்ட காங்கேயன் 'கலகல'வென்று சிரித்தார். "இங்கே படை வீரர்களுடன் வேல் விழி இரண்டு தொடர்ந்துப் பாது காவலாக வரும்போது மாறன் தப்பி ஓடுவது எப்படி முடியும்?" என்று கூறவும் குமுதத்தின் முகம் நாணத்தால் சிவந்தது. கரிய மேனியில் அந்தச் சிவப்பு விண்ட நாவல் பழத்தின் மினுமினுப்பை ஒத்திருந்தது.

குமுதத்திற்கு அதே நினைவுதான். மாறன் கலபதி புரத்திலேயே ஐக்யமாகி விடுவான் என்றே எண்ணினாள்.

"அவர் கலபதிபுரத்துத் தலைவரின் மருமகப் பிள்ளையாகட்டுமே, நமக்கென்ன? நாம் ஏன் கவலைப் படுகிறோம். நாம யார், அவர் யார்" என்று குமுதம் ஒருகணம் எண்ணினாள்.

"அதெப்படி நாம் கவலைப்படாமல் இருக்கமுடியும்? நானும் பாண்டிய நாட்டவள். அவரும் பாண்டிய நாட்டவர். எனக்கும் உற்றார், உறவினர் என்று ஒருவரும் கிடையாது. உலைச்சளத்துத் தலைவர் ஒருவர்தான் என் தாய், தந்தை, உற்றார், உறவினர் எல்லாம். அதனால் தான் அவர் பெருமானை எனக்குத் துணையாக அனுப்



பினார். பாண்டிய நாட்டின் மீது தணியாதே பக்தியும், பாசமும், பற்றும் கொண்ட நான்கு பேரைத் தலைவ தேர்ந்தெடுப்பதற்கு எவ்வளவு கவனம் செலுத்தியிருப் பார். நால்வரையும் ஒரே குடும்பத்தவராக அவர் கருதி யிருக்க வேண்டும். அப்படியிருக்கும்போது மாறனை நான் வேற்று மனிதராக எப்படிக் கொள்ளமுடியும்?" என்று மறு கணம் எண்ணினாள். உடனே, "இப்போதே மனக் கோட்டைக் கட்டக் கூடாது. நாம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவோம். பிறகு மாறனைப் பற்றி நினைப்போம்" என்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

சிதம்பரம் நகரமே விழாக் கோலம் பூண்டு விளங் கியது. போர் வீரர்கள் புத்தாடை அணிந்து நகரைச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். கோயிலையும் சக்கரவர்த்தியையும் தரிசனம் செய்ய வந்த சுற்றுப்புற மக்கள், போரைப் பற்றியே நினைத்திராதவர்கள். தில்லை நகரில் அகன்ற வீதிகளிலே அணிவகுத்துச் செல்லும் போர்வீரர்களை அவர்கள் புதுமையாக நோக்கி னார்கள்.

மறுநாள் அமாவாசையாதலால், மதியரசனின் துணையில்லாமல் இரவு மேலும் இருண்டு கிடந்தது. குமுதமும், காங்கேயனும் கோயிலையொட்டி வெட்டப் பட்டிருந்த புதிய குளக்கரையில் அமர்ந்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

எங்கெங்கோ தேடிய மாறவர்மன் கடைசியில் குளக் கரையில் குமுதத்தையும், காங்கேயனையும் கண்டு பிடித் தான்.

மறுநாள் காலையில் படைகளுக்குத் தலைமை தாங்கி மாறவர்மன் செல்லப் போகிறான் என்பது காங்கே யனுக்குப் புதுமையாக இருந்தது.

''நாம் தொண்டித் துறைமுகத்தில் புறப்படும்போது இப்படியொரு சம்பவம் ஏற்படும் என்று எண்ணி னோமோ?'' என்று கேட்டார் காங்கேயன்.

''ஆமாம், கடல் பயணமே எனக்கு அப்போது புதிது'' என்றான் மாறன். ''எனக்கு மட்டும் என்னவாம்?'' என்றாள் குமுதம் சற்று அவன் அருகே நகர்ந்து. படகில் நெருங்கி அமர்ந்த போது, பெருமாள் எரித்து விடுவதுபோல் பார்த்த பார்வை நினைவுக்கு வந்தது. அப்போதும் இருள் துணை, இப்போதும் அப்படியே.

''கடலில் குதித்ததும், நீ நீந்தத் தெரியாமல் கடலில் மூழ்கியதும் கனவுபோல் இருக்கின்றன'' என்றார் காங்கேயன்.

''நாம் தஞ்சைக்குச் செல்ல வேண்டியவர்கள். தஞ்சை அரண்மனையில் சேர்ந்துச் சமயம் பார்த்துச் சோழ குலத்தையே பூண்டோடு நசுக்கி விடுவது என்ற எண்ணத் துடன் உறுதி கொண்டுவந்தோம். சற்று யோசித்துப் பாருங்கள். கடலில் நாம் கரையேறிய இடம் வேறாகவும், தஞ்சைக்கும் நமக்கும் சம்பந்தமேயில்லாதிருந்திருந்தால் என்னவாகி யிருக்கும்?'' என்று மாறன் கேட்டான்.

குமுதம் மெல்ல மாறனின் கரத்தை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். மாறன் அதைத் தடுக்க வில்லை.

''என்னவாகியிருக்கும்? அலைந்திருப்போம்'' என்றார் காங்கேயன்.

''நாங்கள் அலைந்திருப்போம்; அப்போதும், நீங்கள் கலபதிபுரத்தில் கண் விழித்திருப்பீர்கள். அவர்கள் தங்களைத் தளபதியாக்கியிருப்பார்கள். மிக அருகேயுள்ள கிராமத்தில் எங்களைச் சந்தித்தது போல் சந்தித்திருக்க முடியாது. நாங்கள் வழி கேட்டுத் தஞ்சையை நோக்கிச் சென்றிருப்போம்'' என்றாள் குமுதம்.



''ஐயோ, நினைக்கவே பயமாயிருக்கிறது. அப்போது உங்களைச் சந்தித்திருக்கவே முடியாது'' என்றான் மாறன். அவன் உடல் சிலிர்த்தது.

அவன் உடல் சிலிர்த்ததற்கு அந்தப் பயங்கர கற்பனை நினைவு காரணமா, அல்லது குமுதத்தின் பூ உடல் அவன் மீது படர்ந்தது காரணமா?

மாறனின் முதுகை ஒட்டி, குமுதம் மெல்லச் சாய்ந் தாள். இருக்கிக் கட்டிய கச்சையையும் மீறி விம்மித்தணிந்த மார்பகங்களின் துடிப்பு, மாறனின் விசாலமான முதுகின் மூலம் அவன் நிலையை இதயத்திற்குத் தூது அனுப்பியது.

''உம்; நடந்ததைப் பேசுவோம். மாறவர்மா! சிவனடி யாரைச் சந்தித்தாயா? பெருமாள் எங்கே? நால்வராகப் புறப்பட்டோம். நீ படைகளுக்குத் தலைமை தாங்கித் தனியே செல்கிறாய். பெருமாள்...?'' என்று கவலையுடன் கேட்டார்.

குமுதத்தின் கரங்கள், மாறனின் தோளின்மீது, படர்ந்து எதையோ தேடுவன போல் மெல்ல அலைந்தன. பெரியவர் அதைக்கண்டு ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார் என்று எண்ணிய மாறன், குமுதத்தின் பூக் கரங்களை நகர்த்தும்போது இயங்கிய மாறனின் கரங்கள் குமுதத்தின் உடலோடு மெல்ல உறவாடின. நந்த வனத்துத் தடாகத் தாமரை மலர்களை ஒரே ஒரு தடவை அவன் பறித்திருக்கிறான். அந்த மென்மையை இப்போது உணர்ந்தான்.

''இதுவரை எல்லாம் வெற்றிதான். ஆற்றங் கரையில் ஒரு பெரிய படகை நான் நிறுத்தி வைத்திருந் தேன். நான் கலபதிபுரத்துத் தளபதியாதலால் பட கோட்டி என் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான். மேலும் அவன் சேரநாட்டினன். திருவஞ்சைக் களத்திற்குத் தப்பி ஓட விரும்பினான். அவன் உள் எண்ணத்தை நான்

புரிந்து கொண்டேன். படகில் பெருமாளைப் பொன் ஆபரண மூட்டையுடன் ஏற்றினேன். படகு நகர்ந்திருக்கும். ஆற்றின் பிரவாகத்துடன் ஓடி, கடலில் சேர்ந்திருக்கும். எதிர்க் கடலில் காற்றைக் கிழித்துக் கொண்டு மெல்ல மெல்ல நடுக் கடலை அடைந்திருக்கும். பிறகு தெற்கு நோக்கிப் பாய் விரித்து நகர்ந்து கொண்டிருக்கும். இப்போது அமாவாசையாதலால் ஒருவேளை கடலில் அலைகளுடன் படகு சற்றுப் போராடுமாறு நேரலாம். என்றாலும், பெருமாள் சிவனடியார் சொற்படி தொண்டியை அடைந்து அங்கிருந்து மதுரையை அடைவதற்கும் நாம் போர்க்களத்தில் வெற்றி வாகையுடன் மதுரையை அடைவதற்கும் சரியாக இருக்கும்'' என்று கம்பீரமாகவும் உற்சாகமாகவும் கூறினான்.

குமுதம் பெருமூச்சு விட்டாள். ''அப்படியென்றால் வெற்றி வாகை சூடி கலபதிபுரம் திரும்பி வரமாட்டீர்கள் இல்லையா?'' என்று குமுதம் கேட்டு மெல்ல நகைத்தாள்.

''கலபதிபுரமா? அங்கு எனக்கு என்ன வேலை?''

''அங்கு வேல்விழி காத்திருக்குமே என்று நினைத்தேன்.''

''வேல் விழியா? வேலை நினைப்பவன் விழியை ஏன் நினைக்கிறான்?'' என்றான் மாறன், குமுதம் பக்கம் மெல்லத் திரும்பி.

காங்கேயன் இப்போது படிக்கட்டுகளின் வழியே குளத்தின் நீரை நோக்கி இறங்கினார். அந்த இருளில் அவர் மெல்ல இறங்கிச் சென்றது, குமுதத்திற்கும் மாறனுக்கும் இன்னும் நெருங்கிப் பேசுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக இருக்கலாம்.

குமுதத்திற்கு அப்படியே அவனை ஆரத் தழுவ ஆசை. இந்த மாறு வேடம், போர், நாட்டுப்பற்று அனைத்தையும் உதறித் தள்ளி மாறனுடன் எங்காவது



கண் காணா கானகத்திற்குச் சென்று கவலையற்று, எல்லையற்ற இன்பயோகம் அனுபவித்துக் கொண்டு வாழ வேண்டும் என்ற ஆசை ஒரு கணம் விஸ்வரூபமெடுத்தது.

''மாறா'' என்று வாய் நிறைய காதல் சொட்டச் சொட்ட அழைத்து அவன் முகத்திற்கு நேருக்கு நேர் தன் முகத்தைக் கொண்டு வந்தாள்.

''கலபதிபுரத்து நினைவே தங்களுக்கு இல்லை அல்லவா?'' என்று கேட்டாள். இருளிலும் அவளுடைய முல்லை அரும்புப் பல்வரிசை பளிச்சிட்டது.

''கலபதிபுரத்து நினைவை நான் எப்படி மறக்க முடியும்? நாச்சியாரம்மாளும், சிங்கவரையனும் முன்பிறவியில் என் தாய், தந்தையராக இருந்திருப்பார்களோ என்று நினைக்கிறேன். பாச மழையைப் பொழிந்து விட்டார்கள். நான் வெற்றி வாகையுடன் திரும்பி வரும் நாளை அவர்கள் எதிர்பார்ப்பார்கள், ஏமாந்தும் போவார்கள்'' என்று கூறி மெல்ல நகைத்தான் மாறன்.

அவனுடைய சிரிப்புக்குள்ளே புகுந்து கொள்ள வேண்டும் என்று குமுதத்திற்குப் பரபரப்பு ஏற்பட்டது.

''அங்கே ரங்கதேவி எதிர் பார்த்திருக்கமாட்டாளா?'' என்று குமுதம் பேசிக்கொண்டே மாறனை இறுகத்தழுவிக் கொண்டாள்.

மாறன் அவளது பிணைப்பிலிருந்துவிடுபட்டு, ''என்ன குமுதம் இது...இவ்வளவு நாட்கள் இல்லாத ஓர் வேகம் இன்று எப்படி ஏற்பட்டது? கலபதிபுரத்தைப்பற்றி நீ ஏன் அடிக்கடி கேட்கிறாய்? ரங்கதேவியைப்பற்றி ஏன் விசாரிக்கிறாய்?'' என்று கேட்ட மாறன், தன் கரங்களை விலக்குவதையும் தன் பிடியினின்று விலக முயல்வதையும் அறிந்த குமுதம் மேலும் தன் பிடியால் அவனை அடிமைப்படுத்த முயன்று, ''எனக்கு ரங்கதேவியைப் பற்றித் தெரிந்தாக வேண்டும்'' என்றாள் கண்டிப்பு நிறைந்த குரலில்.

மாறன் தன்னை பலவந்தமாக விடுவித்துக்கொண்டே, "ரங்கதேவி கலபதிபுரத்து இளவரசி; அவ்வளவே தெரியும்" என்றான். குமுதத்தின் உஷ்ண மூச்சு அவன் முகத்திலும் மார்பிலும் மாறி மாறித் தாக்கியது.

"இளவரசியின் மீது தங்களுக்குக் காதல் இல்லையா?" குமுதம் தன் இதழ்களைக் கொண்டு அவனது இதழ்களிலிருந்து நேரே மறுமொழியை அறிய விரும்பி முகத்தருகே நெருங்கினாள்.

"இல்லை..." என்று அழுத்தமாகக்கூறிய மாறன் இப்போது அவள்பிடியினின்று பூரணமாக விடுவித்துக்கொண்டான். ஆனால் இருகரங்களையும் அவன் இடையைச் சுற்றி வளைத்த குமுதம், "அப்படியென்றால் என்னிடம் தங்களுக்கு" என்று கூறி அவன் மீது மேலும் சாய முயன்றவளைத் தடுத்து அந்த இடத்தினின்று வேகமாக நகர்ந்த மாறன், "குமுதம் உனக்கு இன்று என்ன வந்து விட்டது? காதலுக்கும் காமத்திற்கும் அப்பாற்பட்ட மங்கை நல்லாள் என்ற நம்பிக்கையில் தானே உன்னை இந்தப் புனித பயணத்திற்குத் தலைவர் தேர்ந்தெடுத்தார். இன்று உன் பேச்சும் செய்கையும் முற்றிலும், மாறுபட்டிருக்கின்றனவே" என்றான். அவன் குரல் கனிவுடனிருந்தாலும் கண்டிப்பு அதில் இருந்தது.

குமுதம் குரலில் சோகச் சாயை படிய ஆரம்பித்தது.

"ஆம்...ஆனால் நான் ஒரு பெண்" என்றாள்.

"பெண்களிலேயே மகத்தானவள்" என்றான் மாறன்.

"இருக்கலாம்; ஆனால் பெண்களுக்குள்ள இயற்கை உணர்ச்சியினின்று விடுபட்டவள் அல்லள். இயற்கையை நான் இன்னும் வெல்லவில்லை..." என்றாள் குமுதம்.

"தெரிகிறது. வேற்று நாட்டில் கவலையுடனும் பயத்துடனும் நீ வாழ்ந்தாலும் உன மேனியை இயற்கை தன் தூரிகையால் அழகுபடுத்துவதில் தவறவில்லை..."



"அதைத் தாங்கள் கவனித்து வந்திருக்கிறீர்கள். எனக்கு இயற்கை தந்த அந்தப் பரிசைத் தங்களுக்கு அளிக்க விரும்பினால் மட்டும் ஏன் விலகுகிறீர்கள்; வீரனுக்கு உணர்ச்சிகளில்லையா? ஒரு வேளை, என்னைத் தங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று குமுதம் சிணுங்கினாள்.

மாறன் நகைத்தான். "நானும் ஓர் ஆண் மகன் தான்! வீரனாயினும் உணர்ச்சிகள் எனக்கும் உண்டு உன்னிடம் தன் திருவிளையாடலைக் காட்டும் இயற்கை என்னையும் விட்டுவைக்கவில்லை. ஆனால், நான் இப்போது ஒரே ஒரு பெண்ணைத்தான் காதலிக்கிறேன்" என்றான் மாறன்.

மாறனின் மேனியில் விளையாடும் தனது கரங்களைச் சட்டென்று விலக்கிக்கொண்ட குமுதம், அவனிடமிருந்து நகர்ந்து திடுக்கிட்டு, "வேறு ஒரு பெண்ணைக் காதலிக்கிறீர்களா? யார் அவள்? ஓ! அதனால்தான், நான் மிக அருகில் இருந்தும் தழுவல் சுகத்தை நான் வலிய வந்துத் தரமுயன்றும், மனம் விட்டுப் பேசிக் காதலைப் புலப்படுத்தியும் என்னை உதறித் தள்ளி விட்டீர்களா? யார் அந்தப் புதிய காதலி? எனக்குத் தெரியாத காதலி இந்தச் சோழ நாட்டில்?" என்று சீறினாள்.

சிரிப்பை அடக்க முடியாமல் மாறன், 'ஹோ ஹோ' என்று வாய்விட்டுச் சிரித்தது குளத்தின் கடைசிப் படிக்கட்டுகளில் உட்கார்ந்திருந்த காங்கேயனையும் திரும்பிப் பார்க்கச் செய்தது.

மாறனுடைய சிரிப்பு நெருப்பைக் கொட்டியது போலிருந்தது குமுதத்திற்கு.

"யார் அந்தக் காதலி? — சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று மாறனின் தோள்களைப்பற்றி உலுக்கினாள்.

மாறன் அப்போதும் சிரிப்பை அடக்கவில்லை. குமுதத்தின் உள்ளத்தில் தோல்வி உணர்ச்சி, பொறாமை

உணர்ச்சி, விரகதாபம், நினைத்தது நிறைவேறாததால் எழுந்த வேதனை உணர்ச்சி அனைத்தும் சேர மீண்டும் அவள் உரத்த குரலில், ''யார் அந்தக் காதலி, சொல்லுங்கள்'' என்று கேட்டாள்.

சிரிப்பை அடக்கிக்கொண்ட மாறவர்மன் சொன்னான்: ''கழலடியில் குமரிக் கடலையும், பொதிகை மலையை மார்பகமாகவும் குற்றால அருவியைக் கனிமொழியாகவும், தாமிர வர்ணியையும் வைகையையும் ஆபரணங்களாகவும், நான்மாடக் கூடலை முகார விந்தமாகவும், ஏலமும் சந்தனமும் மணக்க, முத்துச் சிரிப்புடன் இகழும் பாண்டிய மாதேவியை நான் காதலிக்கிறேன். பாண்டிய மாதேவியின் உடலோடு நான் ஒட்டி உறவாடுவதை விரும்புகிறேன்'' என்றான் கம்பீரமாக.

குமுதத்தின் விழிகளில் நீர் தளும்பியது. பலவித உணர்ச்சிப் பிழம்புகளின் வடிவமாய் நின்றிருந்த குமுதம், அந்த உணர்ச்சிகள் வெடிக்க விம்மி அவன் மார்பில் சாய்ந்தாள்.

அப்போது மாறன் குமுதத்தைத் தன்னுடன் நெருக்கமாக அணைதது அவள் விழி நீரைத் தன் கரங்களால் மெல்லத் துடைத்தான்.

## 31. அவன் காதலித்த பெண்

கீழ்த் திசையில் கதிரவன் உதிப்பதற்கு அடையாளமாக, சிவப்பும், மஞ்சளும் கலந்த கோடுகள், வெண்மேகங்களின் அரவணைப்புடன் படர ஆரம்பித்தன.

தில்லை அம்பலவாணரின் திருக்கோயிலில் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களை இனிய குரலில் ஓதுவார்கள் பாடத் தொடங்கினர்.



மத்தளமும், சங்கும், வீணையும், குழலும் ஒலித்து இளங்காலைப் பொழுதை அழகுடன் வரவேற்றன.

நெற்றியில் நீறு துலங்க, பராந்தக சோழ தேவர் உத்தம சீலனைத் தழுவி உச்சி முகர்ந்து ஆசி கூறி வழியனுப்பி வைத்தார்.

''போய்வா மகனே! பாண்டியனின் கொட்டமொடுக்கி, வெற்றியுடன் திரும்பிவா'' என்று கூறும்போது கம்பீரமும் உற்சாகமுமிருப்பினும் ஏனோ அவர் கண்கள் கலங்கின.

''வல்லவரையரே, உத்தமசீலி இளைஞன்; இளங்கன்று பயமறியாது; போர் முறையும் முற்றும் உணரவில்லை. கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று தன் மருமகன் இராட்டிரகூட வேந்தன் கோவிந்த வல்லவரையனிடம் கூறும்போதுகூட பராந்தகனின் குரலில் ஒருவித பயமிருந்தது.

மாறவர்மன் புத்தாடை அணிந்து இடையிலே வாள் தொங்க, மார்புக் கவசங்கள் ஒளிவீச நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தான்.

பராந்தகர் மெல்ல அவனருகே வந்தார். அவரது பாதங்களைத் தொட்டுக் கும்பிடத் தோன்றாமல் நின்றுகொண்டிருந்தவனுக்கு நொடியில் நினைவு வந்தன, சிவனடியார் கூறிய அறிவுரைகள்.

''மாறா, படைகள் புறப்படும் நாளன்று நீ மிகவும் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். முரசு முழங்கும், தாரை தப்பட்டை ஒலிக்கும்... ஒரே சமயத்தில் போர்க் கோஷங்கள் பலமாக எழும். சோழ நாட்டின் பெருமைகளைக் கட்டியங் கூறுபவன் ஒன்றுவிடாமல் கூறுவான். சோழ சக்கரவர்த்தியின் பெருமைகளை எடுத்துக் கூறுவான். அவருக்குள்ள பட்டப் பெயர்களை ஒவ்வொன்றாக அழுத்தந்திருத்தமாகக் கூறுவான். ஒவ்வொரு முறையும் 'வாழ்க, வாழ்க' என்ற கோஷம் எழும்.

அப்பொழுது நீ உணர்ச்சி வசப்பட்டுவிடாதே. பராந்தகர் புகழ்ப் பேசும்போது, பாண்டிய நாட்டின் பெருமை குறைத்தே கூறப்படும். பாண்டிய நாட்டை அடிமைப் படுத்திய சோழ மன்னர்களின் கீர்த்திகள் மிகவும் உயர் வாகப் பேசப்படும். உன் ரத்தம் அப்போது கொதிக்கும். உன் கரம் உடைவாளை நோக்கித் துள்ளிச் செல்லும்

"மிக மிக அருகே பராந்தக சோழ தேவர் நிற்பார். உன்னையே கண் கொட்டாமல் பார்த்து நிற்பார். மிகவும் வசதியான நேரம்; சௌகரியமான சூழ்நிலை; வாளை உருவி ஒரே பாய்ச்சலில் அவரது சிரத்தை உன்னால் கொய்துவிட முடியும். உன் தாய்த் திருநாட்டைச் சிறுமைப்படுத்திப் பேசும் சோழச் சக்கரவர்த்தியைப் பழிக்குப் பழி தீர்த்துக்கொள்ள ஆண்டவனே ஏற்படுத்திய வசதியான நேரம் என்று நீ நினைத்துக் கொள்வாய்

"நீ பாண்டிய நாட்டினின்று புறப்பட்ட புனித யாத்திரையை வெற்றிகரமாக முடித்துக்கொள்ள அருமையான வாய்ப்பு என்று நீ முடிவு செய்துவிடுவாய்.

"அப்போதுதான் நீ மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சி வசப்படக் கூடாது. நிமிர்ந்து நிற்கும் சிரசை ஒருபோதும் திருப்பாதே. குனியாதே. முகத்தில் புன்னகையைத் தவிர வேறு உணர்ச்சிகளைப் புலப்படுத்திக் கொள்ளாதே.

'உன்னருகே வரும் சோழசக்கரவர்த்தி உன் தோளைத் தொடுவார். "தம்பி" என்று அன்புடன் அழைப்பார். உன்னை அவர் கேட்கும் முதல் கேள்வி:

"தம்பி! இப்போது புறப்பட்டுச் செல்லும் மகத்தான காரியம் என்னவென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்பார்.

"வீரபாண்டியனைத் திடீரெனத் தாக்கி அவன் திமிர் அடக்க" என்று சொல். வேறுவிதமாகக் கூறாதே.



"எப்படி ஐயா! என் நாவினால் அந்த வார்த்தையைச் சொல்ல முடியும்" என்று கேட்காதே. கணீரென்ற குரலில் நீ பாண்டிய நாட்டைப்பற்றி எவ்வளவு குறைவாகப் பேச முடியுமோ பேசு. அடக்கமாகப் பேசு; அளந்து பேசு; ஆர்வத்தைத் தூண்டிவிட்டுப் பேசு. ஒருவேளை சக்கரவர்த்தி உனது பிறந்த ஊரைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கலாம். அதைப் பற்றிக் கவலைப்படாதே. திடீரென்று "வெற்றிவேல் வீரவேல்" என்று முழங்கு. அங்கு இருக்கும் வீரர்கள் திடீரென்று உணர்ச்சி மிகுதியால் ஒரே குரலில் வீரவேல் தீரவேல் என்று முழங்குவார்கள். சக்கரவர்த்தியின் மெய் சிலிர்க்கும்" என்று ஒரு சிறு குழந்தைக்குக் கூறுவதுபோல் கூறினார். கடைசியாகக் கூறினார்: "மாறவர்மா, சக்கரவர்த்தி உன் அருகே வந்த உடனேயே அவரது பாதங்களைத் தொட்டுக் கும்பிடு. மறந்துவிடாதே; மறுத்துவிடாதே. நமது பாண்டிய நாட்டைக் காக்க நாம் எந்த வேடமானாலும் போடலாம், யாரிடமும் பணியலாம், எவரையும் புகழ்ந்து பேசலாம்."

மாறனின் மெய் சிலிர்த்தது; என்ன ஆச்சர்யம் சிவனடியார் சொல்லியபடிதான் நடக்கிறது.

அவன் எதிரே பரகேசரி பராந்தக சோழ சக்கரவர்த்தி நின்று கொண்டிருந்தார், மார்பை நிமிர்த்தி, கம்பீரமாக நிற்கும் மாறனை நோக்கிய பராந்தகர், அருகேயிருந்த கண்டராதித்தனிடம், "கண்டரா, இந்தப் பிள்ளைக்குத் திருநீறு பூசக் கற்றுக் கொடுக்கவில்லையா?" என்றார்.

கண்டரன் பரபரப்புடன் தன் அங்கியில் இருந்த சிறு துணிப் பையிலிருந்து திருநீறு எடுத்து மாறனின் நெற்றியில் பூசினான்.

"வழிக்குத் துணையாவது இந்தத் திருநீறுதான் தம்பி" என்று பராந்தகர் கூறவும், மாறனின் உள்ளம் நெகிழ்ந்தது. அவனுடைய மனத்திலிருந்த வெஞ்சினம் ஒருகணம் கழன்று விட்டதுபோல் தோன்றியது. குனிந்து

பராந்தகர் பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

"சோழ நாட்டு வழக்கங்களை இந்தப் பிள்ளை அறிந்திருக்கிறான்" என்று கண்டரனிடம் கூறிக் கொண்டே மெல்ல நகர்ந்தார் சக்கரவர்த்தி.

"அவன் சோழ நாட்டைச் சேர்ந்தவன் தானே" என்று கண்டரன் வியப்புமிகக் கேட்டான்.

மெல்லியப் புன்னகையை உகுத்த பராந்தகர், "நேற்று இரவுதான் செய்தி கிடைத்தது. மாறன் நம் நாட்டைச் சேர்ந்தவனல்லன்" என்றார். அவர் குரல் இவ்வாறு மிகவும் மெல்லியதாக ஒலித்துக் கண்டரன் கண்டதில்லை.

கண்டரன் திடுக்கிட்டு, "அப்படியென்றால்..." என்று கவலை மிகக் கேட்டான்.

"அதனாலென்ன! சேர நாட்டைச் சேர்ந்த பழுவேட்டரையர்கள் சோழ நாட்டிற்குத் தொண்டாற்ற நம்மோடு சேரவில்லையா? மருகர் கோவிந்த வல்லவரையர் சோழ நாட்டவரா? சோழ நாட்டோடு இரண்டறக் கலந்து விடவில்லையா? கலபதிபுரத்துச் சிங்க வரையன் தகுந்தவனைத்தான் தளபதியாகத் தேர்ந்தெடுத்திருப்பான்" என்றார்.

சக்கரவர்த்தியும், இளவரசரும் தன்னைப்பற்றியே பேசிக் கொள்கிறார்கள் என்பதை மாறன் மிக எளிதில் புரிந்து கொண்டான். தன்னைப்பற்றி விசாரித்துத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் சக்கரவர்த்தி, தன்னிடம் தளபதிப் பொறுப்பை ஏன் கொடுக்கிறார்? அவனுக்குப் புரியவில்லை. ஆராய்ச்சி செய்யவும் நேரமில்லை.

"கண்டரா, நமது ஒற்றர்கள் வரவர மிகத் தாமதமாகவே செய்திகளைக் கொண்டு தருகிறார்கள்.



மாறனிடம் படையெடுப்புப் பொறுப்பை ஒப்படைத்த பிறகு இப்போது தான் இந்தச் செய்தியைச் சொல்லுகிறார்கள்..." என்றார் சக்கரவர்த்தி.

"இப்போதும் தாமதமாகி விடவில்லையே. மாறனை நிறுத்திவிடுவோம்..." என்றான் கண்டராதித்தன்.

பராந்தகர் தலையை அசைத்தார். "அப்படியொன்றும் ஆபத்தான விஷயமில்லை" என்றார்.

"எனக்கொரு சந்தேகம். மாறனிடம் ஏன் படைகளை நடத்திச் செல்லும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள்" என்று கண்டரன் கேட்டான்.

"நான் ஏன் அப்போது ஒப்படைத்தேன் என்று கேட்காதே. ஆனால் இப்போது என்னால் அதற்கு ஏற்ற காரணங்களை உறுதியாகக் கூறமுடியும். மாறன், படைகளைத் திறம்பட நடத்திச் செல்வான் என்பது ஒன்றே. மேலும் இந்தச் சிறு போருக்கு என் புதல்வர்களை ஈடுபடுத்த விருப்பமில்லை" என்றார் பராந்தகர்.

"உத்தமசீலியால் முடியாதா? வல்லவரையரால் முடியாதா?" என்று கண்டரன் சந்தேகத்தைக் கேட்டான்.

"உத்தமசீலிக்கு இன்றளவும் மனப்பக்குவம் வரவில்லை. மண்ணை நினைப்பதைவிட பெண்ணை நினைப்பதில் தான் கவனம் செலுத்துகிறான். பருவக் கோளாறு என்று எளிதில் தள்ளிவிட முடியாது. இருபது வயது வரை புலனை அடக்கி மனத்தை அலைய விடாமலிருந்தால் உடற் கட்டு, உள்ளக் கட்டு குறையாது. வல்லவரையர் அதே தவறைச் செய்தார், நாடிழந்தார். ஆனால் மாறன் வேல்விழியர்களிடம் மனத்தைப் பறிகொடுக்கவில்லை என்பதை உறுதியாகக் கேட்டறிந்து இருக்கிறேன். கண்டராதித்தா, தவமுனிவர்களின் உறுதியைக் கூடக் குலைக்கவல்லது பெண்களின் நோக்கு. நெருங்கிய ஸ்பரிசம ஆனால்

மாறன் தனக்கு மிக எளிதில் கிடைத்த வாய்ப்பையெல்லாம் உதறித் தள்ளிவிட்டான், போரில் வெற்றியடைந்துத் திரும்பியவுடனேயே அவனுக்கு மணமாலை காத்திருக்கிறது. கலதிபுரத்துத் தளபதிப் பதவியினின்று உயர்ந்து இளவரசனாகிவிடுவான். போரில் படைகளை மாறன் திறம்பட நடத்திச் செல்ல இந்த வாய்ப்பு ஒன்றே போதும். அதனால் வீராவேசத்துடன் போர் புரிவான். ஒருவேளை வீரபாண்டியனைச் சிறைப் பிடித்தே சோழ நாட்டிற்குக் கொண்டுவந்து விடலாம். அதனால்தான் மாறவர்மனிடம் ஒப்படைத்துள்ளேன். ஆனால் எனக்கு ஒரே கவலை. உத்தமசீலி, மாறன் சொல் கேட்பானா என்பதுதான்'' என்றார்.

உடனே கண்டராதித்தன், ''போர்க்களத்தே உறவு முறை என்ற பேதமில்லை. தலைமை ஏற்பவரின் கட்டளையை ஏற்று நடக்கவேண்டும் என்பதுதான் யுத்த தர்மம்'' என்றான்.

''ஆம்; யுத்த தர்மம் புரிந்து கொள்ள, போர்க்களத்தில் எப்படியெல்லாம் யுத்த தந்திரத்தைப் பயன்படுத்துவது என்பதை அறிந்து கொள்ள உத்தமசீலிக்கு இது ஒரு வாய்ப்பு'' என்றார் பராந்தகர்.

பிறகு, ''உம், நேரமாகிறது. படைகள் புறப்படட்டும்'' என்று கட்டளையிட்டார்.

மாறவர்மன் செவிகளில் அரைகுறையாகவே அவர்கள் பேசியது விழுந்தது என்றாலும், சக்கரவர்த்தி தன்மீது மிகுந்த மதிப்பை வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்தான். அவனையறியாமலே, 'வெற்றிவேல், வீரவேல்' என்று கூவினான்.

அங்கிருந்த வீரர்கள் ஒரே குரலாக 'வெற்றிவேல் வீரவேல்' என்று முழங்கினர்.



தாரை, தப்பட்டைகள் ஒலித்தன, முரசு 'தம்தம்' என்று அதிர்ந்தது. பூம்பூம் என்று சங்கம் முழங்கியது. போர்ப் பறைகளின் ஓசையும், போர் வீரர்களின் வீர முழக்கமும் எழுந்தன. தில்லை நகரின் மறையொலியையும் அமிழ்த்தின.

படைகள் புறப்பட்டன. எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் அவற்றுள் குதிரைப் படைகள் மிகுதியாயிருந்தன. படைகளுடன் இரட்டைக் காளை பூட்டிய வண்டிகளில் உணவுப் பண்டங்கள் வந்தன. சமையல் செய்பவர்கள் வந்தார்கள். பரிமாறுபவர்கள் வந்தார்கள். காங்கேயன் 'மருத்துவர் என்ற முறையில் வந்தார். அந்தப் பரிவாரங்களில் பெண்களுக்கு வேலையில்லை. போர்க்களத்திலே பெண்களுக்கு ஏது இடம். ஆனால் காங்கேயன் முன் எச்சரிக்கையாகக் குமுதத்தைத் தன் மகள் என்ற முறையில் உதவிக்காக அழைத்துக் கொண்டார். கடைசி நேரத்தில் விறலியர் சிலரும், பாணர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள், சோர்வடையும வீரர்களுக்கு ஆடிப்பாடி உற்சாகமூட்ட.

சூரிய அஸ்தமன வேளையில் வீரநாரயணப் பேரேரிக்கு நெருக்கமாக ஒரு சிறு கிராமத்தில் பாடி வீடமைத்துத் தங்கினார்கள். உத்தமசீலியின் குரல்தான் பலமாக ஒலித்தது. வீரர்களை அணிவகுத்து நிறுத்துவதில் உத்தமசீலி தன் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்தான். மாறன் வாயைத் திறக்கவில்லை, தலையிடவுமில்லை.

பாடி வீடமைத்துக் கொண்டு அனைவரும் ஓய்வெடுத்துக் கொள்ள முற்பட்டபோது, மாறன் காங்கேயனைக் கண்டு பேசச் சென்றான்.

அந்தக் குடிசையிலிருந்துத் திரும்பி வந்தபோது உத்தமசீலி எதிர்ப்பட்டான். ''பெண்கள் இருக்குமிடத்துக்கு வீரர்கள் செல்வது முறையல்ல என்பது உனக்குத்

தெரியுமா?" என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டான்.

உத்தமசீலி, தான் உயர்ந்தவனென்பதை நிலைநாட்ட விரும்புகிறான் என்பதை மாறன் புரிந்துகொண்டான்.

"அந்தக் கட்டுப்பாடு எனக்குப் பொருந்தாது என்பது தங்களுக்குத் தெரியுமா?" என்று மெல்லிய குரலில் கேட்டான் மாறன்.

"ஏன் பொருந்தாது?"

"நான் சாதாரண வீரனல்லன். தளபதி என்பது நினைவிருக்கட்டும். அத்துடன் மற்றொன்றையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இளவரசர் இனி மரியாதையாகப் பேசக் கற்றுக்கொண்டால் நல்லது."

மாறன் மெல்லக் கூறினாலும் அதில் அழுத்தமும், கண்டிப்பும் கலந்திருந்தன.

'ஓ" என்ற குரலில் அலட்சியம் மிளிர்ந்தது. ஏதும் பேசாமல் உத்தபசீலி திரும்பிப் பார்த்தான்.

"இளவரசே!" என்று அழைத்தான் மாறன். உத்தமசீலி திரும்பிப் பாாத்தான்.

"தளபதியின் அனுமதி இல்லாமல் தங்கியிருக்குமிடத்திலிருந்து எங்கும் செல்லக்கூடாது என்பதைத் தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இப்பொழுது தாங்கள் ஏன் விறலியர்கள் இருப்பிடத்திற்கு வந்தீர்கள்?" என்று கேட்டவுடன் உத்தமசீலியின் முகம் அவமானத்தால் சிவந்தது. அவன், மறுமொழி கூறவில்லை. அவன் கரம் உடைவாளை அணுகியது.

"நாளைக் காலை சூரியன் உதிக்குமுன்பே நாம்புறப்பட வேண்டும். வீரநாராயண ஏரியைத் தாண்டி கொள்ளிடக் கரையை அடைந்துவிடவேண்டும். அதற்கு வேண்டிய



ஏற்பாடுகளை இடபோதே செய்து கொள்ளுங்கள்" என்று மாறன் கூறினான். கட்டளை யிடும் குரலில் அழுத்தமுமிருந்தது.

உத்தமசீலி மறுமொழி பேசாமல் திரும்பினான். அவன் முகம் அவமானத்தால் சிறுத்தது. இதயமோ ஆத்திரத்தால் வெந்தது. உத்தமசீலி சென்றவுடன் காங்கேயனும், குமுதமும் மாறன் அருகே ஓடோடி வந்தனர். இளவரசரிடம் வீணே தகராறு செய்து கொள்ள வேண்டாம் என்று அறிவுரை புகன்றனர்.

மாறன் சிரித்தான். "நீங்கள், தேவையில்லாமல் என்னைச் சந்திக்க முயலாதீர்கள்" என்றான் கண்டிப்பான குரலில். அவன் உள்ளத்தில் ஏனோ அமைதியில்லை.

"நீங்கள் இப்போது எங்களைச் சந்திக்க வந்ததோ...?" என்று குமுதம் தன் கண்களை மெல்ல மூடிக் கொண்டவள் போல் கேட்டாள்.

"நான் தளபதி, என் உத்தரவுக்கு யாராயிருந்தாலும் கீழ்ப்படிய வேண்டும்" என்றான் மாறன்.

குமுதம் 'ஓ' என்று கூறி மெல்ல நகைத்தாள்; காங்கேயன் அவளை அழைத்துக்கொண்டு தங்கியிருக்கும் குடிசைக்குச் சென்றார். அவனுடன் பேசிக்கொண்டே இருக்கவேண்டும் என்ற துடிப்பு குமுதத்திற்கு. மாறனோ தான் தளபதி என்ற பதவியைக் காட்டிப் பயமுறுத்துகிறானே!

இருள் பிரியா முன்பே, சங்கநாதம் எழுந்தது! வீரர்களை எழுப்பும் பேரிகை ஓசை முழங்கியது. மாறன் குதிரை மீது அமர்ந்து கொண்டு வீரர்கள் அணிவகுக்க வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சோழ வீரர்களுடன் இணைந்த கலபதிபுரத்து வீரர்களும் விரைவாக இயங்கிப் புறப்படச் சித்தமாயினர்.

புறப்படுவதற்கான முரசு ஒலி முழங்கு முன்பு குதிரை மீது அமர்ந்து வந்த உத்தமசீலி புலிக் கொடியை மாறனை நோக்கி நீட்டி,

"இந்தக் கொடியைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"கொடியை தாங்களே பிடித்துக்கொண்டு குதிரை மீதமர்ந்துப் படைகளின் முன்னணியில் செல்லலாம்." என்றான் மாறன்.

"தாங்கள் தளபதி; புலிக்கொடியை ஏந்துவதுநியாயம், முறை. ஏன் தவிர்க்கிறீர்கள்?" என்று உத்தசீலி கேட்டான்.

"தளபதிக்குக் கட்டளையிட நீங்கள் யார்? நான் சொல்கிறேன்: புலிக் கொடியை ஏந்திப் படைகள் முன்வரிசையில் அவர்களுக்கு வழிகாட்டிச் செல்லுங்கள், கொள்ளிடக் கரையை அடைந்தவுடனே ஆற்றைக் கடக்க வேண்டும். கரையில் தாமதிக்கக் கூடாது; தோணிகளை ஏற்பாடு செய்யவேண்டும்" என்றான் மாறன், கண்டிப்பானகுரலில்.

"ஏன் புலிக் கொடியை ஏந்துவது அவமானம் என்று நினைக்கிறீர்களோ?" என்று உத்தமசீலி கேட்டான்.

மாறன் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தான்: அதை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், "என் கட்டளைக்குக் கீழ்ப்படியப் போகிறீர்களா இல்லையா?" என்று கூவினான்.

"ஹூம்" என்று ஹுங்காரமிட்ட உத்தமசீலி புலிக் கொடியை ஏந்தி முன் சென்றான், அந்த மங்கிய வெளிச்சத்துடன் கூடிய பொழுது புலரா வேளையில் உத்தமசீலியின் முகத்தில் பிரதிபலித்த ரௌத்ரத்தைப் புரிந்து கொள்ளவில்லை மாறன்.

படைகள் சென்று கொண்டிருந்தன. உச்சி வேளையை நெருங்கும் சமயம் படைகள் கொள்ளிடக் கரையை அடைந்தன. கொள்ளிடக் கரையில் நாணற்காடுகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அவற்றைத் தவிர அரசமரங்களும், ஆலமரங்களும், நாவல்மரங்களும் நிறைந்த தோப்பு இருந்தது. வீரர்கள் மரநிழலில் இளைப்பாறச் சென்றனர்.



ஆற்றைக் கடப்பதற்கு ஒரிரு தோணிகள் கரை ஓரமாக இருந்தன. தோணியை ஓட்டுபவரிடம் இன்னும் சில தோணிகளைக் கொண்டு வர ஏற்பாடு செய்வதற்காக மாறனும், உத்தமசிலியும் மற்றும்சில வீரர்களும் சென்றனர். தோணியை ஓட்டும் இருவரும் மிகுந்த பயபக்தியுடன் கைகளைக் கட்டிக் கொண்டு உத்தரவுக்காக நின்றனர். அவர்களுள் ஒருவன் தலைவர் வல்லபன் என்பதை மாறன் மிக எளிதில் கண்டு விட்டான்.

தலைவர் வல்லபனுக்குத்தான் ஒவ்வொரு வேடமும் எவ்வளவு பொருத்தமாக அமைகிறது என்று மாறன் வியந்தவாறிருந்தான். சிவனடியாராய் இருந்தபோது அந்த வேடத்தோடு இரண்டறக் கலந்து விட்டார். இப்போது அடர்ந்த மீசை, தலையில் முண்டாசு, திறந்த மார்பு- மார்பிலே புலி நகம் கோத்த மாலை. பரம்பரையாகப் பழக்கப்பட்ட பட கோட்டியும் அவரிடம் தலை குனிய வேண்டும். அவரால் அங்கே பழக்கப்பட்ட படகோட்டி போல் எவ்வாறு நடிக்க முடியும் என்பது மாறனுக்குப் புரியவில்லை.

பிறகுதான், அவரருகே இருக்கும் தோணி ஓட்டும் மற்றவனும் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் என்பதைப் புரிந்து கொண்டான். இங்கு ஓர் திருப்பு முனை இருக்கிறது என்பதையும் உணர்ந்தான். வல்லபனின் கண்கள் மாறனுடன் பேசின. மாறனின் உடல் சிலிர்த்தது.

தோணி ஓட்டி கூறிய செய்தி மாறனையும், உத்தமசீலியையும் திடுக்கிட வைத்தது. கொள்ளிடத்தின் மறுகரையில் காத தூரத்தில் பாண்டியர்ப் படைகள் காடுகளில் ஒளிந்திருப்பதாகவும், அவர்களும் கொள்ளிடத்தைக் கடக்க இருபது தோணிகள் வேண்டும் என்று கேட்டிருப்பதாகவும் சொன்னார்.

"தோணிகளைக் கொடுப்பதாக நீ வாக்களித்தாயா?" என்று உத்தமசீலி கேட்டான்.

"அதெப்படி நான் கொடுப்பேன், நான் சோழநாட்டைச் சேர்ந்தவன். பாண்டியர்ப் படைகள் என்று தெரிந்த

வுடனேயே நான், தஞ்சைக்குச் செய்தியை அனுப்பினேன். அதற்குள் இவ்வளவு விரைவில் தலைநகரிலிருந்து நமது படைகள் வந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை'' என்றான் தோணி ஓட்டி வல்லபன். உற்சாகமான குரலில் மாறன் மெல்ல நகைத்துக் கொண்டதை வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், ''பாண்டியர் படைகள் இவ்வளவு அருகில் வந்துவிட்டனவா?'' என்று குரலில் திகைப்பு பிரதிபலிப்பது போல் கேட்டான்.

''நீ சொல்லி நாங்கள் வரவில்லை. நாங்கள் சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு வருகிறோம். நாங்கள் வருவது ஒருவருக்கும் தெரியாது. பாண்டியர்ப் படைகள் மதுரையைத் தாக்கத் திட்டமிடுகின்றன என்ற செய்தி மூன்பே எனக்குக் கிடைத்து விட்டது. அதனால்தான் சோழ நாட்டுப் படைகள் அவர்களைத் திடீரெனத் தாக்கி முறியடிக்கப் புறப்பட்டன'' என்றான் உத்தமசீலி, தோணிக்காரரின் கூற்றை மறுப்பவன் போல்.

''மதுரையைத் தாக்குவதற்கு ஒரு பகுதிப் படைகள் அனுப்பப்பட்டுள்ளன. சோழர் படைகள் மதுரையை நெருங்க விடாமல் செய்யவே கொள்ளிடக் கரையில் மற்றும் ஒரு பகுதிப் படைகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்'' என்றார் தோணி ஓட்டிபோல் வேடம் பூண்ட வல்லபன்.

அவன் கூறியதிலுள்ள இரகசியத்தைப் புரிந்து கொள்ளாத உத்தமசீலி ''சரி, சரி உடனே தோணிகளைக் கொண்டுவா, ஆற்றைக் கடந்து அக்கரையில் அங்கு தங்குவோம்'' என்றான்.

''வேண்டாம், வேண்டாம். மறுகரையில் தங்குவது ஆபத்து. நாம் இங்கேயே தங்குவோம். நள்ளிரவுக்கு மேல் ஆற்றைக் கடந்து எதிரிகளை எதிர்பாராமல் தாக்குவோம்'' என்றான் மாறன்.

சிறிதுநேரம் இருவரும் கடுமையாக விவாதித்ததைக் கண்ட தோணி ஓட்டி, ''ஐயா உங்கள் முடிவை உடனே



சொல்லுங்கள். இப்போதே சென்றால்தான் பொழுது சாய்வதற்குள் நான் தோணிகளைச் சேகரிக்க முடியும். உத்தரவு கொடுங்கள்'' என்றான்.

உத்தமசீலி மிகக் கடுமையாக அவனை நோக்கி, ''வேறு யாரையாவது அனுப்பு. உன்னை இந்த இடத்தை விட்டுச் செல்ல அனுமதிக்க மாட்டேன். எங்கள் தளபதி ஒரு முட்டாள். உன் எதிரே, எங்கள் போர்த் திட்டங்களைப் பேசி விட்டார். நள்ளிரவில் பாண்டியர் படைகளைத் தாக்கும் திட்டத்தை இப்படி வெளிப்படையாகச் சொல்லிவிட்டார். நீ, எதிரிகளிடம் சொல்லி எச்சரித்து விட மாட்டாய் என்பது என்ன நிச்சயம்? அதனால், நாங்கள் இரவு புறப்படும் வரை உன்னை எங்கள் பாதுகாவலில் வைத்திருப்பதாக உத்தேசம்'' என்றான்.

மாறன், சீற்றம் மிகுந்தவனாக, ''இளவரசே, நான் கடுமையாக உங்கள் போக்கை ஆட்சேபிக்கிறேன். இப்படி நடந்து கொள்வீர்களென்றால் நான் உங்களைச் சிறைப் படுத்தி, சிதம்பரத்திற்கே திருப்பி அனுப்புமாறு நேரும். இந்த இடத்தில் நான்தான் உத்தரவிடவேண்டும், திட்டமிட வேண்டும்'' என்றான்.

அதற்குள் தோணி ஓட்டி குறுக்கிட்டு, ''ஐயா, பொது விரோதியைத் தாக்க வந்த இடத்தில் நீங்களே கட்டுப்பாடில்லாமல் விவாதிப்பது சரியன்று. என்னைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் எதிரிகளுக்கு உளவு சொல்லி விடுவேனோ என்று அஞ்சவேண்டாம். நான் தங்களுடனேயே இருந்து விடுகிறேன். உங்களுக்கு வேண்டிய தோணிகளை எனது உதவியாளன் ஏற்பாடு செய்வான்'' என்ற பிறகுதான் அங்கே சற்று அமைதி நிலவியது.

தோணி ஓட்டி வல்லபன் ஓர் ஓரமாகச் சென்று அமர்ந்து கொண்டான். மாறன் மற்றொரு மரத்தின அடியில் உட்காரச் சென்றான். காங்கேயனும், குமுதமும் சற்றுத் தொலைவிலிருந்து அங்கே நடப்பதைப் பார்த்த

வாறிருந்தனர். கதிரவன் மெல்ல மேற்குத் திசையை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினான். அவன் வேகம் அதிகமாக இருந்தது.

உத்தமசீலிக்கு ஆத்திரம் இன்னும் தீரவில்லை. கோவிந்த வல்லவரையனிடம் சென்று, மாறன் கூறியவற்றைச் சொல்லி "என்னை அவமானப்படுத்திய மாறனை நான் எளிதில்விட்டுவிடப் போவதில்லை. என் வாள் திறமையின் எதிரே அவன் எம்மாத்திரம்? அவனை வாட் போருக்கு அழைக்கப் போகிறேன்" என்று சூளுரைத்தான். வல்லவரையனுக்கு அவனுடைய வார்த்தைகள் ஏதும் காதில் ஏறவில்லை. படைகளுடன் வந்திருந்த விறலி ஒருத்தியுடன் முதல் நாளே பேச்சுக் கொடுத்து, அவள் மனத்தைக் கவர்ந்துவிட்டான். அவளுடன் அடர்ந்த தோப்புக்குள் சென்று சிறிது நேரமாவது இன்பமாக இருக்கவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தான். அதனால் உத்தமசீலி சொன்ன வார்த்தைகள் அவன் செவிகளில் சரியாக விழவில்லை. "ஆமாம், உன வாள் திறமை எங்கே, அந்தப் பொடிப்பயலின் திறமை எங்கே" என்று மட்டும் கூறிவிட்டு அடர்ந்த மரங்களினூடே மறைந்தான்.

வீரர்கள் உண்ட மயக்கத்தில் கண்ணயர்ந்திருக்கும் சமயம் வெயில் கருமேகங்களால் மறைக்கப்பட்டு கடுமை குறைந்து காணப்பட்டது. காற்று 'விர் விர்' என்று வீசிக் கொண்டிருந்தது. கொள்ளிடக் கரையில் ஐந்து தோணிகள் வந்து நின்றன. சோழ நாட்டுப் படை வீரர்கள் கவனிக்காதபோது அவற்றிலிருந்து ஏறத்தாழ முப்பது பேர்களுக்கு மேல் இறங்கி நாணற்புதர்களிடையே மறைந்து கொண்டனர்.

வல்லபன் முழங்காலைக் கட்டிக்கொண்டு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்.

மாறன் மற்றொரு மரத்தின் மேல் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தான். அவன் சிந்தனையெல்லாம் எந்தத் தருணம் வாய்க்குமோ, சோழர்களைத் தாக்க என்ப



திலேயே இருந்தது. 'வல்லபனிடமிருந்து சைகை ஏதாவது கிடைக்கிறதா என்று அவரையே எதிர்பார்த்தவாறு அமர்ந்து இருந்தான். சிந்தனையிலாழ்ந்திருந்த மாறனை உத்தமசீலியின் குரல் கலைத்தது.

"ஏ, மாறா! என்ன சொன்னாய் அப்போது? என்னைச் சிறைப்படுத்தி விடுவாயா? என்னை யார் என்று அறியாமல் பேசிவிட்டாய்" என்று கூவியவனை நோக்கி, மாறன் மிகவும் அமைதியாக, "தெரியுமே, தாங்கள் இளவரசர், அதனால்தான் தங்களுக்கு இவ்வளவு மரியாதை இதுவரை கொடுத்து வந்திருக்கிறேன்" என்றான்.

"நீ என் எதிரே சிறு துரும்பு. என்னை உன்னால் சிறைப்படுத்த முடியுமா? உன்னைத்தான் இப்போது மரத்தில் கட்டி, புளியங்கொம்பால் விளாசச் செய்யப் போகிறேன். அல்பனுக்கு அந்தஸ்து கொடுப்பது போல் உனக்கு என் தந்தை பதவி கொடுத்துவிட்டதால் ஆனந்தப்படாதே! உன்னைச் சோதனை செய்யவே இந்தப் பதவியைக் கொடுத்தார். போர்க்களத்திற்குச் செல்லும் முன்பே உன் பதவி பறிபோய்விடும்" என்று கடுமையாகப் பேசிக் கொண்டிருந்த உத்தசீலியை நோக்கிச் சீறிப் பாய்ந்த மாறன், "இளவரசே! நாவை அடக்குவது இருக்கட்டும். தளபதியின் எதிரே மரியாதைக் குறைவாக நடப்பவருக்குத் தளபதி மரண தண்டனைகூடக் கொடுக்கலாம் என்பது உமக்குத் தெரியுமா?" என்றான்.

"தண்டனை கொடுக்கும் சக்தி படைத்தவன் நான். நீயா எனக்கு மரணதண்டனை கொடுப்பாய்? அதற்கு முன்பே உன்னை எமனுக்கு விருந்தாக்கிக் காட்டுகிறேன்" என்று கொக்கரித்தான் உத்தமசீலி.

"உன்னுடன் பேசிப் பயனில்லை. செய்து காட்டுகிறேன்" என்று கைதட்டி வீரர்களைக் குரல் கொடுத்து அழைத்தான் மாறன். நான்கு வீரர்கள் ஓடோடி வந்தனர்.

''போர் வீரர்களுக்கான கட்டுப்பாட்டை மீறிவிட்டார், இளவரசர். உடனே இவரைச் சிறைப்படுத்தி தக்க பாதுகாவலுடன் சிதம்பரத்திற்குத் திருப்பி அனுப்புங்கள்'' என்றான். வீரர்கள் திகைத்து நின்றனர்.

உத்தமசீலி பயங்கரமாக நகைத்தான். அவனும் கை தட்டி வீரர்களை அழைத்து, ''ஏய், இவனை உடனே பிடித்து மரத்தில் கட்டுங்கள். இவன் துரோகி. தளபதி வேடம் போடுகிறான். எதிரிகளுக்கு உளவு சொல்ல முயல்கிறான்'' என்று ஆவேசத்துடன் கூவினான். புலிக் கொடி தாங்கியிருந்த வீரனொருவன் மாறன் அருகே செல்ல அடி எடுத்து வைத்தான்.

மாறன் உடைவாளை உருவினான். ''நில்லுங்கள் அப்படியே. நான் சொல்வதுபோல் செய்யுங்கள்...'' என்றான். உத்தமசீலியும் வாளை எடுத்துச் சுழற்றியபடியே, ''ஆகா, இந்தத் தருணத்தையே எதிர்பார்த்தேன். சாதாரண வீரனுக்குத் தளபதி பதவியைக் கொடுத்த என் தந்தை தெரிந்து கொள்ளட்டும், யாருக்கு வாள் வீசும் திறமை அதிகம் இருக்கிறது என்று'' எனக் கூறி மாறன் மீது பாய்ந்தான்.

மாறன் மிக எளிதாகச் சற்று நகர்ந்துகொண்டு வாளைச் சுழற்றினான். உத்தமசீலி வீசிய வாள் குறி தவறியது, அருகே நின்று கொண்டிருந்த புலிக் கொடி பிடித்த வீரனின் கரம் துண்டிக்கப்பட்டது. புலிக்கொடி மண்ணிலே வீழ்ந்தது, மற்றவர்கள் அஞ்சி ஓடினர்.

உத்தமசீலி ஹுங்கார மிட்டான். மாறன் 'ஹோ ஹோ' என்று குரல் கொடுத்தான். வாளும் வாளும் மோதின. 'கிணிங் கிணிங்' என்ற ஓசை பிறந்தது. தீப்பொறி எழுந்தது. பூமியிலிருந்து புழுதிப்படலம் பறந்தது. 'விர் விர்' என்று வாட்கள் சுழன்றன. ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த வீரர்கள் அங்கே வந்து கூடினர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. தளபதியும்



இளவரசரும் ஏதோ விளையாட்டுக்காக வாளைச் சுழற்றுகிறார்கள் என்று எண்ணினர் கலபதிபுரத்து வீரர்கள். தங்கள் தலைவரை யாரோ வம்புக்கிழுக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு சோழர்ப் படை வீரர்களை நோக்கி அவர்கள் ஏதோ முணு முணுத்தனர்.

''ஏ, துரோகி, ஒழிந்தாய்!''

'மமதை பிடித்தவனே, மண்ணாசைப் பிடித்தவனே, உனக்கு இன்று முடிவு நாள்.''

இப்படி ஏதேதோ புரியமுடியா வார்த்தைகள், ஹுங்காரங்கள், தெளிவற்ற குரல்கள், கிணிங் கிணிங் சப்தத்துக்குப் பின்னணியாக எழுந்தன. புழுதிப் படலத்தில் சில நேரத்தில் ஒன்றுமே புரியாமலுமிருந்தது. இருவர் கரத்து வாட்களும் சளைக்காமல் சுழன்றன; சூழ்ந்து நின்றவர்கள் சிதறி ஓடினர்.

ஒரு கணம் உத்தமசீலியின் வாள், மாறனின் வலது புஜத்தைத் தாக்கியது. குருதி பீரிட்டது.

மாறன் ஆக்ரோஷம் கொண்டான்; அவன் அடக்கி வைத்திருந்த பலம் ஒன்றுதிரண்டது, அவன் அடக்கி வைத்திருந்த பாண்டிய நாட்டின்மீது அவன் கொண்டிருந்த தேசபக்தி கம்பீரமாக உருவெடுத்தது. அவன் அடக்கி வைத்திருந்த உண்மைத் தோற்றம் பிரம்மாண்டமாகத் துள்ளி நின்றது.

மாறனுடைய வலது கரம் துண்டுப்பட்டுச் சிறிது ஓடிக் கொண்டிருந்தது. இடது கரத்தில் வாளைப் பிடித்துக் கொண்டான் மாறன்.

''ஏ, சோழ இளவரசே! பாண்டிய மன்னரைத் தலையெடுக்க விடாமல் செய்வதற்காக வந்துள்ள கொடியவனே! உனக்கு இன்று ஒரு முடிவு கட்டுகிறேன்'' என்று கர்ஜித்து உத்தமசீலியை நோக்கிப் பாய்ந்தான்.

மாறனுடைய ஆவேசத் தாக்குதலுக்கு உத்தமசீலியால் ஈடு கொடுக்க முடியவில்லை. உத்தமசீலியின் வாள்

இரண்டாக உடைந்தது. முதுகிலே ஒரு வெட்டு; கணுக் காலிலே ஒரு வெட்டு. ஸூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்த ஒரிருவரும் சிதறி ஓடினர். காங்கேயனும் குமுதமும் உடல் நடுங்க, பதற நின்று கொண்டிருந்தனர்.

படகிலிருந்து இறங்கி மறைந்திருந்த பாண்டிய நாட்டு வீரர்கள் மறு கணம் பாய்ந்தோடி வந்தனர். சிதறி ஓடும் சோழர் படைகளைத் துரத்தித் தாக்கினர். தங்கள் படைக் கலன்களைப் போட்டுவிட்டு அவர்கள் செத்தோம் பிழைத்தோம் என்று ஓடினர். அவர்களை வெகு தூரம் துரத்திச் சென்றனர்.

மாறனின் மற்றொரு வாள் வீச்சு, உத்தமசீலியின் மார்பில் பாய்ந்தது; உத்தமசீலி மண்ணிலேவீழ்ந்தான். அது அவனுடைய சொந்த நாட்டு மண். அவனருகே முன்பே அறுந்து வீழ்ந்திருந்த புலிக் கொடி புழுதியில் கிடந்தது. அதிலே குருதித் துளிகள் சிந்தியிருந்தன.

மாறன் வெட்டுண்ட கரத்துடன் தள்ளாடினான். காங்கேயன் மூலிகைப் பெட்டியுடன் ஓடிவந்தார். குமுதம், சாயும் மாறனைத் தன் மார்பிலே தாங்கி மெல்ல மெல்லத் தன் மடியிலே படுக்கவைத்துக் கொண்டாள்.

''மாறா, மாறா'' என்று அவள் கதறினாள். அவள் விழிகளிலிருந்து உதிர்ந்த விழிநீர் மாறனின் வெட்டுண்ட கரத்து விழுப்புண் மீது வீழ்ந்தது.

''அந்த இளவரசன்'' என்று மாறன் ஏதோ சொல்ல முற்பட்டான்.

வல்லபன் ஓடிவந்தார். 'சோழநாட்டு இளவரசன் இறந்து விட்டான் மாறா. புலிக்கொடி அறுந்து விழ்ந்து கிடக்கிறது. சோழர்ப்படைகள் தப்பினோம், பிழைத்தோம என்று ஓடுகிறார்கள். சோழ நாட்டு மண்ணையே யுத்த களமாக்கி விட்டோம். நீங்கள் நால்வரும் எடுத்த புனித யாத்திரை நிறைவேறியது. பாண்டிய நாட்டைப் பற்றி



மீண்டும் சோழர்கள் நினைக்க பல ஆண்டுகள் ஆகும்.
மாறா, உனது வலிமையை இப்போது நான் கண்கூடாகக்
கண்டேன். போரிலே பட்ட புண்கள் ஆறி நீ விரும்பிய
காதலியை மணந்துச் சுகமாய் இருக்க வாழ்த்துகிறேன்''
என்று முகமலர்ச்சியுடன் கூறினார்.

மாறனின் கண்கள் வல்லபனை நோக்கின.
''தலைவரே, கையெடுத்துக் கும்பிட ஒரே ஒரு கரம்தான்
இருக்கிறது! எங்கள் யாத்திரை, நீங்கள் இல்லாமலிருந்
தால் வெற்றிகரமாக நிறைவேறி இருக்காது. திட்டம்
வகுத்தீர்கள். சிவனடியாராகவும், இப்போது படகோட்டி
யாகவும் வந்தீர்கள். எங்களுடனேயே இருந்தீர்கள். இந்த
வெற்றிக்குத் தாங்கள் தான் காரணம்...என் கடமையைத்
தான் நான் செய்தேன்'' என்று பேசி வந்த மாறனுக்குச்
சொல் தடுமாறியது.

குமுதம் அவனது மார்பிலே தன் முகத்தைப்
புதைத்துக் கொண்டாள். மாறன் மீண்டும் மெல்ல விழி
திறந்தான்.

''பிறந்த நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடமையைச்
செய்தேன்...இன்னும் செய்ய வேண்டியவை ஏராளம்.
வீரபாண்டியர் அரியணை ஏறிய பிறகுதான் என் காதல்,
கல்யாணம் எல்லாம்...'' என்று கூறிய மாறனின் இதழ்
களில் மெல்லிய புன்னகை மலர்ந்தது. வல்லபனும், காங்
கேயனும் குனிந்து அவன் கூறுவதைக் கேட்க முயன்றனர்.

மாறன் ஏதும் பேசவில்லை. அவன் விழிகள் மெல்ல
மெல்ல மூடின; இடது கரம் பூமியிலே சரிந்தது. குமுதத்
தின் மடியின் மீதிருந்த அவனுடைய தலை, மண்ணிலே
சாய்ந்தது.

''மாறா...'' என்று ஒரே குரலில் ஓலமிட்டுக் கூவினர்
காங்கேயனும், வல்லபனும்,

மாறன் வெற்றி பெற்றுவிட்டான். இந்த வெற்றி
யுடன் அவன் கலபதிபுரத்திற்குத் திரும்பினால்...அவனுக்

காக ஆற்றங்கரையிலோய காத்திருக்கும் ரங்கதேவி மாலையிடுவாளா?

மாறன் வெற்றி பெற்று விட்டான். ஒரு கரம் போனாலும் அவனுடைய வலதுகரமாக இருக்க நினைக்கின்ற குமுதத்தை மாலையிட மாறன் வருவானா?

அவன் தெளிவாகச் சொல்லியிருக்கலாம். இவளைத் தான் காதலிக்கிறேன் என்று. அவன் தன் காதலைக் கடைசி வரை வெளிப்படுத்தாதது தவறா?

அவன் தவறு செய்யவில்லை மாறன் ரங்கதேவியைக் காதலிக்கவில்லை; குமுதத்தையும் காதலிக்கவில்லை.

பாண்டிய மண்ணின் மீது அவன் நேசங்கொண்டான். அதற்காகப் புனித யாத்திரையைத் தொடங்கினான். போரிட்டான். சோழர்ப் படைகளை புறமுதுகிட்டோடச் செய்தான்,

அதோ! மாறவர்மன் காதலி, மாறவர்மனை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறாள்.

அதோ! அவன் காதலியுடன் சேர்ந்து என்றும் நித்திய இன்பம் அனுபவிக்கச் சென்று கொண்டே இருக்கிறான்.

முற்றும்

7467
2792611